| | | பக்கம் |
|---|---|---|
| 3 | தேன் பதிகம் | 206 |
| 4 | தூதுப் பதிகம் | 207 |
| 5 | திருவுளப் பதிகம் | 209 |
| 6 | கருணைப் பதிகம் | 211 |
| 7 | தற்பரப் பதிகம் | 212 |
| 8 | நிராசைப் பதிகம் | 214 |
| 9 | ஆருயிர்ப் பதிகம் | 215 |
| 10 | வெளிப் பதிகம் | 217 |
| 11 | வேதாந்த சதகம் : | 220 |
| 1 | ஏகப் பதிகம் | 220 |
| 2 | மித்தைப் பதிகம் | 222 |
| 3 | நமக்குப் பதிகம் | 223 |
| 4 | திருவருள் பதிகம் | 225 |
| 5 | நிவர்த்திப் பதிகம் | 226 |
| 6 | சுகப் பதிகம் | 228 |
| 7 | நித்திரைப் பதிகம் | 229 |
| 8 | பாரேன் பதிகம் | 231 |
| 9 | பொதுப் பதிகம் | 232 |
| 10 | நிரங்குசப் பதிகம் | 234 |
| 12 | நாதாந்த சதகம் : | 235 |
| 1 | சுபாவப் பதிகம் | 235 |
| 2 | ஐக்கியப் பதிகம் | 238 |
| 3 | மனோநாசப் பதிகம் | 241 |
| 4 | ஏகாந்தப் பதிகம் | 243 |
| 5 | அன்புருப் பதிகம் | 245 |
| 6 | நிதார்த்தப் பதிகம் | 248 |
| 7 | நிச்சயப் பதிகம் | 250 |
| 8 | அகங்குளிர் பதிகம் | 253 |
| 9 | நிர்த்தப் பதிகம் | 255 |
| 10 | அற்றநிலைப் பதிகம் | 257 |
| 13 | சிதானந்த சதகம் : | 260 |
| 1 | மதிவிதிப் பதிகம் | 260 |
| 2 | அலிபுப் பதிகம் | 263 |

பக்கம்

| | | |
|---|---|---|
| 3 | நிதித்யாசனப் பதிகம் ... ... | 265 |
| 4 | அற்புதப் பதிகம் ... ... | 267 |
| 5 | அர்ப்பணப் பதிகம் ... ... | 269 |
| 6 | தத்துவப் பதிகம் ... ... | 270 |
| 7 | முத்திரைப் பதிகம் ... ... | 272 |
| 8 | அதீதப் பதிகம் ... ... | 275 |
| 9 | சோதிப் பதிகம் ... ... | 276 |
| 10 | சமப் பதிகம் ... ... | 278 |
| 14 | ஏதார்த்த சதகம் : ... ... | 280 |
| 1 | மக்கட் பதிகம் ... ... | 280 |
| 2 | வாலிபப் பதிகம் ... ... | 283 |
| 3 | ஞானப் பதிகம் ... ... | 285 |
| 4 | சற்குருப் பதிகம் ... ... | 288 |
| 5 | பக்திப் பதிகம் ... ... | 291 |
| 6 | சமாதிப் பதிகம் ... ... | 294 |
| 7 | ஆநந்தப் பதிகம் ... ... | 297 |
| 8 | தியானப் பதிகம் ... ... | 299 |
| 9 | துறவறப் பதிகம் ... ... | 302 |
| 10 | முத்திப் பதிகம் ... ... | 305 |
| 15 | திருவருட் கண்ணிகள் : ... ... | 309 |
| 1 | வாரீர் கண்ணி ... ... | 309 |
| 2 | புல்லறிவுக் கண்ணி ... ... | 316 |
| 3 | பூரணக் கண்ணி ... ... | 321 |
| 4 | வியாபகக் கண்ணி ... ... | 324 |
| 5 | தண்ணருட் கண்ணி ... ... | 329 |
| 6 | வேண்டாக் கண்ணி ... ... | 340 |
| 7 | உபதேசக் கண்ணி ... ... | 340 |
| 8 | நித்திரைக் கண்ணி ... ... | 345 |
| 16 | ஆநந்தக் களிப்பு ... ... | 353 |
| 17 | அருளுரை ... ... | 362 |

பிஸ்மில்லா ஹிற்றகு மானிற் றஹீம்

# மச்சரேகை சித்தன் திருப்பாடல்.

## சொரூப வணக்கம்

### காப்பு வெண்பா

சுத்தபரி பூரணமே சூக்குமத்திற் சூக்குமமாம்
நித்தவி யாபகமா நீக்கமிலா—முத்திதனி
லாட்சிதற் சாட்சி யகங்குளிர வாநந்த
சாட்சிபா மாத்திரமே தான். (க)

### ஆசிரிய விருத்தம்

தத்துவ விளக்கத் தப்பாற் சாட்சிமாத் திரந்தா னுகும்
புத்துயிர் புறக்கா னேர்மை பூரணச் செயல்கள் சொற்கள்
சித்துரு வமைதி சாந்தந் தினிசு லாத்தின் வள்ளல்
முத்திரை தரித்த போத முஹம்மதே சொரூப வாழ்வே.

## நூல்.

### இரட்டையாசிரிய விருத்தம்

சுத்த பரிபூரண வத்விதா கண்டமாம்
சுகமா யபார வசல
சுலட்சண மாருயிர் சலட்சணத் தொண்மய
சுபாவிகத் தன்மை யுண்மை
நித்திய விலட்சண தத்துவா தீதம்
நிரஞ்சன நிட்க ளங்க
நிரதிசய யாநந்த பருதுசம தேகபா
நிராலம்ப,பேரின் பமாம்
புத்திநுட் பத்திலே சித்தசஞ் சலமறப்
புகழிகழ் புண்ய பாபம்
பூதாதி திருசியம் பேதாபே தம்இலாப்
பூரணு நந்த விமல

சத்துச்சித் தாநந்த முத்துரிய மற்றநிலை
சதானந்த மௌன வுருவாய்
சந்ததமு மாறுது சிந்தைவள ரன்புரு
தன்னையே தான்ருே ழுகுவாம். (உ)

ஏகவி யாபக மாகம கலைக்கெட்டா
தெங்கெங்கு மங்கு தவிலா
தென்றென்று மாறும லொன்றிலு மடங்கிலா
தெவைக்குமே சீவ சாட்சி
பாகமிலி பிரபோத மோகவி ராகதிரை
பாசபந் தந்தொ லைத்துப்
பலதொழி லுற்பவ மலமறுத் துற்பன
பரமார்த்த சேத னத்தே
தேகமதி லூகமுறத் தேகிவழி தீட்சண்யத்
தெளிவே நிதார்த்த சித்தஞ்
சேடித்த வறிவுகுரு கூடஸ்த வைக்யமே
ஜெகமயக் கற்ற நேமம்
சோகமிலி தீவிரமுத் தேகமிலை பதவிகள்
சோபான சோப நீந்திச்
சொப்பன சுழுத்திவிட் டர்ப்பண நனவிலே
சொரூபந்த னைத்தொ ழுகுவாம். (௩)

சுத்தசுயஞ் சோதியாய்ப் புத்தி விசாரணை
சுருதியனு போக முக்தி
சூதறிந் தாத்துமா வேதமுடி வானநெறி
சுகானுபவ நிர்வி கார
முத்தருள வாநந்த நித்திரை சதாநந்த
முத்தடை நசித்து நேதி
முப்பாழ் கடந்தசுகந் தப்பா தகம்வெளி
முத்தேக மற்றெ ழிந்த
வத்தநிலை சத்துரு சித்துரு நிராசையி
னவகாச மமைதி சாந்த
முறிவகண் டாகார குறிகுண தீதமே
யந்நியமில் தன்ரூ பமாஞ்

சித்தமசை யாதவெளி யெத்தொழிலு மற்றதே
சின்மயம் பரம யோகஞ்
சிந்தனை யிலாத்துரிய வந்தனையிற் றூனும்
சிவோகந்த னைத்தொ ழுகுவாம். (௪)

எங்குந் திருவரு ளங்கிங் கெனுமலே
யிச்சையு மச்ச மற்று
இகபர விராகமா யகம்புற விளக்கமா
யிருதய முறுதி தன்னிற்
றங்குநிச் சயபுத்தி யிணங்கியர்ப் பணமாகி
சங்கோச விகாச மற்ற
தவமது விசாரணைத் துவிதமத வாதமிலே
தத்துவ விளக்க மதனில்
மங்குமிவ் வுலகமுங் கங்குல்பக லெங்ஙனே
மனோலய குணு லயத்தே
வாசனு க்ஷயமாகி நேசானு பூதியின்
மௌனவா நந்த மோட்ச
அங்கமு நான்குணர விங்கிதப் போறிவு
வஹம்பிரம மாந்தற் சாட்சி
அறிவா யறிந்தபர நெறியாய் நிறைந்ததனை
யறிந்தபொரு ளைத்தொ ழுகுவாம். (௫)

ஆதியோ டந்தமி லனுதிகற் பிதமாயை
யகிர்வச நீய நீங்கி
யத்தியா ரோபநிரை சுத்திசெய் புத்திகொண்
டகண்டமாம் விருத்தி யாகிச்
சோதி நிராதார வேதவே தாந்தநெறி
சொற்செயற் சூநி யத்தே
சொப்பனத் தோற்றங்க ளொப்புவமை யொன்றுமிலே
சோதித் தறிந்த தறிவே
நீதமன மசையாது காதல்பல தொல்லையும்
நினைப்புடன் மறப்பு மில்லா
நிர்வாண நிட்டையிற் சர்வசம் பூரண
நிருபா திகங்கொ ணிலேயில்

பூதிய மறந்துஜக வாதனை விகற்பமும்
புன்னெறிப் பற்று மற்று
புத்தி சற்குணவழி சித்தி நிர்க்குணவெளி
பூரணந்த னைத்தொ ழுகுவாம். (௬)

என்னையோ வறிவது பின்னைவே றுணர்வதோ
விச்சைவினை யுற்ற மாய
வெண்ணங் திருசிய வண்ணம்பே ராவலோ
வின்பதுன் பப்ப ழக்கங்
தன்னைத்தா னறிவதோ வின்னமன நினைவதோ
சந்தேக விபரீ தங்கள்
தடைபட் டிடைந்திடக் கடைகெட்ட மதவாத
தடமேவியக் நியபூ சையாம்
பின்னலிற் சிக்கிவரை தன்னிலே தான்கெடும்
பிரதிபல னுதவி தேடிப்
பிரார்த்தனைக ளெத்தனை கராரற்ற தூர்க்கிரியை
பிணிமனப் போராட் டந்தான்
முன்னையும் பின்னைநடு உன்னரிய நிர்ணய
முக்குண வதீத நிறையில்
முக்காண சிக்கறுத் தெக்கரும முமமிலா
முத்தியைத் தான்றொ ழுகுவாம். (எ)

பூதங்கள் பொறிபுல னேதுகர ணங்கன்ம
புன்மைகள் கன்ம விஷயம்
புஞ்சகோ சம்வாயு பஞ்சஜய காடியும்
புறம்பெனக் கண்ட கன்று
போதமுட னுதார வீதிமண் டலமலம்
பொருதுமே டணைக டோடம்
போதித்த வினைராகம் சேதித் தவத்தைகுணம்
பொறிவழி யிம்மை மறுமை
தோதக மாணவம் பேதகா மியமாயை
சோகப் பிராந்தி நிரயக்
தொல்லைகொள் மிருத்தியு வெல்லவல் லமையுளஞ்
சோராத சுய ஞானமே

சாதக மனதமைதி பூதபௌ திகம்நீங்கச்
சமரச சம்யா திதமாஞ்
சமத்துவ திருட்டியி னிமித்தோப தானபரந்
தன்னையே தான்றெ ழுகுவாம். (அ)

கேட்டலொடு சிந்தித்த ேனாட்டமே தெளிதலுங்
கேவலா நந்த சித்திக்
கேவலம் பலதொல்லை மூவுல காசைபுகழ்
கேடுப யபிர விர்த்திகள்
நாட்டங்கள் சலனமே தேட்டம் ஜடபோதம்
நாணுவி தப்ப முக்கம்
நாமரூபத் திரயங் காமனு திசகித
நாடோடி சகுண நேய
மேட்டிற் பொறித்தநாய் வேட்டைசெய வுதவுமோ
வேழைம திக்கென் செய்யலா
மெண்ணம் விவர்த்தமெய் புண்ணிய பாவமென
வெத்தனை விதஞ்செ யல்கள்
வாட்டைக ளெலாந்தொல்லை கூட்டுறவிங் கேதுமில்லை
வாசனு க்ஷயம தனிலே
மனநாசந் தத்துவ விஞேதமு மறிந்தைக்ய
மௌனவ றிவைப்பு கழுவாம். (ஆ)

பரமுள்ள போதெலாம் பிரபஞ்ச மழிவதே
பண்ண லுந் திதிது டைப்பும்
பதிபசு பாசமே துதிமன விலாசமே
பார்த்தது நினைத்த போது
திரவிய மிந்திரிய பிரவிர்த்தி கற்பனை
தீதந்த காண பானந்
திருசிய மத்தனையும் நிருவிஷய தீட்சையிற்
திருட்டி பேதங்க ளில்லை
நிரயம்சு வர்க்கமுங் கருமபந் தங்களில்லை
நிருவி கற்பக சமாதி
நிச்சய புத்தியி லச்சஞ் சலிப்பில்லை
நினைப்பும றப்பு மில்லை

சருவபரி பூரணந் துரியசுகம் நனவிலே
சதாநந்த சித்த சுத்தஞ்
சாட்சி மாத்திரமான வாட்சி வியாபகந்
தன்னையே தான்ரு ழுருவாம். (௰)

பரிபூர ணத்தன்மை திரிபுடி மும்மலம்
பகிர்முகத் துக்க மில்லை
பாரவா ரச்சுமை கோரதற் போதமும்
பாசஞா னப்பெ ருக்கும்
விரிவான மதகதை பெரிதாய் வளர்த்திடும்
விடயபோ கத்த ழுந்தி
விவேகமுணர் வின்றியவி வேகதா மதமொடு
விசாரணைக ளற்றி டாது
அரிதான மெய்யறிவு நிரதிச யானந்த
மபரோட்ச நிச்ச யத்தே
அலிபுலா மீமிலேக் கலிமா மனோலய
மறிவா குநிஜா நந்தமே
துரியாதீ தத்திலே நிருபாதிகத் துண்மை
துருவம் மனோநா சமாய்த்
துக்கசுக மேதுமிலா நிக்கிரக நிர்வாண
துய்யவரு ளைத்தொ ழுகுவாம். (௰௧)

அத்துவித வேதன நித்திய ப்ராப்தியே
வாருயிர் பிரம வைக்ய
மாநந்த நித்திரை தாநந்த மாத்துமா
வகண்டமா கார விர்த்தி
யெத்துவாய் ஞானமிலை கத்திப் புகழ்வதிலை
யெண்ணுமொரு பேரு மில்லை
யென்று மில்லாதில்லை யின்றுநா ளையுமில்லை
யிங்கங்கு மென்ப தில்லை
வத்துநிச் சயமுற வத்தியா சங்களிலை
வருவதும் போவ தில்லை
வாசனைக ளற்றிடம் பூசனைக ளுள்ளதோ
வைய கம்பொய் யானதே

முத்துமவின் ஞாவி மறுவியா முத்தேக
முக்கரண சுத்தி தனிலே
முத்துரிய வெளியிலே சித்தனரு ளாநந்த
முத்தித னைத்தொ ழுகுவாம். (மஉ)

சொரூப வணக்கம் முற்றிற்று.

---

பிஸ்மில்லாஹி

## பூரண வணக்கம்

---

### கலிவிருத்தம்

ஏகபரி பூரணமே யென்னுணை வேறில்லை
மோகவி ராகமில்லை முத்தேகத் தொல்லையில்லை
யாகம கலைகளில்லை யத்தநில சுத்தமுத்தி
பாகமதி ரண்டற்ற வருடனையே பணிகின்றும். (க)

திக்கொடு திசைகளில்லை திருட்டியிற் பேதமில்லை
யெக்கிரியை யோகமில்லை யெங்களுங்க ளென்பதில்லை
துக்கமுஞ் சுகமுமில்லை துவைதத்தி லொண்மையில்லை
பக்கம்ப கிர்முகமிலா தருடனையே பணிகின்றும். (உ)

திரிபுடி சுபாவமில்லை திருசியமுந் திருக்குமில்லை
கருமமதி லுருமையில்லை காரியஞ்செய் கமனமில்லை
நிருமலத்திற் றருமமில்லை நிஷேதத்தில் விதிகளில்லை
பருவமுட னுத்மபோதந் தனைத்தானே பணிகின்றும். (ங)

ஒழித்திடவே றிடமில்லை யோதிடமந் திரங்களில்லை
விழித்திடவுந் தூரமில்லை விடயபோதத் துண்மையில்லை
யெழுத்திடவுங் கதையில்லை யெண்ணமிட வண்ணமில்லை
வழுத்திடவும் வேறில்லை தனைத்தானே வணங்குகின்றும். (ச)

மனமன்றிக் கோயிலில்லை மாயையன்றிப் பூசையில்லை
நினைவன்றிச் சகமுமில்லை நிராசையிற்பா ராசையில்லை
வினையன்றித் தோற்றமில்லை விசாரணையில் விகாரமில்லை
தனையன்றி யொன்றுமில்லை தனைத்தானே தரிசித்தாம். (ரு)

நினைவன்றிக் கனவில்லை நிரோதத்திற் கமனமில்லை
வினையன்றிப் போகமில்லை விவேகமின்றித் தொழுகையில்லை
நனவன்றித் தியானமில்லை நாசமின்றி நேசமில்லை
தனையன்றி வேதமில்லை தனைத்தானே தரிசித்தாம். (சு)

பிடித்திடவுங் கரமில்லை பின்னிடவுங் காலில்லை
தொடுத்திடவு முடலில்லை தொழுதிடவும் நேரமில்லை
யெடுத்திடவும் பண்டமில்லை யிணங்கிடவே றுள்ளதில்லை
தடத்தலட் சணசொரூபந் தனைத்தானே தரிசித்தாம். (எ)

ஆதிநடு வந்தமில்லை யநாதிமாய போதமில்லை
சாதிமத வாதமில்லை சமுசார பந்தமில்லை
யோதியே குவிப்பதில்லை யோகதாக முள்ளதில்லை
தோதிலரு ளானந்தந் தனைத்தானே தொழுகின்றும். (அ)

போற்றிடவும் பெயரில்லை புகழ்ந்திடவும் வாயுமில்லை
வீற்றிடவு மெல்லையில்லை விழித்திடவு மெதிரியில்லை
சாற்றிடவு முவமையில்லை சாதனைக்குங் காணமில்லை
தோற்றுமிட மெங்கெங்குந் தனைத்தானே தொழுகின்றும். (கூ)

மதித்திடவும் பொறியில்லை மறைத்திடவுந் திரையில்லை
கதித்திடவு நினைப்பில்லை கருதிடமுக் காலமில்லை
விதித்திடவுந் தொழிலில்லை விசாரத்தா சாரமில்லை
துதித்திடவே றொன்றதிலை தனைத்தானே தொழுகின்றும். (ய)

வாசியோக நிட்டையில்லை வடகலைபின் சுழினையில்லை
பேசுமோக காமமல்லை பேதகவா சனைகளில்லை
நேசபூசை யாசையில்லை நித்திரைசொப் பனமுமில்லை
தோஷமாகுந் திருட்டியில்லை தனைத்தானே தொழுகின்றும். (யக)

பார்த்திடவு முருவமில்லை பணிந்திடவு முடலில்லை
சேர்த்திடவும் பிறிதில்லை செய்திடவுந் தவமில்லை
கோர்த்திடவு மதமில்லை கொடுக்கல்வாங் குவதுமில்லை
பூர்த்திகல் யாணரூபந் தனைத்தானே புகழ்கின்றும். (யஉ)

வாசிக்க வெழுத்தில்லை வணங்குவதற் கெல்லையில்லை
நேசிக்க விரண்டில்லை நினைவுகள் சமாதியில்லை
தூசிக்கப் பகையுமில்லை துஞ்சுதற்குச் சிவனில்லை
பூசிக்கத் தாசனில்லை தனைத்தானே புகழ்கின்றும். (யங)

வாக்கொடு மனுதியில்லை வழக்கமும் பழக்கமில்லை
நோக்கொடு முதிப்புமில்லை நூலெலா மேற்கையில்லை
நீக்கொடு மறைந்ததில்லை நினைப்புமன் னுயிருமில்லை
போக்கொடு வரத்ததில்லை தனைத்தானே புகழ்கின்றும். (௰௪)

பாடிடவும் பாவில்லை பணிந்திடவு மடிமையில்லை
தேடிடவுந் தேட்டமில்லை ஜென்மமொடு கன்மமில்லை
நாடிடவும் நாட்டமில்லை நடப்பதொன் றும் ஞானமில்லை
கூடிடவும் வேறில்லை தனிற்றனே குவிகின்றும். (௰௫)

திரவியங்கள் பொருளல்ல திருசியங்கள் சத்துமல்ல
தருவதுவும் பெறுவதில்லை தரிசனமென் றுள்ளதில்லை
நிரயமுங்கை லாயமில்லை நிச்சயத்திற் றுச்சமில்லை
யிரவலா மானமில்லை தானேதா னிணங்குகின்றும். (௰௬)

தத்துவமாம் பொருளில்லை தனையுணர வேறில்லை
யத்தியாச மருளுமில்லை யாவரண ஞானமில்லை
கத்துவதி லமைதியில்லை கதியவிபு லாமீமாம்
சத்துசித்தா னந்தசுகந் தனையேதான் றரிக்கின்றும். (௰௭)

திரஞானத் துவமையில்லை சீவபேத சோகமில்லை
விரதனுக்கு பயமில்லை வித்தையி லவித்தையில்லை
பரஞானத் திருமையில்லை பாசநாசத் தினையுமில்லை
பிரஞான பிரமருகுல் குதுசிஹக்காம் பேணுகின்றும். (௰௮)

இகம்பரமென் றுசையில்லை யிதுவதுவு மென்பதில்லை
யுகம்பிறமும் பூதமில்லை யுத்திபுத்திக் கன்யமில்லை
ஜகம்பிரத்தி யட்சமில்லை ஜனனமர ணங்களில்லை
அகம்பிரம வஸ்மிதான் அல்லாகுமுஹீத் தறிகின்றும். (௰௯)

சொல்லுமுப தேசமில்லை தொண்டனுட னுண்டானில்லை
வெல்லுமனத் திச்சையில்லை வெட்டவெளி திட்டமில்லை
தொல்லைமலப் பிராந்தியில்லை தொந்தத்தசி மனநசிக்க
இல்லல்லாஹு வென்றறிந்து தானேதா னிணங்குகின்றும். (௨௰)

சுயஞானத் தந்யமில்லை சுவானுபூதி சொல்வதில்லை
நியமாதி சமாதியில்லை நிர்வாணத் தங்கமில்லை
சயமாகிற் சகமுமில்லை சமயாதீதந் துக்கமில்லை
அயமாத்மா பிரமமாம் அஸ்ஸமதுமினல் லாஹியென்றும். (௨௧)

நவினமனக் குரங்கில்லை நடைகுணமுங் குக்கவில்லை
சலனமலப் பந்தமில்லை சமட்டிகள் வியட்டியில்லை
துவியமதிக் கிருளில்லை துரியாதீதத் தேகமேயாம்
குவிர்ரூஹி மினம்ரிரப்பி ஞானவிர்த்தி குவிகின்றும் (உஉ)

பல்வகைத் தொழிலுமில்லை பாவனைதற் போதமில்லை
செல்வதும் வருவதில்லை சேதிக்கப் பேதமில்லை
சொல்வதுவும் ஞானமில்லை சுலட்சண சம்பூரணத்தே
அல்லில்மல்ல துன்னியென்னு மறிவாத்மா பிரம்மந்தான். (உ௩)

அத்துவித சுத்தசுக மறிவதுவு மன்யமில்லை
யொத்துநின்ற புத்திநுட்ப முணருமறி வேகுருவா
முத்துரியப் பாழில்லை மோனவுரு மச்சரேகை
சித்தனப்துல் வாரிதுவுந் தனைத்தானே தெளிகின்றும். (உ௪)

அத்தநிலை சுத்தமுத்தி யகண்டேக ரசந்தானும்
புத்தியுத்திக் காருயிரே புந்திலய மச்சரேகை
சித்தன்கா லங்குடியான் சித்துருவாம் பரமமுத்தி
யெத்தவமும் பூர்த்திசுக மேகாந்தபரி பூரணந்தான். (உ௫)

பூரணவணக்க முற்றிற்று.

ஆ பாடல்-உ-க்கு திரு விருத்தம் ௩௰௬.

---

பிஸ்மில்லாஹி

## நிருபாதிக வணக்கம்

---

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தத்துவங்கள் தெரிசனத்தே தனுவி னோடு
கரணமுடன் புவிபோகந் தானு மற்று
வத்துவுநிச் சயந்தெளிவாம் புத்தி யுக்தி
மருமமறிந் தவகாச மௌன முற்றே
யொத்துநின்ற மனதமைதி நிராசை தன்னி
லொருமைநிலை யுற்றவுயர் சாட்சி தானு
மெத்தவமு முடிந்தகண்டா கார விர்த்தி
யேகபரி பூரணந்தா னிறைஞ்சு வாமே. (க)

அன்னை தந்தை கிளையயலார் சுற்றம் பந்து
வர்த்தமனை சமுசார பாசம் போக்கித்
தன்னை தனி லறியக்குரு வறிவாய் மூன்று
தடைகளொடு முப்பகைமுப் பாழுந் தாண்டி
மன்னியசை தன்யசுகந் தீட்சை மீட்சி
மௌனமதி மனோலயந்தான் மவுன னந்த
மென்னையன்றி வேறுணரா தறிவே சாட்சி
யேகபரி பூரணந்தா னிறைஞ்சு வாமே. (௨)

சோகமிலாச் சோஹசுகஞ் சொச்சொ ரூபஞ்
சொப்பனமுஞ் சுழுத்தியிலாச் சோத னைமெய்
யாகமதி யானநிட்டை சுத்த முத்தி
யறிவாகி நிறைவாகும் நனவி லோர்மை
யூகமதி நிரதிசயா நந்தக் காட்சி
யுபாதிலய மனமிறந்த தீட்சண் யத்தே
யேகவியா பகவிளக்க மறிவா மோட்ச
மேகபரி பூரணந்தா னிறைஞ்சு வாமே. (௩)

தன்கிருபை தானுக்கும் பறவை யாமை
தமைப்போலும் வேட்டுவன்மீன் றன்மை போலும்
பின்னியதத் துவமுமலத் திரயம் நீக்கிப்
பேதமறக் கல்யாண குணங்கள் கூடா
நன்னிலைமை யேகரச மறிவே யன்பாய்
நானற்ற போதத்தின் ஞானு னந்த
மென்னையன்றி வேறுணரா விவேக முத்தி
யேகபரி பூரணந்தா னிறைஞ்சு வாமே. (௪)

வணக்கமென்ற வாராய்ச்சி நிலையே பேசில்
வரையறவே பூதபௌ திகத்தி னிச்சை
குணக்கமின்றிக் கணக்கின்றித் துவித மின்றிக்
குறிப்பின்றிச் சமயமின்றிச் சகுண மின்றிப்
பிணக்கமின்றி வழக்கமொடு பழக்க மின்றிப்
பிரக்ஞான பிரமசுகப் பேற தீத
மிணக்கமன்றோ திருக்காட்சி நிராசை முத்தி
யேகபரி பூரணந்தா னிறைஞ்சு வாமே. (௫)

பழுதையைப்பாம் பென்றுதறி மனுவாய்க் கண்டு
பதறுமனப் பிராந்தியாம் பேதம் பற்றிப்
பொழுதைநில வெனுஞ்சாரக் கண்ணன் றிட்டிப்
பொய்ப்பொருளைப் புகழுமிது போலி ஞானம்
தொழுகைவிசா ரத்தடைகள் பகைக ளில்லை
சொச்சொரூப மிந்திரிய மனங் குவிந்து
இழுதையால் வருந்தடைக ளற்று னந்த
வேகபரி பூரணந்தா னிறைஞ்சு வாமே. (சு)

வந்தியா மைந்தனொடு முயற்கோ டும்போல்
மாயாகா ரியங்கிரியா சாரம் யோகம்
பந்தமாங் கானனீர் கிளிஞ்சல் வெள்ளிப்
பலஜாலங் கனப்பொருள்கள் சமயம் போக்கு
மந்திரங்கள் தந்திரங்கள் செபத வங்கள்
மார்க்கமன் றேற்கைவிரோ தம்ந சித்தே
யெந்தமையுந் தானறியத் தானே ஞான
மெனிற்றனே தனைத்தானே யிறைஞ்சு வாமே. (எ)

உலகவளம் சுகுணம்பிர விர்த்தி யாகு
முள்ள தின்ன தென்றுணரா துழலுஞ் சேட்டைக்
கலகமலங் கற்பிதங்க ளவர்கட் கேற்ற
காரியமுங் திரிபுடியு மவாத்த டிப்பு
அலகைபரி ஜின்றேவு பூதம் பேயென்
றர்த்தவா தத்துவிதத் தழுங்கி டாது
விலகிவியா பகவிளக்க மகண்ட மாகும்
விமுக்தநிலை தனைத்தானாய் விளங்கு வாமே. (அ)

சொற்பனமுங் காண்பதும்யார் மயக்கந் தன்னிற்
சுகமாகத் தூங்கினதார் சுழுப்தி நீங்கி
யற்புதமாம் நனவிலிங்கே சொற்ற தாரு
வறியாமற் றூங்கினதை யறிந்த தாரு
விற்பனங்கண் டுணராவஞ் ஞான மென்றே
விளங்கிடத்தான் முத்தேகத் தொல்லை யில்லை
புற்பலசங் கற்பமில்லை யனுசந் தானம்
பாமானந் தந்தனைத்தான் பணிகு வாமே. (கூ)

தூபதீப மிட்டலறி மந்தி ரத்தால்
துதித்துமிணை துணைவிரும்பிச் சுவர்க்கங் கேட்டுச்
சோபதாபப் பிரதிபல னுதவி யெண்ணிச்
சொல்லோதிப் புகழ்ந்துகெஞ்சி யலறிக் கூவிப்
பாபபுண்ய மறியாமற் கதைகள் பாடிப்
பாவனைகள் பலவற்று னுண்மை விட்டுக்
காயிர்களே தனக்கன்ய முபாசிக் கின்றோர்
காணாத சொச்சொரூபங் கருது வாமே. (௰)

வின்னங்கொள் யெகூதிநஸ் ராணி கெட்ட
வினைமயக்கம் பாஷிக்கு விபரீத வாதந்
தன்னையன்றி வேறெண்ணும் சிந்திக்கு மாயநீச
தற்போத முருதத்து மஜூசி தனைமறந்து
சொன்னபடி நடவாத செயித்தான் கல்லைத்
தொழுங்கபுறு வணங்கிகளு மறியா வுண்மை
யென்னிறையை யென்னறிவா லறிந்து சுத்த
வேகபரி பூரணந்தா னிறைஞ்சு வாமே. (௰க)

நிருபாதிக வணக்கம் முற்றிற்று.

ஆக பாடல் ௬க்கு திருவிருத்தம் ௪௭.

---

பிஸ்மில்லாஹி

# தேவாமிர்தம்

---

## காப்பு வெண்பா

சீர்தந்த மோனசுக சிற்சொரூபந் தற்சாட்சி
நேர்தந்த ஞானபா நிச்சயத்தே—பேர்தந்த
தித்திக்கும் பேரின்பத் தேவாமிர் தம்மூட்டுஞ் (க)
சத்துசித் தானந்தந் தான்.

## அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

பொன்னுலகு விண்ணுலகு மண்ணுலகுந்
தன்னருளே போற்றும் போதம்
நின்னுலவு சலனமிலா வியாபகமே
யன்புருவாம் நிராசைக் கின்பம்

பின்னமிலா தேகசுக மன்னுயிருந்
    தன்னுயிராம் பிரமந் தன்னில்
யன்னியமி லாதபூ ரணந்தற் சாட்சி
    யானந்த நித்ய வாழ்வே. (க)

எல்லாமா யெல்லையில்லா தெவ்வெ வைக்கு
    மெங்கெங்கு மேகந் தானே
கல்லாமை கருதாமை தெளியாமை
    யறிவில்லாக் களங்க மன்றோ
சொல்லாமற் சொல்லிவைத்த குவிர்ரூஹி
    மினம்ரிறப்பி சுத்த விர்த்தி
அல்லாஹூ அல்லாஹூ தனையன்றி
    வேறுளதோ வகண்ட வாழ்வே. (உ)

எல்லையுண்டோ வுவமானச் சொல்லுமுண்டோ
    நாமரூப மிணக்க முண்டோ
தொல்லையன்றோ வழக்கமெல்லாந் தோடமன்றோ
    பூர்வபட்சத் தொழும்பற் கேற்ற
சொல்லவலத் துக்கமயஞ் செயல்முழுது
    மாபாசச் சோகம் நீக்க
அல்லாஹூ அல்லாஹூ தனையன்றி
    வேறுளதோ வகண்ட வாழ்வே. (௩)

கல்லாத மூடமென்னே யுலகாசை
    யந்தகாரக் காமத் தாப
முல்லாச வலங்காரம் சல்லாபம்
    சமுசார முபமா னச்சொல்
பொல்லாத சங்கற்ப சமுசயங்கள்
    மனத்திரயம் பொய்க டந்தால்
அல்லாஹூ அல்லாஹூ தனையன்றி
    வேறுளதோ வகண்ட வாழ்வே. (ச)

வெல்லாத மந்திரங்க ளாபாசத்
    தந்திரம்வே டிக்கை பக்தி
நல்லாத துர்க்கிரியை சொல்வேறு
    பொருள்வேறு சேர்த்துக் கட்டி

மல்லாடும் பெத்தர்வழி யெல்லைவைத்துத்
தொழுங்கொடிய மார்க்கம் விட்டால்
அல்லாஹு அல்லாஹு தனையன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (௫)

மல்லாடும் பேயாட்ட மனக்குரங்கு
குணநாயே மலினச் சேட்டை
சொல்லாடும் செயலாட்டங் கருவிகர
ணாதியெலாஞ் சோபஞ் சிக்கி
யில்லாடுஞ் ஜடதுக்க மிருமாயும்
பற்றறுக்க விதயஞ் சுத்தம்
அல்லாஹு அல்லாஹு தனையன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (௬)

வல்லாமை தத்துவத்தின் விளங்கத்தான்
பழக்கமொடு வழக்கம் போக்கி
யில்லாமை யுள்ளதெனு மபிமான
மூர்வழக்கத் திச்சை யற்றுச்
சொல்லாமை செய்யாமை சொற்செயலும்
லயித்தசுகஞ் சொச்சொ ரூபம்
அல்லாஹு அல்லாஹு தனையன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (௭)

செல்லாத பழங்கதைக ளாரணத்திற்
சொல்லாத செபத பத்தி
னில்லாம லருளுருவாம் பொருளறிந்தே
யேகாச நிஜாநந் தத்தே
சல்லாப மனங்குளிர்ந்து சதாநந்த
நிட்டைதனிற் சாந்த மாக
அல்லாஹு அல்லாஹு தனையன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (௮)

சல்லிசலாத் தாராச்சி சதாகர்ப்ப
சமாதிநிலை சலன மற்ற
துல்லிபத்தே கச்சொரூபந் தியானவுரு
மன தமைதி துரியா தீதம்

பல்லியலுஞ் சொற்செயலுந் தாராசாரம்
நிராசைவந்த பக்கு வத்தே
அல்லாஹு அல்லாஹு தனையன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (௬)

குருவுருவைத் தியானிக்கும் பாசபந்தம்
பழுதையராக் குணத்திர யங்கள்
கருதியது மனத்திரய மன்னியவீண்
பொய்க்காட்சி கற்பி தச்சொல்
திருவுருவ மறிவாத்ம பிரமசுகம்
வியாபகமுஞ் சித்த சாந்தம்
அருவுருவ மதீதமுத்தி தன்னையன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (௰)

வந்ததென்பர் போனதென்ப ரிருப்பதென்ப
ரிறப்பதென்பர் வாசா ஞானஞ்
சொந்தமென்ப ரிரவலென்ப ரனித்தியத்தை
நித்யமென்பர் சோக தாபஞ்
சிந்தையெண்ணிப் பலவோதிக் கூச்சலிட்டுப்
பலந்தேடுந் தீத றுக்க
அந்திபக லற்றசுகந் தனையன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (௰௧)

சுருதியுக்தி யனுபவமுந் தனைத்தானே
தானறியும் சுயஞா னத்தே
திரிபுடிசை யோகமில்லை மும்மலப்பேய்
மயக்கமில்லை திடபோ தந்தா
அுருவருவ மென்பதில்லை யாறுதார
மில்லையுயர் சாட்சி தானே
வரியதிருக் காட்சியுச்சந் தனையன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (௰௨)

மாறுத வன்புருவே யின்புருவே
சுதுக்கம் வரைக டந்த
பேருரும் வியாபகமே நீக்கமில்லா
தெங்குநிறை யின்பே தன்னிற்

கூறுத வனுபூதி நினைவன்று
கனவன்று குவிந்த வுள்ளம்
ஆறுதா ரங்களெலாந் தனையன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (௰௩)

சொல்லுகின்ற ரேசகபூ ரகத்தோடு
கும்பகமுஞ் சோடித் தார்கள்
தொல்லையி தட்டாங்க யோகமென்பா
ரட்டமா சித்தி சொல்வர்
மெல்லியரைச் சேருதலே அக்மல்சுகூ
தென்பர்வே டிக்கை யிந்த
வல்லல்துய ரகன்றிடவே தனையன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (௰௪)

கத்திகுதித் தோதலென்னே மணிமந்திர
மதவாதக் கருமோ பாசச்
சித்திஜெக ஜாலவித்தை விலாயத்து
பெத்தர்குழாஞ் சிக்கு மாயை
யெத்தியுடல் பிழைப்பதற்கே செய்துவைத்த
மதத்தொல்லை யெல்லை விட்டே
யத்தநிலை சுத்தமுத்தி தனையன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (௰௫)

மருமைதனில் வீடுபெறப் போாசை
தீராப்பேய் மனப்போ ராட்டங்
கருவமதம் வெறும்பிலுக்கு தற்போதங்
துவிதவிர்த்திக் களேப ரங்கள்
தருமசுவர்க் கந்தமக்கென் றெண்ணமுளார்
கட்டிவைத்த தாத மார்க்கத்
தருமையென்ப தொன்றுமில்லை தனையன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (௰௬)

பொருடனையே பொருளாக வறிந்துணர
வந்நியமாம் பொருளொன் றில்லை
மருடனையு மாற்றிதனைத் தான்காணும்
ஸ்மரணையதன் மயக்கம் போக்கி

பிருடனையும் நீக்கிமூல மலமறுத்து
நிருவிகற்பத் திருமை யற்றே
யருடவிலே யன்புருவுந் தனையன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (௰எ)

திராத மதக்கிரியைத் தொழில்பலவாய்
மலப்பொதிபொய் திகழும் பேத
மாறாத பெருவழக்கு மந்திரமுஞ்
சரித்துமன மருளுநங் கொண்டு
தேறாத வாசனைக ளந்தகாரத்
தாழ்த்துமிந்தத் தெருக்கூத் தற்று
லாறாத வின்பநிலை தனையன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (௰அ)

காரணஞ்சொல் குருமொழியிற் சிரவணத்திற்
சிந்தித்துக் கதிதெ ளிந்து
பூரணஞ்சே ரனுபூதி சித்தநிரோ
தத்திலிகழ் புகழு மில்லை
தாரணிபொய்த் தோற்றமெலா மறந்தகண்ட
விருத்திதற் சாட்சி தானே
யாரணஞ்சொ லுபதேசந் தனையன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (௰கூ)

எனைத்தானே நானென்றுற் பரோட்சமன்றே
வபரோட்ச மேகாந் தத்தே
தனைத்தானே தானறிந்த வறிவுகுரு
பூரணத்திற் றடைக ளுண்டோ
நினைத்திருந்த தத்தனையு மித்தைபுத்தி
சித்தசுக நிர்ம லத்தே
யனைத்துயிருஞ் சிவசொருபந் தனையன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (உ௰)

தொலையாத பெருவழக்கு நடைப்பிணங்கள்
கொண்டாடுந் தோடத் துச்சந்
சலையாக மச்சழக்கோ வுடல்வளர்க்கும்
வியாபாரங் கதிதீ தென்று

மலையாகக் குவித்துவைத்து மலடிமக
னைப்புகழு மார்க்கம் நீங்கி
யலையாது மனங்குவியத் தனையன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (உக)

குர்ரத்துல் ஐனென்று லகந்தெளியு
மறிவின்கண் கூர்மை புத்தி
துர்ரத்துல் பைலாவு மேகவியா
பகவிளக்கந் துய்ய ஞேயம்
சர்ரத்த மனோலயத்தே யந்தமாதி
நடுவென்ற சங்கை யேது
அர்ரபீக்குல் அகுலாவுந் தனையன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (உஉ)

சொல்லேது பொருளேது மந்திரங்க
ளோதிடச்சோ பான மேது
வல்லானைக் காண்பதெங்கே தரிப்பிருப்பு
வடிவமென்னே மதிம யக்கம்
பொல்லாத பேயாட்டம் பேதங்கற்
பனைபொய்கள் விட்டால் போதம்
அல்லில்மல் லதுன்னி தனையன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (உ௩)

கருதுமன நினைப்புமறப் பதுவிதுவென்
றுன்னுபல களங்க மற்றே
பருதுசம தேகவழி வெட்டவெளி
சுத்தவித்தை பற்றொன் றில்லை
பெரிதுசிறி தென்பதில்லை யெதார்த்தநிலை
பதார்த்தமுண ரின்ப ஞான
மருமறையுட் பொருளறியத் தனையன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (உச)

பொறிபுலனுங் கரணமலப் பாதகமுட்
பகையவத்தை பொய்த்தோற் றங்கள்
தறிமனிதன் பழுதையரா வாரோப
மாவரணத் தடிப்பு நீங்கி

வெறிபிரமைத் துர்க்கிரியை மனோதியம்
பகிர்முகவே டிக்கை நீத்திங்
கறிவறிய வன்புருவாந் தனையன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (உரு)

கண்டதுபோற் சாட்சிசொல்லிப் புகழ்வதென்னே
காண்பதெதைக் கதைப டித்துத்
தெண்டனிட்டிங் கலறுவதென் செய்வதெது
செயலெதுவோ தெளிந்த போது
விண்டதெல்லாந் தனைத்தெரியார் கட்டிவைத்த
துவிதமத மினுக்க றுக்க
வண்டபிண்டம் நிறைந்தபொருள் தனையன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (உசா)

கடவுளைத்தா னறிவதென்ப தந்நியமோ
வநந்நியமோ காண்ப தாரு
வடிவுநிறந் தேசகாலம் பெரிதுசிறி
தென்பதுண்டோ மதத்திற் சொற்ற
படியேனும் புகழ்வதெதைத் தெரிவதெதைத்
தனிற்றனே பகுத்து ணர
வடிமையாண்டா னெங்குளது தனையன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (உஎ)

கருமமலக் கோட்டிகளே சரியைசொற்
கிரியைசெய் காரி யங்கள்
புருவமையம் நோக்கிலொளி தெரிவதெண்ணி
யோகதவம் புரிவ தெல்லாம்
பருவவிபா பகத்தெளிவை விளங்காத
ஜடபோத பாவ னைவிட்
டரியபுகழ்த் தனையறியத் தனையன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (உஅ)

கவலைமிகு திருசியமாம் மாயவலைக்
காளாகிக் கம்ப லைக்கண்
டிவலையுகுத் தழுதாலுந் தீராதே
பாராவாரச் சிந்தை பேதம்

நவிலுமனக் குரங்காட்டம் புவிபோக
வாசையெலாம் நழுவல் முத்தி
யவலமிலே யைக்யநெறி தனேயன்றி
வேறுளதோ வகண்ட வர்ழ்வே. (உசு)

என்னுணை என்னுணை வேறில்லே
யிரண்டில்லை யேக வைக்யந்
தன்னுணை தன்னுணை யந்யமில்லை
பெயரில்லேத் தாந்தா னேதான்
முன்னுணை பின்னுணை நடுவானே
யென்வழக்கு முடிந்தா னந்தம்
அன்னுணை யன்பானே தனேயன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (ரூஎ)

சுபுத்திபகுத் துணர்வதுவே மக்கட்பே
றிஃதன்றிச் சுவர்க்க மெங்கே
விபத்துதிர யம்முடனே தடைபகைபாழ்
மும்மூன்று விமுக்தற் கில்லை
கபத்திரய மெமன்வாதை மறதிநினேப்
பேதுமின்றிக் காலங் குடியின்
அப்துல்வாரீ தகங்குளிரத் தனேயன்றி
வேறுளதோ வகண்ட வாழ்வே. (ரூக)

கண்ணுக்குங் கண்ணேமெய் யறிவுருவே
மெய்யறிந்த கருணை யன்பே
விண்ணுக்கும் விண்ணேதர்ப் பணமயமே
யர்ப்பணமே விவேக தீட்சை
தண்ணுக்குந் தண்ணேகற் பனேவிகற்ப
மற்றபுகழ் சாட்சி தானே
மெண்ணுக்கு மெண்ணரிய பூரணவா
னந்தசுக வகண்ட வாழ்வே. (ரூஉ)

தேவாமிர்த முற்றிற்று.

ஆக பாடல் ச-க்குத் திருவிருத்தம் அம.

---

பிஸ்மில்லாஹி

# காருண்ய சதகம் 105

## காப்பு வெண்பா

சீரேறு நித்யசுகஞ் சித்தசுத்த நற்றெளிவாம்
பேரேறும் பூரணத்தின் பேரின்பே—நேரே
றருணனம் புலியறியா வம்பகத்து முத்திக்
கருணைக் காருண்யமே காப்பு. (௧)

## எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மூலங் குடியதிதம் பரவெளி யேகாந்த
முத்துரிய முப்பாழ்க டந்த கண்ட
சீலங் குடிசாக்ஷாத் காரமே மோக்ஷசித்
தானந்த நிரங்குச மாந்தி ருப்தி
தூலங் குடிதத்வ விளக்கமாந் தர்ப்பணத்தே
துவிதமற் றறிபொரு ளேயெந் தெந்த
காலங் குடிவளருந் தன்னைத்தா னறிந்தந்த
காரணம் பூரணந் தொழுவா மரோ. (௨)

ஓலங் குடிவிசார முணர்வழி நினைவிலே
யுபாதிதற் போத மாம்வி காரங்
கோலங் குடிவிடய மனமவி னத்தினல்
குறிகுணத் தியானம் பொய்த்தோற் றமாந்
தாலங் குடியநித்ய பிரவிர்த்தி யனைத்துந்
தனக்கந் நியமென் றறிந்து கண்டே
காலங் குடிவளருந் தன்னைத்தா னறிந்தந்த
காரணம் பூரணந் தொழுவா மரோ. (௩)

சாலங் குடிதுவித சமயவா தம்பல
சாஸ்திரக் குப்பை யாபா சமா
நீலங் குடிதுப்பு வெண்மைபன் னிறங்கண்
ணிகழ்த்திடு கின்றகா ரியவி வர்த்த
ஞாலங் குடிபேத திருஷ்டிகள் மறந்தே
ஞானவா னந்தபே ரின்ப நிறைவாய்க்
கோலங் குடிவளருந் தன்னைத்தா னறிந்தந்த
காரணம் பூரணந் தொழுவா மரோ. (௪)

ஆலங் களைப்பகரி னனேகவா யிரமென்ப
தத்தனை யநித்யங் கண்ட கன்றே
கோலங் குறிதோற்ற ஜெகமயக் கின்றியே
கோதிலா தகமுடன் வெளிது றந்தே
பாலங் கடந்தேக பரவெளி யுளத்தே
பாவனைகள் நிக்கிரக மான போது
காலங் குடிவளருந் தன்னைத்தா னறிந்தந்த
காரணம் பூரணம் புகழ்வா மரோ. (ரு)

---

முதலாவது

## குருநிலைப்பதிகம்

---

### இரட்டையாசிரிய விருத்தம்

பூரணவி யாபக மோரெண விவேகமே
பூர்த்திதரப் பணசொ ரூபம்
புத்திக்க திஷ்டான புத்திக்க ருட்டானே
புத்துயிர்க் குயிர்சொ ரூபம்
ஆரணத் தொருமொழி மாரணத் திகபர
மகண்டவெளி நிர்ச்சொ ரூப
மத்துவித வேதன வத்துநிச் சயமுற
வகம்பிரம சுகசொ ரூபந்
தோரண மாவரணஞ் சீரணித் தகம்வெளி
தொக்கறு மேக ரூபந்
தொந்தத்த சியென்ன சந்தத நிலைவழி
சோதிப்பிர காச மறிவே
காரணம் பூதமே காரியம் பௌதிகங்
கற்பனைக டந்த குருவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (க)

அல்லுடன் பகலிலாத் துல்லிபத் தின்புரு
வன்புரு வாம்சொ ரூப
மறியக்கூ டாதென்ற வறிவே யறிவென்ற
வவதாமி லாச்சொ ரூபம்

தொல்லுல காசையுட னல்லல்பல நூல்முறைத்
    தொல்லைவிடு மெய்சொ ரூபந்
தோடமூ வேடணைப் பீடைதுற் போதனைத்
    தொடரா தடர்சொ ரூபஞ்
சொல்லுஞ் செயலொடு மெல்லைவைத் தொழுகிடுஞ்
    சோரவிட் டகல்சொ ரூபஞ்
சொச்சொரூப மானந்த சச்சிதா னந்தநிலை
    சோஹம்நிர்த் தேக மறிவே
கல்லாம னக்குரங் கெல்லாத்தி லுஞ்சேட்டை
    கண்டித்த கண்ட குருவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
    கருணைகா ருண்ய வாழ்வே. (உ)

எங்குஞ்சு யஞ்சோதி பொங்கும் பிரகாசமே
    யேகவிக் ஞான ரூப
மேகாச மனவெளி மோகவி காரமிலா
    தின்பதுன் பறுசொ ரூபம்
பங்குபா கம்மிலா தங்கநான் கும்முணர
    பரிபக்கு வச்சொ ரூபம்
பாவபுண் ணியமிலா தேவதரு வறிவிலே
    பலதொழில் நாச ரூபந்
தங்குசோ பானமாம் நிரங்குச திருப்தியி
    லானந்த தற்சொ ரூபந்
தத்துவத் தெரிசன மற்றநிலை நித்தியம்
    தடத்தலட் சணம றிவே
கங்குல்பக லென்பதிலாத் துங்கவி யாபகக்
    காரண முணர்ந்த குருவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
    கருணைகா ருண்ய வாழ்வே. (ரு)

அதிவிதச் சதுமறை விதிமுறை யொருமொழி
    யபரோக்ஷ மாஞ்சொ ரூபம்
அந்தத்து வமிலைப் பந்தத்தி ரயமிலை
    யவகாச வெளிசொ ரூபம்

பதிபசு பாசமெனுந் திதிபுக ழேதுமிலாப்
பரமார்த்த நிலைசொ ரூபம்
பாவனைத் திரயமொடு ஈாவினை லோதிடும்
பவுருஷமி லாச்சொ ரூபம்
விதிமதிக் கெட்டாது கதிதிதி லொட்டா
வியாபினியா மதிசொ ரூபம்
விற்பனவி வேகமே கற்பகத் தருவருள்
விசாரணைக் குரவ வறிவே
கதிநிதிய மறிவதே பொதுசமய போதமே
காரிய மிழந்த குருவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (௪)

மோனவுரு வானதிரு ஞானநெறி தேனமுது
மோக்கத் தகச்சொ ரூப
மொய்த்தசீ வசாக்ஷி மெய்த்தசீ வன்முத்தி
மோசனத் தின்சொ ரூப
மீனவிட யத்திரை விலீனமுறுந் தெளிவி
னின்பரூ பச்சொ ரூப
மித்திரஜா லமனப் பந்தபா சந்தொலைத்
தியக்கமறு மேக ரூபம்
ஞானசூ ரியநெறி பானஜட போதமற
ஞாயச்சு கச்சொ ரூபம்
ஞாதாஞா னஞ்ஞேய பேதாபே தம்மின்றி
ஞாபகத் துண்மை யறிவே
கானநீர் தோற்றங்க ளானபல நாட்டமிலி
கதிரொளி யான குருவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (௫)

நேயபா வனைபலவு மாயவி காரமென
நேதிக்க நின்ற ரூபம்
நேமமல யோகமொடு நாமரூ பம்மெண்ணு
நினைப்பிலெட் டாச்சொ ரூபம்

காயனடி மையெனும் பேயவல நடையெலாம்
　　நழுவிட நடன ரூபம்
நானுவி தக்கிரியை நீநானெ னும்பேதம்
　　நாஸ்திசெய் திடுசொ ரூபந்
தூயமன தமைதியிலு பாயமுறை தேறிடத்
　　திடர்பவ மிலாச்சொ ரூபந்
துக்கசுக மேதுமிலா தெக்கரும மும்மின்றித்
　　துரியபொரு ளான தறிவே
காயவரை திரையற்ற காயவெளி யுந்தாண்டிக்
　　கருத்திற் கியைந்த குருவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
　　கருணைகா ருண்ய வாழ்வே. (கூ)

அழியாத பரவெளி னெளியாத கந்தெளி
　　யையமறு மெய்ச்சொ ரூப
மறிவாத்மா தன்னிலே பொறிபுல னியக்கமற்
　　றன்பாய் வளர்சொ ரூபம்
பழியாத பொதுநீதி வழியாய்ந் துணர்ந்திடப்
　　பரிபூர ணச்சொ ரூபம்
பஞ்சபூ தப்பேய்கள் மிஞ்சா தடக்கிடப்
　　பாசநா சச்சொ ரூபம்
வெளியான சூநியம் மொழியாத கந்தெளி
　　வேதநீ யச்சொ ரூபம்
வேதாந்த முடிவிலே நாதாந்த விதேகமே
　　விமுகத்தபா முத்தி யறிவே
கழியா தகண்டித வொளியாய்த் தெளிவிலே
　　கனிந்தொழுகு ஞான குருவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
　　கருணைகா ருண்ய வாழ்வே. (எ)

வாய்ச்சமர்த் தஞ்ஞான பேச்செதிலு மெட்டாத
　　வாசனா சூந்யசொ ரூபம்
வந்தனை சிந்தனைத் தொந்தம் பலவொழிய
　　வஸ்துநிச் சயசொ ரூபம்

கூச்சலிட் டோலமிடு பாச்சல்களி லெட்டாத
• கூடஸ்த வாத்ம ரூபங்
குணங்குணி மயத்திலே யிணங்குமவ காசமெக்
குற்றமு மிலாச்சொ ரூபஞ்
சீச்சியென் றுலகதிரை நீச்சலிட் டக்கரை
சென்றிடத் தகண்ட ரூபம்
சிவத்து வம்மிலாக் கேவலா னந்தநிலை
சித்திக்கு மௌன மறிவே
காய்ச்சித்தெ ளித்தமுது பாய்ச்சித் திருத்தமுறக்
கறைதீர வந்த குருவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (அ)

இருமையொடு மிருவினைப் பெருமையொடு மடமைக
ளிழுந்திடத் திடசொ ரூப
மிந்திரிய போதமொடு மந்திரம தோதலு
மிச்சித்தி டாச்சொ ரூப
மெருமைகலக் கல்போன் றருமைதெரி யாதவர்க்
கிரச்சுசர் பச்சொ ரூப
மிதாகித ரகிதஞ்சி தாகாய மனவெளி
யிதரமி லாச்சொ ரூப
மொருமைதன் வைராக்ய மருமம்ம றிந்திட
வுத்தேசமான ரூப
மோயாத வழியாத மாயாத மறையாத
வுண்மைகுடி கொண்ட தறிவே
கருமைபல நிறங்குணம் விரியுவமை யற்றநிலை
கம்பன மிலாத குருவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (கூ)

பருவங் தவறிடா நிருவிகா ரத்திலே
பகிர்முக மிலாச்சொ ரூபம்
பற்பலவி கற்பசங் கற்பதுர்க் கிரியைமலப்
பாவனையி லாச்சொ ரூபம்

சருவபரி பூரணந் திருவுரு வியாபகம்
சைதந்நிய நிசசொ ரூபம்
சமத்துவக் கல்யாண நிமித்தகா ரணமாகி
சமுசயமி லாச்சொ ரூபந்
துருவமன தமைதியே திருவருள் விலாசமே
துவாதசாந் தச்சொ ரூபந்
துரியாதி தத்தன்மை பிரியா வநுபூதி
தூதான தோது மறிவே
கருவம தங்களிலா நிருவாண நிட்டையிற்
கலிமாத் துவிப குருவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (ய)

முதலாவது குருநிலைப் பதிக முற்றிற்று.

---

இரண்டாவது

## மயப்பதிகம்

---

திருவுரு பேருரு வருளுரு வன்புரு
சீருரு சந்தத மயம்
சித்துரு கல்யாண சத்துரு மித்துரு
திருவரு ணிறைந்திடு மயம்
மருவுரு மலருரு வொருவுரு விரிவுரு
மன்னுயிர்க் கின்புரு மயம்
மகிழுரு திகழுரு புகழுரு தனதுரு
மாசிலா ஞாதுரு மயம்
அருவுரு யிதமுரு பொருளுரு பரவுரு
வகமுரு தேசோ மய
மறிவுரு நிறையுரு நெறியுரு நிரூப
மறிவினுக் கறிவா மயம்
கருவுரு காரண மருளுறு மஞ்ஞான
கற்பனை நசித்த மனதே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (க)

பேதவுல காசைதற் போதமறு விவகார
பிரக்ஞான சாதன மயம்
பேரின்ப மானந்த மோரின்ப நிச்சய
பொருட் சாயா மயம்

தாதமார்க் கம்விடுத் தோதுமக் திரமிலாத்
தத்துவத் தெரிசன மயந்
தடையொடு விடயபன் னடையும்விட் டகன்றிடத்
தனதென் றறிந்திடு மயம்

பாதகமி லாதேக போதநெறி நீதவழி
பகருவ திருக்கின் மயம்
பார்தனிற் பேதமறு கூர்மைநுண் ணறிவிலே
பகிர்முக மிலாத மயமே

காதலெது வும்மற்ற சோதிசிதா காயமே
கங்குல்பக லற்ற மனதே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (உ)

பஞ்சகோ சத்திரைப் பிஞ்சிடச் சஞ்சலப்
பாரம றித்திடு மயம்
பாசஞா னம்மற நேசவிசு வாசசுய
பக்திரச மாகிடு மயம்

சஞ்சலமி லாதின்ப கெஞ்சக முணர்வழி
சருவசம் பூரண மயம்
சந்தேக விபரீத பந்தமல வஞ்ஞானச்
சனியன்க டத்திடு மயம்

நஞ்சிலுங் கொடியவிட பஞ்சபூ தச்சேட்டை
கழுவிடத் தெளிவின் மயம்
நாயனடி மையெனுங் காயதிரை வரையற
நாதாந்த சோதி மயமே

கஞ்சனத் தெளிவுள மெஞ்சிய வறிவுரு
கதிரொளி தூய மனதே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (௩)

விதியாத மதவாத புதிதாய கதைவிட
வெட்டவெளி யாய்ந்திடு மயம்
விற்பன விக்ஞான தற்பணந் தீட்சண்ய
வித்தைக் கிலக்கிய மயம்

துதியான பதவிபல வுதவிதே டாநிலை
தூண்டா விளக்கொளி மயம்
தூடணைக் கன்மமூழ வேடணை மறந்திடத்
தூதுசை தந்நிய மயம்

மதியாத சாஸ்திரச் சதியோச னையற
மனமலின மற்றிடு மயம்
மன்னுயிர் தன்னுயி ரென்னுமாத் துமஞான
மவுனரூ பத்தின் மயமே

கதிதீதி லாதேக மதியூக தீட்சையிற்
கவலைக ளொழிந்த மனதே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (ச)

நியமமென் றுள்ளதோ வியமந்து டர்ந்திடு
நினைவைத் தடுத்திடு மயம்
நிர்வாண நிட்டையிற் சர்வசம் பூரண
நித்திய சுகத்தின் மயம்

சயனசொப் பனமின்றி பயனருள் சுழுத்தியிற்
சங்கற்ப மற்றிடு மயம்
சம்பவமி லாப்பொறிக் கம்பனமி லாதுற
சாக்கிர சுழுப்தியின் மயம்

சுயநிலை வியயமில் லதிஜய வதீதமாய்
சுகாசுக மொழிந்திடு மயம்
சுத்தசூ நியமாகி சித்தசஞ் சலமற
சுகானந்த ரங்க மயமே

கயவர்க்கா ளாகாது வியவிதா னம்மின்றிக்
கலங்கா திலங்கு மனதே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (ரு)

வேளைபொது நன்றுசித நாளே தனைக்காண
வேதன விளக்கிடு மயம்
வேத்தியற் றெளிவழி மாத்திரைய றிந்துதைய
வித்தை பாத்துவ மயம்
யேழைமதி யாகாது பாழைக்க டந்தொருமை
யேகாகா ரத்தின் மயம்
யெதுவந்து நேரினு மிதுவன் றெனத்தேறி
யெல்லாம் நசித்திடு மயம்
ஊழையிடு நரிபோன்ற கோழைமந் திரவாத
வூனந்த விர்த்திடு மயம்
உயர்சாக்ஷி தானென்ன துயர்பவ மொழித்திடு
முண்மைகுடி கொண்ட மயமே
காளைகிழ மாகிலென யேழவத் தைப்புறங்
கனிந்ததே னூறு மனதே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (சு)

தொந்தமொடு பகிர்முக பந்தபா சங்கள்பல
தோடமறு கேவல மயம்
தொல்புவி யாசைவிட் டல்பக லேதுமிலா
சொச்சொரூப நித்தில மயம்
சந்ததமு மாருத னந்தபரி பூரண
சாயுச்ய வாட்சியின் மயம்
சாந்தம மைதிவிசி ராந்திகுணி நிலையிலே
சதானந்த பூர்த்தியின் மயம்
அந்தத்து வப்பிரமை சிந்தனைக ளற்றிடத்
தாரோப மகற்றிடு மயம்
அத்தநிலை சுத்தவெளி சித்திபர முத்திதனி
லகத்துறவா னந்த மயமே
கந்தமுன் னுட்பகை நிந்தனைக ளேதுமிலாக்
காரண முணர்ந்த மனதே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (எ)

வஞ்சகம் பொய்சூது நெஞ்சக மிலாத்திரி
வாசனைம றந்திடு மயம்
வாசிதம் பனயோக பாசியன் பாசியெனும்
வாதனைய ழித்திடு மயம்
தஞ்சமொ டிரப்பிரங் தஞ்சலிட் டோதிடுந்
தடைவிடய மற்றிடு மயம்
தற்போத மாயமனக் கற்பித மொழிந்திடத்
ததாகாரத் தன்புரு மயம்
சஞ்சல மலமூட்டைப் பஞ்செலா மெரித்திட
தணலாகு மறிவின் மயம்
சகலத்தி யாகமே சுகதுக்க மற்றது
சகஜபே ரின்ப மயமே
கஞ்சனத் தெளிவுளத் தெஞ்சிய வறிவருட்
கதிர்மதி சுத்த மனதே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (அ)

அண்டம்பு வனங்க ளெண்டிசை நின்றொளி
ரருளாய் நிறைந்திடு மயம்
ஆனந்த நித்திரை தானந்த முத்திரையி
லவகாச தீட்சண மயம்
தொண்டனுண் டாமெனுங் கண்டன மறுத்திணைத்
தொந்தங் கடந்திடு மயம்
தோதகந் தீதகம் பாதகம் பேதகந்
தொல்லையை மறுத்திடு மயம்
தெண்டனிட் டலறிமனந் திண்டாடி டாதுளந்
தெளிவிலொளி வாகிடு மயந்
தேவதத் துவமாகி சிவதத் துவபேத
செருக்கிலா னந்த மயமே
கண்டனமி லாமலே யகண்டிதா காரமாய்
கர்த்தவியத் தேக மனதே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (கூ)

மேலவெளி ஞானநிலை கோலமிலா மோனவுரு
மேவிடு மனோலய மயம்
மெய்யினில் மெய்யறிய வையந்திரிபறு
மெய்யாம்ச தோதய மயம்
மூலவழி தேகமறக் காலன்பகை சோகமறு
முத்துரிய வெற்றியின் மயம்
மூடத்துவம் நீங்கிச் சேடித்த வறிவாலே
முத்திசித் தானந்த மயம்
தூலவழி தானொழியத் தாலவினை துக்கமறு
துறவிகட் குறவின் மயம்
தூரந்தா சுகந்தா நிரந்தர பரந்துரிய
துரியாதி தத்தின் மயமே
காலவழி சுற்றற்ற சிலகுண சித்தமாய்
கருத்தமைந் திட்ட மனதே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (௰)

இரண்டாவது மயப்பதிக முற்றிற்று.

---

மூன்றாவது

## ஜெயப் பதிகம்

---

நினைவது நிலைத்திட நனவிற்சு யஞ்சோதி
நீங்காத கந்தெ ளிந்தே
நிற்குண நிராதார தற்குணச தானந்த
நிம்மதி சம்ம தத்தே
மனைபெண்டு பிளையர்த் தந் தனைவென்ற சித்தசுக
மனமாதி தத்துவ மொத்தே
மணிமந்தி ரச்செபம் பிணிபந்த மந்தகிரை
மாய்கைக ளற்றொ ழிந்தே
வினைமனப் பழுவிலா தெனைத்தனி யறிந்திட
விவர்த்தவா தந்தொ லைந்தே
விருத்திமெய் ஞானமே திருத்தமுறு மறிவிலே
விமுக்தமாய் நின்ற வருளே;

கனிபழுத் தொழுகுதே னினியமனத் தன்புரு
காண்பதற் கந்நிய மில்லையே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (க)

கொண்டாடி மன்றாடித் தெண்டனிடு தன்னிலே
குணங்குணி விளங்கி டப்பாழ்
கோர்த்திடும் பலகிரியை சாத்திரந் தற்போத
கோட்டியுஞ் சேட்டை யும்பாழ்
வண்டாயி ரைந்தோதி விண்டபல மந்திர
வாதனை வாச னைபாழ்
வாரிதி சமுசார மாருதத் துழல்மன
வணக்கங்கு ணக்கங் கள்பாழ்
பண்டாரம் பக்கிரென் தொண்டனு யலைகின்ற
பக்திபல வேஷங் கள்பாழ்
பண்ணும்ப லதொழி லெண்ணமொன் றில்லாத
பாக்கிய மெய்ஞ்ஞா னமே
கண்டாலுஞ் சொல்லொணு தண்டபிண் டம்நிறை
கண்டிடவர் நியமில் லையே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (உ)

ஏந்திடும் பொருளேது வாய்ந்திடு மஹமேது
வெல்லாம றிந்த தறிவே
இன்பமொடு துன்பமுந் தம்பமொடு தஞ்சமு
மிச்சையென் றறிந்த தறிவே
தாந்தனி மயத்திலே காந்தமன வெளிதனிற்
றனைத்தா னறிந்த தறிவே
தத்துவஞ் சுட்டறிந் தெத்தொழிலு மற்றநிலை
தடையுற் றறிந்த தறிவே
மாந்தர்ப முக்கங்க ளோய்ந்தசுக நிட்டையில்
மறைபோத முதைய மறிவே
மந்தமு மந்ததா சிந்தனைக ளேதுமிலா
மவுனவுரு மெய்ஞ்ஞா னமே

காந்தமன தமைதியிற் சாந்தவநு பூதியின்
காட்சியுமந் நியமில் லையே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (௩)

வெட்டவெறு மேடான பொட்டலிற் பயிரிட்டு
விட்டவிதி யென்ப தேனோ
விளக்குநிழற் கஞ்சனப் பழக்கரவி மதியுடு
விழிரூப நோக்க லேனோ
வட்டெழுத் தைந்தெழுத் தெட்டிரண் டெழுத்தென
வாசியோ கங்க ளேனோ
வாலைப்பெண் டாமெனக் காலைமா லைதேடி
மந்திர மோத லேனோ
தொட்டகுறை விட்டகுறை யட்டாங்க யோகமெனுஞ்
சொற்களை நம்ப லேனோ
தொல்லைபல நூல்வழி யல்லற்க டந்தேக
சொச்சொருப மெய்ஞ்ஞா னமே
கட்டிக்க ரும்பினிய நிட்டையெல் லாம்விடக்
கண்டபொரு ளந்நிய மிலையே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (௪)

சூத்திர முணர்ந்தென்ன சாத்திர மறிந்தென்ன
சுயஞானம் பெற்ற தில்லை
சுத்தசூ நியவெளி சத்தியம் நிர்வாண
சுகநிட்டை நனவி லில்லை
மாத்திரைக் கணமதிற் றோற்றிம றைக்குமன
மாயையை விட்ட தில்லை
மணியெண்ணி வாய்பறை முணுமுணுத் தோதிடு
மந்திர மறந்த தில்லை
கோத்திர முயர்குரு பாத்திரர்க ளென்றென்ன
குருவைத் தெரிந்த தில்லை
குடிவெறி லகிரியே மிஞ்சிடும் பஞ்சைகள்
கூடிடா மெய்ஞ்ஞா னமே

காத்திரந் தனையன்றிப் போற்றுவ தெலாம்பொய்யே
கதியென்ப தங்கிய மிலையே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (ரு)

வாசிதம் பனயோக நேசித்து ழைத்தென்ன
மனவிசி ராந்தி யுண்டோ
மறைகளை யறிந்தென்ன துறைகளை யுணர்ந்தென்ன
வாசனைக ளற்ற துண்டோ
நாசிநுனி சுழிமுனைத் தேசிநடை கண்டென்ன
நாதாந்த தீட்சை யுண்டோ
நங்கைம னோன்மணி செங்கிரை பார்த்தென்ன
நனவிலா னந்த முண்டோ
பாசிக்கு ளம்போன்ற வேஷதா ரிகள்சொலிற்
பக்குவ மேது முண்டோ
பாவனைக ளேதுமிலாத் தேவதரு தன்னறிவு
பக்திரச மெய்ஞ்ஞா னமே
காசினி தொழிலொழிந் தாசைபல வற்றிடக்
காரணமந் நியமில் லையே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (சு)

எத்தனைக் கோடி நூற் புத்தகங் கற்றென்ன
யிணையற்றி ருக்க வழியோ
வீரேழு லகத்தை நேரில மைத்தென்ன
விருதய மொடுங்க நிலையோ
பத்தரை மாற்றதிக வெற்றிபொன் செய்தென்ன
பாழ்மனம் பழுத்த துண்டோ
பரதேசி பக்கிராய் நிறவேஷ மிட்டென்ன
பாராசை யற்ற துண்டோ
சித்துகள் விலாயத்து வித்தைபல செய்தென்ன
சிந்தைநிலை நின்ற துண்டோ
சிவபேதங்களொடு பாவபுண் ணியமற்ற
சிவசொரூப மெய்ஞ்ஞா னமே

கத்தனைத் தேடிதின மெத்தனைக் கழுதென்ன
கண்டிடவந் நியமில் லையே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (எ)

தனையன்றி வேறென்ற வினையன்றோ வுற்பவத்
தமோகுணத் தலையா மலே
தர்க்கசாஸ் திரங்கற்று நிற்குநிலை மாறியே
சமத்துரைக ளோதா மலே
நினைவென்ற பேய்ரதந் தனுகாண புவிபோக
நிரயத் தழுந்தி டாமல்
நிதார்த்தங்க ளில்லாப் பதார்த்தங்க ளைப்போற்றி
நிட்டைசெய் துறங்கி டாமல்
தினையளவு முற்பனந் தனிலுறைய விற்பனத்
தீவிர மறந்தி டாமல்
திருக்கனு பவத்தீட்சை துறக்கமன தமைதியே
திருவளரு மெய்ஞ்ஞா னமே
கனவொடு நினைவிலா தெனைநா னறிந்திடக்
காரிய மொன்று மிலையே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (அ)

குறைவற்ற கல்விதா னிறைவுற்ற செல்வமனங்
குளிர்தலே சுத்த சுகமே
குலமொடு கோத்திரங் கலகசமு சாரங்கள்
கோத்திடா நிலைதன் னருள்
மறைவற்ற விபுமயந் திரையற்ற போதத்தின்
மனநாச மேவ ணக்கம்
மாதவ நிட்டையது பேததிருஷ் டியின்றி
மனங்கு விதலே தொழுகை
வரையற்ற தன்னருட் பெருவெளி யவகாச
மனவெளி மவுன னந்தம்
வானவழி யாய்ந்திதய தானவழி நிதானமுற
வளர்திரு மெய்ஞ்ஞா னமே

கறையற்ற வாத்மசுக மறிவுற்ற பேதமதிக்
கருத்தமைய வேறில் லையே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (௬)

உன்னுமன நினைவைப் பின்னமில் லாதாக்கி
யுதியா லயம்ச மாதி
உபமேய நிச்சய மபவாத திட்லைசயி
லுபாதியற லேச மாதி
தன்னிலே தானாகி யந்நியமி லாதேக
தத்துவ மசிச மாதி
தாரதம் மியமிலா தீரவை ராக்யமனத்
தடையற் றிடல்ச மாதி
மன்னுயிர் தன்னுயி ரென்னும ஹம்பிரம
வஸ்துநிச் சயச மாதி
மவுனமணி மந்திர மவனிவ னென்பதில்லை
மனோலய முண்மை ஞானம்
கன்னலமு தாமறி வென்னிலென் றனையறிய
கதிர்மதி யந்நிய மில்லையே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (௭)

மூன்றாவது ஜெயப்பதிக முற்றிற்று.

---

நான்காவது

## தீட்சைப் பதிகம்

மோனந்தி யானநி தானமெய்ஞ் ஞானமே
முத்திக்க பேத தீட்சை
மோகவி காரந்துர்ச் சோகந்தி ரிசிய
மோகாதி யற்ற தீட்சை
தானந்தி ரைமற்ற வானம் வெளியொளி
தடையற்ற திந்த தீட்சை
தத்துவக் குப்பைதி பற்றிந சித்தொழிய
தத்துவத் தைக்ய தீட்சை

ஞானந்தி கழ்வழி பானந்தா னறிவுரு
ஞாயப்பிர காச திட்சை
ஞாதாஞா னஞேய பேதவி காரமற
ஞானுவா னந்த மீட்சி
கானனீர் பிரபஞ்ச மானதா லிரண்டையுங்
கலந்திடத் தானந் தமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (க)

என்னைத்தா ஞென உன்னித்தா னேர்ந்திட
யிரண்டற்ற வைக்ய திட்சை
யிகபரவி ராகத்திற் ஜகமிலட் சணமென
யேகமவி கார திட்சை
பின்னிய பிரவிர்த்தி யந்நிய நிவர்த்தியிற்
பிரக்ஞான பிரம்ம திட்சை
பிறந்திறந் துழலா தறந்தரு மறிவுரு
பிராப்திசை தன்னிய திட்சை
தன்னையே தானறிய சென்னியநி னைப்புதைய
சங்கற்ப மற்ற திட்சை
தத்தனித் தாசைகொள் சித்தநி ரோதமுற
சாக்ஷிதா ஞய மீட்சி
கன்னலின் னலிலா நன்னிலை சுபாவமே
கரையேற வானந் தமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (உ)

மதிரவியுஞ் சாயாத பொதுஞான நிலையிலே
மதிவிதி லயித்த திட்சை
மாசற்ற நேசத்திற் காசற்ற தற்சொரூப
மாற்றித் தனித்த திட்சை
துதிகதி பதவியென் றிருதயத் தெண்ணுது
துக்கம்நி வர்த்தி திட்சை
துக்கசுக மத்தனையும் நிக்கிரக தண்ணருட்
டுவைதமில் லாத திட்சை

விதிநிஷே தம்பல வதிஜயமெ லாம்விட
　　விருத்திமெய்ஞ் ஞான தீட்சை
விசேடகற் றெளிவிலே யசேதன நசித்தேக
　　விபுமய மான மீட்சி
கதிதீதெ னுமனது மதவாத விதமறக்
　　கடந்தநிலை யானந் தமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
　　கருணைகா ருண்ய வாழ்வே. (௩)

உதியாது திப்பதைச் சிதையா தகத்துளே
　　யுணர்ந்திட வணைந்த தீட்சை
யுபயோக மற்றிடுஞ் செபதப நிட்டையி
　　னுபாசனை நசித்த தீட்சை
பதியாது தனிலான துதிவே றிலாமலே
　　பழகிடத் திருவின் தீட்சை
பட்சமாம் பிரதிபல னிச்சைபல துச்சங்கள்
　　பற்றற்றி சைந்த தீட்சை
மதிபோத கண்டிதச் சதுர்பாத வராதிரை
　　மயக்கம றந்த தீட்சை
மனோராஜ் ஜியஞ்செய் வினோதமத கற்பனை
　　வழுவிடத் தான மீட்சி
கதியாது ளத்திலே சதுமறை விளக்கமே
　　கருத்தமைய வானந் தமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
　　கருணைகா ருண்ய வாழ்வே. (௪)

அத்தியா ரோபதிரை சுத்தி ஸ்மரணையி
　　லாவரண மற்ற தீட்சை
அச்சஞ்ச விப்பொடிங் கெச்சமய துச்சமு
　　மற்றநிலை சுத்த தீட்சை
புத்திமெய் யுணர்வா லகத்திரய பற்றின்றி
　　புக்திசித் தான தீட்சை
பின்னெறிக் காளாகி யந்நிய தாக்கியாதி
　　புன்மொழி கடந்த தீட்சை

சத்திய மஹம்சாக்ஷி நித்திய சுபாவநிலை
சச்சிதா னந்த தீட்சை
சாலோக சாமீப சாரூப சாயுச்ய
சமயம்விட் டான மீட்சி
கத்திய லரூதொருமை சித்தங் குவிந்திட
கறையற்ற தானந் தமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (ரு)

ஏவலொடு விலகலு மாவலொடு பாவனைக
ளெல்லாங் கடந்த தீட்சை
யென்னைநா னென்றதுந் தன்னைவே றென்றதும்
மெடுத்தெறிந் திட்ட தீட்சை
கேவலா தீதமே நாவினு லோதொணுக்
கேவலா னந்த தீட்சை
கேட்டதுங் கற்றது மேட்டிலே கண்டதுங்
கெடென மறந்த தீட்சை
மூவுல காசையொடு பாவனுத் திரயங்கள்
முத்தடை யறுத்த தீட்சை
முக்காண முத்தேக முக்குண பக்திகள்
முடிந்திடத் தான்மீட் சியே
காவல்கள் துணையிணை தேவையெ வையுமற்று
கடைத்தேறு மானந் தமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (சு)

ஓயா சதாகற்ப சாயா சமாதியு
முளங்குளி ரமைதி தீட்சை
ஓங்கார மந்திர ரீங்கார மற்சனைக
ளுளமின மற்ற தீட்சை
மாயா சகிதமலப் பேயாம் பொறிகரண
மலியாத ழித்த தீட்சை
மமதையு மகம்பாவ தமசுமுயி ரிம்சையு
மாற்றும் ஸ்மரணை தீட்சை

பாயாத மனதமைதி காயாதி கற்பமெனப்
பழகிதெளி வுற்ற தீட்சை
பாசநா சத்திலே வாசனைக ளற்றிட
பக்குவ மான மீட்சி
காயாதி தத்துவத் தாயாச மொன்றுமிலே
கன்மமற வானந் தமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (எ)

பெரியோர்கள் சிறியோர்கள் மறையோர்கள் முறையோர்கள்
பேச்சுக்கெட் டாத தீட்சை
பெத்தர்ம தத்தோர்கள் புத்தக மதிப்போரின்
பேறிழவு மற்ற தீட்சை
மரியாதை தெரியாத குருசிட னுணராத
மகத்துவா தீத தீட்சை
மனோராஜ் ஜியத்திலுந் தினேயுபா சனையிலு
மட்டிலா நிட்டை தீட்சை
துரியகதி நனவிலே யரியநிலே சாக்ஷியாய்த்
துறையேற நிறைவு தீட்சை
தூண்டா விளக்கொளி ஆண்டான டிமையெனுந்
துடாறத் தான்மீட் சியே
கருமோபா சனைவிடுத் தொருமைசை தந்யநிலே
காரண மானந் தமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (அ)

தன்னைய றியவிதி யந்நியமி லாமலே
தகுதியி னஸ்த தீட்சை
சாகல்ய வைகல்ய பாகமி லாதொருமை
தனிவாக்ய மான தீட்சை
பின்னிய வநித்திய சன்னியம் நசித்திடப்
பிணக்கிலா நயன தீட்சை
பிழையறப் பரிசமொடு வினைவறு மானசம்
சாத்திரம் பேசு தீட்சை

வின்னம றுக்கமன முன்னுகிரி யாதீட்சை
• விவேகமுறு மியோக தீட்சை
வேதனத் தீட்சையொடு வாத்மலட் சணதீட்சை
விளக்கமுந் தனது மீட்சி
கன்னலமு தேமாருத் தன்னறிவே யின்னமுது
கடந்தபுக ழானந் தமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (சு)

ஆமைமீன் பறவையின் நேமநெறி குருவழி
யறிவுரு வான தீட்சை
யறிவாத்மா முறைதெரி பொறிபுலன் காணமு
மர்ப்பணத் தொருமை தீட்சை
நாமரூ பப்பிரமை யேமமல வாதையற
நாதாந்த போத தீட்சை
நானுவி தத்துவித மானுபி மானமும்
நழுவிதடை யற்ற தீட்சை
தாமதமி ராசதம் தோமறப் போருட்
டானேதா னுன தீட்சை
தத்துவ மறிந்துய்ய சத்துசித் தானந்த
தாஷ்டாந்த மான மீட்சி
காமவி காரதிரை தீமைநல மற்றிடக்
காலமிறந் தானந் தமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (எ)

நான்காவது தீட்சைப் பதிக முற்றிற்று.

ஐந்தாவது

## சோஹப் பதிகம்

முத்திநி ராசையிற் சித்தியாத் துமஞான
முப்பாழ் கடந்த சோஹம்
முப்பகை முக்காண மெப்பகையு நிக்கிரக
மும்மல நசித்த சோஹம்
புத்திமதி யுக்தியாற் சித்தமசை யாநெறி
புலன்பொறி லயித்த சோஹம்
புத்தகக் கதைகளை மித்தையென நீக்கிடப்
புன்னெறி கடந்த சோஹம்
சத்தியத் தெரிசனை நித்திய விளக்கமது
சகுணநி வர்த்தி சோஹம்
சர்வவிக் ஞானமே செர்வமா மமதையறு
சாக்ஷாத் கார நிறைவே
கத்திக்கு நித்தோதி லெத்தமுடி யாவருட்
கலங்காதி லங்கு மதியே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (க)

செறிபஞ்ச கோசமும் பொறிபுலன் கரணமுஞ்
செருக்கற வேக சோஹம்
சேதனவி ருத்தியின் சாதனம் மனநாச
செகச்சொரூப மற்ற சோஹம்
அறிபடு பொருளையே வறிபவன் தானென
வச்சங் கடந்த சோஹம்
அந்நிய தாக்யாதி பின்ன வின்னமற
வகக்கான தண்ட சோஹம்
நெறிமறை யுதிமன முறிபடா தநுபூதி
நேமநித் தியமே சோஹம்
நேதிநேதி தோன்றும் பூதியம றந்திட
நிஜானந்த சாக்ஷி நிறைவே

கறையற்ற விருத்தியிற் பிறையுற்ற மனவெளி
கமாலியத் தான மதியே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (௨)

சாதனை யறிந்திடச் சோதனை திறந்திடச்
சந்தேக மற்ற சோஹம்
சாதுருசி யமிலா பேதமிலி போதத்தே
சமத்துவத் தைக்ய சோஹம்
வாதனைவி கற்பங்கட் டூறினை யிழந்திட
வரையறுந் துய்ய சோஹம்
வாசனா ரகிதத்தே பேசொணா மனமமைதி
வான்வெளி யதீத சோஹம்
போதனைச் சிரவணத் தோதிலே மனனமாம்
பொருளைத் தெளிந்த சோஹம்
போதாந்த வேதாந்தம் நாதாந்தஞ் சித்தாந்தம்
பொதுவழி சிறந்த நிறைவே
காதலெது தனையன்றி பூதபௌ திகமாயை
கற்பித நசித்த மதியே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (௩)

பண்டைநாள் விதியெனக் கண்டவன் போலுரை
பழங்கதை யழித்த சோஹம்
பணப்பே யினப்பேய் மனப்பேய் சனப்பேயைப்
பாழா யழித்த சோஹம்
தொண்டனுண் டானெனுங் கண்டன மலமூட்டைத்
தொல்லைக் ககன்ற சோஹம்
தோலுங் துருத்தியுறு தூலத்தை நானென்று
சொல்வோர்க்கெட் டாத சோஹம்
விண்டிடுங் காமனூல் சண்டைமத வாதத்தில்
விளங்காத மந்திர சோஹம்
விட்சேப வஞ்ஞானத் துச்சம் மொழிந்திட
விவேக பூரண நிறைவே

கண்டவை யெலாமோன மண்டகண் டாகார
கனமாம் விருத்தி மதியே.
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (ச)

விண்ணுடி தெளிவதென் றெண்ணுமவ் வெண்ணமும்
விடயமென் ருய்ந்த சோஹம்
வெட்டவெளி யென்றது நிட்டைக லந்ததும்
விட்டுவெளி சென்ற சோஹம்
உண்ணுடி யேகலாத் திண்ணுடி நிட்டைகொ
ளுபாதிகள் கடந்த சோஹம்
உட்சேப ளுதியொடு விக்ஷேப குருவுரு
வுபாசனைக ளற்ற சோஹம்
தண்ணுடி நிர்வாண றண்ணுடிச் சயமாகித்
தடத்தலட் சணமே சோஹம்
ததாகார மனவெளி சிதாகாய மறிந்திட
தடையற்ற போத நிறைவே
கண்ணுடி தெளிவிெளி மண்ணுடி மூந்தகதி
காலமூன் றற்ற மதியே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (ரு)

அட்டாங்க யோகதவ நிட்டாங்க பூசைபல
வற்றுநிலே சுத்த சோஹம்
அட்டமா சித்திகளும் வெட்ட்வெறுங் கட்டெனவே
யவாவறுத் திட்ட சோஹம்
பட்டாங்கி லுள்ளபடி கிட்டுமென் றெண்ணிடும்
பஞ்சைகுண மற்ற சோஹம்
பக்குவி யாகாமற் றுக்கமே குடிகொண்ட
பராமுக மறுத்த சோஹம்
தட்டாங்க மெய்யறிவு மட்டாங்க மூகித்துத்
தாரணை தனித்த சோஹம்
தருமமே கத்திலே பருவமன தமைதியிற்
தற்பரா னந்த நிறைவே

கட்டாங்க மொன்றுமிலா நிட்டானு பூதிசுகங்
கலந்துற வாடு மதியே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (சு)

புத்தி விகற்பமொடு சித்த மசைந்திடும்
புறப்பிறப் பற்ற சோஹம்
புறப்பற் றகப்பற் றுறக்கம் விழிப்பிலா
பூரண சுபாவ சோஹம்
சுத்திதய முத்தருக் கெத்தெழிலு மற்றிடும்
சுகானந்த மவுன சோஹம்
சுத்தஞே யத்திலே அத்துவா பக்திவளர்
சுபவஜ பாவின் சோஹம்
முத்திப் பதவியெனு மெத்துவாய் ஞானங்கள்
முற்றுங் துறந்த சோஹம்
முன்னொடு பின்னென உன்னும் நினைப்பற்ற
முத்தலக் கான நிறைவே
கத்திப் புகழுமல மத்தனையு மற்றசுகக்
கருத்திலு தித்த மதியே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (எ)

சருவவதி காரணப் பெருமன விருத்தியின்
சமட்டி வியட்டி சோஹம்
சங்கப் பரித்தியாக சிங்கங்கள் முன்னேறு
சத்துருசம் மார சோஹம்
நிருவிகா ரந்துரிய துருவசுகம் நனவிலே
நிருபாதி கத்தின் சோஹம்
நிரந்தல மலமூனம் பரந்தபல தோற்றங்கள்
நியதி களைந்த சோஹம்
தருவதும் பெறுவதென் றொருவிதமு மில்லாது
தனியாசா மேக சோஹம்
தாபத்தி ரயமெனு மாபத்தொன் றில்லாத
தாத்துல்லா வான நிறைவே

கருமோபா சனைகளி னருவுருவ மொன்றிலாக்
கதிதி திலாத மதியே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (அ)

விளங்கும் விளக்கமு முளங்குவி துலக்கமும்
விசார விவேக சோஹம்
விவேசனந் தானெனமு வாசனைக ளற்றேக
விண்ணுய்த் தெளிந்த சோஹம்
உளங்குவிந் துவமைசொற் பழங்கதை மறந்துண்மை
உயர்சாக்ஷி யான சோஹம்
உலகத் திரிசியக் கலகம் நசித்திடு
முத்தம திருஷ்டி சோஹ
முளங்கொள் ஞானப்பகை விளங்கா தொழித்திடு
முதலறிவி லான சோஹம்
முமுட்சுத் துவத்திலே சமத்துவத் தியானமே
முயங்கா மனதி னிறைவே
களங்கமத வாதனை விலங்குகள் தறிபடக்
கல்விப் பெருக்க மதியே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (கூ)

தன்னையி ழுந்தபின் வின்னென் றன்னுமலே
தாதாத்மிய மற்ற சோஹம்
தத்துவத் திரைகளற சித்திற்க ரைந்துவெளி
தாண்டிதனி லாண்ட சோஹம்
யென்னிலவ னென்பதவன் றன்னில்நா னென்றது
மில்லா தகண்ட சோஹம்
யேகவிஞ் ஞானசி வோகம்பர யோகமு
மெல்லா மறிந்த சோஹ
மன்னிய மசித்திய வின்னசுக துக்கமு
மசேதன மிலாத சோஹ
மேஹமாஸ் பதத்திலே சுகமான பேரின்ப
மாருயி ரான நிறைவே

கன்னற்கரும் பினிய தன்னறிவே தன்குரு
கலைகள் திரண்ட மதியே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (ய)

ஐந்தாவது சோஹப்பதிக முற்றிற்று.

---

ஆறுவது

## மோனப் பதிகம்

---

ஐயகோ பொய்யுலக மையல்பேய்த் தேரென்று
வறிவறி வித்த மோன
மையந் திரிபற மெய்யறி வுணர்விலே
யாத்மானு போக மோனம்
பையரவி டம்மாயை பொய்யுற வாசைவிட
பாத்துவத் தன்மை மோனம்
பாகத்தி யாகலட் சணையேக நிச்சயம்
பழகிடச் சுத்த மோனம்
சையோக சமுசார மொய்யுமலம் வேறற
சைதன்னிய போத மோனம்
சைத்திரிய ஞானமே பொய்த்திரிசி யங்கெட
சதானந்த மவுன உருவே
கையுமெய் யும்மான துய்யமன முய்யவழி
கைவல்ய மான தறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (க)

பஞ்சுப் பொதிமலம் நஞ்சதுந் தீப்பொறி
பற்றித் தொலைக்கு மோனம்
பஞ்சத்த னென்றிடு மஞ்சுபூ தப்பேயை
பருவத் தடக்கு மோனம்
மிஞ்சுமோ காதிசெயற் பஞ்சைபோற் செய்யாது
மித்தையைத் தடுத்த மோனம்
மிருத்தியு ஸ்மரணையால் வருத்து மவித்தையை
மீட்டுவிரை யாக்கு மோனம்

கிஞ்சுகம் போலோது மஞ்சுமா றென்றதிற்
கிரியா நாச மோனங்
கிரியாதீ தத்திலே துரியாதீ தந்தானுய்
பிரியாநன் மவுன உருவே
கஞ்சுளி கழிந்தநிலெ நெஞ்சுக வியாபகங்
கற்பகத் தருவா மறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (உ)

எல்லைவைத் துநாமஞ் சொல்லிப்பு கழ்ந்திடு
மிணையைத் தடுக்கு மோன
மெச்சமய வாதகதை துச்சம யக்கங்க
ளெல்லாங் கடந்த மோனம்
தொல்லைவா சாஞானம் பல்லையி ளித்தோதுஞ்
சொல்லைக் கடிந்த மோனஞ்
சொப்பன சுழுத்திக ளற்பமுமில் லாச்சுகச்
சொரூபமாய் நின்ற மோன
மில்லையுண் டென்றுதா னெல்லையில் வாதமிடு
மிடும்பைக ளற்ற மோன
மிலட்சணத் தைக்யமே சுலட்சணந் தண்ணரு
ளின்பக மவுன உருவே
கல்லைக்க புறுகளை யெல்லைவை யாதபேர்
கருத்தில் நிறைந்த வறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (௩.)

சிந்தித்து விபரீத சந்தேக மஞ்ஞான
சிக்கற வளர்ந்த மோனஞ்
சிதாத்துமா தர்ப்பணம் பதார்த்தபே தம்மின்றி
சித்திற் கரைத்த மோனம்
சந்தித்த ரேற்றமொடு வந்தித்தல் மனவாதை
சஞ்சல மறுத்த மோனம்
சீருவக் கிரந்திமனக் கெருவப்பி ராந்திகுண
சங்கேத மற்ற மோனம்

நிந்தித்தல் புகழுதல் தொந்தித்த மும்மல
நிசிகளைந் துற்ற மோனம்
நினைவிலே தோற்றிடுங் கனவெலா மறுத்திடும்
நிராசையின் மவுன வுருவே
சுந்தமூ வேடணைக ளெந்தவித மும்மிலாக்
ககனவெளி போன்ற வறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (௪)

வார்த்தைகளி லெட்டாத மாத்ததிக விண்ணருள்
மனங்குவிய வாய்ந்த மோனம்
வானவர்க ளாகும்நிலை ஞானபரி பூரண
வஸ்துநிச் சயத்தின் மோனம்
பூர்த்திகளி லாச்சமய சாத்திரக் குப்பையைப்
புறம்பா யகற்று மோனம்
பூசித்து நேசித்து பாசித்த கத்திரய
புலன்பொறி கடந்த மோனம்
நேத்திரங்கண் டதுபோலத் தோத்திரஞ் செய்யுமன
நினைவைத் தடுத்த மோனம்
நேமநிட் டையென்ற சேமவி சாரணை
நிரோதமன மவுன வுருவே
காத்திரம் வேறற்ற பாத்திரந் தானென
ககனங் கடந்த வறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (௫)

சீரருஞ் சிற்றின்பப் பேரிரு ளறுந்திடச்
சிதாத்துமா வைக்ய மோனம்
சிருஷ்டிபே தங்களொடு திருஷ்டிபே தங்களற
சிவசொருப மான மோனம்
நேரருள் விளைந்திடும் பேரருட் டெளிந்திடு
நேசானு பூதி மோனம்
நேமங்க ணிஷ்டையென காமவா மபூசை
நேதிநேதி செய்யு மோனம்

வேறறவே யஞ்ஞான கோரவி காரதிரை
வேற்றுமை நசித்த மோனம்
வேறென்ற கொடியமலம் நீறென் றகற்றிட
வேதாந்த மவுன முருவே
காரிரு ளறுந்திடுந் தாரணை நிலைத்திடுங்
கப்பீர மரும மறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (௬)

எங்குந் திருவருள் தங்கும் வியர்பக
மேகரச மான மோன
மிந்திரிய புரவியுந் தந்திரிசா ரதிமதி
யெஜமானுத் மாவின் மோனந்
தங்கிய தேகாத மியங்குகடி வாளமனந்
தனிமார்க்க ஞான மோனந்
தடையற்ற நேர்வழி விடயநு கர்ச்சியறு
தத்துவ விளக்க மோனம்
பங்கமறு பேரின்ப மங்கா மகாமொழி
பக்திமன சுத்த மோனம்
பரிபூர ணானந்த நிருவிகா ரத்தண்மை
பரஞ்சோதி மவுன முருவே
கங்குல்பக லற்றவெளி பொங்குமாத் துமபோத
காளித மறுந்த தறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (எ)

தாதமார்க் கத்திலே பூதமவி னப்பூசை
தனில்விளங் காத மோனந்
தகராகா யத்திலே யிகபரவி ராகநெறி
சன்மார்க்க ரின்ப மோனம்
பேததனு காணமல வேதபா கியர்மனப்
பேதமைக்கெட் டாத மோனம்
பேறிழவுக் காளாகி தாரணியை நம்பிடும்
பேயர்க்குத வாத மோனம்

பூதபௌ திகதேக போததி ருஷ்டிசெய்
 பொய்தவத் தகலு மோனம்
பூர்வம மாமிலா நேர்மைசை தங்கிய
 புருஷார்த்த மவுன முருவே
காதலெ துவுமற்ற நீதபர மானந்தர்
 கருத்திலமை சுத்த வறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
 கருணைகா ருண்ய வாழ்வே. (அ)

சிவசப் தாவத்தை பாவனுத் திரயமொடு
 திரிசிய மறந்த மோனம்
சின்மாத்தி ரந்தானே தன்மாத்தி ரைக்கெட்டாச்
 சிதானந்த பருவ மோனம்
தேவதரு வழிவுரு சீவதிரை மாறிடத்
 தெளிவினொளி வான மோனம்
தெவிட்டிடா மனனமா மவுட்டியம் வோறத்
 தேனொழுகு சித்தி மோனம்
பாவபுண் ணியமற்ற சீவன்முத் திக்கேக
 பரமார்த்த மான மோனம்
பத்தற்ற வர்க்கெலாஞ் சுத்தநிர் மலசொருப
 பக்குவ மவுன முருவே
காவல்துணை யிணையொடு பாவனைக ளொன்றுமில்
 கதிநிதி தூய வறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
 கருணைகா ருண்ய வாழ்வே. (கூ)

தெருளுற்ற மனதிலே யருளுற்ற சித்திலே
 திருவருள் விலாச மோனம்
தேகத்தி யாகத்தே மோகத்தி ரோபவத்
 திங்கெலா மற்ற மோன
மிருள்மாற நுண்ணறிவு பொருளையு ணர்ந்திட்
 டிரண்டற நிறைந்த மோன
மிராகத்து வேஷமுந் துராசைகி ருத்திய
 மிழந்திடத் தனித்த மோன

மருளுமன வாதனைப் பிரளயம் பூதவினை
 மாற்றிடுந் தரும மோனம்
மனமின்றி மற்றெலா மினமன்று தெளிவுடன்
 மனோலயம் மவுன முருவே
கருணைக் கருணிதி வருமோதை யம்போன்று
 கண்கண்ட தெய்வ மறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
 கருணைகா ருண்ய வாழ்வே. (ய)

ஆறுவது மோனப் பதிக முற்றிற்று.

---

ஏழாவது

## வேதனைப் பதிகம்

---

சாதனைவி சாரணை சோதனையில் வேறின்றி
 சமரச சுபாவ ஞானம்
சவிகார மவிகார புவிபோக முவமான
 சமுசய மிலாத ஞானம்
வாதனைகொ ளுங்கரும போதனைக ளொன்றுமிலா
 வைராக்ய நிலையின் ஞானம்
வாச்சியத் தொட்டாது சூழ்ச்சியி லட்சிய
 வஸ்துசை தன்ய ஞானம்
தீதனைத்தும் நீற்றி வேதனைகொ ளுந்துவிதத்
 தீங்கெலா மற்ற ஞானம்
திருக்கனு பவத்திலே யருக்கனொளி யாய்நின்ற
 திருவருளா முண்மை ஞானம்
காதலிணை யேதுமிலாச் சாதுரு சியம்விடக்
 கடைத்தேற சாயுச் சியமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
 கருணைகா ருண்ய வாழ்வே. (க)

அருணனம் புவிகாணப் பொருளுதய மறிவிலே
 வெங்கிய மற்ற ஞான
மர்த்தவா தக்குப்பை விர்த்தியஞ் ஞானமல
 மத்தனையு மற்ற ஞானம்

தருணமிங் கங்கென்று நிருணயமி லாப்பிரமை
சத்துருசம் மார ஞானம்
தாணுவிற் புருடனுய்த் தோனும்பி ராந்தியைத்
தடமாறி வைத்த ஞானம்
வருணநா மம்ரூபப் பிரணவமன் னியமெனும்
வரையற வளர்ந்த ஞானம்
வானவர்நி றைந்திடு மோனமன வெளியிலே
வாடாத வுண்மை ஞானம்
கருணைக்க திஷ்டானஞ் சிரவண மனனமதி
கலங்காத சாயுச் சியமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (உ)

சடவாசனைகள்கெட்டுத் திடவாசனைதொட்டுச்
சன்னிய மொழிந்த ஞானம்
சகதிலட் சணையொடு பகுதியின் னவின்ன
சகமிரய மற்ற ஞானம்
மடையர்புகழ் சிற்றின்ப விடயசுக மற்றபர
மங்களசொ ரூப ஞானம்
மானசிக மார்ச்சனந் தானசையாச் சித்தமே
மனோபலத் தொருமை ஞான
மடைவாகுஞ் சோபான மிடராம லர்ப்பண
மகக்கரண தண்ட ஞான
மாத்துமா லட்சண மாத்ததிக புத்திமி
னனந்த வுண்மை ஞானம்
கடவைசீ வத்தன்மை விடவே சிவத்தன்மை
காரணம் சாயுச் சியமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (ங)

சாதுசங் கம்பழகி பேதச்சி தம்முற
சகுணத்தெட் டாத ஞானம்
சான்றோர் மொழிவழி தான்றனை விளங்கிலார்
சந்தேக முற்ற ஞான

மோதுமஹா வாக்கிப வேதவிதி யறியா
ருணரா தகற்று ஞான
மோலமிட் டலறிடுக் தூலதி ருஷ்டியர்க்
குதவா துயர்ந்த ஞான
மேதுமொரு போக்கற்ற பேதமத வாதத்திற்
கிணங்கிடா தற்ற ஞான
மேகாந்த வெட்டவெளி யாகந் தெளிந்திட
வேகபர முண்மை ஞானம்
காதுகண் ணுசிநாப் போதபொறி நிலைநிற்க
கதியாகும் சாயுச் சியமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (௪)

தோற்றமொ டுக்கமெனும் வேற்றுமை கடந்திடத்
தொந்தமொ ழிந்த ஞானம்
தொந்தத்த சியிலே பெந்தத் துவ மற்றிடும்
சொச்சொருப சந்த ஞானம்
ஆற்றல மைதிபொறை தேற்றறிவி னுயர்குண
வானந்த ரூப ஞான
மாந்திய திருப்தியின் மனனந்தெ ளிதலா
லவ்வியவ ஹிதஞ்சொல் ஞான
மாற்றமில் சாந்தநிலை போற்றலிக ழற்றவெளி
மயக்கறுஞ் சித்த ஞான
மாகுணங் குணியிலே சோஹம்சி வோகமென
மனமமைதி யுண்மை ஞானம்
காற்றிலு மசைந்திடாத் தேற்றமுள தறிவுரு
கருத்தமைய சாயுச் சியமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (௫)

செகமாய்கை யனுவேனு மகமீதி லாதுறச்
சிவதடை யற்ற ஞானம்
செம்பொனுல கின்பமுந் துன்பம நித்யமென
சேதித்தொ ழித்த ஞானம்

சுகமாயும் நித்யமா யகமாயுஞ் சாக்ஷியாய்
சுயம்பாம்சு புத்தி ஞானம்
சுத்தமே சத்திய பத்திவை ராக்யநிலை
சுகானுபவ சூக்ஷ ஞானம்
முகமனுரை தண்ணரு ளகமிய விளக்கமே
முக்குற்ற மற்ற ஞானம்
முமுட்சுகட் காரூட விமுக்தநிலை யனுபவ
முத்திரை சுயஞ்ஞா னமே
ககனவழி தாண்டியே பகலிரவு மின்றியே
கலந்திடும் சாயுச் சியமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (சு)

சுருதிமொழி வழியிலே கருதிமன தறிவிலே
சுலட்சண மிலட்சிய ஞானம்
சுத்தகே வலமுத்தி நித்திய ப்ராப்தியே
சும்பக சித்த ஞானம்
பெரிதொடு சிறிதிலா துறுதிநிற் குணமதிற்
பேரின்ப துரிய ஞானம்
பேய்பூத வாதிகள் வாய்மத மடக்கிடப்
பெற்றிதய வெற்றி ஞானம்
திருவருள் விலாசமுங் குருவுரு வறிவுதான்
தீட்சண்ய தீர்த்த ஞானம்
திருட்டாந்த மற்றேகி பொருட்டானுந் தன்னிலே
தித்திக்கு முண்மை ஞானம்
கருதிய நினைப்பற முறுதிநிலை தன்னிலே
கலங்காத சாயுச் சியமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (எ)

வெட்டவெளி யென்றதும் நட்டநடு வென்றதும்
விட்டுவிட நேர்த்தி ஞானம்
வேதநீ யந்தனிற் பூதமலப் பேதமற
விர்த்தாந்த பக்தி ஞானம்

நிட்டைபல வென்றது மெட்டிரண் டென்றதும்
நியூனமென வாய்ந்த ஞானம்
நிரங்குச திருப்தியிற் றாங்கம மைந்திட
நிஜானந்த மவுன ஞானம்
பட்டப்ப கலொளி தட்டா வியாபகந்
தற்பா மறிந்த ஞானம்
பதவிகளின் முத்தியை மதவா திகட்கீந்து
பகைதீர்த்த வுண்மை ஞானம்
கட்டழ கறிவான முட்டா மனவெளி
கனிந்தபா சாயுச் சியமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (அ)

நானென்ற தேகமுந் தானென்ற தேகியும்
நடுவெளி லயித்த ஞானம்
நாமரு பங்கூறி நேமகன் மத்தவம்
நழுவிடத் தெளிவு ஞானம்
வானென்ற முத்துரிய மேனின்ற வெற்றிதயம்
வளரொளி திவ்ய ஞானம்
வானவ ரானதிரு ஞானவி தேகிசுக
வாழ்வாகி நின்ற ஞான
மூனென்ற பொய்த்தேக வீனத்தி ருஷ்டியி
லுண்மைகுடி கொண்ட ஞான
முற்பவமி லாவெளி சொற்பிர காசமே
யுயிர்க்குயி ருண்மை ஞானம்
கானென்ற தத்துவம் நானென் றறிந்திட
கருதரிய சாயுச் சியமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (கூ)

மூலமோ டாறுதலை மேலுமோ ராறுபடி
முற்றிலு மகண்ட ஞானம்
முன்பின் னடுவிலி யன்பின் னகம்பிரம
முத்திரை யுற்ற ஞானம்

தூலசூக் குமமொடு சாலைவழி காரணத்
துடர்வினை கடந்த ஞானம்
தூர்ப்பாவ னைகிரியை அற்பமும திக்காது
துக்கசுக மற்ற ஞானம்
நீலவெண் டுப்பெனக் கோலமிகக் கூறிடும்
நிந்தனைக ளற்ற ஞானம்
நித்தில பிரக்ஞான சித்திற்சித் தாய்நிறை
நிர்வாண முண்மை ஞானம்
காலங்க ணக்கொடு வேலைதொல் லைகளற்ற
கருத்தான சாயுச் சியமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (ம)

ஏழாவது வேதனப்பதிக முற்றிற்று

---

## எட்டாவது
## சித்தப்பதிகம்

---

அலிபுலா மீமிலே மெலிவிலா சாக்ஷிதான்
ஆரண சுத்த சித்த
மாத்துமா ஞானநெறி வேற்றுமை யிலாமுறை
யறிவுரு சுத்த சித்தம்
துலிபமதி யுணர்வழி நலிவறு மனந்தெளி
தூதுசொல் சுத்த சித்தம்
தூதுசொன் ஞூமசு சாதுசங் கத்திட்சை
துரியபத சுத்த சித்தம்
மலினப்பி ரவிர்த்தி சலனமன மமைந்திட
மாமவுன சுத்த சித்தம்
மருமந்தெ ரிந்திடக் கருமம்மொ ழிந்திட
மாகாய சித்த சுகமே
கலியாநி னைவிலே மலியாத கங்குலிய
காரணமாய் நின்ற தறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே.

தொண்டனுண் டானென்ற பண்டைநாள் மிடைதீர
 தொந்தங் கடந்த சித்தம்
தோடமூ வாசையின் ஞடகச் சந்தையின்
 தொல்லைகள் நசித்த சித்தம்
தெண்டனிடு மந்நியத் துண்டத்து விததவம்
 தேட்டா விலாத சித்தம்
தேகந்தே கியெனும் பாகமின் றேகவெளி
 தெளிவில் விழித்த சித்த
மண்டபிண் டமெலாங் கொண்டாடு மானந்த
 அற்புத சுபாவ சித்த
மகமாகா ரவிர்த்தி தருமகண் டாகார
 வானந்த சித்த சுகமே
கண்டிப்பி லெட்டா தகண்டபரி பூரணக்
 காலூன்றி நின்ற தறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
 கருணைகா ருண்ய வாழ்வே. (உ)

விதிமதி வயங்கிய அதிகரண சாத்விக
 வித்தையா னந்த சித்தம்
விண்ணம்ப ரவெளி தண்ணம்ப கத்தொளி
 விசாரணை சுபாவ சித்தம்
துதியிகழ் வில்லாத விதிகரச விற்பனந்
 தூய்தாய் வளர்ந்த சித்தம்
துறவற மில்லறங் குரவருக் குள்ளதில்லை
 துக்கசுக மற்ற சித்தம்
புதியமத கற்பனைக ளெதிலுமனம் பற்ருது
 புத்தியி லுணர்ந்த சித்தம்
புசிக்கும்பி ராரத்தம் நசிக்கும் விசாரணை
 பூரண சித்த சுகமே
கதியுதவி யேதுமிலா நிதித்தியா சனத்திலே
 கறைதிரைக ளற்ற தறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
 கருணைகா ருண்ய வாழ்வே. (௩)

வரையறு விசாரமே தெரிதரு சிதாகாய
மனவெளி லயித்த சித்தம்
வாசிதம் பனயோகம் நாசவாத் துமஞான
வாசனை யிருத்த சித்தம்
திரையறுந் தத்துவ முறைவழி புத்தியைத்
திருத்திடுந் தேவ சித்தம்
தீனிஸ்லா முத்திதான் ஞானமனு பவசித்தி
திட்சண்ய சாந்த சித்தம்
நிரயஞ்சு வர்க்கமெனும் பிரவிர்த்தி நீங்கிட
நிரவயவ நிரோத சித்தம்
நிச்சயப் புத்தியோ டச்சஞ்ச லிப்பற்ற
நித்திலம் சித்த சுகமே
கரையேறி யவகாச பெருவெளி யுல்லாச
கங்குகரை யற்ற தறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (௪)

ஏவல்வி லகலொடு மூவுல காசையு
மில்லா தமைந்த சித்த
மிராசதந் தாமதம் பராசிய மிரகசிய
மிதுவதுவு மற்ற சித்த
மாவல்ம னோதப் பாவனைவி யாபார
வர்ச்சனைக ளற்ற சித்த
மகந்தமு மனந்தனில் நினைந்திடு குணங்களை
யதுச்சத்த ழித்த சித்தம்
பாவப தார்த்தமொடு சேவைபூ சைநினைவும்
பகிரந்த ரற்ற சித்தம்
பரமச மாதியெனப் புரிவதுவு மனநாசம்
பரோக்ஷமில் சித்த சுகமே
காவலி ணைதுணைகள் தாவிடாத் தற்சொருப்
கலாமுல்லா திட்சை யறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (௫)

திடவகங் காரமே மடமையிந் திரியமாந்
திருஷ்டிபுக ழற்ற சித்தம்
திக்குத்தி கந்தமும் சக்கொன்றி லாதொளிர்
திருவரு ணிறைந்த சித்தம்
தடமா றிடாதேக நடனவா னந்தநிலை
தானந்த சுத்த சித்தம்
தனுகரண புவிபோக நினைவதி லாதகலும்
தாஷ்டாந்த விர்த்தி சித்தம்
விடமாலி காமவினை தொடுஞ்சமு சாரங்கள்
விருத்தங்கள் விட்ட சித்தம்
விழலுக்கி றைத்திடும் பழவழக் கேதுமிலா
விஸ்ராந்தி சித்த சுகமே
கடபடத் திரிசிய வடிவநா மரூபங்
கடந்தசித் தான தறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (சு)

நேமமுறை நூலோதி நாமரூ பங்கருது
நினைவைப் பழித்த சித்தம்
நெஞ்சஞ் சலித்தூன வஞ்சக மலப்பொதியை
நேதித்த ழித்தத சித்தம்
பாமாருக் கெட்டாத சேமகுரு வறிவான
பாக்கிய முணர்ந்த சித்தம்
படைப்பினை வணங்கிடு மடிப்பினைத் துடைத்திடும்
பகுத்தறிவு சுத்த சித்தம்
தேமருவு புத்தியின் சோமசூ ரியநடு
தெளிந்தமைந் திட்ட சித்தம்
தெந்தேச மதவாத பந்தபா சம்மற்ற
தெய்விக சித்த சுகமே
காமக்கு ரோதாதி நாமமு மில்லாது
"கன்னலமு தான தறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (எ)

மாயப்பிர பஞ்சமலந் தியசகு ணத்திரய
மாறிட மதித்த சித்தம்
மனேலவு வியம்புல கனேபாசனே நினேவு
மந்திர மற்ற சித்தம்
தூயபிர போதத்தே நேயசுத் தாத்துமா
சூக்கும முணர்ந்த சித்தம்
சூட்சும புத்தியொடு சாக்ஷிமாத் திரமாகி
சுவார்த்தபரித் தியாக சித்தம்
ஞாயமுட னேசுத்த ஞேயவனு சந்தான
ஞாபன மறிந்த சித்தம்
ஞானமுத் திரைதன்னி லீனமொன் றில்லாது
ஞானநெறி சித்த சுகமே
காயந்திரி பறவுமு பாயம்வி ளங்கிடவுங்
காமியமி லாத தறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணேகா ருண்ய வாழ்வே. (அ)

பட்டப்பக லொளிதா னிட்டையும் விசாரணே
பரயோக சுத்த சித்தம்
பருவந் தவறிடாத் துருவநிலே மாறிடாப்
பரவச நிதான சித்தம்
வெட்டவெளி யென்றதும் விட்டுவிட் டோய்ந்ததும்
வெறும்பாழா யாய்ந்த சித்தம்
வேதாந்த மென்றதும் நாதாந்த மென்றதும்
விளங்கிநிலே பெற்ற சித்தம்
யெட்டுடன் நான்கையுங் கட்டுவது நிட்டையென
யெண்ணுவ தொழிந்த சித்தம்
யென்னுணே நானில்லே யென்னுணே வேறில்லே
யெனேயாய்ந்த சித்த சுகமே
கட்டுப்ப டுங்காரண முட்டிடா வியாபகங்
கருமங்க டந்த தறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணேகா ருண்ய வாழ்வே, (கூ)

வளியதின் சக்திமன மொளியக் கினிபுத்தி
　　வண்மை யப்பான சித்தம்
வளரும்வி ருத்தியிற் குளிரும்நி ராசையின்
　　மண்ணகங் கார சித்தம்
தெளிதரு முள்ளமது வெளியகா யக்கூறு
　　திரவிய மறிந்த சித்தம்
தீரவே விசாரித்த கோசிற் சொருபமாய்
　　சின்மாத்தி ரத்தின் சித்தம்
நெளியாத வாயுவாய் பழியாத புத்திகொடு
　　நேரா சான சித்தம்
நீங்காத புத்தியது பாங்கான குருசது
　　நிம்மதி சித்த சுகமே
கழியாத கம்வெளி யொழியாச் சிவச்சொருபங்
　　கண்மணி விமல மறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
　　கருணைகா ருண்ய வாழ்வே. (ம)

எட்டாவது சித்தப்பதிக முற்றிற்று.

---

ஒன்பதாவது

## மதிப் பதிகம்

---

புவனசுக மோகமும் சுவனபதி தாகமும்
　　புறம்பென வெறுத்த புத்தி
புத்திமன துள்ளமுஞ் சித்தமகங் காரமும்
　　புடமிட் டொளிரும் புத்தி
நவநவவி காரமவ னிவநானெ னுந்துவித
　　நசித்திடப் பொசித்த புத்தி
நாஸ்தியாஸ் தியென்ற வேற்றுமை யநித்திய
　　நழுவிட விழித்த புத்தி
சிவன்சீவ னென்பதுந் துவந்துவ மிருவினை
　　சிந்தனைக ளற்ற புத்தி
சிருஷ்டியின் பேதமற திருஷ்டிசிவ மயமாகி
　　சித்திக்கு முத்தி யருளே

கவனமெதி லுஞ்செல்லா திவியபா மானந்த
 காரணம் நண்மை யறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
 கருணைகா ருண்ய வாழ்வே. (க)

ஆவலொடு புரியட்ட மேவலொடு விலகலு
 மறிந்தே மறந்த புத்தி
யாகாமி யபந்தந் தேகாபி மானமொடு
 மவாவறுத் திட்ட புத்தி
கேவல சகலகலர் பாவனுத் திரயம்நீக்
 கிரகசு பாவ புத்தி
கெம்பீர கம்பாவ மின்பதுன் பம்மின்றி
 கேவலா னந்த புத்தி
தேவபத மறிபொருட் சீவதடிப் பற்றகல
 தெவிட்டாத வின்ப புத்தி
தேகத்தி யாகமே சோகத்தி யக்கமறுந்
 தேசசா னந்த வருளே
காவலர் காப்பதெது யாவுந்தன் னருள்மயங்
 கமலத்தி னுண்மை யறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
 கருணைகா ருண்ய வாழ்வே.

விடயநு கர்ச்சியொடு தடைகள்மூன் றுட்பகை
 விட்டகல நின்ற புத்தி
விசாரணைசெய் வேதன மசாவாமை யுற்பன
 விவேகதர்ப் பணமாம் புத்தி
மிடையுந்தற் போதமொடு நடைகள்பல தொல்லைகள்
 விவர்த்தம் விடுத்த புத்தி
மித்தைய வித்தைகெட் டத்துவித சுத்தசுக
 மின்புரு வான புத்தி
மடைதிறந் தேகரசக் குடியமுத பேரின்ப
 மனோலயந் தானே புத்தி
மதபேத மிதமகித மெதுவுமுன் னுநிலைமை
 மவுனவா னந்த வருளே

கடைவழி யென்பதுவுந் திடவிழிப் புணருவது
கறைதீர்க்கு நுண்மை யறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (௩)

தட்டின்றி வெட்டவெளி முட்டா வியாபகந்
தன்னக மனன புத்தி
தன்னைத் தெளிந்ததே யந்நிய மிலாமலே
தத்துவா தீத புத்தி
நட்டின்றி நிர்வாண நிட்டைசம் பூரண
நடுநீதி தானும் புத்தி
நாணு விதமின்றி யூனு முபாதிகள்
நழுவிட விழித்த புத்தி
மட்டின்றி விற்பனஞ் சுட்டறு மறிவிலறி
மறையுரை தெரிந்த புத்தி
மாதவ முனுற்றிடும் போதமன நினைவதை
வயக்கிடு கின்ற வருளே
நட்டமுகு புத்தியே நிட்டைநி ராசையே
கலிதீர்க்கு நுண்மை யறிவே
[illegible]சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (௪)

[illegible]ந்தகா ரத்திரை பந்தபா சக்கறை
யறுக்குந் திருக்கு புத்தி
[illegible]ந்தர் பகிரென்ற சந்தேக விபரீத
மஞ்ஞான மற்ற புத்தி
மந்ததா மின்றிநற் சிந்தைவை ராக்யமொடு
மதப்பேய் நசித்த புத்தி
மந்திரங் கிரியாதி தந்திரம் பலதொழில்
மறந்தே சிறந்த புத்தி
சந்ததமு மாறுப் பரந்துரிய வறிவிலே
சமத்துவ முணர்ந்த புத்தி
சகுணோபா சனையற்று விகுணபல தொல்லையொழி
சாக்ஷிதற் பணம தருளே

கந்தங்கமழ் மவுன சிந்தைசஞ் சலமறக்
கவ்வைய று நுண்மை யறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (ரு)

எண்டிசை விளக்கம தண்டபிண் டம்நிறை
யேகசுக மவுன புத்தி
யென்றென்று மோயாது நன்றுதீ தில்லாம
லேகரச பக்தி புத்தி
விண்டிசைக் குந்துதி கண்டனத் தெட்டாத
விர்த்திமெய்ஞ் ஞான புத்தி
விமுகப்ப ராக்கறுத் தெமுகம்ச முகமொடு
விளக்கந் தெளிந்த புத்தி
கொண்டிடும் வழக்கங்க ளொன்றுமன தில்லாது
கோசதிரை யற்ற புத்தி
கோலமொடு காலங்கள் தூலம்ப முக்கங்கள்
கோதற்ற சுத்த வருளே
கண்டதந் நியமிலை தொண்டனுண் டானில்லை
கலப்பறும் நுண்மை யறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (சா)

செக்மாய்கை யற்றிடத் தகமாய்வி சாரணை
சேதனந் தொழுகை புத்தி
சேதன மாத்திரம் சாதனம் பூர்த்தியின்
சேனகத் தொருமை புத்தி
யிகமும் பரமென்ற பகுதிவி குதியிலா
திரண்டற் றகண்ட புத்தி
யிதமாகா ரவிர்த்தி யகமாகா ரவிர்த்தி
யியக்க மதித்த புத்தி
யுகமாய்ப் பிரண்டிடும் மிகுபஞ்ச பூதத்தை
யுண்மையில் நசித்த புத்தி
யுக்தம யுக்தமெலாங் குயுக்திதனி லேயாய்ந்த
வுபமேய சுத்த வருளே

ககனாதி பூதமொடு சகலபே தங்களற
கலாமதி நுண்மை யறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (எ)

மறையுரை விளங்கிடப் பொலறையறிவு தங்கிட
மனோமலின மற்ற புத்தி
மனமன்றோ மாயைக்கிங் கினமாகும் பொறிபுலன்
மடக்கிவைத் தாண்ட புத்தி
யிறையருள் விலாசமும் நிறையுளந் தெளிவெளி
யிதரபொரு ளற்ற புத்தி
யிசுமசு மாக்களோ டுகசுவாச நிசுவாச
மின்னல்திரை யற்ற புத்தி
குறைவற்ற செல்வமெனு மறிவுற்ற பூர்த்தியிற்
குடிகொண் டிருந்த புத்தி
குதிக்கு மனக்கவி யுதிக்கா தடக்கிட
குருவாகும் சுத்த வருளே
கறைய று மனவெளி யறநெறி யன்புரு
கடந்தசுகம் நுண்மை யறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (அ)

பொய்யுறு மாரோப மையற் பிரமையின்
பொய்த்தோற்ற மற்ற புத்தி
போக்குநீக் கேதுமிலா வாக்குமனங் காயமொடு
போதநிலை நின்ற புத்தி
மெய்யுறும் பொய்யிலே பொய்யறு மெய்யிலே
மெய்ஞ்ஞான விர்த்தி புத்தி
மேலான நூலிலே நாலான வழியென்ற
மேட்டைக் கடந்த புத்தி
தையுபுக் கலிமாவிற் றுய்யபொரு ளாய்ந்திடச்
சைதன்னிய ஞான புத்தி
தாதமார்க் கம்விட்டு பேதாகி தத்திலே
தாரணை சுத்த வருளே

கைநெல்லிக் கனிபோன்ற வையமறத் தானறிய
கண்டிதம் நுண்மை யறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (௯)

சோதிஞா னத்திலே சாதிமத வாதங்கள்
சொல்லற் றிருந்த புத்தி
சொப்பன சுழுத்தியொடு விர்ப்பன நனவின்றி
சொச்சொருப மான புத்தி
வேதமுடி வானந்த தோதுமது சாந்தநிலை
வேதாந்த சுத்த புத்தி
வெறும்பாழ் வெளியெலாம் விரும்பா தறிவொடு
வெட்டவெளி சுத்த புத்தி
பேதாகி தத்தொடு போதமாம் ஸ்மரணையின்
பெற்றிபல வற்ற புத்தி
பேறிழ வென்பதும் பூரணவி யாபகம்
பேரின்ப சுத்த வருளே
காதிமெஜ மானற்ற சாதுசங் கம்பழக
கஞ்சனம் நுண்மை யறிவே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (௰)

ஒன்பதாவது புத்திப்பதிக முற்றிற்று.

---

பத்தாவது
## சாந்தப் பதிகம்

---

நானென்ற வாத்துமா தானென் றறிவது
நாதாந்த சுத்த சாந்தம்
நனவில்முப் பாழகன் றெனைநா னறிந்திட
நானேதா னென சாந்தம்
தேனென்ற வந்தியம் கோனென்ற துவிதமும்
தீர்ந்திடும் முக்ய சாந்தம்
தினமுள மறப்பதுங் கனவொடு முறக்கமும்
தீதறுத் துய்ந்த சாந்த

மூனென்ற நோக்கமொடு வானென்ற நிட்டைகளு
        முபாதிரகி தஞ்செய் சாந்த
முள்ளும்வெ ளிப்பற்று மெள்ளளவு மில்லாம
        லுண்மைதா னை பொருளே
கானென்ற சமட்டியும் மேனின்ற வியட்டியுங்
        கடந்திடத் தாஷ்டாந் தமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
        கருணைகா ருண்ய வாழ்வே. (க)

ஈடணைத் திரயமொடு தூடணை மந்திரகலை
        யிதாகித மிலாத சாந்த
மிச்சையொடு பட்சமு மச்சஞ்ச லிப்பென்ப
        தில்லா துயர்ந்த சாந்தம்
பாடித் தொழுதழுது தேடித் துதித்திடும்
        பதவிக் கதீத சாந்தம்
பரியாய நாமங்கள் விரிவாய கிரியையுடன்
        பக்திக்க தீத சாந்தம்
தேடியே மிகக்கற்று நாடிய சாஸ்திரச்
        செத்தைகளி லெட்டா சாந்தம்
தேவதரு வானமதி தீவிர தரத்தெளிவில்
        தேவகதி சான்ற பொருளே
காடினிய தற்போத மூடவினை மானசிகங்
        கழன்றிடத் தாஷ்டாந் தமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
        கருணைகா ருண்ய வாழ்வே. (உ)

தாக்கற்ற கண்டவெளி யூக்கத் துணர்விலேத்
        தன்மயந் தானே சாந்தம்
தகாரக யத்திலே மிலைராஜி யாரூட
        தற்பிர காச சாந்தம்
நீக்கற்றெ லாந்தானே மோக்கத்தி னன்பகம்
        நிச்சய சாக்ஷி சாந்தம்
நிர்விகா ரத்திலே கருவிகா ரணுதிகள்
        நிர்ச்சலன சுத்த சாந்தம்

நோக்கத்தி லத்தநிலை வாக்கொத்து மனமொத்து
நோனுதலின் மோன சாந்தம்
நொய்யாமை செய்யாமை பொய்யாமை சின்மய
நோட்டத்தின் சான்ற பொருளே
காக்கத் தனிற்றனே தூக்கம் விழிப்பற்ற
கமலவிழி தாஷ்டாந் தமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (ங)

எனையன்றி வேறற்ற நனவிற் றுரியசுக
மேகரச சோஹ சாந்தம்
யேத்வந் தாமிலை சாத்விக விச்சையி
லேகசுகா னந்த சாந்தம்
வினையன்றி யோகமிலை தனையன்றித் தானில்லை
வினைபலவு மற்ற சாந்தம்
விஸ்வரூ பச்ஜெகம் ஸ்வரூ பமெனு
விளங்கும் சுபாவ சாந்தம்
நினைவென்ற மனவித்து தனைவென் றழித்திட
நிருபாதி கத்தின் சாந்தம்
நித்தியப் பிரளையம் புத்திசங் கற்பமே
நிரோதத்திற் சான்ற பொருளே
கனியென்ற நிராசையிற் றனிமைபர மானந்தங்
கைப்பொருள் தாஷ்டாந் தமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (ச)

அந்நிய துயர்மிகுத் தென்னைவே றெண்ணாத
வநந்நியப் பரம சாந்தம்
அபேததர் மந்தனிற் றுவாதசாந் தத்துவித
வபரோக்ஷ நேச சாந்தம்
மன்னுயிர்க் குயிராகி யென்னுயிர்க் காருயிர்
மகதத்துவ நீத சாந்தம்
மதாஞ்ஞை வாய்மத மிதாகித மனமாயை
மருட்பே யறுத்த சாந்தம்

தன்னிற்ற னென்றிடும் பின்னிய மானசிகந்
 தவமற வமைதி சாந்தம்
தழல்கெடத் திருப்தியில் நிழற்சாய்கை யற்றதிரு
 தடையற்ற சான்ற பொருளே
கன்னிய ராசைகெடுந் தன்னறிவு தன்னிலேக்
 காரணந் தாஷ்டாந் தமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
 கருணைகா ருண்ய வாழ்வே. (ரு)

நலந்தீமை யுவமான பலவிதக் கிரியாதி
 நாட்டவி ராக சாந்தம்
நம்பின தெலாமறந் தம்பகம் நிலைபெற
 நனவிலா னந்த சாந்த
மூலகபோ கங்களு மலகைபரி ஜின்றேவென்
 றுபாசனைக ளற்ற சாந்த
முத்தம விஞ்ஞானி சுத்தமன தறிவிலே
 யுபமல மறுத்த சாந்தம்
நிலவுபொழு துசுழினை தலம்புருவ மத்தியெனும்
 நியூனகதை யற்ற சாந்தம்
நிதித்தியா சனத்திலே மதத்துவித மற்றிட
 நிண்ணய சான்ற பொருளே
கலைபலவென் றெண்ணுத மலைவிலா வறிவிலே
 கலியாத தாஷ்டாந் தமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
 கருணைகா ருண்ய வாழ்வே. (சா)

வாதனைக ளற்றதும் சாதனைகள் பெற்றதும்
 வஸ்துநிச் சயமே சாந்தம்
வானந் தாம்வெளி தானந் தாமென்றே
 வாசனு ரகித சாந்தம்
போதனையின் விபரீதஞ் சோதனையிற் சந்தேகம்
 பொய்யை யறுத்த சாந்தம்
பொன்பெண் ணுலகாசை யின்பதுன் பத்தேட்டம்
 போக்கிய மொழித்த சாந்தம்

யேதெனை யறிந்திடவே தாதனெனும் பேதமிலை
யேகாந்த மவுன சாந்தம்
யேதுசெய் தாலுமிது பூதபௌ திகமென்
றிணையறச் சான்ற பொருளே
காதலெது வுமற்ற நீதநெறி மெய்ஞ்ஞானங்
கதியான தாஷ்டாங் தமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (எ)

சன்மசா பல்லிய சின்மயா னந்தபத
சாயுச்ய வதீத சாந்தம்
சருவசம் பூரண தரும மேகநிட்டை
சைதன்னிய சகஜ சாந்தம்
பன்மையொரு தன்மையு மின்மையன் மைபூர்வ
பட்சங்க ளற்ற சாந்தம்
பழயவ ழக்கங்க ளிழவுக ளெலாமாற்றி
பாமுத்தி சித்தி சாந்தம்
புன்மதி புனர்ஜனனந் துன்மதியி லோதிடும்
புன்னெறி மறந்த சாந்தம்
புலன்பொறி கரணமி லயத்தொடு தரித்திடப்
பூரணம் சான்ற பொருளே
கன்மபா வனைகளிலா நிம்மதியி லன்புரு
கனிதீர்த்த தாஷ்டாங் தமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணைகா ருண்ய வாழ்வே. (அ)

புத்திமன சித்தமே யொத்தநிலை முத்தியே
பூர்த்தியவ காச சாந்தம்
பூரணவி யாபகங் காரணசு பாவமே
புருஷோத்த மாக்கு சாந்த
மெத்தொழிலு மற்றிடச் சித்தசஞ் சலமிலை
யேகாந்த மவுன சாந்தம்
யெல்லா மறிந்திடத் தெல்லாமா னந்தமய
மேகசுக மோக்ஷ சாந்தம்

சித்திமுத் தியதுவு மற்றநிலே நித்தியபர
சின்மாத்தி ரத்தின் சாந்தம்
சிவன்முத் திப்பேறு கேவலம் ஞானநெறி
சிவோகமே சான்ற பொருளே
கத்திவீ ணுளேகா சுத்தவனு பூதிநிலே
கம்பீர தாஷ்டாங் தமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணேகா ருண்ய வாழ்வே. (கூ)

தூலங் குடிகடந் தாலவிடம் பெண்ணுசை
துக்கநி வர்த்தி சாந்தம்
துரோபவ மாரோபந் திரோதான பேதமைத்
துரிசறுந் துரிய சாந்தம்
தாலங் குடிவெறுத் தோலமிடுங் கற்பிதத்
தடைபல வொழித்த சாந்தம்
தாதாத்மி யத்தோடு பூதாதி கோசதிரை
தாண்டியவ காச சாந்தம்
சாலங் குடிமெய்பொய் பாலங் கடந்தேக
சாக்ஷிமாத் திரமே சாந்தம்
சச்சிதா னந்தமே நிச்சய புத்தியுணர்
சம்பூர ணத்தின் பொருளே
காலங் குடிமச்ச ரேகைசித் தன்தனேக்
கண்டது தாஷ்டாங் தமே
காட்சிதற் சாக்ஷியே சூழ்ச்சிமெய் யாட்சியே
கருணேகா ருண்ய வாழ்வே. (ώ)

பத்தாவது சாந்தப்பதிக முற்றிற்று.

காருண்யசதகம் 105 முற்றிற்று

ஆ செய்யுள் ரு-க்கு திருப்பாடல் ௱அரு

---

பிஸ்மில்லாஹி

## இரண்டாவது

# மோக்ஷ சதகம் 101

### காப்பு வெண்பா

பொன்னுலகந் தன்னுளமே போதசை தன்யநிலை
முன்னினைவைத் தன்னறிவின் மோகித்தே—மன்னிலையில்
மோக்ஷம் வளராக்ஷி முத்திசித்தா னந்தசுக
காட்சிவளர் சாக்ஷியே காப்பு. (க)

## முதலாவது

## சற்குணப் பதிகம்

### இரட்டை ஆசிரிய விருத்தம்

பொன்னுலகு தன்னுளம் நன்றுலவு தன்மயம்
போதவாத் துமஞா னமே
பொய்யாத மெய்யிலே மெய்யா மகத்துறவு
பொருந்துதல் சாத னந்தான்
முன்னநந்தம் நடுவெளி தன்னந் தனிமன
முத்தேக குற்ற மற்றே
மூவாத பேரின்பந் தேவாமிர் தம்மூறு
முத்துரிய வெளிக டந்தே
யுன்னவி னுதிப்பினைப் பின்னவில் லாதாக்கி
யுதியா தொடுக்கல் நிட்டை
யூனமில் லாமலே ஞானவடி வாய்நின்று
முய்யவொரு செயலு மில்லை
தன்னுளம் பூர்த்தியி லந்நிய மென்பதிலை
சற்குணம் நிற்கு ணத்தே
தனுகரண புவிபோக மெனுங்கரும துவிதமறத்
தற்சாக்ஷி சுகவா ரியே. (க)

படியுமனந் தெளிவழியே துடிவிடய நடனமற
பரமாக சியமே யுண்மை
பக்குவத் தனுபவி முக்கியம றிந்தநிலை
பருவமெ தார்த்த ரூபம்

கொடியசிற் றின்பவெறி யடியோ டொழிந்திடக்
குடிகொண்ட தேக லக்ஷ்யம்
கோதறு சுகாசுகம் பேதமற வன்புரு
குறைவற்ற ஞான செல்வந்

துடியாத நினைவிலே யடிமுடி நடுவின்றி
தூலதிருஷ் டிகளு மின்றி
துக்கநி வர்த்தியர் சக்கற்ற கண்டவெளி
துலங்கவொரு செயலு மில்லை

தடையற்ற வானந்த மிடையற்ற நிர்த்தமிடு
சற்குணவ திதத் திலே
தனுகரண புவிபோக மெனுங்கரும துவிதமறத்
தற்சாக்ஷி சுகவா ரியே. (உ)

கல்லாப் பிராந்தியர்க் கெல்லாங் கயிற்றராக்
கம்பலை விசற்ப மனினங்
கதையாக மங்களாற் சிதையுறு மதத்திலே
கட்டுண்டு கெட்டு யிர்த்துப்

பொல்லாத துர்க்கிரியை யெல்லையில் மயங்கியே
போதம் பலதுன் னியே
போக்குநீக் கேதுமிலா வாக்குள றி யந்நியப்
பொய்யிலே பொழுது போக்கி

யில்லாத பொருள்மீதி லுல்லாச புகழ்பாடி
யிருகையு மேந்தி யேற்று
யிகபரத் தாசையிற் சுகதுக்க மெண்ணிடு
மிடும்பைக்கிங் கென்சொல் குவேன்

சல்லாபம் பிரவிர்த்தி யெல்லாம்நி வர்த்தியிற்
சமுசத்தை தர்ப்ப ணத்தே
தனுகரண புவிபோக மெனுங்கரும துவிதமறத்
தற்சாக்ஷி சுகவா ரியே. (ங)

கோடானு கோடிநூ லோடோடி கற்றென்ன
குருவரு ளுணர வழியோ
குணங்குணி திறத்திலே யிணங்குமன மமைதியிற்
குருவரு மதிப்ப துண்டோ
பாடான பலதொழிற் கேடான பசிர்முகப்
பாவனைக ளாலின் பமோ
பழங்கதை யிராக்கதை விளங்காத மந்திரம்
பாசாங்கு சரியை கிரியை
மேடான மருபூமி நாடோடி நடினமண
மேட்டுக் கிறைத்த வெள்ளம்
மேனியைமி னுக்கிபொய்க் கானவில்ம யங்குவெளி
வேடருக் குண்மை யுண்டோ
தாடாண்மை யாணவங் கூடாகி வர்த்தியிற்
தர்ப்பணம னந்தெ ளிவே
தனுகரண புவிபோக மெனுங்கரும துவிதமறத்
தற்சாக்ஷி சுகவா ரியே. (ச)

மேலான பரவெளி போலே மனதொளி
மேவாது துவித மெண்ணி
மெத்தப்பி தற்றியே சித்தஞ்ச விப்பிலே
மெல்லிய ராசை மீறி
மாலாகி மூவாசை பூலோக பிரவிர்த்தி
மந்திரந் திக்கி ரோதி
மணியெண்ணி யாடைபல பணிபூண்டு காசாசை
மவுனியென வாயை மூடி
நூலாலே பலமாய வாலால விஷமேறி
நுண்ணறிவு சற்று மின்றி
நுக்கத்த விபுலாமீம் சுக்குனென் றுளறியே
நுவலுவது மதவா தனே
சாலோக மாதியாங் கோலாக லமிலார்
சாந்தபத முத்தி தனிலே
தனுகரண புவிபோக மெனுங்கரும துவிதமறத்
தற்சாக்ஷி சுகவா ரியே. (ரு)

அட்டாங்க யோகமுந் தட்டாத றிங்கென்ன
வடயோக நடையி லென்ன
அல்பகலு மோதியே பல்வகை தவஞ்செய்வ
தர்த்தவா தத்த டிப்பே
பட்டப்ப கலொளியை கெட்டவிரு ளென்றெணும்
பாழ்மனம் போன பேசக்கிற்
பகட்டும் பொறிகரணந் திகட்டுவது மில்லையோ
படைப்புகளே வாழ்த்த லென்னே
எட்டெட்டு வான்கலையைக் கட்டுவே னென்றெண்ணி
யிடறுதே வழித வறியே
யேய்க்குதே காமநோய் நாய்க்குண மொழிந்திட
யெல்லாம் சிவோக நிலையே
தட்டாவி யாபகம திட்டான மனவெளி
சம்பூர ணத்தின் பமே
தனுகரண புவிபோக மெனுங்கரும துவிதமறத்
தற்சாக்ஷி சுகவா ரியே. (சு)

ஊரற் றிருவினைப் போரற் றிணைதுணை
யுறவற் றுழல்வ தற்றே
யூனற் றிகபரந் தானபற் றின்றென்று
முட்பகை யுபாதி யற்று
காரற்று சிற்றின்பப் பாரவா ரமற்றுக்
கதைகா ரியங்க ளற்று
கழையற்றிங் காரோபப் பிழையற்று வேறென்ற
கருத்தற் றுவமை யற்று
போற்று துவிதமதம் வோற்று பௌதிகப்
பேய்த்தேர்ப்பொய்த் தோற்ற மற்று
பேச்சற்று மூச்சற்று சாக்ஷிமாத் திரமான
பொருள் விலாச முற்றே
தாரற் றெலாமறந் தாரமுதப் பேரின்பந்
தற்சொரூப மங்கிய மிலையே
"தனுகரண புவிபோக மெனுங்கரும துவிதமறத்
தற்சாக்ஷி" சுகவா ரியே. (எ)

தூரமற் றுச்சமீப வோரமற் ருபாச
 துக்கமற் றேக்க மற்றேத்
துடாற்று நானென்ற விடாற் றுலகநடை
 துக்கசுக சிக்க லற்றுத்
தீரமுற் றபேதநிலை சாரமுற் றபயமதத்
 திரிசிய விசார மற்றே
திருஷ்டாந்த கதையற் றருட்டான் றனித்திடு
 திருக்கனு பவந்தெ ளிந்து
வீரமுற் றுதவாத கோரம்ப லவற்று
 விருத்திமெய்ஞ் ஞான மேவி
விதிநிஷே தங்களிலாக் கதிமவுன சித்திலே
 விஸ்மரணைக் கென்சொல் குவேன்
தாரதம் மியமற்ற க்ஷீரசா கரமறிவு
 சமயதற் போத மில்லை
தனுகரண புவிபோக மெனுங்கரும துவிதமறத்
 தற்சாக்ஷி சுகவா ரியே. (அ)

எல்லாஞ் சரியெனுந் தல்லிப சுபாவமே
 யேகபுக ழானந் தமே
யெல்லாம றந்துதனை யல்லாது வேறின்றி
 யிணையற் றறிந்தி டாது
தொல்லையுறு சீவசெயற் புல்லறிவு தற்போதத்
 தோடத்தி ரைமறை விலே
தொழுதுமனம் வேறெண்ணி யழுதது மவித்தையின்
 சொல்மாத் திரம்பே யாட்டம்
மல்லாடி வாய்ஞானச் சொல்லாடிக் கற்பித
 மனமாயைக் காளா கியே
மறையுரை தவறிய கறையுளப் பேதமை
 வழக்குகட் கென்சொல் குவேன்
சல்லாப திட்சண்ய முல்லாச மனமமைதி
 தானன்றி வேறொன் றிலை
தனுகரண புவிபோக மெனுங்கரும துவிதமறத்
 தற்சாக்ஷி சுகவா ரியே. (கூ)

கற்றதுங் கேட்டதும் பெற்றதுஞ் சொற்றதுங்
　　கருதிடத் தேது முளதோ
காமநோய் தீரவொரு சேமமருந் துள்ளதோ
　　கைதருங் குருமார் களுஞ்
செத்தபின் பிணையென் றருத்தமு முணர்ந்ததிலை
　　செத்தா ரறிந்த தில்லை
சேதனவி யாபக சாதனம் பெற்றதிலை
　　செப்புவது வாசா ஞானம்
மற்றவர்க ளென்னவோ சுத்தமனந் தெளிவிலை
　　மாயவெளி சாய வேஷம்
மர்மமறி யாமலே கர்மவினை செய்வதேன்
　　மார்க்கமறு மனநா சமே
சற்றேனு முலகவளம் பற்றேது மிலாதுறச்
　　சாக்ஷிமாத் திரம்வே றிலை
தனுகரண புவிபோக மெனுங்கரும துவிதமற
　　தற்சாக்ஷி சுகவா ரியே. (ய)

முதலாவது சற்குணப்பதிக முற்றிற்று.

---

## இரண்டாவது

## ஏகபுகழ்ப் பதிகம்

---

மோனவுரு வாய்நின்ற ஞானகரு ணாநிதி
　　மொய்த்தசம் பூர ணத்தே
மொழியொணுத் தெளிவிலே வெளியாத உணர்விலே
　　மோக்கமனந் தீர்க்க மாகி
வானம்பு விவெளி யானந்த மயசொருபம்
　　வாக்குமன காய மொத்து
வஸ்துநிச் சயபுத்தி சத்துசித் தானந்த
　　மந்திரதந் திரமு மில்லை
தானந்த ரிப்பற்று ஞானமுணர் வழியிலே
　　தரிசனைக ளேது மின்றித்
தண்ணருளெ தார்த்தமே நிண்ணய மபேதமே
　　தானென்ற தொன் றுள் ளதோ

ஈனமாந் துவிதபுக ழானதூர்ச் செயல்களற
    விந்திரிய வைக்ய நிலையே
யிதமகித பேதாகி தம்சதோ தயமுத்தி
    யேகபுக ழானந் தமே (க)

அத்துவித முண்மையே சித்துபா முத்தியி
    லத்தியா சங்க ளற்றே
யவகாச வறிவுரு விவிதபே தங்களிலை
    யனுமானஞ் சோப மில்லை
நத்துதல் யாசித்தல் பற்றுதல் வெறுத்தலொடு
    நாட்டமுந் தேட்ட மில்லை
நனவின்வி சாரணை நினைவின் னதீதமே
    நானீயென் றுள்ள தில்லை
சுத்தம சுத்தமிலை நித்திய பிராப்தியே
    சுலட்சணத் தன்பு சோஹம்
சும்மா விருப்பதிது வெம்மானை நிச்சயம்
    சுகசொருபம் வேறுள் ளதோ
யெத்தனை விதங்கல்வி கற்றென்ன வந்நிய
    மெண்ணு திருக்க முறையோ
யிதமகித பேதாகி தம்சதோ தயமுத்தி
    யேகபுக ழானந் தமே (உ)

தோதுதெரி யாதுபல வாதுகதை மார்க்கத்திற்
    றெண்டனுண் டானென் றெணித்
தொல்லைகொளு மந்திர மெல்லைமா னசபூசை
    தொந்தமொ ழிந்த தில்லை
ஞாதாஞா னஞேய மோதுதிரி புடியது
    ஞாயமாய் நழுவி டத்தெஞ்
ஞான்றும்ச தானந்தந் தோன்றுவ தந்யமிலை
    ஞானசூ ரியவி ளக்கம்
சாதுசன் மார்க்கமிலை யேதுசுக துக்கமிலை
    சமயப்பி ராந்தி யிலையே
சாத்திரக் குப்பையில் வாஸ்தவ மொன்றுமிலை
    சாதனம் மனநா சமே

யேதுமொரு செயலற்ற போதமெய் ஞானத்தே
யெல்லா மறந்த நிட்டை
யிதமகித பேதரகி தம்சதோ தயமுத்தி
யேகபுக ழானந் தமே. (௯)

கல்லாதார் கற்றதா ரெல்லாம்வி யாப்பியங்
கருதியறி யாத குற்றங்
காரணந் தற்சாக்ஷி பூரணந் தனையறிதல்
கற்பனைக டந்த புத்தி
சொல்லால் முழக்கியே யெல்லைவைத் தர்ச்சனை
சோடித் தழுவ தென்னே
சோரகுரு வழியிது சாரமிதி லொன்றுமிலை
சொல்மாத் திரமி தெல்லாம்
நல்லார்சொற் கேளாத பொல்லாங்கு ஞானமே
நாடகப் பேய்ம யக்கம்
நாட்டின்வ ழக்கமே யேட்டின்ப ழக்கமே
நம்புவது துன்ப மாயம்
யெல்லாம்நி றைந்தபொரு ளல்லாது வேறுளதோ
யிணையற றகல்வ தறிவா
மிதமகித பேதரகி தம்சதோ தயமுத்தி
யேகபுக ழானந் தமே. (௧0)

சொர்க்கத்தை நாடிபல வர்ச்சனை செய்குவர்
சோரநர கைப்ப யந்து
தொழுதழு தஞ்சியே பொழுதுவீண் போக்கிடும்
சோபப் பராக்கு பாசம்
மர்க்கடம் போற்றாவி நிற்கும்நிலை மாறியே
மதப்பேய் பிடித்து ளறியே
மந்திரமு மெத்தனை வந்தன மதிலதிகம்
வாசா ஞானத் திரய
தர்க்கவா தமிவைகள் சொர்க்கநர கம்மெனற்
றனையரை மருட்டு மித்தை
தாபத்தி ரயமெனு மாபத்தெ லாம்விடத்
தாதாத்மிய பந்த மில்லை

யெற்கென்ன செய்வதினி யர்ப்பணங் கருவியெலா
மேகாந்த சுகசொ ரூப
மிதமகித பேதாகி தம்சதோ தயமுத்தி
யேகபுக ழானந் தமே. (௫)

காணாத கண்ணெது பூணா மறிவது
காண்பதற் கந்ய மில்லை
காண்பதென் றெண்ணமும் வீண்பழுதை பாம்பது
கற்பித மவித்தை புத்தி
பேணாத காரணந் தோணாதகத் திரயம்
பேரந்த கார மறைவே
பெண்டாட்டி பிள்ளையெனத் திண்டாடுஞ் சிற்றின்பம்
பேரின்ப மேவி டாது
கோணாத மனவெளி நாணா தகம்பிரமங்
குறிப்பது முரைப்ப தன்று
குறிகுணா தீதமே நெறிவழி பொறிகரணங்
கூடிட நீராசை சாந்தம்
ஈணுமலே நினைவு பூணுந் திருவரு
ளிங்கங் கெனாத போத
மிதமகித பேதாகி தம்சதோ தயமுத்தி
யேகபுக ழானந் தமே. (௬)

விதியிருந் தாலல்லோ மதியறிவுண் டாமென
விவர்த்தவா தங்கள் பேசி
விழலுக்கு ழைத்துமன முழலும்பி ராந்திகள்
வினைகன்ம காண்ட வாதந்
துதிபல வுபாசனை சதியாலோ சனைபேதந்
துக்கமயக் கத்து ளாக்குந்
தூடணைப் பிரவிர்த்தி கேடனைத் தும்விடத்
தொடாராது சீவ ஹிம்சை
கதிபதிக ளைத்தேடி யெதிலுமனந் தாக்காது
கட்டவிழ்த் துண்மை கொண்டு
காமக்கு ரோதாதி தாமதக் கோட்டிகள்
களைந்திடப் பிரீதி யில்லை

யிதமாகா ரவிர்த்தி யகமாகா ரவிர்த்தி
　　யேகமக மாகா ரமே
யிதமகித பேதாகி தம்சதோ தயமுத்தி
　　யேகபுக ழானந் தமே. (எ)

ஆர்க்கும் பொதுசக லோர்க்குமெய்ஞ் ஞானமே
　　யஞ்ஞானஞ் சிவ பேத
மாவரண விட்சேபம் தேவைப ரோட்சமு
　　மகன்றிடத் தபரோட் சமே
தீர்க்கமொடு நோக்கிடத் தூக்கமிலை யறிவது
　　திரிசிய நினைப்பு மில்லை
திக்குத் திசையிலை துக்கம்நி வர்த்தியிற்
　　திருலிக்கா காட்சி யொன்றே
நீர்க்குமிழி பிரபஞ்சம் பார்க்கு மறிஞர்க்கு
　　நிரங்குச திருப்தி தானே
நினைவொடு கனவில்லை நனவிலா னந்தசுகம்
　　நிறைவன்றி வேறில் லையே
யேற்கையிது வல்லாதோர் மார்க்கம்வே றுள்ளதோ
　　யின்பமே யன்புரு வமே
யிதமகித பேதசகி தம்சதோ தயமுத்தி
　　யேகபுக ழானந் தமே. (அ)

தண்ணருட் டிருமறை யெண்ணமதி னுதயமே
　　தத்துவத் தரிச னத்தே
தற்பிர காசமே சிற்பரவி லாசமே
　　தானுஞ் சுயஞ்சோ தியே
திண்ணமே சைதன்னிய நிண்ணயந் திட்சண்ய
　　திருவரு ணிறைந்த காட்சி
திதில்லா வாத்துமா சாதிமத வாதில்லை
　　திரவிய மறிந்த போது
வண்ணங் குறிப்பில்லை விண்ணம் பரம்நிறை
　　வாசாம கோசரத்தே
வைராக்ய சித்தியில் பயிராய் வளர்ந்திடும்
　　வையக மறந்த மனதில்

யெண்ணமொன் றும்மின்றி பண்ணுந்தொ ழிலின்றி
யென்னில்வே றென்ப தின்றி
யிதமகித பேதாகி தம்சதோ தயமுத்தி
யேகபுக ழானந் தமே. (௯)

அன்னைதந் தைகிளை யுன்னுமனை சோதர்சுத
ரத்தவாழ் வுள்ள போதோ
வாசாரஞ் செய்துதன போசனென் றேற்றுவ
ரண்ணலே வள்ள லென்பர்
பொன்னது குன்றியே முன்னிலைமை வந்திடப்
புகழ்ச்சிகள் போன தெங்கே
போற்றிமிக வேற்றியே காத்திருந் தன்பொடு
பொருந்திய தோழ ரெங்கே
வின்னப்ப டுங்கொடிய பொன்னுக்கோ வாசாரம்
விழலாய் முடிந்து தையோ
வீணுக்கே நெஞ்சமே தானுவிற் புருடனே
விடிந்ததெப் படிகண் டையோ
யின்னது பிரபஞ்சஞ் சொன்னது மாயைதிரை
யிகபர விராக முணர்வா
யிதமகித பேதாகி தம்சதோ தயமுத்தி
யேகபுக ழானந் தமே. (௰)

இரண்டாவது ஏகபுகழ்ப் பதிகம் முற்றிற்று.

---

## மூன்றுவது
## சுகானந்தப் பதிகம்

---

விண்ணிற் பறந்தென்ன தண்ணியி னடந்தென்ன
விலாயத்து சித்தி லென்ன
வீடுற விருந்தென்ன காடுற மறைந்தென்ன
வியோமநிலை கண்டு மென்ன
கண்ணைப் புதைத்துமே திண்ணமொ டிருந்தென்ன
கர்ப்பாந்த மாகி லென்ன
கஞ்சனம் பார்த்தென்ன வஞ்செழுத் ததிலென்ன
களேபர மெழுப்பி லென்ன

மண்ணிற் சிறந்தென்ன பெண்ணாசை விட்டென்ன
வாய்பேசா திற்று மென்ன
மனமலின சஞ்சல மணுவளவு மில்லாமல்
மாற்றித் தெளிய வழியோ
தண்ணருள் சதானந்த நிண்ணய சுயஞ்சோதி
சம்பூர ணத்தின் பமே
தானற்ற போதத்தே நானற்ற போதல்லோ
தன்மய சுகானந் தமே. (க)

ஏதுசெய் தாலுமென வாதுதற் போதமே
யெண்ணியே மனக்கு ரங்கு
யிங்கங் குலாவுதே சங்கரித் துலகமதை
யிச்சித் தகங்க ரித்து
வோதுவ தனந்தமே வேதபா கியர்மொழி
யுபாசனைகள் கோடி கோடி
யூரோர் மதித்திடத் தாராள முடைநடை
யூனந்த கார பக்தி
தீதுமனத் துவிதமே காதல்நினை வின்தோற்றந்
திருஷ்டிஜட வாச னைதான்
திரோதான நிலையற விரோதபா வனையற்று
தீட்சண்ய நேம நிட்டை
சாதுசங் கம்பழகி நீதிவழு வாமலே
சாதன விளக்கத் திலே
தானற்ற போதத்தே நானற்ற போதல்லோ
தன்மய சுகானந் தமே. (உ)

ஐயய்யோ பொய்யுலக மெய்யென்றி ருக்குமிலை
யார்தான் மதிக்க வல்லா
ரர்த்தவா தக்கதை சுற்றிய கறங்குபோ
லாட்டிடும் பூத பேதம்
னையாயி கள்போல செய்வதறி யாமலே
நூனு விகற்ப முற்று
நாசச்ச ரீரமாம் பாசத்திற் கட்டுண்டு
நங்கையர்க் கடிமை யாகி

வையகத் திச்சையி னுய்வதே யல்லாது
வழக்கம் மறுப்ப தில்லை
வைராக்ய பூர்த்தியின் றாய்தான மனவெளி
வாசனைக ளற்றி டத்தே
சையோக மொன்றுமிலை மெய்யாஞ்சு யஞ்சோதி
சாதன மனம்நா சமே
தானற்ற போதத்தே நானற்ற போதல்லோ
தன்மய சுகானந் தமே. (௩)

மூலமோ டாறுதிரை தூலசோ பானவழி
மும்மண்ட லங்கள் தாண்டி
மூச்சைப் பிடித்தடைத் தாச்சரிய மிஃதெனு
முறைதிரை வரைக டந்தே
காலமொடு கற்பனை வேளைபல தொல்லைகள்
காரிய விகார மற்றே
கானற் பிரபஞ்சந் தினப்பி ராந்தியாற்
கண்டவேற் றுமைய கற்றி
நீலமொடு வெண்டுப்பு கோலமென வெண்ணிடும்
நினைவுக ணசித்த போது
நிக்கிரக புத்தியே யெக்கரும மும்மின்றி
நின்றநிலை சொல்வ தரிது
தாலமோ பலவிதம் காலன்ம றதியது
தடையறுத் தாய்ந்த தறிவே
தானற்ற போதத்தே நானற்ற போதல்லோ
தன்மய சுகானந் தமே. (௪)

கோலங்கு றிப்புருவ காலத்தி ரயமொடு
கொள்கையுஞ் சகுண வித்தை
குருவுருவை நாடிடப் பரவரு ளறிந்திடார்
குவலய விவித வாதம்
வாலையென் பார்சிலர் பாலவழி மூச்சென்பர்
வாசிசு வாச மென்பர்
வட்டசுழி முனையென்ப ரெட்டிரண் டிதுவென்பர்
மந்திர மெழுத்து மென்பர்

மூலமுட னுறென்பர் சிலமுச் சுடரென்பர்
முசாஹுதா நிட்டை யென்பர்
முச்சந்தி நடுவென்பர் யெச்சமய பேச்சிதோ
முறைவிர்த்தி ஞான மன்று
தாலமீ திஃதெலாங் காலம்வீ ணேகுமுறை
தாண்டிடச் சேஷ மறிவே
தானற்ற போதத்தே நானற்ற போதல்லோ
தன்மய சுகானந் தமே. (ரு)

மாகமதி லென்பதோ பாகமதி லென்பதோ
மனமாதி பொறியென் பதோ
மந்திர முபாசனைத் தந்திர மென்பதோ
வாச்சியப் பேச்சென் பதோ
மோகவி காரமொடு தேகசுக மென்பதோ
முடிவடி நடுவென் பதோ
முன்வா சனைப்படிப் பின்வழக்க மென்பதோ
மொழிந்திடும் பெத்தர் போலக்
காகமென வேகதறி யாகம முணராது
காற்றைப்ப மூக்கிடு வதோ
கருதிய தெலாமித்தை சுருதிவழி யனுபவங்
காரண விளக்க மிலையே
தாகந்தா கித்தவ னேகத்தி யாகமுற
தற்போத மற்ப மில்லை
தானற்ற போதத்தே நானற்ற போதல்லோ
தன்மய சுகானந் தமே. (சு)

தூரமொடு ரேசகம் பூரகங் கும்பகந்
துறையோக முறைதன் னிலே
தூங்கிவி ழித்தெழுந் தேங்கிக்க னவதாய்த்
தன்புற்ற கந்து டித்தோர்
நேரமா கினுமனம் பாரவா ரத்தாசை
நீங்கித் தெளிவ தில்லை
நெஞ்சங் காற்றிற்படு பஞ்சாய் பறக்குது
நிர்வாண நிட்டை நிற்கத்

தீரவை ராக்யமிலே சோரமத வாதங்கள்
திருஷ்டாந்தங் கற்ற தாலே
திரிசியா திரிசியம் பிரியமன வாதனை
திடசித்த மாயுண ரவே
தாரதம் மியமிலே யாரமுதம் போறிவு
தர்ப்பணம் வாசாச் சயம்
தானற்ற போதத்தே நானற்ற போதல்லோ
தன்மய சுகானந் தமே. (எ)

எட்டுட னூலையுங் கட்டுவது மெங்ஙனே
யிருவினைத் துடர்பின் னிய
வினையாக மங்கோடி துணைபலவு நம்பியே
யெண்ணங் கடற்று ரும்பு
நிட்டையுஞ் செய்துமே கட்டைபோற் றம்பித்து
நினைப்பைத் தடுப்ப தெங்கே
நினைப்பும றப்பறத் தனைப்போற் றனைக்கண்டு
நிர்த்தனஞ் செய்வ தெங்கே
அட்டமா சித்தியொடு வெட்டவெளி நோக்கலும்
மடயோககே சரிமுத் திரை
யர்ப்பணஞ் செய்மனந் தர்ப்பணத் தெளிவெங்கே
யாகமசந் தேக மிவைகள்
தட்டா தறிவுரு நிட்டானு பூதியிற்
றுனென் றிருப்ப தில்லே
தானற்ற போதத்தே நானற்ற போதல்லோ
தன்மய சுகானந் தமே. (அ)

மதுவபின் கஞ்சாவுண் டதுபோதை மிஞ்சியே
மனமருண் டறிவி ழந்து
மந்ததா பந்தமே சிந்தையதிற் சந்தேக
மனப்பேய் வினைக்கா ளதாய்
பொதுவருள் விளங்காது வதுவிது வேறெனும்
பொம்மலாட் டத்து ழன்று
பொய்யில் மயங்கியே கைமாறு பல்நாடி
பூசைபல வாசை கொண்டு

பதவிசு வர்க்கத்தை விதியென் றகத்தெண்ணி
பக்தியநு மான மேனே
பாசநா சத்திலே வாசாஞா னம்மிலை
பண்பட்ட கங்கு ளிர்ந்தால்
சதுமா மறைவழி யெதுவும் மறந்தநிலை
சச்சிதா னந்த மறிவே
தானற்ற போதத்தே நானற்ற போதல்லோ
தன்மய சுகானந் தமே. (௬)

கத்தித் துதித்துக் குதித்துவி ழித்திடுங்
கற்பனை யர்த்த வாதங்
காமவி காரங்கள் நேமமுறை யென்றுபேர்
கண்டபல னென்று மில்லை
புத்திசித் தம்மன மொத்தநிர் வாணநிலை
புத்தகக் கதையி லில்லை
புறப்பற் றகப்பற் றிகப்பற் றெலாம்விடப்
புகழிக மொன்று மில்லை
அத்தியா சங்களெனும் வித்தியா சங்களிலை
ஆஸ்தியுட னாஸ்தி யில்லை
அபவாத மித்தையிலை சுபவா தனைநேம
வாரூட நிலைச மாதி
சத்திய சுவானுபவ சித்திதனிற் றானேதான்
தானாய றிந்த தறிவே
தானற்ற போதத்தே நானற்ற போதல்லோ
தன்மய சுகானந் தமே. (௭)

மூன்றாவது சுகானந்தப்பதிக முற்றிற்று.

### நான்காவது

## சதானந்தப் பதிகம்

பூரண மகம்வெளி பேரனைத் துந்தானே
புத்திமன தொத்த தின்பம்
புண்ணிய பாவமென வெண்ணிடாத் தெளிவிலே
பூர்த்திசை தன்னிய வின்பம்

காரணம றிந்திடத் தாரணிம றந்திடங்
காமிய மொழிந்த வின்பங்
கருத்து வேறாகாத் திருத்தவி சாரணையிற்
கதிதிதி லாத வின்பம்

ஆரணமு திப்புளம் வேறெணமி லாதற
வாருயிர் திட்சை யின்ப
மந்திய மநித்திய முன்னாத நிர்வாண
மறிவேயெ தார்த்த ரூபம்

தாரணை விளக்கத்தின் சிரணிகு ணங்குணி
தடத்தலட் சணவி லாசம்
தத்துவத் தெரிசன மத்துவா பத்தியிற்
றானேச தானந் தமே. (க)

எல்லைவைத் தர்ச்சனை சொல்லிப் புகழ்ந்திடு
மிழவைக் கடிந்த வின்ப
மிந்திரஜா லம்முறு மந்திரவு பாசனையை
யிணையென மறுத்த வின்பந்

தொல்லையிற் பொறிகரணஞ் செல்லாம லுள்ளபடி
தொந்தத் தசிதா னின்பந்
தோமறு மனவெளி நேமமனோ லயமாகி
தொந்தந்தா னந்த வின்பஞ்

சொல்லை விளங்கிடும் நல்லோர்க்கு நாதாந்த
சோதிமன நீத வின்பஞ்
சொச்சந்த நிர்த்தன மச்சந்தெ ளிந்துபரம்
சோஹமு மன்புரு வமே

சல்விச லாத்தின்மனந் துல்லிபங் குளிர்தலே
சமத்துவ மனேவி லாசம்
தத்துவத் தெரிசன மத்துவா பத்தியிற்
ருனேச தானந் தமே. (௨)

என்னைத்தா னறியவே றன்னிய மொன்றுமிலே
யென்னிற்று னை வின்பம்
யிடைவெளி நடைபிடி தடைவிடய போததவ
மிச்சையறு சூட்ச வின்பம்
பொன்னையு மண்பெண்ணே யுன்னுத கத்திலே
போதநிர்ப் பேத வின்பம்
போகோப காணங்க ளேகோப காமமாய்ப்
பொதுப்பட லயித்த வின்பங்
கன்னிய ராசையது முன்னேயவ ழுக்கமுங்
கருமம் நசித்த வின்பங்
காரியக் குருமொழி யாரியவி வர்த்தங்கள்
கறையகல வன்பி னுருவே
தன்னைத்தா னறியவிதி யந்நியமில் லாதேகத்
தானுன சுயவி லாசந்
தத்துவத் தெரிசன மத்துவா பத்தியிற்
ருனேச தானந் தமே. (௩)

அல்லும்ப கலுலகத் தொல்லேயில் லாதவர்க்
கறிவுரு வான வின்ப
மகம்பாவ மமதையொடு ஜெகம்பாத கத்திரை
யற்றவர்க் கபேத வின்பம்
வெல்லுந்தி டச்சித்தம் வல்லவர்க் கெல்லேயற
வேதாந்த நீத வின்பம்
வேதனவி ளக்கமது சாதனம் மனநாசம்
வெட்டவெளி சுத்த வின்பந்
துல்லிபந் திட்சண்ய மல்லல்வி னேகளறந்
துரியத் தபார வின்பந்
தூண்டா விளக்கொளி பூண்டமன தறிவிலே
துக்கமறு மன்பி னுருவே

தல்லிகையு மேகாந்த மெல்லாம றந்தநிலை
 . தற்சொருப சுகவி லாசம்
தத்துவத் தெரிசன மத்துவா பத்தியிற்
 றுனேச தானந் தமே. (ச)

எல்லைகலி மாவறிந் தல்லில்மல் லதுன்னி
 யேகவறி வாத்ம வின்ப
மில்லறந் துறவறந் தொல்லைசமு சாரமு
 மிதமகித மற்ற வின்பஞ்
சொல்லிய பலகிரியை வெல்லுமெய்ஞ் ஞானமே
 சோதனையிற் சோதி யின்பஞ்
சோகமொடு தூக்கமுந் தேகபோ கச்சுமை
 சோகந்து டைக்க வின்பங்
கல்லைச்ச மாதியை நல்லதெய் வமென்ற
 கருமம்விடத் திவிய வின்பம்
கபு றுக ளேபாங் குயிரிரு ளுளமிலார்
 கருத்துள்விளை யன்பி னுருவே
சல்விச லாத்தென்ப தெல்லாம றந்தபதந்
 தாம்பரந் திருவி லாசம்
தத்துவத் தெரிசன மத்துவா பத்தியிற்
 றுனேச தானந் தமே. (ரு)

வையகப் பிரவிர்த்தி சையோகத் திரிசியம்
 வரையறத் துரிய வின்பம்
வாசனைகள் மூன்றுட னு பாசனைக ளற்றிட
 மாமவுன நேம வின்பம்
பொய்யகலு மாத்துமா மெய்யாம்வி ளக்கத்தின்
 புத்திக் குயிரா மின்பம்
போற்றிப்பு கழ்வதுந் தூற்றியி கழ்வதும்
 பொருந்தா வுளத்தி னின்ப
முய்யுந் திருவரு ளையந்தி ரிபறவே
 யுபமேய திட்சை யின்ப
முபமலத் திரையற வபரிமிதத் தெளிவின்க
 ணுர்ப்பனத் தன்பி னுருவே

தையிபு சிதாத்துமாக் கைலாச மனவெளி
தனியரசு மெய்வி லாசம்
தத்துவத் தெரிசன மத்துவா பத்தியிற்
றுனேச தானந் தமே. (௬)

வருணபே தம்மிலாப் பொருளுடைய மனமது
வயங்கிட நயங்கொ ளின்பம்
வருவதும் போவதும் நிருமூல மாயொழிய
வாஞ்சனை மறுத்த வின்பம்
பிரணவம் சுத்தநிலை யருணனம் புலியறியா
பிரக்ஞான சொருப வின்பம்
பிரக்ஞையு ணர்ச்சியில் விரக்தமா மைக்யமுற
பின்னமறு மேக வின்பங்
கருணைக்க டல்மவுன தெருளாம் நியதிநிலை
கலங்காத சித்த வின்பங்
கம்பீர நுண்ணறிவு துன்பறுவி வேகமே
கலிதீர்த்த வன்பி னுருவே
தருணமுன் பின்னற்ற வருளாய் நிறைந்திடுந்
தானேதான் மெய்வி லாசந்
தத்துவத் தெரிசன மத்துவா பத்தியிற்
றுனேச தானந் தமே. (எ)

அன்பருக் கன்புரு உம்பருக் காருயி
ரறிஞருக் கறிவி னின்ப
மஞ்ஞானிக் கஞ்ஞான மெய்ஞ்ஞானிக் கெஞ்ஞான்று
மகம்புற மேக வின்பந்
துன்பத்திற் றுன்பமே கன்மத்திற் கன்மமே
துவிதத்திற் றுவித வின்பந்
துக்கத்திற் றுக்கமே சிக்குசந் தேகமுந்
தூலத்திற் றூல வின்ப
மின்பத்தி லின்பமே யன்பற்று லசிபத
மிகத்திற்கி கத்தி னின்ப
மிகபர மறந்திடச் சுகதுக்க மில்லையே
இரண்டற்ற வன்பி னுருவே

தம்பம்வே றில்லையே கெம்பீர ஞானநெறி
    தண்ணருட் டிருவி லாசம்
தத்துவத் தெரிசன மத்துவா பத்தியிற்
    றுனேச தானந் தமே. (அ)

அருமறை வேதாந்தந் திருவுளந் திட்சண்ய
    மத்வைத சித்தி யின்ப
மறிவன்றி வேறில்லா தறிவா யறிந்துண்மை
    யத்தநிலை யொத்த வின்ப
மொருகுறைவு மில்லாத குருவறிவால் முத்தேக
    வுபாதிக் கதீத வின்ப
மொய்யார பொய்க்கிரியை செய்யாத மெய்வழி
    யுற்பவ மறுத்த வின்ப
மிருமாபு சமுசாரங் குருமாபுக் கில்லையிலை
    யிருதயச் சுத்த வின்ப
மிந்திரஜா லம்மொடு மந்திரவி லாயத்து
    மிணையற்ற வன்பி னுருவே
தருமநிலை தற்சொரூபம் பொறுமைதனிற் றுணுக்த்
    தன்மயந் திருவி லாசந்
தத்துவத் தெரிசன மத்துவா பத்தியிற்
    றுனேச தானந் தமே. (கூ)

மன்னுயிர் தன்னுயி ரென்னுங்கா ருண்ணிய
    மனம்பூர ணத்தி னின்பம்
மாதவ மென்பதது போதம்ந சித்தலே
    மவுனமனத் தான வின்ப
முன்னில் லுதியாது தன்னில் லயித்திட
    வுட்டிருஷ் டாவி னின்ப
முட்சேப ஞதிபல விச்சேப விபரீத
    முடையறத் திடத்தி னின்பம்
பின்னிய தத்துவ மங்கியம நித்யமென
    பிரித்தறி திருத்த வின்பம்
பேர்சிட னென்பதிலா நேர்நேர றிவுகுரு
    பிரக்ஞான மன்பி னுருவே

தன்னிலைமை தானன்றி யின்னமொரு நிலையுண்டோ
    தனித்தபரம் பொருள்வி லாசம்
தத்துவத் தெரிசன மத்துவா பத்தியிற்
    ருணேச தானந் தமே. (ய)

நான்காவது சதானந்தப் பதிகம் முற்றிற்று.

---

ஐந்தாவது

## சைதன்னியப் பதிகம்

கல்லொடு பொன்வெள்ளி புல்லொடு தறியுரு
    கட்டிடங் களைவ ணங்கிக்
கைலாய மருள்கென மயலாய்ப்பே ராவலொடு
    காதலித் துதவி தேடி
யல்லலொடு மந்திரஞ் சொல்லுதோத் திரம்பல
    வறைதுவித தூப தீப
மாலாத்தி பூடணம் மேலேத்தி மலராலே
    யலங்கரித் தகம கிழ்ந்து
வல்லவா வுனையன்றி வேறிலையென் றர்ச்சனை
    வணங்குவது கன்ம காண்ட
வழக்கந் துலங்காச் சழக்கங் குணக்கமிது
    வடக்கைத்தெற் கென்ற திவைக
ளில்லின்சர்க் கார்தனிற் சொல்லரி குஞ்சிமறைத்
    தெரித்திடும் பாங்கி தன்றோ
யிணைவைத்தோ ருறவற்று தனைத்தா னறிந்திட
    வேகாந்த சைதன் யமே. (க)

தன்னைத்தா னறியாது பின்னிய திரிசியத்
    தாதமார்க் கத்து மூன்று
தவறுந் துவிதநிலை கவருமொரு மமதையிற்
    றத்பதம் விளங்கி டாது
பொன்னை மண்பெண்ணை யுன்னியே லௌகிக
    போதமே சாதன மதாய்
பௌமப் பிராந்தியிற் கைமாறு கருதியே
    போற்றல் பணிதல் கோடி

யன்னைதந் தைவழி முன்னே குருமா
    • பாதிமனு மரபென் றுநா
மந்தண ரென்றனர் பந்தமொ ழிந்ததிலை
    யர்த்தவா தத்துவி தமே
யின்னவழிக் காளாகித் தன்னாலே தானேகெட்
    டெலிபொறி பட்ட பாடே
யிணைவைத்தோ ருறவற்று தனைத்தா னறிந்திட
    வேகாந்த சைதன் யமே. (௨)

பவ்வமூவ் வேடணைத் துவ்வித குருக்களைப்
    பயந்துமரி யாதை செய்து
பணங்கொடுத் தவர்மொழிக் கிணங்கிபல மந்திரம்
    பாடமிட் டோதி யோதி
கவ்வையொடு மணியெண் ணிக் குவ்வைத் தியானித்துக்
    காரியத் தவங்கள் செய்து
காமவி காரமொடு நாமரூ பச்சேவை
    கட்டிடத் தோத்தி ரங்கள்
தவ்விய மகக்குரங் கெவ்வகைக் கும்மோடி
    தற்போத வாசனை யொடு
தடமா றிடும்புகழ் விடயபோ தநிஷ்டை
    சமயப்பே யாட்ட மன்றோ
யிவ்வகை துன்மார்க்க ரெவ்வகையு மிருதலை
    யெரிகொள்ளி யுற்ற புழுவே
யிணைவைத்தோ ருறவற்று தனைத்தா னறிந்திட
    வேகாந்த சைதன் யமே. (௩)

தங்கநகை பூஷணந் தொங்கிடு மங்கைகள்
    தனமிலா வறியர் தம்மை
சந்தித் துறவுறார் பந்திக் கழைத்திடார்
    தர்க்கித்து பக்கத் திரார்
பங்கப்படு முலகை சங்கைசெய் யுந்தியர்
    பழையதொரு வறுமை வந்தாற்
படுக்கவும் பாயற் றுடுக்கவுந் துகிலற்று
    பல்லிளித் தலைய விலையோ

பொங்குமூ ணற்றவர்கள் சங்கைபெற் றுய்யலேயோ
போற்றுமுறை தெரியா ததோ
புவியோர் மதித்தென்ன கவியோர்ந் துணர்ந்தென்ன
புலன்பொறி துறந்த தில்லே
யிங்ஙனஞ் செல்வமுந் தங்காத் தரித்திர
மெங்குஞ் சரியார்க் குமே
யிணேவைத்தோ ருறவற்று தனேத்தா னறிந்திட
வேகாந்த சைதன் யமே. (ச)

செங்கோ லரசுபுரி தங்கமுடி மன்னருஞ்
செல்வமுஞ் சேம பூமி
சீமான்கள் தோதகக் கோமான்க ளகங்கார
தீர்க்கவீண் மூர்க்க ரெங்கே
தொங்கும் கொடிகூடு செங்கற்ச மாதிகளேத்
தொழும்பொய் விழிய ரெங்கே
தொழுகாது பகிர்முகப் பொழுதுமிகப் போக்கிடுஞ்
சோம்பேறி வேட ரெங்கே
வங்கமிக வைத்துமால் தங்கும்பொய்ச் சமர்த்தர்கள்
வாழ்வெங்கே மக்க ளெங்கே
வாழ்வதை மற்றெருருவ ராழ்வதுந் தெரிந்தது
வாதனேப் பட்டொ ழிந்தா
ரங்ஙன மில்லற மெங்ஙனம் பணங்கா
சிடும்பர்கைக் கோல தன்றே
இணேவைத்தோ ருறவற்று தனேத்தா னறிந்திட
வேகாந்த சைதன் யமே. (ரு)

கஞ்சா வபின்லகிரி யஞ்சாத ருந்திவெறி
காஷாய வேஷ மிட்டு
கண்பொத்தி யோகமென விண்ணெளி விளங்குதெ னுங்
காரியக் குரும லிந்தே
பஞ்சாக்ஷ ரமூமை நஞ்சுபிஞ் சாக்ஷர
பலநாம ரூப மென்று
பழங்கதைக ளோதியே விளங்காத பாஷையிற்
பசப்பிப் பணம்ப றிக்கு

மஞ்சாத நெஞ்சினர் சஞ்சிதப் பொதிசுமை
யாகாய மனைவாழ் குவோர்
ஐய்யயோ விதுவென்ன பொய்யுலக மாயையிங்
கடிமைகள் வேத முணரார்
யெஞ்சிடும் மறிவிலார் பஞ்சபா தகரான்றே
விதுபேய்நாய் மிருக வாழ்வே
இணைவைத்தோ ருறவற்று தனைத்தா னறிந்திட
வேகாந்த சைதன் யமே. (௬)

கல்லைநற் பணிசெய்திங் கில்லம தியற்றலாங்
கல்லாரை யென்செய் யலாங்
கள்ளர்க் கிதமொழி யுள்ளபடி யோதலாங்
காமிகட் கேதோ தலாஞ்
சொல்லுமரு பூமியை முல்லைவன மாக்கலாஞ்
சோம்பேறிக் கென்செய் யலாஞ்
சோதித்து லோகத்தை பேதித்தி ணக்கலாந்
தோதகர்க் கென்செய் யலாம்
பல்லரும் புகழவொரு சொல்லில்நோய் போக்கலாம்
பண்படார்க் கேது செயலாம்
படைப்பினை வணங்கிடு மடிப்பினை யகற்றுமு
பாயதந் திரமில் லையோ
இல்லாத பொருடனக் குல்லாச மிச்சையே
னிடுகாட்டில் மங்கள மதோ
இணைவைத்தோ ருறவற்று தனைத்தா னறிந்திட
வேகாந்த சைதன் யமே. (௭)

ஐய்யோ வநித்திய வைபகத் தாசைக
ளந்தகா ரத்தி ரயமே
ஐன்கலி மாவெனப் பொய்விழியை நம்பலு
மதினடு சுடர்மூன் றென
மையலொடு சாகையைத் துய்யபர மென்றெணி
மனோன்மணித் தாசி யென்று
மற்றெலாச் செயலுமே கத்தனவன் செயல்கணின்
மணியே கடவு ளென்று

மெய்யென் றிதைநம்பி பொய்யில் மயங்கிடு
மேனியை மினுக்கி கட்கு
மெய்ஞ்ஞான முள்ளதோ வஞ்ஞான வாசனை
வேஷதா ரிகள்வ ழக்க
மெய்யும் பிரவிர்த்தி செய்யுங் கிரியையெலா
மிழவுபே யாட்ட மன்றோ
இணைவைத்தோ ருறவற்று தனைத்தா னறிந்திட
வேகாந்த சைதன் யமே. (அ)

அகம்புற மொன்றாகி சுகதுக்க மின்றியே
யநிஷ்டத் தகங்கு விர்ந்தே
ஆத்துமானு சந்தான வேற்றுமை யிலாதேக
மறிந்தகந் துறந்தி டாது
ஜெகம்பிர பல்யமுற வுவமைபல வெண்ணியே
செய்வதறி யாது செய்து
செம்பொனுல காசையதை நம்பிடுத றுன்பமே
சேதனந் தெளிவ தன்று
தரும்பர முத்தியும் விருப்புடன் வெறுப்பிலா
தடத்தலட் சணசொ ரூபந்
தாணுவிற் புருடன்போற் றோணுவது காட்சியோ
தர்க்கசாஸ் திரங்க ளன்றோ
இகம்பர மறந்திட வகண்டமா கும்விர்த்தி
யில்லார்க்கிங் கஞ்ஞா னமே
இணைவைத்தோ ருறவற்று தனைத்தா னறிந்திட
வேகாந்த சைதன் யமே. (கூ)

தேகமொடு தேகியை யூகமொ டுணர்விலே
தெளிந்தனித் தியமி ழந்து
தெவிட்டா தறிவொடு மவுட்டிய மயக்கொழிய
தேசோ மயானந் தமே
மாகமொடு புவியுடன னேகபுக ழாய்நிறை
மகதத்துவ குன்ப யக்கூன்
மாசற வெளிபோன்று நேசமன சித்தசுக
மவுனமுறு பேரின் பமே

சோகமொடு மந்ததா பாகசே காமில்லா
சொச்சொருப நிச்ச யத்தே
சோஹம் சுபாவிகம் யூகம்ப குத்துணர்வில்
சுட்டறியா வெட்ட வெளியே
ஏகபரி பூரணம் மோகவி ராகமினி
யெல்லா மறிந்த தறிவே
இணைவைத்தோ ருறவற்று தனைத்தா னறிந்திட
வேகாந்த சைதன் யமே. (ம)

ஐந்தாவது சைதன்னியப் பதிகம் முற்றிற்று.

---

## ஆறுவது
## ஏகரசப் பதிகம்

---

அந்திபக லோயாமற் சிந்தையரு ளானந்த
மாருயிர்க் கற்பக தரு
ஆனந்த ரூபத்தின் மோனந்த நித்திரை
யநந்திய சுகானந் தமே
புந்திதனி லுற்பவத் தந்திர மந்திரம்
புகழிக முற்ற காட்சி
புத்தியின் விசாரணைக் கெத்திய பிரக்ஞானம்
பூரணந் தீட்சை சாக்ஷி
பெந்தர்வழி வந்தனைக ளெந்தவித முமின்றி
பேரருள் விலாச மாட்சி
பேதாகி தத்திலோ ராதரவு மில்லையே
பேரின்ப மனோல யந்தான்
கந்தங்க மழ்சுவனம் பந்தபா சந்துவித
களங்கமல மற்ற வுளமே
கருவிகா ரணதியெலாம் நிருவிகா ரந்தனிற்
கனிந்தொழுகு மேக ரசமே. (க)

நாசிமுனை சுழினையெனப் பேசியவா சாஞானம்
நாவைநா ளத்துள் மாட்டி
நந்திகுரு பீடமென வுந்திபுரு வத்திடையும்
நாடிகண் பொத்தி நிட்டை

வாசிநிசு வாசமும் ரேசிஉசு வாசமொடு
வணங்குவ திணங்குவ திலை
வாதபஞ் சிகரணங் தோதறிந் துணராது
மாற்றதிக பொன்செய் வதாய்
பாசிமிக நிரம்பிய மாசிக்கு ளம்போன்று
பாசத் துழுன்று முங்கி
பலவிதச் சொற்பேத கலையாக மங்களைப்
படித்துத் துடிப்ப தேனோ
காசினி யாசையொடு பூசனைக ளற்றிடக்
கலக்கங்க ளொன்று மிலையே
கருவிகா ரணதியெலாம் நிருவிகா ரந்தனிற்
கனிந்தொழுகு மேக ரசமே. (உ)

நஞ்சா விடத்ததிக வஞ்சிக ளாசையது
நமனுர்க் குகந்த வேட்டை
நமனரசிங் கஞ்ஞான தமகுண மனமருட் கண்
ணசித்திடத் துக்க மில்லை
நெஞ்சஞ் சலிக்காம லின்சொல் மஹாமொழி
நிச்சயம் நேம நிலையே
நேசவிசு வாசமெலாம் நாசமுறு மனந்தனில்
நிரங்குச திருப்தி யொன்றே
பஞ்சகோ சத்திரை பிஞ்சிடத் தற்சொரூபம்
பாமரக சியம்வே றிலை
பழையவ ழுக்கமெனு மிழவுகொண் டாட்டமிலை
பார்த்த மென்ப தில்லை
கஞ்சாவ பின்லகிரி பஞ்சைமதப் பேயொழிய
காண்பதற் கன்ய மிலையே
கருவிகா ரணதியெலாம் நிருவிகா ரந்தனிற்
கனிந்தொழுகு மேக ரசமே. (௩)

சினங்கொள்மனப் பேயது வனங்களைச் சுற்றியே
சிந்தித்த றெளித லின்றி
சிதையுந் துவிதமத கதைகற் றசையுதே
திக்கிரென் றலறி யோதி

தனங்கொள்ளும் போராவல் தினங்காங் காடுதே
        தறாக்காக் கபுறை நாடி
தன்னில்வே றெண்ணுதே யந்நியசத் தார்த்தமாய்த்
        தாங்கத் துரும்பு போல
மனங்குருகு மிச்சையிற் கனம்பெரி துயர்வெணி
        வணக்கங் கணக்கில் லையே
மதவா தனைகள்பல விதமாய்க் கெடுக்குதே
        மனங்குவிய வழிக ளில்லை
கனமலினோ பாசனைகள் நினைவெலா மறந்திடக்
        கற்பனைக் கடிமை யிலையே
கருவிகா ணாதியெலாம் நிருவிகா ரந்தனிற்
        கனிந்தொழுகு மேக ரசமே. (ச)

போகவினை வாதனையின் தேகமி தனித்தியம்
        பொய்யுடல் மெய்யா குமோ
பௌமப் பிராந்தியிற் கைமாறு தேடியேப்
        போற்றுவது தற்போ தமே
ஆகமக் குப்பைபொதி பாகவிதி நேசமெனு
        மந்தத்துவ மத்தி யாச
மவகாச மனவெளி விவகார மறியாது
        வநவதா னத்திர யமே
மோகவி காரமதி சோகசங் கற்பத்தால்
        மொய்த்தமல விர்த்தி மாயை
மோனவுரு வானந்த ஞானநிலை தேறுத
        மூடமிது கேட கன்றுற்
காகமென வலறுது தேகமனித் தியமெனுங்
        காரணம் விளங்கு மனதே
கருவிகா ணாதியெலாம் நிருவிகா ரந்தனிற்
        கனிந்தொழுகு மேக ரசமே. (ரு)

சல்லிய மொட்டியந் தொல்லைமணி மந்திரத்
        தடைமா ரணம்வசி யமுந்
தம்பனம் மோகனம் பந்தன மாகர்ஷணந்
        தவறுவித் வேஷ ணங்கள்

சொல்லிய தல்சிமா யிசுமசுமா வாசிலா
சுருதிக் கிணங்கி டாத
சொற்சுவை சங்கிதந் தூர்ச்சவை விகாரமே
சோரபுகழ் நேரில் லையே
யல்லிவை முன்வழக் கல்லாது சுத்தமன
தடங்கிவிஞ் ஞான நிலையி
லற்றநிலை வெற்றிபா முத்திசுகம் நித்தியகதி
யாருயி ரைக்ய நிலையே
கல்லார்க்குச் சொல்வதோ வெல்லார்க்கும் பொதுநிதி
கல்லாத குற்ற மன்றே
கருவிகா ணுதியெலாம் நிருவிகா ரந்தனிற்
கனிந்தொழுகு மேக ரசமே. (சு)

பத்திவை ராக்யமுள சித்தந் தனில்வேறு
பாவனையு பாசனை யிலே
பாழான சாஸ்திரங் கூழுக் குரைத்ததே
படித்துத் தடித்த துள்ளஞ்
சத்திய சாக்ஷிமயம் சுத்தசை தன்யநிலை
சரியாதி துவித மில்லை
சன்மார்க்க சின்மயந் துன்மார்க்க மொன்றுமிலை
சழக்கொடு வழக்கு மில்லை
புத்திக்கெட் டாதில்லை யுக்திகொண் டாய்ந்திட
புந்திச லிப்ப தில்லை
புத்தகக் கதையல்ல வித்தியா னந்தமுறப்
பூரணந் திருக்காட் சியே
கத்திமன மருளாது உத்தமதற் சாக்ஷிநிலை
கருத்தது மனோ லயத்தே
கருவிகா ணுதியெலாம் நிருவிகா ரந்தனிற்
கனிந்தொழுகு மேக ரசமே. (எ)

செல்வச் செருக்கிலே சொல்வதங் கேளாத
செயற்கே டரைப்பு கழ்ந்து
செருப்புக்கு சாய்காத் திரைப்பைக் குரந்தேடி
தேசந் திரிந்த லைந்து

நல்வழியி லாதபொய்த் தொல்புவி வேடருட
னோடோடி பாவனை களால்
நாட்டிற் றிரிந்தலைந் தேட்டிற் றெரிந்ததும்
நம்பினதி னின்ப முளதோ
பல்வகைத் தொல்லைக ளில்வாழ்க்கை யல்லலே
பருவங்கண் டகல வோடி
பரியாய நாமமிலி துரியசுகம் நனவிலே
பாகியமி லாத றிந்தே
கல்விக் கழகன்றோ யில்மல்ல துன்னியஹம்
கதிதீ தொழிந்த முத்தி
கருவிகா ணுதியெலாம் நிருவிகா ரந்தனிற்
கனிந்தொழுகு மேக ரசமே (அ)

பொய்யுறுங் கற்பனைக ளேயமலக் கிரியைகள்
பொருந்தா ததார்த்த முன்னி
போதத்தி லிகபரம் நேதித் தறிவிலே
போக்குவா வற்ற நிலையாய்
மெய்யுறும் பரமார்ந்த முய்யுஞ் சுபாவிக
மெய்ஞான விருத்தி யாலே
மேதினி யுறவெலாம் வாதனை யெனக்கண்டு
மித்தையா வரணம் நீங்கி
பொய்யுற மனோரத மையுறு திருஷ்டாந்த
பொம்மலாட் டங்க ளின்றி
போதாந்த வேதாந்த நாதாந்த மானந்தம்
பொங்கிடச் சங்கை யிலையே
கையுமெய் யும்மாகுந் துய்யதுரி யாதீதங்
கங்குல்பக லற்ற முத்தி
கருவிகா ணுதியெலாம் நிருவிகா ரந்தனிற்
கனிந்தொழுகு மேக ரசமே. (கூ)

ஊரெலாஞ் சுற்றிபல வாறெலாங் கற்றென்ன
வோயாம லோதி யோதி
யுருட்டிமணி யெண்ணியே திரட்டிக்கு வித்தென்ன
உழன்றநாள் போதும் போதும்

பேரெலா மனதெண்ணிப் பீரெலாம் போற்றிபுகழ்
பேசிப் பலன்க டேடி
பிரலாபித் தகமகிழ்ந் திரவொடும் பகல்செய்த
பேயாட்ட மிவைக ளெல்லாம்
நேரிலாத் துமஞான சீரியல் விளங்கிட
நேதித் தெலாம றந்து
நேசானு பூதியது வாசாம கோசரம்
நிதார்த்தம் சுகானந் தமே
காரெலாம் பற்றற்ற வாருயிர் மனங்குவிய
காலங்க ளொன்று மிலையே
கருவிகா ணுதியெலாம் நிருவிகா ரந்தனிற்
கனிந்தொழுகு மேக ரசமே. (ய)

ஆறாவது ஏகரசப் பதிகம் முற்றிற்று.

---

## ஏழாவது
## துரியப் பதிகம்

---

எல்லைதா னென்பதோ யில்லைதா னென்பதோ
யிடைநடு வெளியென் பதோ
இடும்பைக ளுரைப்பதோ கொடும்பகை விளைப்பதோ
விருவினைத் தொடரென் பதோ
அல்லலுல கென்பதோ நல்லபதி யென்பதோ
வந்தணர்க் காளா வதோ
அத்துருவ மென்பதோ சத்துருவ மென்பதோ
அறியக்கூ டாதென் பதோ
சொல்லைத்தான் சொல்வதோ சொல்லா திருப்பதோ
சோம்பித் துடித்துழல் வதோ
சொந்தமி ரவலென வந்தனஞ் செய்வதோ
சொல்மாத்தி ரம்மிவை யெலாம்
வல்லாசு தன்னிலே யல்லாது வேறில்லை
வாசனு க்ஷயம் பூர்த்தியே
வானவெளி யானவகம் மோனவுரு ஞானசுக
வாரிதி துரிய வருளே. (க)

பூதம்பொ றிகரண பாதந்தெ ரிவதோ
 புரியட்ட மென்றுணர் வதோ
புத்தியாத் துமாவென்று கத்திக்கு திப்பதோ
 புவனபோ கத்துலை வதோ
வேதம்ப டித்ததின் னீதமுண ராமலே
 வெறுமனே யோதிடு வதோ
வேதபா கியர்போலே சாதனை விளங்காது
 வேசற் றலைந்திடு வதோ
பேதம்ப லவிவித போதந்தி ரிசியப்
 பேச்சாலே மூச்சொழி வதோ
பேசாச்சு வானுபவ பூசாப லந்தனிலே
 பெறுவதற் குவமை யிலையே
வாதனைக ளேதுமிலா சாதகந் தனையறிய
 வாசனைக ளற்ற மதியே
வானவெளி யானவகம் மோனவுரு ஞானசுக
 வாரிதி துரிய வருளே. (௨)

சாக்கிரஞ் சொப்பனந் தூக்கம யக்கமொரு
 சகளநிஷ் களமென் பதோ
சாத்திரக் குவியல்களை மாத்திரம் பார்த்தாற்
 சகலகல ரென்றிடு வதோ
சூக்குமங் காரணம் பூக்கமல மாய்ந்துவெளி
 சூநியந் தானென் பதோ
சுத்தசூ நியமென்று மெத்தப் பிதற்றியே
 சுகாசுகந் தேடிடு வதோ
நீக்கறும் சதாநிட்டை மோக்கநி ராசையென
 நில்லாமற் சொல்லிடு வதோ
நிராசார பெருவெளி சிராஜன் முனிர்வொளி
 நிகழ்த்துவது வாசா ஞானம்
வாக்குகா யம்மன மூக்கமோ டமைந்திட
 வாஞ்சைதொழி லொன்று மிலையே
வானவெளி யானவகம் மோனவுரு ஞானசுக
 வாரிதி துரிய வருளே. (௩)

அங்கியதாக் யாதிகொடு பன்னிற முரைப்பதோ
　　வநுமான விதியென் பதோ
வத்தியய னஞ்செய்து புத்தியில் விளங்காம
　　லதுவிது பொதுவென் பதோ
பின்னிய வினைத்தேகஞ் சென்னிய மெனப்பேசி
　　பிரபல்ய குருவென் பதோ
பித்தவெறி காமத்தை சுத்தமெய்ஞ் ஞானமெனப்
　　பிதற்றுதற் கிடா வதோ
மன்னிய மனப்பேயு முன்னிய வியாபார
　　மார்க்கத் தடிப்புறு வதோ
மறையோர்கள் பெரியோர்கள் முறைநெறி யிஃதென
　　மதிப்பதுவு மஞ்ஞா னமே
வன்னியது மெய்ஞ்ஞானம் முன்னிய வழக்கமற
　　வந்தன மொன்று மிலையே
வானவெளி யானவகம் மோனவுரு ஞானசுக
　　வாரிதி துரிய வருளே. (ச)

தனம்பெரி தென்றுதன் னினம்சத மென்றுபொய்த்
　　தடையத்தி டைந்திடு வதோ
தாவந்த மில்லறப் பாவந்தொ டர்தூலத்
　　தடிமாடு போலா வதோ
மனம்போல நடையுடை தினம்போக விடயசுக
　　மயக்கித் தியங்கிடு வதோ
மதாஞ்ஞை யாணவ முதாசினம் பிரவிர்த்தி
　　மவுட்டியத் திரைகொள் வதோ
நனவிற் றுரியசுகங் கனவுநி னைவுமின்றி
　　நம்புதல் நினைவென் பதோ
நாட்டதேட் டம்மநிய நோட்டமாட் டங்கறை
　　நத்துவதிங் கொன்றுள் ளதோ
வனமாய பொறிகாண மினமாய் வயங்கிட
　　வாசிக்குங் கதையில் லையே
வானவெளி யானவகம் மோனவுரு ஞானசுக
　　வாரிதி துரிய வருளே. (ரு)

தந்திரம் வயிற்றுக்கா வந்திபக லோதிபல
 தடங்களில் நடந்திடு வதோ
தாரிற்பெ ரியரெனப் பாரியலெ லாஞ்செய்து
 தடிதனை மினுக்கிடு வதோ
அந்தாப் பூசையென மந்திரமெ ழுத்துன்னி
 யதோகமனப் பேயா வதோ
அபக்குவர்க ளோதிய செபக்கரும மதமதி
 லவாசுவன•நாடிடு வதோ
இந்திரஜா லமெனுங் கந்தர்ப்ப நகர்சுவன
 மெண்ணியே வணங்கிடு வதோ
யிச்சாச குணமிவை மிச்சமொன் றுமிதி
 லில்லையே யர்த்த வாதம்
வந்தியா மைந்தனுக் கந்திபகற் றூலாட்டோ
 வழக்கமறத் தாழ்மை யிலையே
வானவெளி யானவகம் மோனவுரு ஞானசுக
 வாரிதி துரிய வருளே. (சு)

சொந்தமி ரவலென புந்திச லித்துளறி
 சொற்போத கத்துறு வதோ
சோமசூ ரியநடு சேமசுழி முனையெனச்
 சொல்லுபொய்க் குள்ளா வதோ
சிந்தையை வயக்காது அந்தத்து வம்பேத
 சித்துஜா லத்துழல் வதோ
சிதாபாசத் தன்மையாம் பிதாமாதாக் கொள்கையைச்
 சிந்தித் துகந்திடு வதோ
பந்தவி மோசனம் சந்ததம் மோக்ஷகதி
 பகுத்தறி யாதலை வதோ
பலதொல்லை கற்பனைக ணிலைநில்லா தென்றறிய
 பாராமுகத் தவல முளதோ
வந்தன மனோநாச மெந்தபுக ழிகழின்ப
 வாதனைக ளென்ப திலையே
வானவெளி யானவகம் மோனவுரு ஞானசுக
 வாரிதி துரிய வருளே. (எ)

நாசச்ச ரீரத்தை நேசித்தி கபரம்
நாடித் தொழுதிடு வதோ
நச்சரவ சிற்றின்ப விச்சையிற் சொச்சொரூப
நம்பா தலம்பிடு வதோ

வேஷதா ரிகள்போல பூசனைகள் செய்துநெறி
வேதனம றந்திடு வதோ
வேடிக்கை யூர்வழக்க நாடிக்கை மாறுன்னி
வேதபா கியனு வதோ

தாசனு சானெனும் நீசமலப் பொதிசுமை
தலைமேற் சுமந்திடு வதோ
தத்தளிக் கும்மனஞ் சுத்தநிலை பெற்றிட
தருவதும் பெறுவ துண்டோ

வாசனுத் திரயமொ டுபாசனைக ளற்றிட
மனோலயம் மவின மிலையே
வானவெளி யானவகம் மோனவுரு ஞானசுக
வாரிதி துரிய வருளே (அ)

நேமாதி யர்ச்சனை காமாதி தற்போதம்
நெஞ்சினி னைத்திடு வதோ
நேரமொடு காலங்கள் பாரவா ரச்சுமையை
நேதிசெய் யாதுழல் வதோ

பூமாவ காசநிலை தாமாம்சி வோகமதி
புத்தியில் விளங்கி டாதோ
புலன்பொறி வயங்கா தலங்கோல மாய்த்திரி
புடியிலி யங்கிடு வதோ

காமாதி கள்துவித சேமாதி பலதொழில்
கருதித் தவஞ்செய் வதோ
கருமோபா சனைமுழுதுந் தருமமென வெண்ணுத
கருத்தில் விருத்த முண்டோ

மாமாயை யர்ப்பணம் நாமாதி திரிபறவே
வருந்துவ தொன்று மிலையே
வானவெளி யானவகம் மோனவுரு ஞானசுக
வாரிதி துரிய வருளே. (கூ)

நானென தற்றெழிய தானென சிற்பரம்
நாட்டதேட் டங்க ளுளவோ
நானுவி தங்கல்வி யானலு மென்செய்ய
நாட்டம் வயங்கிடு வதோ
வூனென தூலங்காண் பானுந் திருட்டிகளை
யுள்ளதென் றறிய வெளிதோ
உசுவாச மேற்றியே நிசுவாச மாற்றிட
உண்மைவி ளங்கிடு வதோ
மோனனந் தத்தீட்சை ஞானனந் தக்காட்சி
முத்திவே ருயறி வதோ
மோக்கம தெத்தொழிலுந் திர்க்கமோ டற்றநிலை
மொழியவொரு வழியு முண்டோ
மானபி மானமொடு நீநானு மற்றெழிய
மந்திர மென்ப திலையே
வானவெளி யானவகம் மோனவுரு ஞானசுக
வாரிதி துரிய வருளே. (எ)

ஏழாவது துரியப்பதிக முற்றிற்று.

---

எட்டாவது

## சுலட்சணப் பதிகம்.

அகம்பிய மாத்துமா சுகதுக்க மெத்தகையு
மற்றதே சீவன் முத்தி
யகம்வெளி பற்றற் றிகபர விராகமே
யநிச்சைதான் சீவன் முத்தி
மகிமைகர்த் தாபோக்தா புகழிக ழொன்றுமிலா
மகோதய சீவன் முத்தி
மனமாதி காரணங்க ளினமாய் வயங்கிட
மனோலய சீவன் முத்தி
வெகுமாய துவிதங்கள் தகுமான தஸ்தானம்
விவேகமே சீவன் முத்தி
வித்தையா னந்தத்திற் சித்தசஞ் சலமற
விதேகம் பாமுத் தியே

சுகமாகி நிர்வாண மகமாகிக் கேவல
சுயவலிபு லாமீ மெனும்
சுத்தம்வி லட்சண முத்தம்ச லட்சணம்
சுலட்சணஞ் சுயஞ்சோ தியே. (க)

தேகதி ருஷ்டியொடு லோகதி ருஷ்டிமலத்
திரையறச் சிவன் முத்தி
தேவாமிர் தமறிவு மூவாத வாத்துமா
திருட்டியும் சிவன் முத்தி
ஆகம கலைபல வவையெலாந் தான்மறந்
தமைந்திடச் சிவன் முத்தி
அறிவான குருவாகி யறிவாத்மா தானுகி
யருளுரு சிவன் முத்தி
யோகம்வெகு நிட்டைபல பாகமுறை யற்றுநி
யோகமற சிவன் முத்தி
யோகம்நிர் யோகமு மோகநினைப் பற்றுபர
யோகம் பரமுத் தியே
சோகந்தி ருவருள்சி வோகமே கேவல
சுயவலிபு லாமீ மெனுஞ்
சுத்தம்வி லட்சண முத்தம்ச லட்சணம்
சுலட்சணஞ் சுயஞ்சோ தியே. (உ)

பிரதிபல னெண்ணுத நிரதிச யானந்தம்
பிரஞ்ஞைதிரு சிவன் முத்தி
பிரமானந் தம்மொரு திறவாச னுனந்தம்
பின்னமறு சிவன் முத்தி
உரியவிட யானந்தம் பிரியவான் மானந்த
முள்ளலறு சிவன் முத்தி
யுத்தமுக் யானந்தம் பத்திநி ஜானந்த
முபயமறு சிவன் முத்தி
நிரவியசு கானந்தம் பரவுபர மானந்தம்
நிரங்குச சிவன் முத்தி
நினைவின்ம னோதம் நனவத்வி தானந்த
நிரோதம் பரமுத் தியே

சுருதியு திப்புலயம் துரிதகே வலமோக்ஷ
சுயவவிபு லாமீ மெனுஞ்
சுத்தம்வி லட்சண முத்தம்ச லட்சணம்
சுலட்சணஞ் சுயஞ்சோ தியே. (௩)

பரசிவ சகமெனுந் தூபிமா னந்துவிதம்
பற்றறச் சிவன் முத்தி
பாழ்மூன்று முத்துரிய மேழ்வான மேழ்பூமி
பந்தம்விடச் சிவன் முத்தி
திரவியந் தத்துவப் பிரவிர்த்தி சிந்தனை
சிக்கறச் சிவன் முத்தி
திரிசிய திருட்டியின் கருமோபா சனையற்ற
திரமே சிவன் முத்தி
சருவசங் காரமே நிருமலவி ரக்தமே
தண்ணருட் சிவன் முத்தி
சலத்திற்ச லம்போற் கலித்திடா தைக்யமுறத்
தானன பாமுத் தியே
துறவறமில்லறம் பெறலொழி விதேகமே
சுயவவிபு லாமீ மெனுஞ்
சுத்தம்வி லட்சண முத்தம்ச லட்சணம்
சுலட்சணஞ் சுயஞ்சோ தியே. (௪)

எல்லாம றந்துதா னில்லாது பொறிபுல
னியக்கமறச் சிவன் முத்தி
யிறந்தபின் னர்மோக்ஷம் பாந்தருவ தென்றெண்ண
மிழுந்திடச் சிவன் முத்தி
அல்லாகு வன்றிவே றில்லாத பூரண
வபேதமே சிவன் முத்தி
யாத்மானு சந்தான சாத்வீக மெதிலுமன
தடங்கலே சிவன் முத்தி
வெல்லுங்க திபென்ற நல்லதல முத்தியெனும்
வேட்கையறல் சிவன் முத்தி
வெட்டவெறும பொய்யெலாம் விட்டது சமாதியே
விதேகமும் பாமுத் தியே

சொல்லிய வுபாதிலய மல்லாது தவமில்லை
சுயவலிபு லாமீ மெனுஞ்
சுத்தம்வி லட்சண முத்தம்ச லட்சணம்
சுலட்சணஞ் சுயஞ்சோ தியே. (ரு)

சரியாதி கற்பனை விரிவாமு பாசனையின்
றடிப்பறச் சீவன் முத்தி
சாதனைகள் முத்தடை வாதனைய நித்தியச்
சங்கார சீவன் முத்தி
பரியாய நாமதவம் பிரியமெதி லும்பற்றுப்
பாவசம் சீவன் முத்தி
பவுரிச பக்தியொடு தவறுமனு மானமிலா
பரமார்த்த சீவன் முத்தி
சிறியதொடு பெரிதற்ற வரியபத மநுபூதி
சித்தியே சீவன் முத்தி
சிதானந்த பூர்த்தியிற் சதானந்த வைக்யம்
சிவசொரூப பாமுத் தியே
துரியாதி தத்தன்மை நிருபாதி கமோக்ஷஞ்
சுயவலிபு லாமீ மெனுஞ்
சுத்தம்வி லட்சண முத்தமச லட்சணம்
சுலட்சணஞ் சுயஞ்சோ தியே. (சா)

அந்தத் துவமயக் கெந்தத் தொழிலுமற்
றறிவுரு சீவன் முத்தி
அறிந்திடு மறிவொடு நிறைந்தசாந் தந்தனி
லதிகாச சீவன் முத்தி
பந்தத் திரயமெனும் புந்திமலி னநினைவு
பண்படச் சீவன் முத்தி
பக்குவ மனுபவந் துக்கமறு மாரூடம்
பாவெளி சீவன் முத்தி
சிந்தித்து செய்தொழில் வந்தனை மறந்தது
தீர்த்தமே சீவன் முத்தி
சிதறும னப்போக பதவியு தவியெண்ணு
தீட்சண்யம் பாமுத் தியே

சுந்தரசொ ரூபமது தந்திரம் விடுபடுதல்
சுயவவிபு லாமீ மெனுஞ்
சுத்தம்வி லட்சண முத்தம்ச லட்சணம்
சுலட்சணஞ் சுயஞ்சோ தியே. (எ)

சித்தொடு விலாயத்து புத்திமலி னம்ஜால
சிந்தனை பதவி முத்தி
சீவபே தத்தொடு பாவபுண் ணியமெனுந்
திரிசியம் பதவி முத்தி
யெத்தொழி லெக்கிரியை பத்தியோ கங்களு
மெல்லாம் பதவி முத்தி
யெண்ணியே குருவுரு தன்னைத்தி யானஞ்செய்
யில்லறம் பதவி முத்தி
வெற்றிகொ ளிசுமசுமா சித்திபெறத் தியானஞ்செய்
விருப்பம் பதவி முத்தி
வேடிக்கை நாடகம் வாடிக்கை வழக்கமே
விடுபடல் சீவன் முத்தி
சுத்திபுட மிட்டெலா மற்றுவிட சாக்ஷிதான்
சுயவவிபு லாமீ மெனுஞ்
சுத்தம்வி லட்சண முத்தம்ச லட்சணம்
சுலட்சணஞ் சுயஞ்சோ தியே. (அ)

எதுசெய்து மென்னபலன் மதவாத மத்தனையு
மெண்ணமே பதவி முத்தி
யில்லறம் விட்டகல நல்லறந் துறவென்றே
யேகுவது பதவி முத்தி
சதுமா மறையுறை பொதுவிதி யுணர்ந்திடார்
தடமெலாம் பதவி முத்தி
சாதுசங் கம்பெறூர் வாதுகதை சாஸ்திர
தர்க்கங்கள் பதவி முத்தி
புதுமதம் பிரசித்த மதனுற்செய் தவமெலாம்
புதினங்கள் பதவி முத்தி
புலன்பொறி நிரோதமாய்க் கலனமறத் தற்சாக்ஷி
பூரணகே வலமுத் தியே

துதியிக மொன்றுமிலா அதிகாச மானந்த
சுயவலிபு லாமீ மெனுஞ்
சுத்தம்வி லட்சண முத்தம்ச லட்சணம்
சுலட்சணஞ் சுயஞ்சோ தியே. (சு)

கோசதிரை யைநசித் தாசையெலா மற்றிடக்
கோதறு விதேக முத்தி
குவிர்ருஹி மினம்ரிரப் பியெனு மனமேவற்
குவிந்திட விதேக முத்தி
பூசைபூ சாரியெனும் நேசவிசு வாசதிரி
புடியற விதேக முத்தி
புண்ணிய பாவமெனு நண்ணிய முத்தேகமலப்
புகழற விதேக முத்தி
தேசவ ழுக்கங்கள் பேசும்ப ழுக்கங்கள்
தேய்ந்திட விதேக முத்தி
தேகம்ந சிப்பதுவோ யேகவியா பகமவுனத்
திருவருள் பாமுத் தியே
தூஷணைக ளொன்றுமிலே வாசனு க்ஷயந்தானே
சுயவலிபு லாமீ மெனுஞ்
சுத்தம்வி லட்சண முத்தம்ச லட்சணம்
சுலட்சணஞ் சுயஞ்சோ தியே. (எ)

எட்டாவது சுலட்சணப் பதிக முற்றிற்று.

---

ஒன்பதாவது

## மனோலயப் பதிகம்.

தாத்தெனுங் கூடஸ்த பூர்த்தியசு ராறிலோ
தகுமாகு மன்வா றிலோ
தனித்திடு சமாவிலோ வினித்த தபிஅத்திலோ
தாபர முனைதன் னிலோ
யேற்றஅசு மாவிலோ தோற்றும்கவ் வாசிலோ
யேகவிபு சூநியத் திலோ
யேகாந்த நிர்க்குண மோகாந்த மிலாத்திலோ
எழிலாம்ஸ்வ ரூபத் திலோ

நேத்திரங் காணனுச் சூத்திர திருக்கிலோ
நேமித்ததெ லாம்பொய் யதே
நெஞ்சந் துடிப்பதும் பஞ்சாய்ப் பறப்பதும்
நிச்சயமி லாத்துச் சமே
மாற்றதிக புத்தியின் வேற்றுமைக ளற்றிட
வானவெளி ஞான வழியே
வையக மயக்கமிலா துய்யமெய் யறிவுரு
மனோலயந் திருக்காட் சியே. (க)

சத்திய சிரத்தையே நித்திய விவேகமே
சன்மார்க்கம் நன்மார்க் கமே
சமயப்பி ராந்திகள் சுமையவிழ்த் தேகிட
சங்கோச விகாச மில்லை
புத்தியுக் திகொடு யெத்தொழி னினைப்பொடு
புகழிக ழேது மின்றி
புன்னிலைக் காளாகி முன்னியற் றியபல
புதுமத வாதனை யினைற்
சுத்திகை வெள்ளியென சித்தம ருண்டிடாச்
சுருதியனு போக முக்தி
சுபகரும வாசனை யபக்குவ நிந்தைபோய்ச்
சும்மா யிருக்க சுகமே
வத்துநிச் சயந்தானே யெத்தொழிலு மற்றதே
மனங்குவிய பேத மிலையே
வையக மயக்கமில் துய்யமெய் யறிவுரு
மனோலயந் திருக்காட் சியே. (உ)

அல்லில்ம லதுன்னி நல்விதய சாந்தியி
லாவரண மாயை யற்றே
யறிவா லறிந்துநன் னெறியாய் நிறைந்தேக
வஞ்ஞான நியாய மற்றே
சொல்லாச் சுகச்சொருப சல்லாப திட்சண்ய
சோபான திரைக டந்தே
சோதித்து ணர்விழி சாதித்த போதத்தே
சொற்பொருட் பேத மற்று

யெல்லா மறந்துண்மை துல்லிப விளக்கத்தே
யேகதத் துவவி சார
மெச்சமய விச்சையுந் துச்சமரு ளில்லாம
லிருப்பது சுத்த சுகமே
மல்லாடு மிருவினை யெல்லைவிட் டேகாந்த
மனங்குவிய பந்த மிலையே
வையக மயக்கமிலா துய்யமெய் யறிவுரு
மனோலயந் திருக்காட் சியே. (௩)

புத்தகக்கித் தாபுகதை யெத்தகைய நூற்களும்
புறம்பான சகுண வித்தை
புலவர்கள் சொன்னதே நிலவர மொன் றுமிலை
புலன்பொறிக் கடிமை யாத
லெத்தகையும் பொய்க்கதை யத்தனையும் விட்டிட
யெஞ்சுவ தறிவொன் றுமே
யெண்ணிய மனமில்லை வண்ணங்கு றிப்பில்லை
யிங்கங்கென் றுன்ன வில்லை
சுத்தனே யத்தன்மை புத்தியு ணர்ந்தநிலை
சுபயோக சுபதி னந்தான்
சுருதியும் விளங்கிட வுறுதிமகா வாக்கியஞ்
சுளுவறிய சுத்த சுகமே
வற்றுப்பெ ருங்கருணை நித்தியமெ தார்த்தநிலை
மனமலின மென்ப திலையே
வையக மயக்கமிலா துய்யமெய் யறிவுரு
மனோலயந் திருக்காட் சியே. (௪)

கல்லா மனக்குரங் கெல்லைவிட் டலையாது
கருத்திற் றிருத்தி மெள்ள
கம்பன மிலாமலே யின்பரச மாக்கிடக்
காதல்க ளொன் று மில்லை
சொல்லாச் சுயஞ்சோதி யுல்லாச மனவெளி
சோதிக்க மாற்ற திகமே
சொச்சொருப கூடஸ்த மச்சஞ்ச லிப்பில்லை
சோம்வெளி யான போது

பல்லாயி ரங்கோடி யெல்லாம்நி றைந்தவருள்
பரிபூர ணனந் தமே
பகலிர வறுந்திவிய வகமுகத் தெளிவிலே
பழகிடச் சுத்த சுகமே
வல்லாமை நிராசையே யல்லாது வேறில்லை
வாசனைக ளேதுவு மிலையே
வையக மயக்கமிலா துய்யமெய் யறிவுரு
மனோலயந் திருக்காட் சியே. (௫)

பஞ்சபூ தப்பேயு மிஞ்சிய பலதொல்லை
பலவாய்ப் பிறந்து நினைவு
பண்படா நாய்போலக் கண்மூடிக் கூவியே
பாசாங்கு தேச நெறியே
நஞ்சான காமநா லஞ்சாம லேகற்று
நானுவி தங்க ளோதி
நாகரீ கம்மென் றனுகரீ கத்திலே
நவிலுமுப தேச மந்திர
மிஞ்சிஜக வாசனை சஞ்சலகு ரங்காட்ட
மித்தையை மெத்த நம்பும்
மிடிமைத் தனமெனு மடிமைத்த னம்விட
விடயமிலை சுத்த சுகமே
வஞ்சக மனக்குரங் கஞ்சியே வயக்கிட
மாயையது பேத மிலையே
வையக மயக்கமிலா துய்யமெய் யறிவுரு
மனோலயந் திருக்காட் சியே. (௬)

பதவிசு வர்க்கங்கேட் டுதவிமிகத் தேடிடும்
பந்தக ரெல்லை நீந்தி
பாவபுண் ணியமெனு மேவன்னி ஷேதமதம்
பக்குவத் தாலு ணர்ந்து
விதவித மோதிடுந் துதிபல விலாமலே
வேடமிட் டலைவ தற்று
விலட்சண விளக்கத் தலட்சியமொன் றில்லாது
விருத்திஞா னந்தெ ளிந்து

உதவிமிக நாடியே பதவிசுகந் தேடிடு
முபாசனைக ளற்ற சித்த
முற்பத்தி நாசமே சற்புத்தி சாதன
முண்மையது சுத்த சுகமே
மதவாத பேதமற விதவிவித மேதுமில்லை
மனமமைதி துக்க மில்லையே
வையக மயக்கமிலா துய்யமெய் யறிவுரு
மனோலயந் திருக்காட் சியே. (எ)

கோனென்ற ஜின்களின் சானென்ற மாக்களுங்
குவலயக் கவலை யின்றிக்
குதிகொளு மறிவதை விதியெனத் தன்னிலே
குறையா தறிந்த தறிவே
நானென்ற மமதையு நீயென்ற துவிதமு
நழுவியெஞ் ஞான்று மெய்யின்
நனவிநற் றுரியசுக மனலயித் தர்ப்பண
நடுவான சாக்ஷி மயமா
யூனென்ற விடயசுக மீனந்த டிப்பகல
வுபமேய தீட்சண் யமா
யுட்புறம் பொன்றாகி யெப்பிராக் குமிலா
துள்ளது சுத்த சுகமே
வானென்ற மனவெளி தானென்ற வறிவிலே
மனசாந்த மலின மில்லையே
வையக மயக்கமிலா துய்யமெய் யறிவுரு
மனோலயத் திருக்காட் சியே. (அ)

உன்னுமு பாதிதிரை வின்னபின் னங்களற
உட்பகை முளைப்ப தில்லை
உலகத் திரிசியக் கலகம் மறந்தமைய
உபாசனைக ளன்ய மில்லை
தன்னுள மயக்கறுத் துன்னுவ தடங்கிட
தாதமார்க் கங்க ளில்லை
தத்திக் குதித்திடும் பித்தமன மொத்திட
தனுவாதி பிரமை யில்லை

யென்னைநா னென்றிடப் பின்னைவே றுண்டுகொ
. ளிருவகையு மற்றொ ழிந்தே
யென்னுணை சாக்ஷியது தன்னாலே யறிந்தநிலை
யேகாந்த சுத்த சுகமே
மன்னுயிர்க் காருயிர் தன்னுயிரென் றெண்ணுவது
மருமமிது கரும மிலையே
வையக மயக்கமிலாத் துய்யமெய் யறிவுரு
மனோலயத் திருக்காட் சியே. (சு)

சேதன விருத்தியிற் சாதனை விவேகமே
சேடமாய் நின்ற தறிவே
செப்பா தகம்புறந் தப்பா தருள்மயஞ்
செம்பொனுல கம்பத மையே
பூதன வேடணையைக் காதலொ டகங்கொளாப்
புறப்பற் றகப்பற் றற
புத்திவி சாரத்தே சித்தமசை யாமலே
பூண்பதே பேத ரகிதம்
சாதனம் விளங்கிமன சோதனையி லொன்றாகி
தர்ப்பணத் தர்ப்ப ணத்தே
தடையற்ற வானந்த மிடையற்ற வத்துவித
தற்சொருப சுத்த சுகமே
மாதவ மனோரதம் வேதனைக ளற்றிட
வானவெளி தானு மிலையே
வையக மயக்கமிலாத் துய்யமெய் யறிவுரு
மனோலயத் திருக்காட் சியே. (எ)

ஒன்பதாவது மனோலயப்பதிக முற்றிற்று

---

பத்தாவது

## ஹம்ந்துப் பதிகம்.

---

கருவுரு கதிருரு மருவுரு மலருரு
கருணைகா ருண்ய முருவே
ககனுரு புகழுரு சுகநிலையி லகமுரு
கலக்கற்ற திங்க ளுருவே

திருவுரு வறிவுரு தெருளுரு வருளுரு
திருக்குரு மனக்க ணுருவே
சித்துரு பதத்துரு முத்துரிய மற்றுரு
சிவசொருப சாக்ஷி யுருவே

உருவுரு வுணருரு வரமுரு வன்புரு
உயருரு தியான முருவே
உன்னுரு தன்னுரு மன்னுயிர்க் காருயி
ருண்மைநிர் ரூப நிறைவே

யருவுரு வகண்டித மொருவுருவு மில்லையே
யாரைப் புகழ்வ திங்கே
யற்றநிலை சுத்தபர முத்திமன சித்தசுகம்
அல்ஹம்ந்து லில்லா ஹியே (க)

குறையா தகம்வெளி மறையாத் திருவுரு
குன்று தறிவு மார்க்கங்
குணிகுண முணர்விலேத் துணிவுபர மானந்தங்
குவிந்தம னந்தன் னிலே

நிறைபூ ரணத்தின்பம் பொறையறிவு தெளிவிலே
நிற்குணத் திட்சை தானே
நீங்கா வியாபகம் பாங்கான தறிவுரு
நிச்சயஞ் சாக்ஷி யன்றே

மறைவழித் தேறியே திரையறுத் தொருமையில்
மந்தரா பந்த மற்று
மாசற்ற காட்சிதான் நேசத் துருவநிலை
மன்னுயிர்க் குயிரா னதே

மறையவொண் ணுதேக முறைமனச் சாந்தமே
  யாரைப் புகழ்வ திங்கே
யற்றநிலே சுத்தபர முத்திமன சித்திசுகம்
  அல்ஹம்ந்து லில்லா ஹியே (உ)

எட்டெட்டு வான்கலே கட்டிடுவ தோகமன
  மிடைபின் சுழினே யென்று
மெட்டுநா லுமதித் திட்டமிது நிட்டையென
  யேற்றிறக் கங்கள் செய்து
நட்டநடு வணேமீது கட்டமுகு வாலேயென
  நடனமிடுந் தாசி யென்றும்
நாடித்தி யானமே தேடியோ கஞ்செய்து
  நம்பியே மனம விந்து
தொட்டகுறை விட்டகுறை நெட்டைகட் டையுமெனச்
  சொல்லுவதெ லாந்துவி தமே
தொல்லேமன வாதனேக ளெல்லா மறிந்திடத்
  தொந்தங் கடந்த பரமே
யட்டங்க யோகமெலாம் விட்டமன தமைதியி
  லாரைப் புகழ்வ திங்கே
யற்றநிலே சுத்தபர முத்திமன சித்திசுகம்
  அல்ஹம்ந்து லில்லா ஹியே. (ங)

புத்தியதி காரியா மெத்தொழிலு மற்றிடம்
  புவனபோக கம்ம றந்து
புன்மனக் கற்பிதத் துன்மதி யவித்தையின்
  புகழிகழ்ப் பற்ற றுத்து
சித்திசெய் மந்திரப் புத்தகக் கதையெலாஞ்
  சித்தத்தி லாதொ ழித்து
சிற்றின்ப நோயுறும் புத்திம யக்கத்தின்
  திரிசியத் தோற்ற மற்று
நித்திய சுலட்சண சத்தியநிர் வாணநிலே
  நிர்ணயத் தகம கிழ்ந்து
நிர்மலா னந்தநிலே கர்மோபா சனேகளிலே
  நீங்காச் சுபாவ முண்மை

யத்தியா ரோபதிரை முத்தேக நீங்கிட
வாரைப் புகழ்வ திங்கே
யற்றநிலை சுத்தபர முத்திமன சித்திசுகம்
அல்ஹம்ந்து லில்லா ஹியே (ச)

சொல்லிடு மிந்திரிய வல்லமைத் தோற்றமே
சோதனை மனப்பி ராந்தி
சொல்மாத் திரமான கல்விகளைக் கற்றதாற்
சோரம்வி ளங்க வில்லை
யொல்லையிற் பிரபஞ்சத் தொல்லையனு மானமே
யுபாசனைகள் மனநி னைவே
யொழிந்தமனந் தெளிவிலே யழிந்தது தற்போத
மொய்யார காரண மைதி
துல்லிபந் தாஷ்டாந்தம் வெல்லுமறி வுநெறி
தொடர்வினை யொழிக்கு நீதி
துக்கசுக மற்றிட முக்கியா னந்தபதந்
தூண்டாவி ளக்குண் மையே
யல்லலறு முபதேசம் வல்லரசு தானாகி
லாரைப் புகழ்வ திங்கே
யற்றநிலை சுத்தபர முத்திமன சித்திசுகம்
அல்ஹம்ந்து லில்லா ஹியே. (ரு)

தன்னில்வே றில்லாத நிண்ணயஞ் சாக்ஷியாய்
தடைஞானப் பகையு மற்றே
ததாகார வெளியொளி சிதாகாய மனமதிற்
றத்துவா தீத நிலையே
உன்னிய பலபோதம் நன்னிலைமை தவறிய
உத்தேச சாஸ்தி ரங்கள்
உபயோக மற்றதே அபசெய மானதெலா
முய்யவழி கண்ட போது
யென்னசொல் வோமன துன்னல்வி லாசமே
யியக்கமற் றைக்யம் பெற
யின்றுநா ளையுமில்லை யென்றுமுள் ளதுமொன்றே
யெங்கெங்கும் பொதுவுண் மையே

யந்நியத் திரிசியத் தின்னலில் லாதேக
வாரைப் புகழ்வ திங்கே
யற்றநிலை சுத்தபா முத்திமன சித்திசுகம்
அல்ஹம்ந்து லில்லா ஹியே. (௬)

காரிரு ளஞ்ஞானம் வேறுத் துபமான
கதைகாவி யம்ம றந்து
கந்தர்ப்ப நகர்சுவனம் புந்தியி னூடாது
காரிய மெனத்த டுத்து
பாரிருட் பேராவல் நாரிய ருறவெலாம்
பற்றற் றகந்து றந்து
பலவர்ண நிட்டையின் னிலவொளி தெரிவதெனும்
பாசஞா னம்ந சித்து
பேரருள் மெய்ஞ்ஞான சீரரு ளவகாசம்
பெற்றுநற் சித்தத் திலே
பேதாகி தந்தனிற் காதல்பல வும்மற
பேரின்பந் தானுண் மையே
யாரிருந் தாவதென நேரறிவு சற்குரு
வாரைப் புகழ்வ திங்கே
யற்றநிலை சுத்தபா முத்திமன சித்திசுகம்
அல்ஹம்ந்து லில்லா ஹியே. (எ)

தஞ்சம்வே றுண்டென்றே யஞ்சிப் பணிந்துநெறி
சாதனம் விளங்கா மலே
தத்தளித் துலகாசை மெத்தவு மனதெண்ணி
சமுசாரி யாவ தென்னே
சஞ்சலத் திரிபுடி நெஞ்சந் திருந்திடிற்
சங்கற்ப விகற்ப மாயை
சாத்தான்ஜின் பேய்பூத மாத்தானுண் டெண்ணமுஞ்
சாதிமத வாத மன்றோ
கஞ்சா வயின்லகிரி மிஞ்சிய பிராந்தியர்
கனவன்றோ புவன போகங்
காட்சிகண் டேனென்பர் சூக்ஷமறி யாமலே
காணவே றிலையுண் மையே

யஞ்சா தகம்புறம் நெஞ்சாற வன்புற
வாரைப் புகழ்வ திங்கே
யற்றநிலே சுத்தபர முத்திமன சித்திசுகம்
அல்ஹம்ந்து லில்லா ஹியே. (அ)

சாதிமத பேதமோ டோதுபல சாஸ்திரம்
சாதுசங் கத்தி லில்லே
சம்பூ ரணத்தின்பம் பிம்பசா யையில்லே
சாதிரிசி யங்க ளில்லே
பூதிய மறந்தேக நீதிவழு வாமலே
புத்தியி னுக்தி யோடு
புறப்பிறப் பின்றிய சிறப்பருள்மெய்ஞ் ஞானமே
பூரணு னந்த மான
வீதியினி ஜானந்த போதநி தார்த்தமே
விசாரணேயல் லாதில் லேயே
வியாபக விளக்கமே நியாயமறி வாத்துமா
விவர்த்தங் கடந்த துண்மை
யாதிநடு வந்தமிலா சோதிஞா னத்தீட்சை
யாரைப் புகழ்வ திங்கே
யற்றநிலே சுத்தபர முத்திமன சித்திசுகம்
அல்ஹம்ந்து லில்லா ஹியே. (கூ)

ககனு விந்தமே ஜெகஜால வித்தையே
ககனவுரு கயிற்ற ராவே
கானனீ ரிப்பியிற் ரேறுமின் வெள்ளியே
கனவதிற் கண்ட மதியே
உகமையின் மலடிபெறு சுகமான மைந்தனே
யுவர்க்கடன் நீர்க்கு மிழியே
யுற்றதறி மனிதனே நிற்றமா யானேயே
யுலகவள மித்தகை யெலாம்
ஜெகமயக் கல்லவோ வகந்தெளிந் துவமைகள்
சேதித்தெ லாங்க டந்தே
சேதனவி ளக்கமொடு சாதனே மனநாசஞ்
செயவறிவு தானுண் மையே

யகமீதி லேதுமிலா மகிமைநிர் வாணமுற
வாரைப் புகழ்வ திங்கே
யற்றநிலை சுத்தபா முத்திமன சித்திசுகம்
அல்ஹம்ந்து லில்லா ஹியே. (௰)

பத்தாவது ஹம்ந்துப்பதிகம் முற்றிற்று.

மோக்ஷசதகம் 101 முற்றிற்று

ஆ செய்யுள் ௬-க்கு திருவிருத்தம் உ௱அ௮

---

பிஸ்மில்லாஹி

மூன்றுவது

## காரண சதகம் 101

---

முதலாவது

### சித்தசுகப் பதிகம்

---

இரட்டை ஆசிரிய விருத்தம்

நினைவும றப்பொடு கனவின் விலாசங்க
ணீங்கிடச் சோதி ஞானம்
நிசிபகலு மின்றிய வசிபதத் தீட்சையே
நிர்விகற் பத்த தீதம்
மனைமண்டு மக்கள்கிளை தனைவெறுத் திகபர
மந்ததர மற்ற கன்றே
மனநசித் தேகாச தனியாச சுவாமதி
மற்றென்று முன்னு துளம்
வினையாகு மூலகரடை சனியன் மறந்திட
விவேகபூ ரணவி ளக்கம்
விண்டபல மந்திரந் தொண்டனுண் டானெனும்
விபரீத பந்த மிலையே
தனையன்றி வேறென்ற முனையைத் தறித்திடத்
தடையற்ற வானந் தமே
சத்துசித் தானந்த சுத்தபரி பூரணந்
தனதான சித்த சுகமே. (க)

என்னைத்தா னென்னிலே சென்னிய மிலாமலே
யேகதத் துவத்தோ டுக்கி
யிச்சைவி ராகமொடு பட்சம் பகிர்முக
மில்லாத தெளிவு ளத்தே

யுன்னலே வயக்கியே முன்னிலைமை தானுக்கி
யுசுவாச நிசுவா சமற்
றுலையாது சலியாது நிலையாகு மனவெளி
யுள்ளது தானு கியே

நன்னிலைமை யுற்றநிலை நின்றுலவு மறிவுரு
நடுவான பூர ணத்தே
நானுவி தங்களெலாந் தானு யொழிந்திட
நாதாந்த வெட்ட வெளியே

தன்னிலைமை தானன சின்மய விலாசமே
தடையற்ற வானந் தமே
சத்துசித் தானந்த சுத்தபரி பூரணந்
தனதான சித்த சுகமே. (உ)

வதெனை யிழந்திடச் சோதனைக் கன்புரு
வேகாந்த வெட்ட வெளியே
யெல்லா மறந்திடத் தெல்லாந் திருவரு
ளெல்லா மபேத வாத்மா

வாதனைமு வாசனைப் போதனைமு வேடணை
வரையறத் திரைக ளுசம்
வந்தியா மைந்தனைச் சந்திக்க நிஷ்டைசெய்
மார்க்கம் மிழந்த நுட்பம்

வேதன முணர்விலே காதலனந் தங்கெடும்
வெட்டவெளி சுட்ட றிந்து
வேத்திய முத்துரிய தோத்திரம் விட்டகல
வேதாந்த மெத்த நலமே

சாதனை சுபாவகுண மாதவம் நிர்வாணந்
தடையற்ற வானந் தமே
சத்துசித் தானந்த சுத்தபரி பூரணந்
தனதான சித்த சுகமே. (௩)

வஞ்சக மனக்குரங் கெஞ்சிபல வெண்ணியே
• மறையோதி மனன மிட்டு
வையகத் தாசையின் சையோக போரவல்
மந்திர மோதல் கோடி

நெஞ்சஞ் சலிப்பதும் பஞ்சாய்த் துடித்துவெகு
நேரங்க ணிட்டை செய்து
நினைப்பது மறப்பதுந் தனைத்தெரிவ தென்பதும்
நில்லாத துக்க மயமே

கொஞ்சலுங் கெஞ்சலு மிஞ்சலுந் துஞ்சலுங்
குருவையறி யாத குறையே
கோரமஞ் ஞானதிரை பாரத்தொ லைந்திடக்
குறைகூற வேத முண்டோ

சஞ்சல மிலாதேக மெஞ்சிய வறிவறிய
தடையற்ற வானந் தமே
சத்துசித் தானந்த சுத்தபரி பூரணந்
தனதான சித்த சுகமே. (௪)

கற்றதெல் லாமறந் தெத்தொழிலு மின்றியே
கருதுவ தெலா மிழந்து
கண்டதுங் கேட்டது முண்டதும் விண்டதுங்
காமப்பி ராந்தி யன்றோ

பற்றற்ற சுத்தமோ டசுத்தமு மின்றியே
பாழாகி முத்துரி யமேற்
பகலொடு மிரவின்றி யிகமொடும் புகழான
பாசநா சந்தன் னிலே

வெற்றிபே ரின்பமொடு சிற்றின்ப மற்றநெறி
வித்தையா னந்த முற்று
வேறொன்று மெண்ணாது நேரொன்று முரையாத
வேதாந்த மத்ய நிலையே

சற்றேனு மயாராத முத்தியப ரோக்ஷமுந்
தடையற்ற வானந் தமே
சத்துசித் தானந்த சுத்தபரி பூரணந்
தனதான சித்த சுகமே. (ரு)

17

அந்திபக லலறியே மந்திரங் கிரியாதி
யர்ச்சனைகள் தற்போ தமே
யந்தகா ரத்திரை புந்திமலி னத்தேட்ட
மறிவையுண ராத மந்த

மெந்தவித முய்வதோ சந்தைகூட் டம்பந்தி
யெண்ணுவது மணியு ருட்டி
பெத்தனையோ வாயிரஞ் சுத்தித் தொலைப்பது
மிடையிலே ராகம் கவி

தொந்திகு லுங்கவே குந்தியெழுந் துதிக்கிர்
சொல்வதுவு மெந்த மார்க்கஞ்
சோரகுரு வழியிவை பாரவா ரத்திரயஞ்
சொன்னலு முணர்வ தில்லையோ

தந்திரவி வர்த்தங்கள் மந்தமதி விட்டகல
தடையற்ற வானந் தமே
சத்துசித் தானந்த சுத்தபரி பூரணந்
தனதான சித்த சுகமே. (௬)

எத்தனை விதங்கல்வி கற்றென்ன கேட்டென்ன
வினையற் றுணர்ந்த தில்லை
யேதேது செய்வதென வேதமிக வோதியே
யெண்ணம நித்ய விச்சை

கத்தனைத் தேடியே சத்தமிட் டலறிடுங்
கற்பித நாம மந்திரங்
கருதும் நினைவுபோற் பொருதுங் கனவதைக்
கண்டதே காட்சி யென்பர்

மெத்தப் பிதற்றிடுஞ் சித்துவி லாயத்தின்
வேடிக்கை தனைநம் பியே
மெய்ஞ்ஞான மில்லாத வஞ்ஞானத் திரயமே
வெறுத்திடத் துரிய பரமே

சத்தமிட் டலறிடும் பெத்தர்வழி விட்டேகத்
தடையற்ற வானந் தமே
சத்துசித் தானந்த சுத்தபரி பூரணந்
தனதான சித்த சுகமே. (௭)

வருவதும் போவதும் பெறுவதுந் தருவதென
வந்தமை பந்த பாசம்
மறைபுறுக் கானுரை நெறிதெரி யார்மனம்
வன்னர கேகும் வாசல்
நிருவிகா ரத்தொடுந் திருவருள் விளங்கிடார்
நிரயத் தழுந்து வோர்கள்
நிதார்த்தமொடு தர்ப்பண பதார்த்தந் தெளிந்திடார்
நெஞ்சமே வானர மனே
யருவுரு வென்பதிலா குருவுரு வறிந்திடா
ரகந்தானே தீய நரக
மற்றநிலை சித்திபெற வெத்தவமு மொத்தகதி
யானந்த நிர்த்த மதியே
சருவமய சாக்ஷியே திரவியம் லயித்திடத்
தடையற்ற வானந் தமே
சத்துசித் தானந்த சுத்தபரி பூரணந்
தனதான சித்த சுகமே. (அ)

வேதபா கியர்மொழித் தோதில்லை யாதனை
வேரோ டறுத்தொ ழித்து
வினையென்ற சமுசார மனதைத்தா னேவென்று
விசாதிசு சாதி யற்று
பூதபே தத்தொல்லை காதல்பல வற்றிடப்
பூர்வபக்ஷ மிங்கில் லையே
புத்தகக் கதைகளை மித்தையென மாற்றிடப்
புன்னெறிக் கடிமை யில்லை
பாதகந் தனையறியாப் பேதகமே தற்கொலை
பருவத் துணர்ந்த றிந்து
பகுத்துணரு மேனிலை ஜகத்திரய மவிவேகம்
பாழாக்கி விட்ட தெளிவே
சாதக மெய்யறிவு மாதவமாத் துமஞானந்
தடையற்ற வானந் தமே
சத்துசித் தானந்த சுத்தபரி பூரணந்
தனதான சித்த சுகமே. (கூ)

விதவிதம் பாடியே பதவிகண் ணாடிமன
வியாபார மெத்த வதிகம்
விதிநிஷே தம்மென்பர் சதிமான மொழிவதிலை
விசலனம் பிரவிர்த் தியே

நிதநிதம் மன்றாடி யுதவிபுரி யத்தேடி
நினைவுரீ யத்த திகமே
நிபந்தன நிராசார செபந்துதி கணக்கில்லை
நிரைநிரை மந்திர மோதல்

யிதமித மெனக்கூவி மதமத மெனத்தாவி
யிச்சைகட் கடிமை யாகி
யிடைவது மடமையே கடமைக ளென்பதெலா
மிழந்திடத் தொல்லை யில்லை

சதஞ்சத மென்பதெது வதுவா யதுவறிய
தடையற்ற வானந் தமே
சத்துசித் தானந்த சுத்தபரி பூரணந்
தனதான சித்த சுகமே. (௰)

முதலாவது சித்த சுகப்பதிக முற்றிற்று.

---

இரண்டாவது

## ஆட்சிப் பதிகம்.

---

வேறு

ஆதி யந்தங் கடந்த வகண்டிதா
கார விர்த்தி யபார வசலமே
வருளு ருசிதா காயம் பெருவெளி
யற்பு தங்கரு ணாகர நித்தியம்

பேதி யாச்சி தானந்த மகமியம்
பேசொ ணாச்ச தானந்த விளக்கமே
பேரின் பந்ததா காரந் துலக்கமே
பேரிருள் முற்று மற்றவ மூக்கமே

யோதி யோதி யறியொணுக் காரண
• மொப்பு வமையில் லாததோர் பூரண
மோது நாம மநித்திய மந்திர
முற்ப வமனத் தற்போத வாசனை
சாதி யினபி மானப் பெருங்கதை
சழக்கொ ழிந்து சமசத் துணர்ந்திட
சாந்த முத்தி வியாபக நித்திய
சாட்சி தானந்த நிச்சய மாட்சியே. (௧)

சுத்த ஞான சொரூப நிதானமே
சுத்த சூநிய விலட்சணந் தன்னிலே
சூட்ச காரணந் தூலங்க டந்ததே
சூத தியச்சு காசுக மில்லையே
யத்துவா பத்தி சித்தந் தெளிந்ததி
லத்தி யாசமு மாரோப மில்லையே
யந்த காரத் திரைமறை வற்றிடு
மனுசந் தானம்வே றில்லை விசாரமே
புத்தி சஞ்சல மற்ற தெளிவிலே
பூர ணமது நினைவின் லயத்திலே
புத்தி கற்பித்த தொன்றுமங் கில்லையே
பூர்த்தி யானது காத்திரந் தானதே
சத்தி யமுமெ தார்ந்த மறிதலே
சாக்ஷி மாத்திரங் காட்சிவே றில்லையே
சாந்த முத்தி வியாபக நித்திய
சாட்சி தானந்த நிச்சய மாட்சியே. (௨)

உலக விச்சை மலைபோன் றுருவாகி
உற்ப வவினை கன்மமு லாய்ந்துள
முற்ப னத்தெளி வற்பமு மின்றியே
உபல க்ஷியத் தவம்பல வண்ணமே
கலக மாகும் சமுசாரக் கம்பத்திற்
கட்டுண்டு வாசா ஞானங்கள் பேசியே
காம நோய்தலைக் கேறி மயங்கியே
கருத்து வேறுசொல் வேருய்ப் பிதற்றியே

விலக லேவ லுண்டென்ற தல்லாது
விர்த்தாந் தம்பல கற்பித வாதனை
விடய ஞானக் குருவுரை நம்பியே
விடய போதந் திரிசியம் விட்டேகி
தலைமை ஞானம் விளக்கந் தெளிந்திட
தன்னை யன்றிவே றுள்ளதொன் றில்லையே
சாந்த முத்தி வியாபக நித்திய
சாட்சி தானந்த நிச்சய மாட்சியே. (௩)

வான முற்ற வெளிதான் விளக்கமே
மனவெ ளியது தானே துலக்கமே
மனம வினங்கி யாமத் தமளிகள்
மவுன னந்தந்தி ருவிக்காக் காட்சியே
ஞான மற்று ருரைத்த மநுஷறு
நாள்தான் வேறுண் டென்றுநம் பித்தமில்
ஞமலி யானது மாணத் தவஸ்தையே
நாட்டிற் சொல்வதிங் கேட்டுச்சு ரைக்காயே
ஈன மற்ற மெய் யாத்தும ஞானத்தி
விருமை யந்நிய மென்பதொன் றில்லையே
யிந்தி ரியக ரணமி யக்கமற்
றிருப்பதே துஞ்சு முன்றுஞ்சு நிர்வாணம்
தான மற்ற நிதான மவகாசந்
தன்னை யன்றிவே றில்லாச் சுகத்திலே
சாந்த முத்தி வியாபக நித்திய
சாட்சி தானந்த நிச்சய மாட்சியே. (௪)

தன்னி லேதனைத் தானே யுணர்ந்திடத்
தாத மார்க்கத் திரைவரம் பில்லையே
தத்து வங்கள் விளங்கிடத் தத்துவந்
தானாய் நின்ற வதிதம்நி ராசையே
உன்னி யபிர விர்த்திநி வர்த்தியே
யுண்மை யாகும் வியாபகத் தன்மையே
உறவாய் நின்ற திரிபுடி மாறிட
உன்னு மெண்ணம் பிறவா தொடுங்கிடு

மங்கி யமிலா வெல்லாமொன் றுருயி
ரமைதி யானது மனமறு சுல்லாவே
யறிபொ ருளெலா மறிந்தது சாக்ஷியே
ஆனந்தச் சுகந் தானந்த முத்திரை
சன்னி தானநி சசொரூ பந்தானே
சமய பேத மிலாத்திருக் காட்சியே
சாந்த முத்தி வியாபக நித்திய
சாட்சி தானந்த நிச்சய மாட்சியே. (ரு)

கால மூன்றுங் கடந்த வறிவிலே
கற்ப னைத்துவி தமத மில்லையே
கரும பாவனைத் தருமா தருமங்கள்
காரி யம்பேத திருஷ்டிக ளில்லையே
தூல தேகத்தை நானென்ற தற்போதந்
தொடர்வி னையறக் கொடியநி னைப்பிலை
துச்ச மாகிய நானுத் தவமிலை
தூக்க மாகிய பக்கத் திரையிலை
மூல வஞ்ஞானப் பாலங் கடந்திட
முப்பாழும் பாழாய் முடிந்த வெளியிலே
முன்ன டுபின் னில்லாத் தெளிவது
முத்தி யானது சித்தங் குவிதலே
தால மென்ற நினைப்பில்லா புத்தியிற்
சாக்ஷி மாத்திர மானப ரத்திலே
சாந்த முத்தி வியாபக நித்திய
சாட்சி தானந்த நிச்சய மாட்சியே (சு)

பஞ்ச பூத சிருஷ்டி யனைத்துயிர்
பாசி வஜெக மெல்லாந்தி ருஷ்டியே
பாவ புண்ணிய மின்னதென் றுய்வது
பஞ்ச மாத்திரைக் கெஞ்சிய மெய்ந்நெறி
கஞ்ச னம்போன் றுளந்தெளிந் துய்ந்திடக்
கர்த்தா போக்தா வகங்கார மோய்ந்திடுங்
கம்ப னமிலா வம்பக வீதியிற்
காட்சி யாகுமா ராய்ச்சியே தர்ப்பணம்

மிஞ்சி டப்பொருள் தானன்றி வேறில்லை
மித்தை மிஞ்சிடப் பழுதையிற் பாம்பதே
மிரித்தி யுவது மஞ்ஞான விருத்தியே
விருத்தி ஞானந் துலங்கிடச் சாக்ஷியே
சஞ்ச ல*பஞ் சத்தன்ல யித்தொத்தாற்
சாதன மனோ நாசந் தியானமே
சாந்த முத்தி வியாபக நித்தியம்
சாட்சி தானந்த நிச்சய மாட்சியே (எ)

வேத மும்பல சாஸ்திர மோதியே
வேடிக்கை ராக சங்கீதம் பாடலே
வேட மாறியே கையில் மணியெண்ணி
வேலை மெத்தப் பெண்மோக வியாபாரம்
போதம் வேறேவாய் மந்திர மோதுதல்
பொய்யின் சித்தமே கையிலே புத்தகம்
போலி ஞான சங்கற்ப விகற்பமே
போக விச்சையே விடயத் தியானமே
பேத மாயர்த்த வாதம் பழக்கமே
பேசுவ தெலாந் தர்க்கசந் தேகமே
பேரின் பம்மென்பர் சிற்றின்பங் காதலே
பேய்மத வாதம் நீங்கித் தெளிந்திட
சாத னையெது வெல்லா மறப்பதே
சம்பூ ரணந்தி ரிசிய மில்லையே
சாந்த முத்தி வியாபக நித்திய
சாட்சி தானந்த நிச்சய மாட்சியே. (அ)

நாம ரூபம நித்தியத் துக்கமே
நான பேத மதவாதத் தர்க்கமே
நம்பி யேதனைத் தானறி யாமலே
நாட்ட மெல்லாம னோத வாட்டமே
நேம தாபங்க ளேபா மீதிலே
நேர்ந்து காணிக்கை நீயத்துச் செய்வது
நேச மும்விசு வாசந் தடிப்புரு
நெறித வறிடு மந்நியம் மார்க்கமோ

* பஞ்சத்தன்-பஞ்சபூதம்.

காம ரூபந்தி ருட்டிம னப்பேதங்
கண்ணிற் கண்டது நிட்டையிற் காண்பதே
கருவி கள்கா ணுதில யித்திடக்
கருமோ பாசனை புரிவதென் றில்லையே

தாம தமந்தம் நீங்கிட வேதனந்
தற்சாக்ஷி தேக மூன்றுமே யர்ப்பணஞ்
சாந்த முத்திவி யாபக நித்தியஞ்
சாட்சி தானந்த நிச்சய மாட்சியே. (௬)

அகமி யமது தன்னை யறிவதே
யந்நியம் நாடல் தன்னைக்கெ டுப்பதே
யச்சம் வைப்பது சிற்றின்ப மொன்றிற்கே
யடிமை யாகுதல் மிடிமையின் மடமையே

மகிமை யானது சுயஞான சித்தியே
மார்க்க மென்பது மார்க்கும் பொதுநிலை
மவுன மென்பது நினைவை யொடுக்கலே
வணக்க மென்பது மெல்லாம் விடுத்ததே

சுகதுக் கமெனல் சுவர்க்க நரகமே
சோதித் தோர்க்கிவை வித்தைய வித்தையே
சூத றிந்திட வேற்றுமை யொன்றில்லை
சுத்த சூநிய மித்தனை யுமற்றே

சகள பேத திருட்டியொ ழிந்துண்மை
தன்னி லன்னிய மில்லா தறிந்திட
சாந்த முத்திவி யாபக நித்தியஞ்
சாட்சி தானந்த நிச்சய மாட்சியே. (௭)

இரண்டாவது ஆட்சிப்பதிக முற்றிற்று

முன்றுவது

## அமிர்தப்பதிகம்

---

### எண்சீர்க்கழி லெடிலடி யாசிரிய விருத்தம்

சுத்த ஞானஞ் சுகதுக்க மில்லையே
சுருதி யுக்தி யனுபோகத் தேர்ச்சியி
லத்தி யாரோப மந்தகா ரமிலா
தறிவதே பேத மற்றசு பாவிகஞ்
சித்த சஞ்சல மற்ற தெளிவிலே
சிந்தை சாந்த விதான வெளியிலே
பெற்ற பேறெது வந்நிய மில்லையே
பேரின் பக்கட லான வமிர்தமே (க)

வந்த தும்மி ருந்ததென் றோதிடும்
வாசா ஞான விரோதங்க ளோதியே
சொந்த மென்று மிரவலென் றஞ்ஞானச்
சோர துர்க்கதை காவியம் பாராது
புந்தி சற்று மயங்காம லாரணப்
பொருள றிந்து புகழிக ழின்றியே
பெந்த மாகும் விலங்கு தறிபடப்
பேரின் பக்கட லான வமிர்தமே. (உ)

வின்ன மாகுங் குடும்ப சமுசார
விலங் கவிழ்ந்து திரும்பாம லோடியே
தன்னை தன்னி லறியத் திருவுளந்
தானே யூட்டுங் குருமொழி யைக்கேட்டே
யந்நி யத்தோ டநித்தியம் நீற்றியே
யாத்தும ஞான சித்து விளங்கியே
பின்னி யமனப் பேயைத்தான் வென்றிடப்
பேரின் பக்கட லான வமிர்தமே (ங)

காணு வான்காட்சி காணப் படுவதுங்
கருது வானுங் கருதலு மின்றியே
பூணு வான்தரு வானென்ப தில்லாத
பூர ணமனத் திட்சண்ய மீட்சியே

ஆண வமல மாய்கைத் திரிசிய
மற்ற சுத்த வறிவுரு தன்னிலே
பேணு வானும் பிறப்பிறப் பற்றிடப்
பேரின் பக்கட லான வமிர்தமே. (௪)

பாத கத்தொழி லாகும்வி லாயத்துப்
பண்ணுங் கோட்டிகள் மந்திர சித்தியே
சூத கத்துடக் கன்றோமா யவித்தை
சுத்த ஞானிக் கிவையொன்று மில்லையே
மாத வஞ்செய் தோர்க்கிந்த புதினமேன்
மாய வாதிகள் பேயைப் புகழ்வரோ
பேத கமறத் தன்னையே தான் காணப்
பேரின் பக்கட லான வமிர்தமே (௫)

அறியக் கூடாதென் றறிந்த தறிவென்ற
வர்த்த வாதமா ரோபத் திரையுரை
நெறியின் றென்னவி ருத்திமெய்ஞ் ஞானத்தால்
நேதிசெய் தெலா மித்தையென் றோட்டியே
பொறிபு லன்கர ணம்விசா ரஞ்செய்யப்
புத்தி யுக்தி யுணர்ந்த வறிவிலே
பிறவி தற்போத கற்பித மில்லையே
பேரின் பக்கட லான வமிர்தமே. (௬)

கன்னி யராசை யில்லா மனத்திலே
காதல் யாவும் லயித்த திறத்தினு
லுன்னி யேவரும் பேய்க்குரங் கெண்ணத்தை
யுள்ள டைத்துப் பிறக்கா தொடுக்கியே
நன்னி லைமைது ரியவ றிவிலே
நாட்டந் தேட்டம்ந சித்தநி யானமே
பின்ன லற்றநிர் வாணநி ராசையிற்
பேரின் பக்கட லான வமிர்தமே. (௭)

வேதந் தானே யுதிக்கு மனவெளி
வேறெண் ணுது சுபாவநி லையிலே
போத மந்தகா ரத்திரை யின்றியே
பொய்யு டல்வெறுத் துய்யும றிவிலே

தாத மார்க்கத் திரைகடந் தானந்தந்
தன்னெ தார்த்தசொ ரூபம்வி ளங்கிட
பேத மென்பதொ ழிந்தச தானந்தம்
பேரின் பக்கட லான வமிர்தமே. (அ)

வாய்ச்ச மர்த்தது வாசாஞா னபித்தம்
வாசகை பேத வாதிகள் சொல்மதம்
நீச்சல் தானே யிறங்குந் துறையிலே
நிர்வி கற்பச மாதிபு லப்படா
மூச்சு யேத்திறக் கம்யோக மென்பது
முனைசு ழிநய னத்திடை யென்பதும்
பேச்சு மாத்திரஞ் சூத்திர மிங்கில்லை
பேரின் பக்கட லான வமிர்தமே (கூ

வணக்க மென்பது பற்றற்ற வானந்தம்
வாய்வா ளாதது மவுனம தல்லவே
யிணக்க மென்பது பொறிகா ணலய
மிச்சை யற்றிடச் சச்சிதா னந்தமே
குணக்க மென்பது சிறிதுமிங் கில்லையே
குருவும் சீட னு மறிவுபுத் தியேகம்
பிணக்க மென்பதொ ழிந்தசு யஞானப்
பேரின் பக்கட லான வமிர்தமே. (ய)

மூன்றாவது அமிர்தப்பதிக முற்றிற்று.

---

நான்காவது

## தடையறு பதிகம்

---

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

என்னையா னறிய விசாரணை தனிலே
யேகபூ ரணமனங் குவிய
மன்னிய பூதப் பிரளய மொடுங்க
வான்வெளித் தெளிவதாய் மனதி

னன்னிலே பழகி யுதிப்பதை வயக்கி
நனிமத வாதனை யிழந்தே
தன்னிலே தானு மெதார்த்த சொரூபந்
தடையற்ற வானந்த மறிவே. (௧)

மன்னுயிர் மோன முருவெளி தெளிந்தே
மகாகாயம் போலுளம் விளங்கப்
பன்னிய பூத பேதங்க ளின்றிப்
பக்குவத் தகம்புறந் துறந்து
உன்னிய போத முபாதிக ளொடுங்கி
யுபாசனை மூவாசனை லயித்த
சன்னிதி வேறொன் றில்லாத வுணர்ச்சி
தடையற்ற வானந்த மறிவே. (௨)

அருளுரு வகண்டா காரதர்ப் பணத்தே
யர்ச்சனை பூசனை யில்லை
தெருளுரு சாக்ஷாத் காரமே சுபாவந்
தேசோமய மறை வில்லை
பொருளுரு தனித்த சுயஞ்சோதி கமலம்
பொதுநிலை மனவெளி தனிலே
தருணமுன் பின்னென் றில்லாத விளக்கந்
தடையற்ற வானந்த மறிவே. (௩)

எண்ணமீ துபய நாமரூ பங்க
ளிணக்கிதற் பரன்றனைத் தொழுது
பண்ணிய கிரியை பாரினுக் கழகே
பவக்கடற் றுலைப்பதற் கில்லை
புண்ணிய பாவம் பதவிசு வர்க்கம்
புகுமெண்ணந் திரையறத் தெளிவாந்
தண்ணரு ளெதார்த்த சொருபமப ரோக்ஷந்
தடையற்ற வானந்த மறிவே. (௪)

இனித்திடுங் கன்ம காண்டகற் பனைக
ளிருவினைத் தொடர்பவப் பிணிப்பு
வநித்திய நினைப்பே யாபாசக் களிப்பா
மட்சர மந்திரத் தடிப்பு

செனித்துழல் வாதை சங்கற்பத் துழைப்பு
செகமயக் கிவைகள்விட் டகல
தனித்திடும் விமல சாக்ஷிமாத் திரமாந்
தடையற்ற வானந்த மறிவே. (௫)

ஆனந்த சுபாவ மாத்தும ஞான
மறிந்ததை யறிந்ததே யறிவு
மோனந்த மனதே சிதானந்தத் தீட்சை
முத்துரிய முப்பாழ் கடந்தே
வானந்த ரங்கள் மற்றெலா முணர்ந்த
வரைதிரை நினைப்பறச் சுபாவந்
தானந்த நிதார்த்த பூரணத் தன்மை
தடையற்ற வானந்த மறிவே. (௬)

பொய்யுறு முலகங் குற்றியிற் கள்வன்
போற்றிடும் வந்தியா மைந்தன்
மெய்யென மயங்கித் துடிப்பதேன் கனவு
வேடிக்கை ஜெகஜாலப் பொருளே
மையலோ வறியாப் பிராந்தியோ ஞான
மார்க்கமில் லாதகற் பிதமே
தையலர் போற்றும் வையக மறக்கத்
தடையற்ற வானந்த மறிவே. (௭)

கற்பித மனத்தின் பராக்கெலா மொழியக்
கன்மோபா சனைத்தொழிற் றுவித
மற்பமு மெண்ணுஞ் சித்தமே சுத்த
மாருயி ரைக்யமெ தார்த்தம்
பொற்பதி நிரங்குச திருப்தியி னுளமே
போற்றிய வுளமென்ப தடங்கத்
தர்ப்பண சொரூபந் ததாகாரத் தெளிவிற்
றடையற்ற வானந்த மறிவே. (௮)

கற்கவுந் தொல்லை கற்றது மில்லை
கண்டதுங் கேட்டதுந் துவிதந்
தற்குண முலக மயக்கமே பிராந்தித்
தூடணை யவிவேகத் துடக்கு

நிற்குண மசல் சுபாவபூ ரணத்தே
நினைப்புடன் மறப்பிலாத் தெளிவு
சற்குணத் தமைதி சாந்தமே சகஜந்
தடையற்ற வானந்த மறிவே. (௬)

எத்தும்வாய் ஞானம் பிதற்றிடுங் குருமா
ரிருவினைக் காளராய் மருண்டு
புத்தியுஞ் சலிக்க மந்திர மோதி
புன்மதி செபதவத் துழன்று
மித்தையில் மயங்கா தஞ்ஞானம் விடுத்து
விவேகசை தன்னியத் தமல
சத்திய புறுக்கான் வழிப்படி விளங்கத்
தடையற்ற வானந்த மறிவே. (௭)

நான்காவது தடையறு பதிகம் முற்றிற்று.

---

ஐந்தாவது

## முன்னறிவுப் பதிகம்

---

### கலித்துறை

சித்தான சுத்த மனதேக வைக்யமுஞ் சீர்பெறவே
வித்தார மாகும் விளக்காம் விவேக விரிகருணை
சத்தான பேதக மற்றே சமசத்தை சாதனையின்
முத்தான மெய்யுணர்வு தன்னி லறிந்தது முன்னறிவே. (௧)

சந்தத முத்திதான் றக்கநி வர்த்திசை தன்யசாந்த
மந்தமா தியிலா தேகம னதுவிபு வாயகண்ட
மந்தத ரமிலாத் தீவிரதிட் சண்யவை ராக்கியத்தே
முந்தவ ருட்கிரு பாகரத் தண்ணருள் முன்னறிவே. (௨)

போதத்தின் மூல மறிவே யறிவினிற் பூரணமே
பேதத்தின் முத்தடை ஞானப் பகையதின் பேதமற்று
பூதத் திரய வடிவான மாயமாம் புன்திருஷ்டி
*ஆதத் திலாதொழித் தத்த நிலையருள் முன்னறிவே. (௩)

---

*ஆதத்து - வழக்கம்

கங்குல் பகலொடு சோபான மெல்லை கடந்தபத
மிங்குமங் கெங்குமே தானான தற்பர மேகாசந்
திங்களு டிரவி யென்பதில் லாதமெய்த் திருக்கருளே
முங்கும் நிராசையில் முமுட்சுத் துவந்தானு முன்னறிவே. (௪)

கற்றிடுங் கல்விக ளெல்லா மறந்து கருத்தமைந்து
சுற்றிடு மூடப் பவப்பிர பஞ்சப்பொய்ச் சுட்டெரித்தே
பற்றிடும் நானு னெனும்பிணி நீத்துப் பாத்தொழித்தே
முற்றிடும் பேரின்ப சைதன்னிய போதமு முன்னறிவே. (௫)

பழியாம லொன்றும் பகாரம லுற்பவம் பாழ்விடுத்தே
யழியாம லேயழிந் தஞ்ஞான மாயை யறுத்தொதுக்கி
வெளியான பூரணம் போலே மனந்தெளி மெய்யொளிநேர்
மொழியாத மோன மநுபவத் தின்பமு முன்னறிவே. (௬)

தன்னிற் றனைக்கொண்டே தானான தன்மைத் தடமறிந்தே
யுன்னி யுலாவிடா தொண்மயத் தோர்மையு ளத்தமைத்து
பொன்னின் றுலாவிடு சாந்த சுகநிலை போதமுற
முன்னின் றொளிர்பர மானந்தச் சோதியு முன்னறிவே. (௭)

மேவாமல் மேவியே தூங்காமற் றூங்கிவி ளங்கிமெய்யிற்
றுவாமற் றுவியே தத்துவ மாய்ந்து தடைகடந்து
பாவாமற் பாவிப் பழகாமற் கூடிடும் பக்குவத்தே
மூவாமல் மேவும திஷ்டானந் தன்னிலே முன்னறிவே. (௮)

வின்னப் படும்பொய் விகர்ப்பவஞ் ஞானமே விட்டகன்று
பின்னப்ப டும்சமு சாரபந் தங்களைப் பியத்தெறிந்தே
சின்னப்ப டும்பொல்லா தற்போத மின்றியே சித்தமொத்து
முன்னப்ப டுங்கரு ணாகரப் பேரின்ப முன்னறிவே. (௯)

தட்டாத பேரின்ப வானமுதே நாத மார்க்கமதற்
கெட்டாத வேக விளக்கே திரிசியத் தெண்ணமதிற்
கிட்டாத பூரணத் தன்மய ஞானங் கிளரொளியே
முட்டாத வானந்த வாழ்வே சதானந்த முன்னறிவே. (௰)

ஐந்தாவது முன்னவுறிப் பதிகம் முற்றிற்று.

## ஆறாவது

## சித்தன் பதிகம்

---

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

தத்துவக் கூட்ட மாட்டந் தற்போதத் திரைம யக்க
மெத்தவி வேகந் துக்க மெண்ணும்பொய்த் தோற்றம் நீங்கிக்
கத்தியே நாம ரூபங் கழறிடா துளம் வயங்கிச்
சித்தனைக் காண்ப தன்றோ சின்மயா னந்தப் பேறே. (௧)

புத்தியின் பகுத்து ணர்வாற் புலன்பொறி மீறு தாக்கிக்
கத்துவ தொழிந்து ஞானக் கண்ணொளி விளக்க மாகி
நித்திய பரமா னந்த நிச்சயந் துரிய தீட்சை
சித்தனைக் காண்ப தன்றோ சின்மயா னந்தப் பேறே. (௨)

எத்தொழிற் பகிர் முகமோ டிரசோதமோ குணங்க ணீங்கி
முத்தொழி லகண்ட சாக்ஷி முத்தியே மனத மைந்து
வித்தையே விருத்தி யாகி விக்ஷேபங் கடந்தே சுத்த
சித்தனைக் காண்ப தன்றோ சின்மயா னந்தப் பேறே. (௩)

நித்தியப் பிரள யந்தா நினைவது கனா சுழுத்தி
யெத்திடு மவஸ்தை மூன்று மிடைவிடாக் கியாம நாளே
புத்தியாற் கடந்தப் பாலே பூரணத் தெளிவு ளத்தின்
சித்தனைக் காண்ப தன்றோ சின்மயா னந்தப் பேறே. (௪)

சுத்தமோ டசுத்த மற்ற சுகநிட்டை பரமா னந்த
முத்தியே நிராசை தன்னில் முத்தடை கடந்த ஞானம்
பத்தியே சுபாவ சித்தம் பதவியோ டுதவி யற்று
சித்தனைக் காண்ப தன்றோ சின்மயா னந்தப் பேறே. (௫)

புத்தியின் விகார மற்றாற் பூரண வியாப கத்தின்
வித்தையா னந்தக் காட்சி விடயபோ தங்க ளற்று
சத்திய சாக்ஷி தானாய்ச் சமயபே தந்தொ லைத்து
சித்தனைக் காண்ப தன்றோ சின்மயா னந்தப் பேறே. (௬)

வத்துபே தத்தாற் சூர்யன் வடிவுவே றாகு மாப்போற்
புத்திபே தத்தா லான்மாப் புறம்பெனப் பேத நோக்கஞ்
வெத்திசித் தானந் தத்தில் வேறுண்டோ வெதார்த்த முத்தி
சித்தனைக் காண்ப தன்றோ சின்மயா னந்தப் பேறே. (௭)

எத்தனை விதமோ மார்க்க மெவ்வழி நடக்க நன்றோ
வத்தனைத் துவிதம் விட்டே யறிந்ததை யறிந்து தேறி
நத்தின தெலாம றந்து நனவிலே துரியா தீத
சித்தனைக் காண்ப தன்றோ சின்மயா னந்தப் பேறே. (அ)

பத்திர மெழுத்து மந்திரம் பழக்கமுன் வழக்க மென்றே
யெத்தனை விதங்கற் றாலு மிணையல்லா லேக மன்று
முத்திரை யென்ப தென்றால் மோனமே மனோல யந்தான்
சித்தனைக் காண்ப தன்றோ சின்மயா னந்தப் பேறே. (கூ)

கத்திதன் னிலைம றந்து காரணந் தெரிந்தி டாது
பித்துளங் கொண்ட லறிப் பிணத்துக்கேன் றறிபு கழ்க
ளித்தனை மயக்க மற்று யின்பொடு மன்பு ருவாஞ்
சித்தனைக் காண்ப தன்றோ சின்மயா னந்தப் பேறே. (ய)

ஆறுவது சித்தன் பதிகம் முற்றிற்று.

---

ஏழாவது

## தன்மயப் பதிகம்

---

எண் சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

விதிமதியும் லயித்தழிந்த பொதுவி னாட்சி
வித்தைசுகச் சித்தமறு சுல்லா வாகி
யதிவிதமா யகண்டவெளி யசல மான
வகண்டாகா ரவிர்த்தி யறிவே முத்தி
துதியிகழும் நினைப்பெவையு மற்றொ ழிந்த
துய்யநிரா லம்பசுகத் துரியத் தன்மை
கதிதில் லாதறிவே பரமா னந்தக்
காட்சியே தன்மயமே கருணை வாழ்வே. (க)

அதிஜயமே யாருயிரே யன்பே யின்ப
மகம்புறமும் வியாபகமே தீட்சண் யத்தேத்
துதியிதய மமைதிதனி லபேதஞ் சுத்தத்
துரியநிலை யத்துவிதா னந்த முத்தி

மதிவளரு மறிவுருவே கிரியை நாசம்
மகாகாயம் மனவெளியே மனது மில்லை
கதியாத தாரணத் தேப்பூர ணந்தான்
காட்சியே தன்மயமே கருணை வாழ்வே. (உ)

சந்தேக விபரீத வஞ்ஞான பேதத்
தடைகளற்று சுயஞான யுக்தி யாலே
பந்தபாசத் திரையறுத்துப் பக்தி நேசப்
பழுச்சுமைக ளற்றிடவே சுத்த முத்தி
யந்திபகற் சிரத்தையொடுங் கற்ற கல்வி
யத்தனையுஞ் சுட்டெரித்தே யமைதி யாகிக்
கந்தமூன் றுமற்றபர முத்தி சுத்தக்
காட்சியே தன்மயமே கருணை வாழ்வே. (ங)

சிரவணமும் மனனமொடுந் தெளித லென்பார்
சிந்திப்ப தாரறிந்து தெளிவ தாரு
நரகசொர்க்க முண்டென்பா ரிரண்டி லொன்றை
நம்பினதாற் கிடைப்பதென்ன கிட்டா தென்ன
நிரயதுயர் படுவதார் சுவனஞ் சென்று
நிலைத்தசுகங் கொள்ளுவதார் நினைப்பின் றோற்றங்
காதலா கமலமதே யாத்ம ஞானங்
காட்சியே தன்மயமே கருணை வாழ்வே. (ச)

விள்ளொண்ணு தாஷ்டாங்க மறிவே யெஞ்சும்
விரிகடனீர் நுரையாகி யதிலே தானுந்
தெள்ளமுதே திரிகாண சுத்தி போதந்
தெவிட்டாத வேகரசத் தைக்ய முத்தி
யுள்ளபடி யுணர்ந்திடவே நல்லார் பொல்லார்க்
குதவுவது தாரதம்மி யம்போல் சித்தே
கள்ளமுதே பாமார்த்த நிசச் சொரூபங்
காட்சியே தன்மயமே கருணை வாழ்வே. (ரு)

துவிதமலக் கற்பிதவின் மார்க்கத் தாலே
துடணையாம் புவிவிவிதக் கிரியா சார
மவதியொடு செய்துமன மயங்கக் கத்தி
யாபாச மாய்க்குவித்து மனேக மெண்ணி

பவுதிகமாய்ப் பேதகத்தின் திருஷ்டி யாலே
பகிர்முகப்பேய் பிடித்தாட்டத் தவங்க ளென்னே
கவிமனது பல்லிளிக்கா தடக்கி யாளக்
காட்சியே தன்மயமே கருணை வாழ்வே. (௬)

உலகசுகந் தனைமதித்து மனப்பே யாட்ட
வுபாதிபேதம் விடயபோதந் தடிப்பு ருவா
யலகைபரி ஜின்றேவு பூத மென்ற
வஞ்ஞானத்திரை மயக்கா லறிவில் லாமற்
பலகதையாற் பழுதையதைப் பாம்பென் றோர்ந்து
படைப்புகளைத் தான்வணங்குந் தடிப்ப கன்றாற்
கலகமில்லை சொப்பனமா மவஸ்தை யில்லை
காட்சியே தன்மயமே கருணை வாழ்வே. (௭)

மடமையுறும் விபரீத சாஸ்தி ரத்தின்
மதிப்பாலே தற்போதத் திகைப்புக் கொண்டு
வுடமைபொருள் மனைமற்று மெனதென் றெண்ணி
யுள்ளறிவை விளங்காம லுலைந்த லைந்து
முடவனைப்போற் கொம்புத்தேன் றனக்கா சித்து
மூடமனப் பிராந்தியிலே முடங்கி டாது
கடமைகளைத் தானறிந்த நிராசை தன்னிற்
காட்சியே தன்மயமே கருணை வாழ்வே. (௮)

சொன்னாலும் வெட்கமன்றோ சொல்லா துற்றாற்
சூதன்றோ வறியார்க்கு மறிந்த பேர்க்கு
முன்னாலே விட்டபய னென்பார் காணார்
மூடனா ரறிந்ததா ரறியாப் பேதந்
தன்னாலே தான்கெடுதல் சீவ போதந்
தனைநசிக்கப் பேதமில்லை சீவ சாக்ஷி
கன்னலாம் பேரமுதே யறிவே யின்பக்
காட்சியே தன்மயமே கருணை வாழ்வே. (௯)

சுவனமென்ற வாசையற்று நிரய மென்ற
சொல்லற்றே யிராகவிரா கங்க ளற்றுத்
திவிய மனத்தெளிவாலே திரிவிய பேத
சிருஷ்டிதிதி சங்காரம் லயித்த வுள்ளம்

புவனபோகந் தனுகரணத் தெணம்ந சித்து
பூரணவி யாபகத்தே பூர்த்தி யாகிக்
கவனமற்ற மனவெளியே மவுன னந்தக்
காட்சியே தன்மயமே கருணை வாழ்வே. (ய)

ஏழாவது தன்மயப் பதிகம் முற்றிற்று.

---

எட்டாவது

## அறிவுப் பதிகம்

---

நாலடித்தரவுக் கோச்சகக் கலிப்பா.

விண்கொண்ட சோதி விவேகவு ணர்ச்சியோடும்
பண்கொண்ட வதிதமயம் பக்குவ மனுபவத்தே
திண்கொண்ட முத்தடைகள் தீர்ந்தே திருவருளைக்
கண்கண்டா லன்றிக் கலக்கங்கள் தீராவே. (க)

சண்டாள வேற்றுமைபொய் சகப்பிணக் கனுமானத்
துண்டான முத்தடைக ளூனமறுத் தோட்டிடவே
விண்டாலும் விள்ளொண்ணு விருத்திமெய்ஞ் ஞானத்தாற்
கண்டா லொழியமனக் கலக்கங்கள் தீராவே. (உ)

தொண்டனுண் டானென்னுந் தோடத் திரையறுத்திங்
கண்டபிண் டம்நிறைவை யறிந்தே யகந்தெளிந்தே
விண்டதுபோ லைக்யநிலை விவேகத் தருடனையோ
கண்டா லொழியமனக் கலக்கங்கள் தீராவே. (ங)

பண்டுசெய் வினையெனவே பகருகின்ற வஞ்ஞானங்
கொண்ட கடையருக்குக் குருதீட்சை யேதுமுண்டோ
விண்டவே தப்பொருளை விளங்கித் திரையறுத்துக்
கண்டா லொழியமனக் கலக்கங்கள் தீராவே. (ச)

கொண்டாடி விண்டாடிக் குருசீடர் கள்கூடி
மண்டாடித் தேடுவதில் மருமந் தெரியாதே
திண்டாடும் பொய்மாயத் திரிசியத் திரைநசித்துக்
கண்டா லொழியமனக் கலக்கங்கள் தீராவே. (ரு)

சண்டாளர்க் கேற்றதொரு தாதமார்க் கத்துழன்று
கொண்டாடிப் போற்றலது குடிகெடுக்கும் வாதனையே
யுண்டாவ தொன்றுமில்லை யுளங்குவிந்து பேதமறக்
கண்டா லொழியமனக் கலக்கங்கள் தீராவே. (சு)

திண்டாடும் பாரவாந் திக்கிர்மந் திரமோதி
விண்டா லகங்கார விவிதத் திரைகளன்றே
வண்டாடம் போற்று மாபாசம் விட்டகமாய்க்
கண்டா லொழியமனக் கலக்கங்கள் தீராவே. (எ)

இருமை இருவினைக ளிச்சை மலினமனப்
பெருமைதற் போதமதிற் பேரின்பங் கிட்டாதே
யொருமைத் துருவநிலை யுயர்சாக்ஷி தானாகிக்
கருமோபா சனையறுக்கார் கலக்கங்கள் தீராவே. (அ)

விருத்தமுறு வழக்கம் விளக்கமில் லாப்பழக்கம்
பருத்திப்பொதி யைஞானப் பருதியன லாலெரித்தே
வருத்தமொன் றுமில்லாது மனவாக்குக் காயமொத்துக்
கருத்தைத் திருத்தாமற் கலக்கங்கள் தீராவே. (கூ)

தானில்லை யெனத்துறந்தே தத்துவத் தெரிசனத்தே
நானில்லை யறிவதுவே நாதாந்த வெட்டவெளி
மேனில்லை யறித்துய்ய விளங்குவ தெலாம்பாழே
கானலைக் கடந்தேகக் கலக்கமொன் றுந் தானில்லையே. (ய)

எட்டாவது அறிவுப்பதிக முற்றிற்று.

---

ஒன்பதாவது

## ஞேயப் பதிகம்

---

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

அண்டபிண்ட மகண்டமுமா யனைத்து மாகி
யாருயிரா மைக்யநிலைக் கருளு மாகி
யெண்டிசையும் நின்றசையா தேக மாகி
யெவ்விதமோ வவ்விதத்திற் கெல்லா மாகித்

தெண்டனிடுந் தொண்டர்பெத்தர் நாம ரூபத்
 தேட்டநாட்டத் தாட்டமுறுந் திரயந் தன்னிற்
கண்டவரார் கேட்டவரார் தன்னாற் றன்னைக்
 காண்பதன்றிப் பின்னறிவாற் காண்ப தேதோ. (க)

எல்லாமா யில்லாதொன் றில்லா தாகி
 யிங்கங்கென் றேதொண்ணு தின்ப மாகி
அல்லாஹ ு சமதாகி யன்பு ருவா
 யருளுருவா மேகரசத்தா னந்த மாகி
சொல்லாமற் சொல்வேத முடிவிற் சொன்ன
 சுகசொருபம் நிராசைதன்னி னிறைந்த வாழ்வைக்
கல்லாதார் கற்றவரார் தன்னாற் றன்னைக்
 காண்பதன்றிப் பின்னறிவாற் காண்ப தேதோ. (உ)

சிற்றறிவாற் ஜெகத்திரய மித்தைக் காளாய்ச்
 சிக்குண்டு மயக்கமொடு தியக்கங் கொண்டு
சத்தமிட்டே நாமரூபஞ் சாற்றிக் கூவிச்
 சந்தேக விபரீத மனஞ்சு ழன்று
பெத்தவினைப் பவத்துழன்று மனந்தி கைத்துப்
 பேதலித்துப் பலதொழிலிற் பிணங்கி ஞானங்
கற்றவரார் பெற்றவரார் தன்னாற் றன்னைக்
 காண்பதன்றிப் பின்னறிவாற் காண்ப தேதோ. (ங)

வீணான செபதவத்தின் மந்திர மோதி
 விழலுக்கே மாரடித்து விளக்க மற்று
வூனான புற்புதத்தின் பதவி நம்பி
 யுழலுவதே னந்நியமா முபாச னையில்
வாணாள்வீ ணாகுதல்லாற் பொறிக ரணம்
 வயங்காமற் றீட்சையில்லை மனோல யத்தே
காணாதார் காண்பதெது தன்னாற் றன்னைக்
 காண்பதன்றிப் பின்னறிவாற் காண்ப தேதோ. (ச)

அநித்தியத்தின் சீவஜட போதத் தாலே
 யங்கிங்கே தீர்த்தமென வலைந்தே யோடி
மனத்தகத்தே குருவடிவந் தன்னைத் தேடி
 மனனஞ்செய் நிஷ்டைதவ யோக மெல்லாஞ்

சனித்துழலு மனமயக்க மல்லா துண்மைச்
சருவமய சிவசொரூபந் தெளிவ தன்று
கனித்தொழுகுந் தேனறிவு தன்னாற் றன்னைக்
காண்பதன்றிப் பின்னறிவாற் காண்பதே தோ. (ரு)

சூட்சாதி காரணவின் மயமே யன்பே
சுத்தமே புராணகதைக் கெட்டா வின்பே
யாட்சியே வகம்புறமும் நீக்க மற்ற
அருளுருவே நிராசைதனிற் சாக்ஷி தானு
மீட்சியே பிரவிர்த்தி நிவர்த்தி தன்னில்
வித்தையா னந்தசுக விதேக முத்திக்
காட்சியே யதிஷ்டானந் தானே தன்னைக்
காண்பதன்றிப் பின்னறிவாற் காண்ப தேதோ. (சு)

விருத்திஞான விளக்கமொன்றே நிட்க ளங்க
விவேகபுத்தி நிச்சயத்தே கல்யாண ரூப
பிரத்தியட்ச மனைத்துயிர்க்கு மதுவே சாக்ஷி
பிரக்ஞான சதோதயம்பே ரின்பந் தானய்
நிருத்தமிடு மனங்குவிய மவுன னந்த
நிர்விகாரத் திருக்காட்சி நிஜானந் தத்தே
கருத்தமைந்தாற் பாமுத்தி தன்னாற் றன்னைக்
காண்பதன்றிப் பின்னறிவாற் காண்ப தேதோ. (எ)

எண்ணமெனுங் கடிகுரங்கு நிர்த்தஞ் செய்ய
யிறையடிமை யிருமைநின்று தாளம் போடப்
புண்ணியபா வமிரண்டும் போட்டா போட்டி
புலன்பொறியுங் காணஞ்சுற்று மாட்டம் பார்க்க
பண்ணுமிந்தக் கோட்டியெல்லா மனப்பேய் தானே
பாசமதப் பேயொடுங்க நிர்வா ணந்தான்
கண்ணிதயா சனந்தெளிந்து தன்னாற் றன்னைக்
காண்பதன்றிப் பின்னறிவாற் காண்ப தேதோ. (அ)

ஆரணத்திற் கந்நியபொய்ப் பொருளை வைத்திங்
கஞ்ஞான கற்பனைசோ டித்து ரைத்துத்
தாரணியிற் பலதொழிலா யலங்க ரித்த
தாதமார்க்கப் பிணிமட்டுந் தீர்ந்தாற் போதும்

பூரணவாத் துமஞானம் சித்தி முத்தி
புக்தியுக்தித் தெளிவாகும் நிஜானந் தத்தே
காரணகா ரியம்லயித்துத் தன்னாற் றன்னைக்
காண்பதன்றிப் பின்னறிவாற் காண்ப தேதோ. (சு)

ஆறுதார மேலாறு தார மென்று
மடுக்கடுக்காய்ச் சொன்னதென்னோ வாய்ந்து ணர்ந்து
நோராக வத்தனையும் நேதி நேதி
நிறந்தலம்போற் காட்சியெலாம் சூநிய மென்றே
போாத சதாகர்ப்ப சமாதி தன்னில்
போருளே யநுபூதி சுபாவத் தன்மை
காராறுந் திரைகடந்தே தன்னாற் றன்னைக்
காண்பதன்றிப் பின்னறிவாற் காண்ப தேதோ. (எ)

ஒன்பதாவது ஞேயப்பதிக முற்றிற்று.

---

பத்தாவது

## பிரகாசப் பதிகம்

---

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆகம கலைக ளனந்தமே படித்து
மரும்பொருளறி யாமல் மயங்கித்
தாகமாம் பதவி சுவர்க்கத்தை நம்பி
தாபதன்வேட மிட்டுமே பைய
மோக விகர்ப்ப சங்கற்ப மலின
மோதநம்பிர விர்த்தி நசித்தே
யேக தத்துவ நிர்மல வறிவா
மெங்கும்பிர காசவின் மதியே. (க)

வழியொளி யவியா நிறைநெறி விளக்கே
வத்துநிச் சயமுணர்ந் தின்பந்
தெளிவொளி திவியம ஞேலய வமலந்
திரையறும் வாசனு க்ஷயத்தே

வெளியுளும் நடுவு மந்தமு மாதி
வேற்றுமையி லாசுய ஞான
மெழிலொளி சுபாவ நிஜானந்த மறிவா
மெங்கும்பிர காசவிண் மதியே. (உ)

மோனமே யாண்மெய்ஞ் ஞானமே யரசன்
மொய்த்ததத்து வங்குடி படைகள்
வானமே விதானம் வையகம் நிதானம்
மனவெளி யுதிப்பதே தூது
தானமே புத்தி மந்திரி தெளிந்து
சாக்ஷிமாத் திரமறிந் தொன்று
மீனமொன் றில்லா திருவினை கடந்தா
லெங்கும்பிர காசவிண் மதியே. (௩)

சந்தையின் கூட்டஞ் ஜகப்பிணக் காட்டஞ்
சமுசய மனரூபத் தோற்றம்
புந்திவி சாரத் தகம்புறம் நசித்து
பூரண வாத்தும திருஷ்டி
சிந்தையுங் குவிந்து சந்தத மெதார்த்த
சின்மயா னந்தநற் சாக்ஷி
யெந்தனை யிழந்த வகண்டநிச் சயத்தே
யெங்கும்பிர காசவிண் மதியே. (௪)

அலையினிற் றுரும்பா யாலைவாய்க் கரும்பா
யரவின்வாய்த் தேரையா யனலின்
னுலையின்வாய் மெழுகா யூனைவாய்க் கிளியா
யுழல்வது மவிவேகச் சழக்கு
நிலையிலா வுடலை நிச்சய மென்று
நினைப்பதே யநித்தியத் துச்ச
மிலையிலை யிவற்றை யறிந்துய்ய வறிவா
மெங்கும்பிர காசவிண் மதியே. (ரு)

பஞ்சபா தகத்திற் றனையறி யாமைப்
பாதகந் தற்கொலை யாகுஞ்
சஞ்சல தத்துவ மெனதென்ல் களவு
சகமதி மயக்கங்கள் ளுண்ணல்

வஞ்சகப் பொய்தா னென்செய லென்னல்
மலங்காம முடல்தனைப் பேண
லெஞ்சிய வறிவா லிவையெலாம் நசிக்க
வெங்கும்பிர காசவிண் மதியே. (௬)

முன்னறி யங்கஞ் சதுட்டயத் தாலே
முழுத்தற வாயெலா மிழந்து
தன்னுயிர் தனக்கொன் றுண்டாமென் பதுவுந்
தனிமுத்தி தனக்குண்டென் பதுவும்
பின்னிய மாயம் பகிர்முகத் துக்கம்
பேய்மத வாதனை மறந்தே
யின்னமு தறிவா யகம்புற மொன்றா
யெங்கும்பிர காசவிண் மதியே. (௭)

மனக்குரங் கசைக்கச் சித்தமுஞ் சலிக்க
மாவகங் காரமுங் கலிக்க
நினைக்குந்தற் போத முள்ளதை மறைக்க
நினைவதே பிறப்பிறப் பலைக்க
வினைகளை யறுக்க புத்திநுட் பத்தால்
வியாபக மனவெளி தெளிய
வெனக்கெனக் கைக்ய பூரணா னந்த
மெங்கும்பிர காசவிண் மதியே. (அ)

பத்திய முறியா தனுஷ்டித்த விரதம்
பற்றற்ற மனோலயத் தீட்சை
நித்தியத் தொழுகை நனவிலே சுழுத்தி
நிர்வாண சுகநிஷ்டை காட்சி
புத்திநிச் சயமா மெதார்த்த சொரூபம்
பூரணம் விளங்கலே மோக்ஷம்
மித்தியா திகளற் றானந்த சொரூப
மெங்கும்பிர காசவிண் மதியே. (௯)

தனிமனந் துரியந் ததாகாரந் துருவந்
தற்பரா னந்தமெய்ச் சொரூபங்
கனிமனந் துரியா தீதமே சாந்தங்
கலந்தைக்ய மிரண்டறல் முத்தி

மனமென்ப திங்கே யுள்ளது மன்று
வாசனை யிவையெலாம் நசித்தா
லினியென்ன சேர்க்கை சுத்தகு நியமா
வெங்கும்பிர காசவிண் மதியே. (௰)

முத்தியென் றுரைப்ப தெங்கணு மில்லை
முழுத்துற வானந்த நிர்த்தம்
பத்திய மகண்டா காரமாம் விர்த்தி
பரிபூர ணந்தானே வீடு
புத்தியால் மச்ச ரேகைசித் தனுமே
புகன்றது மியாவர்க்கும் பொதுவே
யித்தனை போதுஞ் சுயஞானம் விளங்க
வெங்கும்பிர காசவிண் மதியே. (௧௧)

பத்தாவது பிரகாசப்பதிக முற்றிற்று.

காரண சதகம் முற்றிற்று

ஆ. செய்யுள் அ-க்கு திருவிருத்தம் ௬௱அ௬

---

பிஸ்மில்லாஹி

நான்காவது

## மெய்ஞ்ஞான சதகம் 105

---

முதலாவது

### அருளுருப் பதிகம்

---

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

தனித்தசுயந் திருவருளே தெளிவே மோனத்
தண்ணருளே கேவலவா னந்த சாக்ஷி
யினித்தமுதே யருமருந்தே தெவிட்டா ஞான
வின்புருவே யன்புருவே யேக வாழ்வே
சனித்துழலு மனமயக்க மகற்றித் தேற
சதாகர்ப்ப சமாதியினி வேறென் றுண்டோ
வநித்தியங்கள் தனைப்புகழா தாத்ம மௌனத்
தருளுருவே தனைத்தெரியா தலம்பு வேனே. (௧)

வேதமதைத் தினமோதிப் புகழும் வாயால்
வேற்றுமைசொன் னுமருபப் பொருளைச் சொல்லிப்
பேதமத வாசனையால் நார்பொய்க் கூற்றைப்
பேசுவதோ வெதார்த்தநிலை பேணும் நெஞ்சில்
வாதமல வஞ்சகமும் பொறாமை கொண்டு
மலமூன்றிற் றியங்காமற் றனைத்தான் கண்டு
ஆதவனு மம்புலியுந் தெளிந்த சுத்த
வருளுருவே தனைத்தெரியா தலம்பு வேனே. (உ)

தெரியாமற் சரியாதி வழக்க மென்று
செய்வதொன்று சொல்வதொன்று திகைப்பு மெத்த
பரியாய கற்பிதச்சொல் லின்பத் தாலே
பலதொழிலாற் பகிர்முகம்பொய்த் திரிசி யத்தால்
மரியாதை யின்றிசாக்ஷி மாத்திர மென்ற
வாயாலே யநிர்தது தி வழங்கே னுண்மை
யரிதான சிவசொரூபா னந்தக் காட்சி
யருளுருவே தனைத்தெரியா தலம்பு வேனே. (ந)

எவ்வழியோ யெவ்விதமோ மதபே தங்க
ளெத்தனையோ சாஸ்திரங்க ளுவமை கூறுந்
துவ்விதமோ வத்விதமோ நிராசை யென்று
துதித்தவொரு வாயாலே சிருஷ்டி நாமங்
குவ்வினுளே மதித்துழன்றே யர்த்த வாதங்
குறிப்புருவ மந்திரங்க ளோதா தின்ப
மவ்வியத்த மகண்டபூ ரணமே சாக்ஷி
யருளுருவே தனைத்தெரியா தலம்பு வேனே. (ச)

காசுக்கே வேடமிட்டுச் சமர்த்து கூறிக்
கதைபிதற்றி மந்திரங்கள் கனமா யோதி
பூசிக்க வழிவிளங்கா தகஞ்ச வித்துப்
புத்திவிகா ரத்தாலே திருட்டி பேதம்
நேசிக்கும் பிரபஞ்சங் கானற் றோற்றம்
நேதிசெய்தே யாத்துமானு சந்தா னத்தா
லாசைமுழு தற்றநிலை சுத்த முத்தி
யருளுருவே தனைத்தெரியா தலம்பு வேனே. (ரு)

குறிகுணு தீதமயத் தெருளே நித்ய
குணிகுணத்தே சமசத்தை யதிட்டா னத்தே
பொறிபுலனுங் காணமொத்த நிருவி காரப்
போதமவ காசநிறை பூர ணத்தே
நெறியுடனே ஞானஞ்சொல் வாயா லந்நியம்
நேயமொடு புகழுவதே புலா லருந்த
லறிவுருவா மேகபுகழா னந்த சாட்சி
யருளுருவே தனைத்தெரியா தலம்பு வேனே. (௬)

தேகமது மலக்கூடே கருமம் மேடு
திரிசியங்கா ராக்கோட்டை தாத மார்க்கங்
காகமெனக் கதறிமந்திர முச்ச ரித்துக்
கருத்துவேறு பொருள்வேறுய்க் கத்திக் கத்திச்
சோகமுறுந் திரயமனப் பழக்கத் தாலே
சோபதாபத் தலங்காரத் தாழ்ந்தி டாம
லாகமங்கட் கதீதசுக நனவி லன்பே
யருளுருவே தனைத்தெரியா தலம்பு வேனே: (௭)

எந்தேக மென்பொருளென் கல்வி யென்றே
யிவ்வுலக மாயாகா ரியப்பொய்க் கூத்தில்
சந்தேக விபரீத மஞ்ஞா னத்தால்
சங்கற்ப விகற்பமனஞ் சலித்து மூன்று
வந்தேகுங் கனுநினைவு நனவு நித்திரை
மயக்கிடினும் விடயபோதத் தடிப்புக் கொள்ளே
னந்திபக லறுந்துரிய பரமா னந்த
வருளுருவே தனைத்தெரியா தலம்பு வேனே. (அ)

பாருலகு விண்ணுலகாய் மாறிட் டாலும்
பருதிமதி மதிரவியாய்ப் பிறழ்ந்திட் டாலுங்
காரிருளு மிரவிமுகத் திருப்ப தில்லை
காண்பானுங் காட்சியும் பொருளு மில்லை
மோருதயி ராய்ப்பாலாய் முலைசென் றூறு
முறைதவறி யாத்மாவுக் கந்ய முன்னே
னுருயிரே வைக்யசாந்த முத்தி நித்ய
வருளுருவே தனைத்தெரியா தலம்பு வேனே. (௯)

எத்தனையோ பிரபல்யதவ மியோகஞ் செய்து
மிரவிமதி தனையழைத்து முலகம் போற்றச்
செத்தபிண மெழுப்பியாகா யம்ப றந்து
திரைநடந்து மழையழைத்து மலடொ ழித்துச்
சித்துவிலா யத்தனேகஞ் செய்த தென்று
செப்புவது பெத்தர்நம்பு மதத்தின் மித்தை
யத்தனையு மனமயக்கு பக்தி நீத்த
வருளுருவே தனைத்தெரியா தலம்பு வேனே. (ம)

கற்றகல்வி யெத்தனையோ வெலாம றந்து
கம்பனமி லாதகமாய்ச் சும்மாவி ருந்தே
குற்றமுறு முலகவிர்த்திக் கசுமா வோதுங்
குருசீடர் மரபொழித்து மனேவ சிய
மெற்றுமன மருட்ஜால திருட்டி நீங்கி
யெம்மானை யந்நியமொன் றெண்ணு துய்ய
வற்றநிலை சுத்தசித்தா னந்த முத்தி
யருளுருவே தனைத்தெரியா தலம்பு வேனே. (கக)

முதலாவது அருளுருப்பதிக முற்றிற்று.

---

## இரண்டாவது
## சாதனப் பதிகம்

---

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

உச்சமே வியாப கத்தி னுணர்வுளோர் மக்க ளாவர்
மிச்சமே யறிவா நந்த மீட்சிநம் மிறசூல் சொன்னார்
பச்சமே கடந்த வைக்ய பக்குவ சாந்தந் தன்னில்
சச்சிதா நந்த வாழ்வு சாதனந் தௌஹீ தொன்றே. (க)

திவ்விய தீவி ரத்தே தீனிஸ்லா மதுவி ளங்கக்
குவ்வினி லாசை யற்றோர் குரானெடு ஹதீது தந்தார்
துவ்வித மற்றிங் குய்யத் தொடாறு வழியுஞ் சொன்னார்
தவ்விய மனத டக்கஞ் சாதனந் தௌஹீ தொன்றே. (உ)

கலிமாவுஞ் சொன்ன பேர்கள் கபுறுச மாதி கட்டி
யொலிமார்க ளவுலி யாவென் றுபாசித்துப் புகழ்வ தென்னே
மெலியாகம் மிறசூ லுல்லா மெய்வழி செயலி தன்று
சலியாத தினிஸ் லாந்தான் சாதனந் தௌஹீ தொன்றே. (௩)

மூவுல காசை யற்று முழுத்துற வமைதி கொண்டு
கேவல பூசை கெட்டுக் கிருதார்த்த னாகச் சொன்னார்
பூவுல கிச்சை யற்றால் பூரணத் தவம்வே றுண்டோ
தாவிய மனம்ப டியச் சாதனந் தௌஹீ தொன்றே. (௪)

அன்னிய வனித்ய பேத வாசைகள் பூசை யெல்லாம்
பின்னிய மனப்பே யாட்டம் பிடிவாத முதவா தென்றார்
உன்னிய சாட்சி சொன்ன வுண்மையைக் கண்ட றிந்து
தன்னிய லறிய போத சாதனந் தௌஹீ தொன்றே. (௫)

அவ்வல்தீன் மஃரி பத்துல் லாஹியை யறியச் சொன்னார்
செவ்வைநம் மிறையைக் காணத் திரைமறை வேது மில்லை
மூவ்வாமெய் யகக்தெ ளிந்து மோட்சவீ டமைதி யாகுந்
தவ்வாமல் மனதொ டுங்கச் சாதனந் தௌஹீ தொன்றே. (௬)

வின்னம தாகும் பல மித்தையாங் கற்பி தங்கள்
அன்னிய மதத்தி னேர்மை யாருக்கு மாகா தென்றார்
மன்னிய வியாப கத்தின் விளக்கமே மார்க்க மென்றார்
தன்னிசந் தானே ஞான சாதனந் தௌஹீ தொன்றே. (௭)

திக்கிரென் னுபதே சந்தான் திரையறப் பொதுவார்க் கும்மே
மக்குரென் மனப்பேய் தீர மஃரிபா வறியச் சொன்னார்
பிக்கிரா முணர்ச்சி யாகிப் பேருள் மனநா சத்தே
சக்கறத் தன்னி லொன்றச் சாதனந் தௌஹீ தொன்றே. (௮)

எல்லையில் லாம லெங்கு மிடைவிடா தகண்ட வாழ்வு
தொல்லையில் லாமற் கண்டு தொழுவதற் கிறசூல் சொன்னார்
கல்லையில் லாத பேயைக் கபுறுகளை நம்ப வேண்டாம்
சல்விச லாத்தின் காட்சி சாதனந் தௌஹீ தொன்றே. (௯)

அறம்பொரு ளின்பம் வீடா மரும்பொரு ளறிந்தோர்க் குண்மை
திறம்பொரு ளறியார்க் கெல்லாந் திருடருக் கொளிபோ லாகா
பரம்பொரு ளுண்டா மென்பர் பாவனை நாத்தி கந்தான்
தரும்பர முத்தி சித்தி சாதனந் தௌஹீ தொன்றே. (௰)

இரண்டாவது சாதனப்பதிகம் முற்றிற்று.

## மூன்றாவது

# திருட்டிப் பதிகம்

---

### கலித்துறை

அறிவான போத மகத்துற வாலே யகந்தெளிந்து
நெறியான சாதன நிச்சயந் தானந்த நேமத்தன்மை
வெறியான பேத முலக மயக்கிலா வேதனத்தே
பறையா துளந்தெளி வல்லாது வேறொரு பார்வையின்றே. (௧)

பூங்காவ னச்சுவன நிர்விகா ரத்துளம் பூரணத்தே
யாங்கார மற்றே யமைதியுற் றேகவ ருணைக்யமே
நீங்காத முத்திச்ச தானந்த நித்திரை நிர்விடயம்
பாங்கா யுளந்தெளி வல்லாது வேறொரு பார்வையின்றே. (௨)

குருவுப தேசத் திரிசிய முத்தடைக் குன்றொழிந்து
சருவவி யாபக வாத்மதி ருட்டிசம் பூரணத்தே
திருவுளத் தன்புரு சந்தத நிட்டையிற் றீதின்றிய
பருவந் தெளியுள மல்லாது வேறொரு பார்வையின்றே. (௩)

குருவானோர் பித்தைப்பி ளந்தங் கெடுத்த குறியதுவோ
கெருவ விகாரத் திரைமலக் கோபங் கெடிகலங்க
நிருவிகா ரத்தொண்மை சாந்த மனமதிநி றைந்தவுள்ளம்
பருவந்தெ ளிமன தல்லாது வேறொரு பார்வையின்றே. (௪)

செத்தபி ணத்தையு யிர்ப்பித்த தென்றொரு செய்தியது
மித்தையஞ் ஞானவு ளத்தைமெய் ஞானவீ டாக்குதலே
சுத்தவி யாபகம் போலேம னதுசு யம்பெறவே
பத்தத் தகந்தெளி வல்லாது வேறொரு பார்வையின்றே. (௫)

முத்திதீ தாரென்று சொல்வதொன் றுண்டு முடிவதுவோ
சித்தநி ரோதமே சிவசொரூ பானந்தஞ் சித்தியதே
வெத்திம னங்குளிர்ந் தேகாந்த நித்திரை மேலிடவே
பத்திய கந்தெளி வல்லாது வேறொரு பார்வையின்றே. (௬)

சுத்ததி ருமயங் கருணை கரமே சுகச்சொருப
மத்தநி லைதனி லெல்லாம றந்தா லருள்வடிவே
நித்தம றிவுரு தீட்சண்ய சாக்ஷியி னிச்சயத்தே
பத்தத்த கந்தெளி வல்லாது வேறொரு பார்வையின்றே. (௭)

சத்திய நிட்கள நின்மல நிர்ரூப சைதன்னிய
புத்திவி சாரவி வேகந் தனிநிலை பூரணத்தே
யத்தியா ரோபதி ருட்டியில் லாத வறிந்தநிலை
பத்திப ரந்தெளி வல்லாது வேறொரு பார்வையின்றே. (அ)

நித்திய கல்யாண சொரூபம னம்பி ராசையிலே
கத்தித் துதிப்பதொன் றில்லாத பேரின்பக் காட்சியது
புத்திய திஷ்டான மேகவ கமும்பு றமுமொன்றும்
பத்திய கந்தெளி வல்லாது வேறொரு பார்வையின்றே. (சு)

விதிநிடே தமெனற் றன்னை விளங்கி விடுபடலே
கதிதீதென் றூற்சுக துக்கமன் றிவேறு கருமமிலை
மதிவிதி யென்பது புத்திய றிவும ஞேலயத்தே
பதிமன மேதெளி வல்லாது வேறொரு பார்வையின்றே. (ய)

மூன்றாவது திருட்டிப்பதிகம் முற்றிற்று.

---

## நான்காவது

## நித்தியபரப் பதிகம்

---

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

ஆதமுந் தந்தை தாயற் றெழுந்த
வதிசய மாய்ந்து ணர்ந்தாற்
பூதமும் காத முண்டா மனுதி
பூரணமான் மாநி றைவே
வேதமு திர்ந்த முத்தேக சூட்ச
வெளியந்தர் காட்சி யாகும்
நீதமு தித்த வறிவின் சொரூப
நிலையாகு நித்ய பரமே. (க)

காமில்தா ஞமில் தனைக்கொன்ற தென்ற
கருத்தைத் தெளிந்து ணர்ந்தால்
பாமியாய் வந்த பிறவிம லத்தைப்
பற்றற் றறுத்த டக்கல்

லாபிய தன்னிற் ஜென்ம சாபல்ய
லாசக்க வன்பி னுருவே
நீபின்னி லாத பாமுத்தி சித்தி
நிலையாகு நித்ய பரமே. (உ)

றாகு நபியின் வெள்ளப் பிரபாவ
நுட்பமு மேதென் றுய்ந்தால்
மோக விகற்ப சங்கற்ப வெள்ள
மூடப் பிராந்தி குழுவை
வேகமாய் நீந்தி கடலைக் கடக்கும்
வேதாந்த வங்க மேறி
*நீகத் திரய மறுத்தார் சமத்வ
நிலையாகு நித்ய பரமே. (ங)

இபுருஹீ மவருந் தனையனைக் கொய்த
தென்றதஞ் ஞான புத்ர
னுபவாத நானீ யென்றது வைத
முபவிரு ளாட றுத்தார்
சுபமாக வக்கி னிக்குள் ளிருக்கை
சுகவிர்த்தி ஞான வெற்றி
†நிபமான தாபத் திரயங் கடக்க
நிலையாகு நித்ய பரமே. (ச)

மூசாவு வெற்புத் தூரிசி னுவின்
மொழிந்தது புத்தி நுட்பம்
நேசமாங் காட்சி வேறற்ற வாட்சி
நேமந்தா னத்த நிலையே
கூசாகி விறு முக்திமெய்ஞ் ஞானங்
குறையாத சிவ ஜலமே
நீசாசா ரங்க ளற்றது தெளிவு
நிலையாகு நித்ய பரமே. (ரு)

ஆசாவாற் கல்லைத் தாவிய டிக்க
வங்ஙனு தித்த தருவி
மூசாவு ளத்தி னொருமை சிரத்தை
மூட்டிட ஞான வெளியாய்

---

* நீகம்—மேகம். † நிபம்—காரணம்.

பாசாஞா னப்பேய் தீரவெ வர்க்கும்
பருகவ மிர்த மூட்டி
நேசானு பூதி தன்னிற் றனித்த
நிலையாகு நித்ய பரமே. (சு)

ஈசாவும் நான்காம் வானத்தி லேசென்
றிணங்குவ தாய்ந்த போது
காசாருஞ் சத்வா பத்தியி னுண்மை
கரிசறப் பின்ன மிலையே
பேசாது மற்ற மூன்றுங் கடக்க
பேருன சுத்த சொரூபம்
நேசாசா ரங்க ளெல்லா மொழிந்து
நிலையாகு நித்ய பரமே. (எ)

தாவுது தானி ரும்பை மெழுகு
தானுக்கும் வன்மை யோர்ந்தால்
தேவாதி மெய்க்க வெஃகாமு ளத்தைத்
தேனறி வாக்கி யுய்த்தல்
கோவாதி மாக்க ளங்யமி ழுந்து
குருவறி வுண்மை கொளலே
நீவாமை யுற்ற துரியாதீ தத்தி
னிலையாகு நித்ய பரமே. (அ)

சுலைமானும் வல்ல ரசாயி ருந்த
சூதேது வென்று ணர்ந்தாற்
சலியாம னன முறுமிக்க பக்தி
சாதித்த தேக ரசமாய்
மலிவான சிவ ரெல்லா மதிக்க
வாழ்ந்தது சித்த தத்வம்
நிலைசஞ்ச லங்க ளறவே யசலம்
நிலையாகு நித்ய பரமே. (கூ)

இதிரீச வரும் சுவனத் திருப்ப
திவ்வண்ண மென்ப துணர்ந்தால்
மதிரவி காணு நிறைபூ ரணத்தின்
மனமாயை யற்ற சுகமே

கதிதீது சுத்தா சுத்தம்நி னைப்பு
கனமற் றிருக்கை சொர்க்க
நிதியாகு முத்தி யறிவேயா னந்தம்
நிலையாகு நித்ய பரமே. (௰)

மனுவாம் பநி யிஸ்ராயில் கூட்டம்
மா றும்மி ருக மாய்ந்தால்
வனமிரு கங்கள் தன்மை விகற்ப
வழுவே றெனும மக்கம்
கனமாகித் தன்னை யறியாத பேய்கள்
காமத் தடிப்பே மிருக
நினைவேதற் போத மற்றூல்ம னுவே
நிலையாகு நித்ய பரமே. (௧௧)

திருவாகு மக்க மஃமூதா ரூடந்
திருமிஃ ருஜி யாய்ந்தால்
மருவாய சூட்ச காரணந் தூல
மற்றத கண்டா தீதங்
குருவேவி வேக சதானந்த மாட்சி
குறுசறு சைக்ய முத்தி
நிருவாண நிட்டை சாக்ஷிசு பாவம்
நிலையாகு நித்ய பரமே. (௧௨)

நான்காவது நித்யபரப்பதிக முற்றிற்று.

---

ஐந்தாவது

## ஞானோதயப் பதிகம்

---

### நாலடித் தரவுக் கோச்சகக் கலிப்பா

மோனச் சுகச்சொரூப மூவாப்பே ரின்பநிலை
யானதற் சாக்ஷிதனி லறிவா யறிந்ததிலே
தானமொ டுவமையிலா தற்பர சிவோகமதி
ஞான மணிவிளக்கு ஞானோ தயந்தானே. (௧)

காயத் திரைகரைந்து காரணவஞ் ஞானவுடல்
மாயத் திரையொழித்து மருவிட வேகவெளி
தூயதன் மாத்திரையின் தொடாற் றகந்தெளிய
ஞாயசு யஞ்சோதி ஞானோ தயந்தானே. (௨)

தானமுங் குருவுருவந் தன்னுரு விடயபோத
மூனமு முபாதிநிட்டை யுன்னுவ திணைதானே
ஈனம னத்திரய மிரண்டறக் கலந்துய்ய
ஞானம ழைபொழியும் ஞானோ தயந்தானே. (௩)

வாதுறு மனக்குரங்கு வழக்கப் பிசாசாகி
பேதுறும் புன்மதிகள் பேசியிங் குழல்வதேனோ
தீதுறும் விடயஞானத் திருசிய மிழந்துதேற
ஞாதுரு ஞேயத்துண்மை ஞானோ தயந்தானே. (௪)

தோன்றுவ தொடுங்கலென்று சொல்லுறுங் கானல்நீரைப்
போன்றவிவ் வுலகவிச்சைப் பொய்யில்ம யங்காமல்
சான்றுசி வசொரூப சம்பூ ரணத்தேயெஞ்
ஞான்றுமா ரூதசுகம் ஞானோ தயந்தானே. (௫)

காலங்க ணக்குமின்றிக் கருமோபா சனையற்றுத்
தூலசூக் குமம்போக்கித் தொடர்கா ரணங்கடந்தே
கோலங் குறிப்பிழந்து கொடும்பகைதற் போதமற
ஞாலங் கடந்திடவே ஞானோ தயந்தானே. (௬)

வேதம் விளைந்தமன வெளியின் பொருளறிந்து
போதந் தனிலமைந்து பொய்யறுக்க மெய்யருளே
பேதந் துவிதமில்லாப் பேரின்ப தற்பரத்தே
ஞாதந் தனைக்கடந்த ஞானோ தயந்தானே. (௭)

அல்புஃ தனின்னுசி யானந்த ரூஹத்துன்
கல்புஹறயாத் தாகுவது கல்வி விசாரணையே
பல்புக ழிகழுமில்லாப் பரமார்த்த மெய்ப்புதையல்
நல்மதி மனங்குவிதல் ஞானோ தயந்தானே. (௮)

அவலம் எக்பிபிறப்பிக் கன்னஹ்ற அலாக்குல்லி
குவியஷெய் யன்ஷஹீது ஒல்லாஹ்ற அலாக்குல்லி
திவியஷெய் யன்முஹீத்து அலைசல்லாஹ்றபீக் காபியப்தீ
நவிலு முறைதெரிய ஞானோ தயந்தானே. (௯)

ஒலியாங்கர்த் தாபோக்தா வுபாதிதிர யத்தாட்டம்
மலிவா மநிர்த துக்க மாயம யக்கமன்றோ
வலியமெய்ஞ் ஞானநிலை மாதவர்க்குப் பேதமில்லை
நலியா தகங்குளிர்தல் ஞானோ தயந்தானே. (ம)

சித்தம் பலவிவித சீவபே தத்துழன்று
மெத்தப் பிதற்றாமல் மெய்யருள் தானாகி
யத்தநி லைபழகி லறிவா லறிவாகி
நத்துவ தெல்லாமறக்க ஞானோ தயந்தானே. (கக)

ஐந்தாவது ஞானோதயப் பதிகம் முற்றிற்று.

---

## ஆறாவது
## ஒருமைஞானப் பதிகம்

---

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பூரண விளக்க மொன்றே
புண்ணிய மல்லா லந்நிய
காரண காரி யங்கள்
கருதுதல் பலனொன் றில்லை
யாரண முரைத்த வுண்மை
யறிந்தபே ரகந்தெ ளிந்தார்
தாரணை மனத மையத்
தெளஹீது மஅரி பாவே. (க)

சொற்கொடுஞ் செயலைக் கொண்டுந்
தொல்லுல கல்லற் கொண்டு
மற்கட மனதி னேவல்
மாறிடா தாகை யாலே
நிற்குண வைக்ய சாந்த
நிரங்குச திருப்தி யாலே
சற்குண முத்தி ஞானம்
தெளஹீது மஅரி பாவே. (உ)

மூக்கினி னுனியைத் தானுஞ்
சுழிமுனை யெனவே நம்பி
நோக்கியே வாசி பூட்டி
நொய்வதே னுண்ண றிவின்
மோக்கமே மனத்தி னேர்மை
மோனமே சாந்த முத்தி
தாக்கற்ற விபும யமே
தெளஹீது மஅரி பாவே. (௩)

அட்டாங்க யோகம் வேண்டா
மாத்தும ஞானத் திற்கு
நிட்டானு பூதி சித்த
நிரோதமே சுபாவ முத்தி
தொட்டாலுந் துவித மில்லை
தொடுத்திடப் பாச மில்லை
தட்டாத வியாப கத்தே
தெளஹீது மஅரி பாவே. (௪)

அப்புட னுப்பு மொன்று
யமைந்திடுந் தன்மை போல
வொப்பிய சிரவ ணத்தா
லுபாதிபே தா கித
மிப்பிர பஞ்ச மெல்லா
மிடைவிடாச் சுவரூப மேயாந்
தப்பிலா தறிவே காட்சி
தெளஹீது மஅரி பாவே. (௫)

வாரியின் னீருங் கொட்டாங்
கைச்சியில் வாரு நாரும்
பேரிரண் டானு லுந்தான்
பிரிப்பதோ நுரைநீ ரன்றோ
மோரிலே வெண்ணை நெய்யாய்
முகந்தெரி தன்மை தானே
தாரிய லொழிந்தாற் சுத்தம்
தெளஹீது மஅரி பாவே. (௬)

அற்பதுர்ப் புத்திக் கெட்டா
　　தகண்டவா கார விர்த்தி
கர்ப்பிதத் தடங்கா ஞானங்
　　காமவி கார மற்றுற்
புற்புத மயக்க மில்லை
　　பூரணத் தெளிவுண் டாகுந்
தற்புக முற்ற சாக்ஷி
　　தௌஹீது மஅரி பாவே. (எ)

காணுவ தன்ய மில்லை
　　காரிய வுபாதி நீங்கி
யாணவ மமதை யென்ற
　　வகங்காரத் தடிப்ப கன்று
பூணுவ துளங்கு விந்து
　　புலன்பொறி லயத்தே சென்றால்
தாணுவின் பேத மில்லை
　　தௌஹீது மஅரி பாவே. (அ)

கண்டமு னோகக் கண்கள்
　　கடுத்திடக் கதைக னோக்கி
வண்டென விரைந்து மந்திரம்
　　வாய்முணு முணுப்ப வோதிப்
பண்டுள வழக்க மென்று
　　பகிர்முகத் தழுந்தி டாமற்
றண்டனை கடக்க முத்தி
　　தௌஹீது மஅரி பாவே. (கூ)

அல்லாஹு அல்லா வென்று
　　வலறியே யிறையைக் கூவி
சொல்லிய நாம ரூபத்
　　தொல்லையிற் சாந்த மில்லை
துல்லிப தத்வ ஞானந்
　　துலங்கிட மனமே சாந்தி
சல்லிய வழக்க மில்லை
　　தௌஹீது மஅரி பாவே. (ம)

கடவுளை யறிந்தோன் பொய்யின்
கற்பித நாட்ட மின்றித்
திடமுட னுத்ம ஞானத்
தெளிவிலே விழிப்புப் பெற்றே
யடைவுடன் மனங்கு ளிர்ந்தே
யமைதியுஞ் சாந்த முற்றுத்
தடையறு பரமுத் தின்பம்
தௌஹீது மஅரி பாவே. (கக)

ஆறுவது ஒருமைஞானப் பதிகம் முற்றிற்று.

---

ஏழாவது

## பூரணப் பதிகம்

---

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

சாதன மனநா சந்தான் சமயவா தங்க டந்த
சேதன விருத்தி யுண்மை செகதுக்க மயக்கந் தர்க்க
வாதனைக் கிரியை யோக வழக்கங்க ளிழந்தே காத்மப்
போதனைக் கன்பே யின்பப் பூரணா னந்த மெய்யே. (க)

சோதனைக் கிணங்காச் சித்தந் தொல்லையஞ் ஞானத் தாலே
யாதனை நரக போக யாதிலே யுழலு மிந்தத்
தீதினைத் துறந்தொ ழிந்து திருவருள் விசாரஞ் செய்ய
போதனை நிதானந் தன்னிற் பூரணா னந்த மெய்யே (உ)

கற்பனை மதங்க ணீங்கிக் காரியந் தொழிலொ ழிந்து
வுற்பனத் துளந்தெ ளிந்தே யுறுதுயர்ப் பாசம் போக்கி
விற்பன விவேக ஞான வியாபக விளக்கந் தன்னிற்
பொற்பதி நிருவி காரம் பூரணா னந்த மெய்யே. (ங)

நித்திய விசார நுட்ப நிண்ணயத் தீட்சை யாலே
முத்தியே நிர்வி டய முழுத்துற வதிலே மீட்சி
சத்திய மறிவே சூழ்ச்சி சமத்துவ மாத்ம நோக்கம்
புத்தியி னுக்தி யாலே பூரணா னந்த மெய்யே. (ச)

சிந்தைசங் கர்ப்ப வாதை சிற்றின்பத் திரைய றுத்து
மந்திர வாதங் கெட்டு மனதில்வே றெண்ணு துற்று
தந்திர முபாயத் தோடுந் தற்சாட்சி சுபாவத் தாலே
புந்திபற் றொழிப்ப தன்றோ பூரணு னந்த மெய்யே. (டு)

தேசாசா ரங்க ளென்று செய்தொழி லனேகந் தேடி
வாசாஞா னங்கள் மெத்த வாசனை பலவி கர்ப்பம்
பேசாச்சு பாவ தீட்சை பேரின்ப முணர்வ தன்றே
பூசாப லன்மெய்ஞ் ஞானம் பூரணு னந்த வாழ்வே. (சு)

சிவன்செய லன்றிச் சீவன் செயலெனச் சிந்தை கொள்வா
ரவனிவ னென்ப தெல்லா மர்த்தவா தத்தி ரயம்
பவமறு மாத்ம ஞானப் பக்குவிக் கன்ய மில்லை
புவனமீ திச்சை யில்லை பூரணு னந்த மெய்யே. (எ)

படமதைச் செய்யப் பஞ்சைப் பக்குவ மாக்கல் போன்று
கடமதைச் செய்ய மண்ணைக் கட்டிவே கித்தல் போலத்
திடமனத் தீவி ரத்தே திருக்குமெய்ஞ் ஞானத் தீயாற்
புடமிடத் தானென் றுண்டோ பூரணு னந்த மெய்யே. (அ)

தத்துவ ஞானத் தோடு வாசனு க்ஷயம் லபித்து
பத்திய மனோல யத்தே பக்குவத் தேகந் தானே
நித்தியா னந்தக் காட்சி நிர்விசா ரந்தான் சாக்ஷி
புத்திதா னறிந்த தீட்சை பூரணு னந்த மெய்யே. (கூ)

வேதமே விளங்கி சுத்த விவேகவு ணர்ச்சி யாலே
நீதமே மனமமைந்து நினைவில் வேறில்லா துற்று
பூதமே யடங்கி நேதி பொறிகா ணம்வ பங்கி
போதமே விளங்கத் தானே பூரணுநந்த மெய்யே. (ய)

ஏழாவது பூரணப்பதிகம் முற்றிற்று.

எட்டாவது

## சாக்ஷிப் பதிகம்

---

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

விரிவாய் நிறைவாய் மறைவின்றி
விளங்கும் போத சிற்சொரூபந்
திருவா யருளா யறிவினெறி
திருட்டி பேதங் கடந்தொருமை
துரியா தீத மனுபவமுஞ்
சுழுத்தி நனவின் மனம்லயிக்க
வரிய சுவர்க்கம் பாமுத்தி
யகண்டா தீதம் சாட்சியதே. (க)

பொருளை யெழுத்தை மந்திரத்தைப்
பொருட்டா யெண்ணி வணங்காமற்
றெருளா மனத்தைச் சலனபல
தேட்ட நாட்ட மலினமல
மருளு மயக்கந் தியக்கும்வினை
மகிழ்ச்சி வாட்டம் நிவர்த்தியிலே
யருளின் மயமே நித்யசுக
மகண்டா தீதம் சாட்சியதே. (உ)

சொல்லப் போமோ வநுபூதி
சொச்சொ ரூபசு லட்சணத்தேத்
தொல்லை யுலகத் திருசியங்கள்
தொந்த பாச பந்தமிலை
யெல்லை யநித்ய முத்தேக
மெல்லாம் லயித்த வமைதிதனி
லல்லும் பகலு மிலாதேக
மகண்டா தீதம் சாட்சியதே. (ங)

வேத னஞ்சொல் ஞாபனத்தே
விவேக புத்திக் கூர்மையிலே
தாத னில்லா துரிமைபெறுந்
தத்வ விளக்கஞ் சித்தியிலே

தூத னறிவே யறிவாகித்
    தொடாற் றெழிந்த விதேகமுத்தி
யாத னம்பர மானந்த
    மகண்டா தீதம் சாட்சியதே. (ச)

தத்து வங்கள் தானல்ல
    தவங்க ளெல்லா மனச்சேட்டை
சித்து விலாயத் தறிவல்ல
    சிதா பாசனென் றென்றில்லை
கத்தித் துதிப்போர்க் குயிரில்லை
    கதைபு ராணத் துண்மையில்லை
யத்த நிலைசம் பூரணமா
    மகண்டா தீதம் சாட்சியதே. (ரு)

சாதி பேத மதபேதந்
    தர்க்க வாதந் துக்கமயம்
போத பேதம் புகழ்பேதம்
    பொருள்சொற் பேதந் தவபேதம்
பூத பேத மனப்பேதம்
    புத்தி பேத மருட்பேத
மாதி பேத மெவைக்கு மெட்டா
    வகண்டா தீதம் சாட்சியதே. (சு)

மனுமிற் கண்ட பொய்ப்பொருள்கள்
    மறிக்கும் வித்தைக் கொவ்வாது
வினவி டைக்குள் ளடங்காது
    விண்மண் வெளியும் பூதமயம்
பனுவல் பனுவாம் பொறியியக்கம்
    படிந்த வமைதி சாந்தமதே
அனுநீ யத்துக் கந்நியத்துக்
    ககண்டா தீதம் சாட்சியதே. (எ)

மவுத்தென் பதுவாம் பொறிகாண
    மலியா தமைந்த நிராசையிலே
தவத்தின் னினைவு மனமுயிருந்
    தானுந் தலைவ னென்பதிலை

பவத்தின் வித்து மனநினைவே
　　பதறு தொடுக்க வறிவாசு.
அவஸ்தைக் கெட்டாச் சுத்தசுகத்
　　தகண்டா தீதம் சாட்சியதே. (அ)

கதிதி தாநினை வுடன்மறதி
　　காமக் குரோதா திகண்ணரகம்
விதிநி டேதம் பொருந்தல்விடல்
　　வித்தை யவித்தை சுகதுக்கம்
மதியை யுணர்த லேவிதியாம்
　　மவுன சொரூப மாயிருத்த
லதிதீ விரத்தி ருயிரே
　　யகண்டா தீதம் சாட்சியதே. (சு)

பூதபௌ திகம் பிரளயமே
　　புவனத் திச்சை காமப்பேய்
வேத பாகியர்க் கெட்டாத
　　வேத மார்க்க நன்னெறிகள்
போத மலியா தகம்பு றத்தும்
　　பொய்யை யொழித்துப் பொருளாறு
லாதி யந்தம் நடுவெளியு
　　மகண்டா தீதம் சாட்சியதே. (ய)

எட்டாவது சாட்சிப்பதிக முற்றிற்று.

---

## ஒன்பதாவது

## பரமானந்தப் பதிகம்

---

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

அருமை யாத்ம ஞானநெறி
　　யல்லால் வேறு கதியில்லை
யெருமை கலக்குந் தன்மைபோ
　　லெண்ணம் புவிபோ கங்கலக்கத்

தரும மேகந் தெளிவொளியின்
தடத்தை மறந்தங் குழலாமற்
பருவ மறிந்து தனைத்தெரிய
பரமா னந்தஞ் சுகமிலையே (க)

எரியும் விளக்கில் வந்துவிழுந்
திறக்கு மசகம் போலுலகத்
திரயத் திச்சை தனில்மயங்கித்
திகைத்தே யுழலு மனுப்பகரு
நிரய துக்கங் காமவெறி
நீங்க சபாஅத் துல்குபுறு
பரிபூ ரணத்தன் புருதனிலே
பரமா னந்தஞ் சுகமிலையே. (உ)

இக்கு நிற்க வெள்ளாடு
இலையைத் தின்னும் வாறதுபோற்
றுக்க மயமாம் பகிர்முகப்பேய்
தொட்டு விடய சுகங்கொள்வர்
தக்க மதயா னைகரும்பைத்
தகர்த்தங் குண்ணு மின்பம்போற்
பக்க மற்று லேகரசம்
பரமா னந்தஞ் சுகமிலையே. (௩)

விந்தை தன்மாத் திரையதனை
விளங்கு மிந்தி ரியமுணரு
மிந்தி ரியந் தனையுணரு
மிதமா மந்தக் காரணமதே
அந்தக் காரணந் தனையறியு
மாத்மா தன்னைத் தானறிந்து
பந்த பாசத் திரையறுக்கப்
பரமா னந்தஞ் சுகமிலையே. (௪)

அவமா யங்ய வுபாசனைக
ளநித்ய சுவனத் திச்சையதுங்
கவலை துக்கம் நரகபயங்
கடிந்தங் ககலத் தெண்டிப்புத்

துவித மதவா தனைமயக்கஞ்
சூத றிந்தாற் பயமிலையே
பவது வந்துவ மற்றகலப்
பரமா னந்தஞ் சுகமிலையே. (ரு)

எறியும் பரவைத் துரும்பாக
எண்ணம் மனதைத் தானலைக்க
வெறிகொள் குரங்கு போற்றாவி
வேறென் றுன்னித் தவஞ்செய்து
பொறிக ரணங் கூத்தாடப்
பொய்யாம் பதவி தேடாமல்
பறிபட் டவாக்க ளற்றகலப்
பரமா னந்தஞ் சுகமிலையே. (சு)

வானி ருக்கிற் பூவிருக்கும்
வைய மிருக்கெவ் வகையிருக்குந்
தானி ருக்கிற் பொருளிருக்குந்
தானற் றிடத்தத் துவம்நசிக்கும்
நானி ருக்க வேறிருக்கும்
நானற் றிருக்க வுண்மையது
பானி ருக்க நிலவெறிக்கும்
பரமான ந்தஞ் சுகமிலையே. (எ)

வித்தி ருக்க மழையிருக்க
விண்காற் றனல்நீர் மண்ணிருக்க
யெத்தா தண்டபிண் டமிருக்க
இறப்பும் பிறப்புந் தாமிருக்க
கத்த னிருக்க வெவ்வுலகுங்
காற்று லழியு மென்றதுவும்
பத்தி மாணு வத்தையாம்
பரமா னந்தஞ் சுகமிலையே. (அ)

இடமா மசல வெளிபோல
இதயா காசந் தெளிவாலே
கடமா மகித்ய நியானம்போய்
கற்ற திழந்து மனங்குளிர்ந்து

திடமா மெதார்த்த சொரூபமதின்
 தீட்சை சுபாவந் திருந்திமனம்
படிய சுயஞா னந்தானே
 பரமா னந்தஞ் சுகநிலையே. (கூ)

தனனை யறியத் தவமில்லை
 தானு யிருக்க வேறில்லை
பின்னை யெவையு முணர்வதிலைப்
 பிறவா திறவா துளம்லயித்து
முன்னை பின்னை என்பதற்று
 முழுத்து றவு தானுகிற்
பன் னுங் கிரியா சாரமிலை
 பரமா னந்தஞ் சுக நிலையே. (ய)

ஒன்பதாவது பரமானந்தப்பதிக முற்றிற்று.

---

பத்தாவது

## பாமுத்திப் பதிகம்

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

அறிவேதண் ணருளேநின் னயமேவிண்
 ணொளியேமன் னுயிர்க்க கண்ட
நெறியேநின் மலமேசின் மயமேதன்
 மயமேபொய்ந் நேதி செய்யக்
குறியேது குலமேது மனமேது
 நினைவேது குன்று வின்ப
முறியாத சுகநிலையே கண்கா ணுங்
 காட்சிபர முத்தி சித்தே. (க)

தகவான வுவமையெது கற்பிதங்கள்
 நாமரூ பத்த வங்க
ளிகமேது பரமேது மனமலினத்
 திரயமது வெண்ண முன்னல்

சுகமேது துக்கமெது வாசனையின்
பழக்கமது சுட்ட றிந்தே
முகமாகி லானந்தங் கண்காணுங்
காட்சிபர முத்தி சித்தே. (உ)

திருவாகி யண்டபிண்ட சராசரங்க
டாளுகித் திருக்கு மாகி
யருவாகி யருவுருவுக் கதீதமுமா
யகண்டவெளிக் கப்பா லாகி
சருவமய சாட்சியாய் நித்யமாகிச்
சதானந்த சாந்த மாகி
மருவாகி யறிகுருவாய்க் கண்காணுங்
காட்சிபர முத்தி சித்தே. (ங)

தேகமென்றுந் தேகியென்று மறிவதென்று
மறிவானென் றுந் தேடி யோடிப்
பாகமென்றும் வெளியென்றும் புத்தியாத்மா
தானென்றும் பாகி யத்தால்
மாகமென்றும் அறுஷிலென்றுங் குறிஷிலென்றும்
மனமயக்க மலினத் தாலே
மோகருன்றம் பற்றெழியக் கண்காணுங்
காட்சிபர முத்தி சித்தே. (ச)

கத்திலென்னக் கரைந்தென்ன விரைந்தென்ன
நினைந்தென்ன கருதித் தேடி
சுத்தியாடிப் பாடிலென்ன விடயஞானத்
தடிப்பாகிச் சுழன்ற போதில்
புத்திமருண் டந்நியமா நாமரூபப்
பேயாட்டப் புன்மை விட்டு
முத்துரியங் கடந்தறிவாற் கண்காணுங்
காட்சிபர முத்தி சித்தே. (ரு)

தப்பாம லெத்தனையோ மந்திரங்கள்
யிசுமசுமா தன்னை யோதி
செப்பாம லஜபாவாய்க் குருவுருவந்
தனைநினைந்து தேடித் தியானந்

துப்புவெண்மை கருமையெண்ணி சுவாசபழக்
கஞ்செய்யுந் துக்கம் விட்டால்
முப்பாழும் பாழ்வெளியே கண்காணுங்
காட்சிபரா முத்தி சித்தே. (௬)

எக்குணமு மிருந்தென்ன சற்குணமே
நிற்குணமே யேகா னந்தஞ்
சிக்குமனப் பேதைமைகள் பேய்நாய்போற்
கத்துமலச் சிந்தை யில்லை
பிக்கென்றார் திக்கென்றார் மனனமுடன்
யூகமுமே பின்ன மற்றால்
முக்கியவா னந்தசுகங் கண்காணுங்
காட்சிபரா முத்தி சித்தே. (௭)

திக்கொடுதி காந்தமெங்கும் பேர்பெற்ற
வேதியர்முன் செய்யி தென்று
மெக்கரும யோகமிசு மசுமாக்க
ளோதிமையத் தெழுப்பி லென்ன
துக்கமிது மனோதத்வ ஜாலவித்தை
மாக்கள்மருட் டுச்ச வாட்டம்
முக்கரணத் திரைகடக்கக் கண்காணுங்
காட்சிபரா முத்தி சித்தே. (௮)

வருவதென்றார் போவதென்றா ருள்ளதென்றா
ரில்லதென்றார் வந்தியா மைந்தன்
னுருவமென்றா ரருவமென்றார் பருவமென்றார்
திராவியங்க ளுணர்ந்தி டாமற்
றருவதென்றார் பெறுவதென்றா ரன்யமென்றார்
சம்சயத்தின் றடங்க டந்து
மருமமறிந் தகந்தெளியக் கண்காணுங்
காட்சிபரா முத்தி சித்தே. (௯)

சரியையென்றார் கிரியையோகந் தவங்களென்றார்
ஞானப்பகை தன்னைச் சார்ந்து
புரியும்நிட்டை தியானமென்றார் வாய்வழங்கா
மவுனமென்றார் புண்ய பாவம்

பெரியதென்ருர் சிறியதென்ருர் வாய்ஞான
மார்த்தவாதப் பின்ன மற்றே
மருவுசித்தன் காலங்குடியான் கண்காணும்
காட்சிபரா முத்தி சித்தே. (ல)

பத்தாவது பராமுத்திப்பதிகம் முற்றிற்று.

மேஞ்ஞான சதகம் முற்றிற்று.

ஆூ செய்யுள் அ-க்கு திருவிருத்தம் சாாகூச

---

பிஸ்மில்லாஹி

ஐந்தாவது

# பூரண சதகம் 101

---

முதலாவது

## பராமார்த்தப் பதிகம்

---

### இரட்டை ஆசிரிய விருத்தம்

சிருருஞ் சிற்சொருப பொருட் சொச்சந்த
சித்துசத் தானந் தமே
சின்மயத் திருவரு ளுண்மயம் பாவெளி
சிர்ருன மஃது தாத்து
காரிருள் வெளிச்சமுன் போருருவு மற்றநிலை
கங்குல்பக லறுநித் தியந்
கலப்பறு முண்மையா நிலையசு ரார்முனே
கருதொணு வமாசூ நியம்
நேருரு சமாவ தாந்தபிஅத் தெனும்பூமி
நேமம்நி றைந்து பொங்கி
நிலையாந்த பீஅத்தை பிணைவைத்தி டும்நுத்துபா
நெறிசெப்பாஞ் சிப்பி தனிலே
பாருறுந் தோற்றங்கள் அசுமா கவாசுகள்
பகுத்துணர வெட்ட வெளியே
பராமார்த்த பரிசுத்த நிரதிச யானந்த
பரிபூர ணனந் தமே. (க)

அறிவாத்மா தன்னிலோ குறியா வியாபக
மன்வா ரொளிவு தனிலோ
வசைவற்ற நிறைவிலோ வசுரா று தன்னிலோ
வருள்மிகு கமால்தன் னிலோ
நெறியாம் பொருணிலை துரியவி சாலிலோ
நேர்த்தி அப் ஆல்தன் னிலோ
நேசவிசு வாசகுண ஜெல்லியசு மாவிலோ
நினைவாகு மக்கூ திலோ
பொறிபுலன் காணலய துரியாதி தத்திலோ
போதமதி சாந்த மதிலோ
போதிக்குஞ் சிரவணஞ் சாதிக்கு மனவெளி
பொய்யெலாஞ் சுட்டொ ழித்துப்
பரிபக்கு வத்தீட்சை துறவற மில்லறம்
பற்றகல பாமுத் தியே
பரமார்த்த பரிசுத்த நிரதிச யானந்த
பரிபூர ணானந் தமே. (உ)

கலப்பறு மஃலிலோ சொலத்தகாத் தாத்திலோ
கருத்தெழுங் கிபுரி தனிலோ
கன்சுலந் தர்பாவ முன்பின்னி லாதேகக்
கலம்பலகை குருசறி திலோ
நிலையங்க தீம்அமா சலியாத பூர்த்திசதம்
நிறைந்திடு வியாப கத்தே
நிச்சய மஹறிதென்ற துச்சித நாமமே
நிலவிடு முஹறது முன்னந்
தலைமைமிகு வாஹிதாம் பலனூறு சிவான்மா
தனைத்தா னுணரு மின்சான்
தன்னறிவு தன்னிலே பின்னறிவி லாநெறி
தத்துவக் குப்பை யிவையே
பலகா ரியத்திரய கலையாக மஞ்சொலைப்
பற்றறு சுகமுத் தியே
பரமார்த்த பரிசுத்த நிரதிச யானந்த
பரிபூர ணானந் தமே. (௩)

சித்தசுத் தந்தானே யத்தநிலை வெட்டவெளி
சித்தநி ரோத முத்தி
சீவன்சி வனென்ற பாவபுண் ணியமெனுஞ்
சிந்தனை கடந்த வெற்றி

புத்தகக் கதையெலா மெத்தப்ப டித்தோர்க்கு
புவனமாம் பேத திருட்டி
புலவர் சமத்துரை கலைஞான மென்றெணி
புகழ்பவர்க் கன்ய வெட்டி

செத்தபி ணங்களை மெத்தப் புகழ்ந்துளஞ்
சேவித்த லறிவு மட்டி
சேதன வியாபக சாதனம் விளங்காத
செத்தைகட் குயிரில் லையே

பத்தற்ற மனனமொடு நித்தியந் தெளிதலே
பக்குவந் தெளிமுத் தியே
பாமார்த்த பரிசுத்த நிரதிசய யானந்த
பரிபூர ணானந் தமே. (௪)

தல்சிமா மந்திர மல்பகலு மோதிட
சங்கற்ப சலன மலினந்
தனுகாண புவிபோக மெனுங்கரும வாதனை
தற்போத மன்னிய பூசை

கல்பெனு நாயலைந்து செல்வழியெ லாமோடக்
கருதிய குரங்கு சேட்டை
காலமென் னேரமும் வேலையுமொ ழிந்தநிலை
காமசமு சார பந்தந்

தொல்புவிக் காளாகி சொல்வதறி யாதுமலத்
தொல்லைபே யாயு மூன்று
தோணுங் கனவினைக் காணுநற் காட்சியெனுந்
தோஷிகட் கறிவில் லையே

பல்விதத் தர்க்கிரியை யல்லவில் லாதேக
பாக்கியந் திருமுத் தியே
பாமார்த்த பரிசுத்த நிரதிசய யானந்த
பரிபூர ணகந் தமே. (௫)

பொய்யாகு முலகநடை சையோக தடைகளறப்
• பொய்யாத மெய்யித யமே
போதகிர் மலசுகம் வேதமுடி வானநிலை
போதிக்கு மறிவே குரு
ஒய்யார மொன்றுமில்லை செய்யுந்தொ ழிலில்லை
யோதுமத மந்திர மிலை
யொடுக்கமா தியுமிலை விடக்குமன மாயையிலை
யொழிந்தமன வெளிதன் னிலே
ஐயமே துமுளதோ துய்யசு யஞ்சோதி
யத்தநிலை சுத்த மவுன
மடயோக சின்முத்ரை விடயவி யாபார
மற்றொழிய வெட்ட வெளியே
பையரவி டங்காம நொய்யவி காரமற
பாசநா சமுத் தியே
பரமார்த்த பரிசுத்த நிரதிச யாநந்த
பரிபூர ஞானந் தமே. (கூ)

திரிபுடிந சித்துண்மை பரிபக்கு வத்தீட்சை
திருவருள் விலாச மவுனந்
திரையிலாப் பேரின்ப பிரக்ஞான பிரமமுந்
திகழ்ஹுஹூல் குதுசி ஷக்கு
அரியஅ னல்லாஹு முஹீத்தென் றவாக்கிய
மஹம்பிர மாஸ்மி யன்றே
அஸ்ஸமது மினல்லாஹி அயமாத்மா பிர்மமே
அல்லில் மலதுன் னியோ
தெரியுஞ் சுகச்சொரூப மறிவாத்மா பிர்மமே
தெவிட்டாத வேக ரசமே
தெளிவது இல்லல்லாஹு வழிதத்து வமசி
தெருளுருவ கண்டா தீதம்
பரிபக்கு வத்தின்ப துறவியர்க் கன்புரு
பலதொழி லறமுத் தியே
பரமார்த்த பரிசுத்த நிரதிச யானந்த
பரிபூர ஞானந் தமே. (எ)

ஏறுத மேட்டுக்கு நீராயி றைத்திடு
மெண்ணம ஞேராச் சிய
மிச்சைக்கோ ரளவில்லை பச்சமது வங்கிங்கு
மிடையிலே குருசீ டராங்

தீராத வாசனை மாறுத வாதனை
திக்கிரென் றலரி யாட்டங்
திரவிய முணராத பிரவிர்த்தி மலினமே
தீதாகும் பதவி யுதவி

சேராத மந்தமதி நூறுத வஞ்ஞானச்
செருக்கறச் சிவோக முத்தி
செய்யுங் குளிர்ரூஹி மின்னம்ரி றப்பியே
சிவமய மாத்மா வொன்றே

பாரா ரறியவிதி நூராகும் நிர்வாணம்
பரயோக நிறைமுத் தியே
பரமார்த்த பரிசுத்த நிரதிச யானந்த
பரிபூர ணனந் தமே. (அ)

திருவருள் விலாசமே பெருவெளிச் சுபாவமே
திருட்டிபே தந்தொ லேத்துத்
திருக்கந் தரமிலா துருக்கமு மஞேலயந்
திமிரமறு சுபாவ சித்தம்

நிருபாதி கத்திலே சருவசம் பூரண
நியதிக ளேந்த போதம்
நிட்டானு பூதியும திட்டானம் வேறிலை
நிரங்குச திருப்தி தனிலே

குருவா மறிவது மருவிப்பற் றெலாமறக்
குன்றுத தீர்த்த சாந்தி
குவலயக் கவலையிலா தவலங்க டந்தமனங்
குவிதலே சுத்த மௌனம்

பருவமிது வல்லாது வுருவருவ மேதுமிலை
பதமான வருள்முத் தியே
பரமார்த்த பரிசுத்த நிரதிச யானந்த
பரிபூர ணனந் தமே. (கூ)

கண்கண்ட தொன்றுமிலை தண்கொண் டகம்வெளி
காட்சியாத் மாதி ருட்டி
கர்ப்பூர தீபமென வுற்பவம ழித்தநெறி
கதிரொளி ஞானக் கினி
விண்கண்ட வெட்டவெளி திண்கொண்ட புத்தியில்
விசாரித்து ணர்ந்த தறிவு
விமுக்தர்க் குபாயமோ தமக்கந் நியமற
வியோமமென வேக ரசமே
மண்கொண்ட பவுதிகம் பெண்பொன்னே டணையாலே
மாயப்பி ராந்தி மலினம்
மனோநாச மாகிடக் கனவவஸ் தைகளில்லை
வாசனை க்ஷயம்பூர்த் தியே
பண்கொண்ட கமலத்தி லெண்கொண்ட தொன்றுமிலை
பதவியிலை பாழுத் தியே
பரமார்த்த பரிசுத்த நிரதிச யானந்த
பரிபூர ணனந் தமே. (ய)

முதலாவது பரமார்த்தப்பதிக முற்றிற்று.

---

## இரண்டாவது

## ஆராய்வுப் பதிகம்

---

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கருணை நிறைந்த திருஞானங்
கமல முணர்ந்த தெளிவாலே
பொருளை விளங்கிப் பொருட்டானும்
போதந் தெளிந்த பூர்த்திநிலை
மருளா மனதின் காருண்ய
மவுன னந்த மன்புருவே
யருளே தனைத்தா னறியாம
லாரைத் தெரிவே னஹந்தானே. (க)

நம்பி யிருந்த வுலகசுகம்
நாணு பேதம் பொய்த்தோற்றந்
துன்பந் துவித மனமலிந்தே
துக்க மயமாம் சந்தேக
வம்ப கம்பா வத்திரய
வாசனை யற்றொரு மைபெற
வன்பே தனைத்தா னறியாம
லாரைத் தெரிவே னஹந்தானே. (௨)

செம்பொ னுலகத் தாசைகொடு
செய்யுங் கிரியா திதவங்க
ளின்ப விடயப் பேராவ
லிச்சை யனந்தந் திரிசியமேத்
தம்ப மிதிலோ ரணுவுமில்லை
தர்க்க வாதத் திரையறவே
யன்பே தனைத்தா னறியாம
லாரைத் தெரிவே னஹந்தானே. (௩)

குறியா யுழலும் சாஸ்திரங்கள்
கூறும் சுவனத் தலங்கார
வெறியே கொண்டு வணங்குமந்த
வேத பாகியர்க் ககமலினம்
பொறிபு லன்கர ணமமைந்து
பொய்யை யொழித்துப் பூரணமா
யறிவு தனைத்தா னறியாம
லாரைத் தெரிவே னஹந்தானே. (௪)

சித்தஞ் சலிக்க ஜெகமுறிக்க
சிந்தை வயங்கப் பகிரொடுங்க
வித்தை யுதிக்க வினையொழிக்க
விடய மறக்கத் திடாறுக்க
புத்தி விளங்க நிலைதுலங்க
புன்மை யநித்யப் புகழழிக்க
வத்தந் தனைத்தா னறியாம
லாரைத் தெரிவே னஹந்தானே. (௫)

மைக்கண் மாதர்சு வர்க்கமதில்
மருவிச் சுகிக்க மனதெண்ணி
வைக்குந் தவங்கள் பேராவல்
வந்தியா மைந்தன் வாழுலகுங்
கைக்குக் கிட்டாக் கனுத்தோற்றக்
காம பந்தத் திரைகடக்க
வையந் தனைத்தா னறியாம
லாரைத் தெரிவே னஹந்தானே (சு)

புகலு ங்காய மலருலகைப்
புகழ்ந்து மகிழ்ந்து சுகந்தேடிப்
பகலு மிரவுந் தொழுதழுதப்
படைப்பி னங்க டனைப்போற்றி
யிகழு மந்யவு பாசனைகொண்
டிணையிற் சிக்கா துளங்குவிந்தே
யகமாந் தனைத்தா னறியாம
லாரைத் தெரிவே னஹந்தானே. (எ)

விமல போதந் தெளியாமல்
விவர்த்த வாதத் தடிப்பாலே
கமலக் குரங்கு கடனமிடக்
கற்ற கல்வி பறையடிக்கத்
தமசி லகப்பட் டுவமைசொலி
தர்க்கத் தலையா தெலாமறந்தே
யமைதி தனைத்தா னறியாம
லாரைத் தெரிவே னஹந்தானே. (அ)

பிறவித் துன்பம் பேயாட
பிணுந்தற் போதந் தாளமிட
வுறமு றைரா கம்பாட
வூரோ ரெல்லாந் திரைநாட்ட
குரவ ரெலாம்வே தம்பாடக்
கூடி யுலகத் தழுந்தாம
லறிவாந் தனைத்தா னறியாம
லாரைத் தெரிவே னஹந்தானே (சு)

குபிர்வி ளைந்த கூட்டங்கள்
கூடி வேதந் தானோதிக்
கபுர்வ ணங்கி கத்தமோதி
கருதி யனேகந் தான்கேட்டு
சுபசோ பனங்கள் சொல்லியழும்
சுவார்த்த பேத முறையழித்து
அபயந் தனைத்தா னறியாம
லாரைத் தெரிவே னறந்தானே. (ய)

இரண்டாவது ஆராய்வுப்பதிக முற்றிற்று.

---

## மூன்றாவது
## நிரயப் பதிகம்

---

### எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

சந்தத மாறு வானந்தஞ் சர்வ
சாக்ஷிதா னுன நித்யம்
வந்ததி ருந்த தென்றிலாப் பூர்த்தி
மாகம்பூ வேக மயமே
யந்நிப கலோன் றில்லா துளத்தே
யறிவாய் நிறைந்த காட்சி
சொந்த சொரூப மறியாத போது
துக்கநி வர்த்தி யிலையே. (க)

பட்டப் பகலே வெட்ட வெளியே
பார்க்கக் குருடோ விழிகள்
சட்டதிட் டங்கள் சாஸ்திரம் பார்த்துந்
தன்னைத் தெரிவ திலையே
விட்ட விதிபோ லாகுமென் றெண்ணி
விருதாவில் மாய்வ தேனோ
துட்டக் குணத்தி லுற்ற நிரயந்
துக்கநி வர்த்தி யிலையே. (உ)

வாக்கொத் திதைய நினைவற்ற வேக
வழியொத் தகம்வ யங்கி
நீக்கற் றறிந்து தாக்கற் றசுத்த
நிர்வாண நிட்டை சாந்த
மூக்கம் சுயாட்சி மோக்கத்தி னாட்சி
யுண்மை யுணரார் மாயத்
தூக்கத்தி னிச்சை சிற்றின்ப தொல்லைத்
துக்கநி வர்த்தி யில்லையே. (௩)

எத்தொழி லெக்கி ரியையா சார
மெண்ணம் பலவி னைத்து
புத்தி விகற்பங் கத்தித் தியங்கி
புகழுதல் மித்தை புதுமை
நத்தி நரக யாதனைக் கஞ்சி
நாணுவாய்த் தேடி நாடல்
சுத்த மனதில் லாதசந் தேகந்
துக்கநி வர்த்தி யில்லையே. (௪)

பாதை யனந்தஞ் சொல்வ தனேகம்
படிப்பது காம நூற்கள்
பேதைகள் போற்றுஞ் சுவர்க்கமே நம்பிப்
பேணுந்த வங்கள் பின்னங்
காதைக்கண் ணூசி வாயை யடைத்து
காற்றைப் படிக்குங் கன்மந்
தோதைத் தெரியார் சொன்ன மதங்கள்
துக்கநி வர்த்தி யில்லையே. (௫)

பேதைகள் போற்று மலடி மகனைப்
பெரியோர் தாலாட்டி யூட்டி
யோதிவ ளர்த்து சிங்காரித் தின்ப
முல்லாசங் கொண்டு கந்து
வேதம்ப டிப்பர் கந்தூரி செய்வர்
வேடந் தரித்தோர் மார்க்கந்
தோதகம் நாம ரூபப்பே யாட்டந்
துக்கநி வர்த்தி யில்லையே. (௬)

ஞான சூரிய வக்கினி யாலஞ்
ஞான விருளை நீக்கி
மோன சொரூபந் தானென காட்சி
முழுதுந் துறந்தோ ராட்சி
ஈனப் பிராந்தி மாய மலின
விச்சை கடிந்த மனதின்
சூநிய வெட்ட வெளியுண ரார்க்குத்
துக்கநி வர்த்தி யிலையே. (எ)

கால முழுது மழுதே சலித்துக்
காரிய துவித கிரியை
வேலைகள் செய்து வேதங்க ளோதி
வெளிவேட மிட்ட லைந்து
மூலமோ டாறு தலமென் றுழைத்து
முணுமுணு மந்திர வாதந்
தூலதி ருட்டி லோகதி ருட்டி
துக்கநி வர்த்தி யிலையே. (அ)

பள்ளை நிறைய வுண்டே யுறங்கிப்
பாவையர்க் காளாய் நாளும்
வெள்ளத்தி லேகுங் கரடிபி டித்தோன்
விதம்போற் குருவை நம்பிக்
கள்ளசிற் றின்ப தாபத் திரயக்
காராக் கிரகத் தற்றுத்
துள்ளும னப்பே யாட்டம் பெருக்க
துக்கநி வர்த்தி யிலையே. (கூ)

ஆட்டுங் கரங்கு சாட்டைதான் போல
வலையா தகல நின்று
கோட்டிரா னென்ற சுற்ற லொழிந்து
கோதறல் சுத்த சுவனம்
நாட்டிய மாடு முலகை மதித்தல்
நமன்வாதை நிரய துன்பந்
தோட்டிகள் போலு மாடலும் பாடல்
துக்கநி வர்த்தி யிலையே. (௰)

மூன்றாவது நிரயப்பதிக முற்றிற்று.

நான்காவது

# வேறில்லைப் பதிகம்

## கோச்சகக் கலிப்பா

தெரிந்ததேது தெரிவதேது சேதனத் தெளிவிலே
யிருந்தசோதி ஞானமேக விவேகபுத்தி யுக்தியே
புரிந்தசரியை கிரியையோக புன்மையற்ற மனதிலே
யறிந்துணர வெஞ்சிய தறிவலால்வே றில்லையே. (௧)

குறைந்திடா தகம்வெளி குறிப்பிலா துகப்பிலே
நிறைந்துளங் குளிர்ந்தபோது நிர்மலசி வோகமே
பறைந்திடா தனுபவமும் பற்றறுந் தெளிவுள
மறிந்துணர வெஞ்சிய தறிவலால்வே றில்லையே. (௨)

தறிமனித னென்றுகண்ட தடையஞ்ஞான மனதிலே
வெறிதானந்த காரமாயம் வேற்றுமைமந் ததாம்
பொறிபுலன்வே றுயுணர்ந்த பொய்மயக்க மற்றிட
வறிவுதானே யெஞ்சிய தறிவலால்வே றில்லையே. (௩)

திறந்துளந் தெளிந்தபோது திரைமறைப்பி லாமலேத்
துறந்தவேக ரசமனதே துரியவாழ்வு தன்மயம்
பிறந்துமுன்று நினைவுதானும் பின்னிடாது நனவிலே
யறிந்துணர வெஞ்சிநின்ற தறிவலால்வே றில்லையே. (௪)

கருதியோதி நாடிவாடிக் காலம்வீண்போ காமலே
யுறுதியாக மனதமைதி புண்மைஞான நெறியிலே
பொறுதியான மவுனனந்தம் பூரணம்பே ரின்பமே
யறுதியாக வெஞ்சிநின்ற தறிவலால்வே றில்லையே. (௫)

பிறந்தழிந்தி டாதநினைவு பிரக்ஞானசொ ரூபமாய்
சிறந்தபோதிங் கந்நியத் திருட்டிபேத மில்லையே
யிறந்திடா தகம்புறமு மேகசோஹந் தானென
வறிந்துணர வெஞ்சிய தறிவலால்வே றில்லையே. (௬)

கறந்தபால்மு லைபுகுமோ கடந்தவர்க்கு லகமோ
திறந்தபேர்க்குத் திமிரமோ தெளிந்தவர்க்கு மறைவெது
யெறிந்தசோதி ஞானசூரிய னெங்குமுள்ள தாலது
வறிந்துணர வெஞ்சிய தறிவல்லால்வே றில்லையே. (௭)

பறைந்தமந்திர மிசுமசுமாப் பாவனைக ளேவினை
விரைந்துரைத்து மனமருண்டு விடயபோதங் கொள்வதோ
துறந்தவர்க்கி வைகளில்லை சுத்தநிட்டை மனநாச
மறிந்துணர வெஞ்சிய தறிவலால்வே றில்லையே. (அ)

மறந்தபோது ஞானமில்லை வந்தபோ துலகில்லை
தெரிந்தபோது மறைவில்லைத் தெளிந்தபோ தினையில்லை
நிறைந்தவனு பூதிதன்னில் நிச்சயமெ தார்த்தமே
அறிந்துணர வெஞ்சிய தறிவலால்வே றில்லையே. (௯)

தனைத்தானே விளங்கிடத் தன்னிற்று னிறைந்தது
நினைத்தலும றத்தலும் நீர்மேற்குமிழி போல்வது
வினைத்தளுக்கெ லாமறவே விமுக்தநித்ய சுத்தமே
யனைத்தையும றந்தபோ தறிவலால்வே றில்லையே. (௰)

நான்காவது வேறில்லைப் பதிகம் முற்றிற்று.

---

ஐந்தாவது

## நிர்வாணப் பதிகம்

---

### கோச்சகக் கலிப்பா

மனமே ஜெகச்சொருப மனோராச் சியமலினங்
கனமே யதோகமனங் கற்பனைக் கென்சொல்வோந்
தினமே தனக்கன்யத் தியானச்செ ருக்கொழிய
யினமே யினஞ்சேர்ந்தா லெனக்கென்ன செய்வேனே. (க)

கனவே நினைவினுரு கயிற்றரா யிப்பிவெள்ளி
வினையே மனமயக்கம் விண்மலர் பறித்தோமே
நினைவே பிறப்பிறப்பு நியதிகளைந் தகந்துறந்து
யினமே யினஞ்சேர்ந்தா லெனக்கென்ன செய்வேனே (உ)

ஜெனித்துழல் மனமாயை ஜெகத்தோற்ற மித்தைகெட்டு
தனித்தக விளக்கநிலை தானேசு கச்சொருப
மனித்தியதற் போதமெலா மற்றவி யாபகத்தே
யினத்தே யினஞ்சேர்ந்தா லெனக்கென்ன செய்வேனே. (௩)

பனித்திரை ரவிமுகத்திற் பற்றற்றொ ழிவதுபோல்
மனத்திரை பகுத்தறிய வாசனைகள் தானிலையே
நினைத்தல் வெளித்தோற்றம் நினையாதெ லாமறந்து
யினத்தி னினஞ்சேர்ந்தா லெனக்கென்ன செய்வேனே. (௪)

கனித்தே னுருத்துசுகங் கற்பகத் தருவறிவு
சினத்தை யறுத்தேக சிவசொரூபந் தானாகி
யனைத்தையு மறந்துதனி லறிவகண் டாகார
மினத்தே யினஞ்சேர்ந்தா லெனக்கென்ன செய்வேனே. (௫)

தனத்தின் மகிழ்ச்சியிற் சமுசார பந்ததிரை
வனத்திற் குடியிருந்து வழக்கப்ப ழக்கமென்னே
மனத்தின் மனோரதிய மயக்கங் கடந்தேகி
யினத்தோ டினஞ்சேர்ந்தா லெனக்கென்ன செய்வேனே. (௬)

தனித்துத்தா னென்பதிலாத் தத்துவத் தெரிசனத்தே
வினைத்திரையெ லாம்நீக்கி வித்தையா னந்தத்தே
மனத்தெணமெ லாமற்ற மனோலயந் தெளிவாலே
யினத்தோ டினஞ்சேர்ந்தா லெனக்கென்ன செய்வேனே. (௭)

தனைத்தெரிந் தன்னியமுத் தடைமுப் பகைநீக்கி
ஜனத்தோ டிணங்காமல் ஜகப்பிணக் கொழிந்தேயுற்
பனத்தே யுணர்ச்சியொடு பாவபுண் ணியந்தொலைத்து
யினத்தோ டினஞ்சேர்ந்தா லெனக்கென்ன செய்வேனே. (௮)

குணங்குந்தற் போதகிலே குவலயத் தாசையது
வணங்கு மனநினைவு வையகவ ழக்கமதே
பிணங்கு மதவாதம் பின்னல றிந்துதனி
லிணங்கி யினஞ்சேர்ந்தா லெனக்கென்ன செய்வேனே. (௯)

அணங்கு சொர்க்கமென் றூரணஞ் சொல்வதுவோ
கணங்கள்பூ தம்பேய்நாய் கன்மக்காட் டைக்கடந்து
மணங்கமழாத் துமஞான மவுனம்பத் தினிசொர்க்க
மிணங்கி யினஞ்சேர்ந்தா லெனக்கென்ன செய்வேனே. (௰)

ஐந்தாவது நிர்வாணப்பதிகம் முற்றிற்று.

## ஆறுவது

# நேத்திரப் பதிகம்

### கலி விருத்தம்

விண்ணேயவ காசம்பர வெளியேமறை வில்லா
தண்ணேமனஞ் சலியாநிலை தானுந்தெளி யருளே
நண்ணேநிலை நிர்வாணமே நனவின்சுகத் துரியங்
கண்ணேதனைக் காணுதகண் கண்ணேவெறும் புண்ணே (க)

தனியேசிவ சொருபமது தானுகுந்தற் சாக்ஷி
யினியேயிணை துணையொன்றிலா வின்புருவைந் தருவே
சனியன்சமு சாரதிரை சமயப்பிணக் கறவே
கனியேதனைக் காணுதகண் கண்ணேபெரும் புண்ணே (உ)

சுருதியதிற் சொல்லாமலே சொல்லும்சுக நிட்டை
யுறுதிபர மானந்தமே யுபமேயதன் மயமே
துரிதமனத் தீவிரமே தூண்டாவிளக் கொளிநேர்
கருதிதனைக் காணுதகண் கண்ணேமலப் புண்ணே. (ங)

திருத்துஞ்சுய வறிவேமனத் திரையையறுத் தொட்டும்
பொருத்தமுள வுணர்ச்சியிலே போதம்பவ நாசம்
நிருத்தமிடு மறிவுருவே நிருபாதிகத் தெளிவு
கருத்திற்றனைக் காணுதகண் கண்ணேவிரு புண்ணே. (ச)

அண்டம்சரா சரங்களெலா மறிந்தவறி வாலே
யெண்டிசையுந் தானுயுண ரேகரச மவுனம்
விண்டிடவும் விளங்காதிது விற்பனம கத்திற்
கண்டிடாத விழிகளெலாங் கண்ணேமுகப் புண்ணே. (ரு)

அறுசிலொரு குருசிதனில் அல்லாவிருப் பென்று
மறைசொற்றது மிதையாகாச மறியறிவி னுண்மை
குறைவொன்றிலா நிறைபூரணங் குதிகொண்டிடு மவுனங்
கறையற்றிடக் காணுதகண் கண்ணேவினைப் புண்ணே. (சு)

எத்தனையோ நாமபேத மிரவுபக லோதி
யத்தனையும் நினைந்தேமன மதிலேதடித் துருவாய்
பித்தனைப்போ லலறியதாற் பின்னம்பல வர்ணங்
கத்தித்தனைக் காணுதகண் கண்ணேகடும் புண்ணே. (எ)

மறைவுமிலை மனமுமிலை மந்திரநா மங்கள்
பறைவதிலை நினைப்பதிலை பண்ணுந்தொழி லில்லை
குறைவதிலை பெருக்கமிலை குணமலின மில்லை
கறையறவே காணாதகண் கண்ணோவெறும் புண்ணே. (அ)

சுத்தசுக மென்றால்வேறு சுத்தாசுத்த முளதோ
வித்தைசுக மென்றாலும் வித்தைக்கிட முண்டோ
சித்தசுக மென்றால்வேறு சிந்தனைக ளிலையே
கத்தாமலே முத்திபரங் காணாதகண் புண்ணே. (கூ)

வழங்குஞ்செகச் சொருபமன மறந்துபரந் தானாய்
முழங்கும்நிரு வாணநிலை மோனவுரு ஞானம்
விளங்குந்துரி யாதீதமே விருத்திஞான நிலையே
களங்கமறத் தனைக்கண்டிடுங் கண்ணேயகக் கண்ணே. (ய)

ஆறாவது நேத்திரப் பதிகம் முற்றிற்று.

---

ஏழாவது

## மலினப் பதிகம்

---

கலித்துறை

ஆதியென் றாரேய நாதியென் றாரேய கண்டவெளி
சோதியென் றார்பல தோற்றமென் றார்மறை சொல்லிலென்றார்
நீதியென் றாரே விதிவிலக் கான நெறிதவஞ்செய்
போதமென் றார்தனைக் காண்பதுண் டோபரி பூரணமே. (க)

வேதமென் றார்சிலர் வேதாந்த போதவி ளக்கமென்றார்
நாதமென் றார்சிலர் நாதாந்த சூக்ஷ நடுவிலென்றார்
பேதமென் றார்சிலர் தத்துவக் கூட்டம் பொறிகரண
பூதமென் றார்தனைக் காண்பதுண் டோபரி பூரணமே. (உ)

வித்தையென் றார்ஞான விர்த்தியி ராகவி ராகமென்றார்
சத்தையென் றாரெலா மித்தையென் றார்புகழ் தன்னிலென்றா
ரொத்தையென் றாரேயு பயமென் றாரேயு பாதியிலே
புத்தியென் றார்தனைக் காண்பதுண் டோபரி பூரணமே. (ங)

தூரமென் றாரேச மீபமென் றார்பல தொல்லையென்றார்
பாரமென் றாரேய பாரமென்றார் வெகு பக்குவத்தின்
சாரமென் றார்சிலர் ரேசக கும்பச ரந்தொடுத்த
பூரக மென்றனர் காண்பதுண் டோபரி பூரணமே. (௪)

கண்ணிலென் றாரே புருவ நடுநிலை காட்சியென்றார்
விண்ணிலென் றார்சிலர் தன்னிலென் றாரேவி ரியுமென்றா
ரெண்ணிலென் றார்கல்வத் திருப்பிலென் றாரி கபரமும்
புண்ணிய மென்றனர் காண்பதுண் டோபரி பூரணமே. (௫)

அல்லிலென் றார்பக லுடும திரவி யன்பிலென்றார்
சொல்லிலென் றாரே தொழிலி லென்றார் ஜெகசொரூப
னெல்லையென் றாரிங் கங்குமென் றார்மல மிருவினையின்
புல்லறி வாற்றனைக் காண்பதுண் டோபரி பூரணமே. (௬)

பாவிலென் றார்தயிர் நெய்யிலென் றார்சில பக்குவஞ்செய்
காவிலென் றாரைந் தெழுத்தெட் டிரண்டுங் கலந்ததென்றார்
நாவிலென் றாரெட்டு தன்னிலென் றார்பொரு ளாறுபேதம்
போவிய றிவதாற் காண்பதுண் டோபரி பூரணமே. (௭)

ஆசையென் றாரேய றுசுகு ருசுமே லானதென்றார்
வாசியென் றார்சிலர் வாய்பேசா வூமைம வுனமென்றா
ரோசையென் றாரநிர் வசனீய மாகிய வுள்ளந்தனிற்
பூசையென் றார்தனைக் காண்பதுண் டோபரி பூரணமே. (௮)

நாட்டமென் றாரே சுழிமுனை நாசி நடுவதிலே
தேட்டமென் றார்ஷெய்கைக் காண்பதென் றார்திக்கிர் பிக்கிரிலே
யாட்டமென் றார்சுக்கு றுக்கத்தி லென்றாரஞ் ஞானமனப்
பூட்டைத்தி றவாது காண்பதுண் டோபரி பூரணமே. (௯)

மந்திர தந்திர மச்சரத் தாற்சுத்த மார்க்கமென்றார்
சந்திர சூரிய கலைமதித் தாற்பொது சமயமென்றா
ரிந்திர ஜாலவி லாயத்து சித்திவி ணக்கமென்றார்
புந்திம யக்கத்தாற் காண்பதுண் டோபரி பூரணமே. (௰)

ஏழாவது மலினப் பதிகம் முற்றிற்று.

எட்டாவது

## புகழ்ப் பதிகம்

### கலி விருத்தம்

ஒருமைதனி லுணர்வழியே யுண்மைநிலை யானு
விருமைபல பாசபந்த மிராகத்துவே டங்கள்
கருமைசெம்மை வெண்மையிலாக் காட்சிநிஜா னந்த
மருமைதனை யறிந்தபின ராரைப்புகழ் வேனே. (க)

தஞ்சம்வேறே நம்பிப்பரி தாபம்பல திரயம்
நெஞ்சந்தனி லந்நியமு நினைந்ததந்த காரம்
பஞ்சகோசப் பழுவறவே பரிபூரணச் சொரூப
மஞ்சற்றனைத் தான்கண்டபி னாரைப்புகழ் வேனே. (உ)

பிரதிபலன் தேடிமனம் பிறந்தேஜக மிருக்கக்
கருதிநானு பேததவங் கட்டுக்கதை மறந்தே
சுருதியுக்தி யனுபவமே சுயஞானசி வோக
மறுதிதனைத் தான்கண்டபி னாரைப்புகழ் வேனே. (௩)

சுகமுந்துக்க விருத்தமிலாச் சுத்தவெளி தனிலே
சகமுமில்லை நினைவுமில்லை சமயச்சுமை யில்லை
பகலிரவு மற்றநெறி பாமுத்திசு பாவ
மகமுகமுந் தனைக்கண்டபி னாரைப்புகழ் வேனே. (ச)

முன்னானது பின்னுமென மொழியொணாத வருளே
யுன்னானது மனமாதிக ளுபாதியெலா மொழிந்த
வென்னுணவே றில்லாத வேகானந்த நிறைவே
யந்நியமி லாதறிந்தா லாரைப்புகழ் வேனே. (ரு)

ஊனந்தவி ருலககடை யுறவைப்புறக் கணித்து
ஞானந்தனில் ஞாயந்தெளி ஞாதாஞான ஞேயந்
தானந்திரை தடைவிடய தற்போதமொ ழிந்தா
லானந்தமா நித்திரையி லாரைப்புகழ் வேனே. (சு)

பத்யமொடு வேறின்றிய பக்குவந்தா னைக்ய
நித்யநிலை மனங்குவிந்த நிரங்குசமாந் திருப்தி
சத்யமொடு சாக்ஷிசுக சதானந்தமே யாட்சி
யத்யாரோப மற்றுவினி யாரைப்புகழ் வேனே. (எ)

பந்தத்திலே முத்தியிலே பழுதையது பாம்பு
மந்தத்தில்லை ராக்யமிலே மங்கையரு ளத்தில்
தொந்தத்திரை சிந்தையெனும் சோகமல மறுத்தா
லந்தத்துவ மற்றதினி யாரைப்புகழ் வேனே. (அ)

காருருவ திரைமறைவு காலங்கணக் கொழிந்தே
வேறுமொரு பொருளொன்றாத வெட்டவெறுஞ் சூன்ய
பேருருவ மற்றிடத்தே பேரானந்த முத்தி
யாரோபங்க டந்ததினி யாரைப்புகழ் வேனே. (கூ)

எத்தும்சரி யாதிசெய லெத்தொழிலு மற்றே
கத்தும்பல மந்திரமும் காமாதிக ளிழந்தே
புத்தியுக்தி யாலறிந்த பூரணத்தெ ளிவா
லத்தநிலே தனிலானபி னாரைப்புகழ் வேனே. (ம)

எட்டாவது புகழ்ப்பதிக முற்றிற்று.

---

## ஒன்பதாவது

## வஸ்துப் பதிகம்

---

### தரவுக் கோச்சகக் கலிப்பா

விஸ்தார மவகாச விவேகம் சுயஞானங்
கஸ்தியில் லாதீர்த்தங் காரணத்தின் பூரணத்தே
மஸ்துலா கிரிபோதை மாசற்ற நிர்விடய
வஸ்துத னில்விளங்க மனங்கலங்க மாட்டாதே. (க)

சுத்தசு கச்சொரூபஞ் சூதறியச் சோபான
மத்தநிலே தனிலே யத்தனையு மித்தையதே
புத்தியு ணர்ந்தநிலே புகலா வநுபூதி
வத்துத னில்விளங்க மனங்கலங்க மாட்டாதே. (உ)

அத்துவா பத்தியிலே யாசையற்ற பூசையிலே
நத்துவதொன் றில்லாமல் நத்துதல்கெட் டப்பாலே
தொத்தும் பலநினைவு தோற்றும னம்லயித்து
வத்துத னில்விளங்க மனங்கலங்க மாட்டாதே. (ங)

புத்தகங்க ளைப்பார்த்துப் பொழுதுவீண் போக்காம
லுத்தமவி ளக்கமொடு வுத்தேசத் துண்மைகொண்டே
சுத்தம கங்குளிர்ந்த சுகச்சொரூபந் தானாகும்
வத்துத னில்விளங்க மனங்கலங்க மாட்டாதே. (௪)

எத்தனைபே ரெத்தொழில்சித் தெத்தனைகள் செய்தாலு
மத்தனையுஞ் ஜெகஜால மத்தியா சங்கடந்தே
வித்தைசு கந்தனிலே விவேகமு ணர்ச்சியிலே
வத்துத னில்விளங்க மனங்கலங்க மாட்டாதே. (௫)

சாஸ்திரங்க ளாய்ந்து சங்கற்பவி கற்பமற
சூஸ்திர முணராமற் சுத்தசுகங் கிட்டாதே
மாத்திரை கடந்தறிவால் மனப்பே தைமைதொலைந்து
வாஸ்தவந்த னில்விளங்க மனங்கலங்க மாட்டாதே. (௬)

ஆஸ்தி பலதேடி யாருக்கோ வைத்துவிட்டு
சேத்துமங் கொதித்தாலோ செத்தழிந் தொழிவாரே
பூஸ்தித மக்கறிவு பூரணந் தெளிவாலே
வாஸ்தவப் பொருள்விளங்க மனங்கலங்க மாட்டாதே. (௭)

பாத்திரங்க ளேந்திப் பண்டாரம் பக்கிரென்றே
காத்திரமாங் காயாசங் கபனுடுத்த லைவதென்னே
ஆத்துமா பிரத்தியட்ச மறிந்தே யகங்குளிர்ந்து
வாஸ்தவந்த னைவிளங்க மனங்கலங்க மாட்டாதே. (௮)

இல்லறத் தொல்லைவிட்டே யெல்லாம றந்தேகி
நல்லறநிர் வாணசுகம் நாட்டதேட் டம்மிலையே
சொல்லறமெ லாங்கடந்த சொச்சொரூப நிச்சயத்தே
வல்லாசு தான்விளங்க மனங்கலங்க மாட்டாதே. (௯)

ஐயமெ டுத்துண்டே யங்கிங் கலைந்தாலுஞ்
சையோக லீலைவழி சமுசார பந்தமன்றோ
பொய்யைப்பொய் யாலழித்துப் போக்குவ ரத்தென்ற
வையகம றந்திருக்க மனங்கலங்க மாட்டாதே. (௰)

ஒன்பதாவது வஸ்துப் பதிகம் முற்றிற்று.

---

பத்தாவது

## கேவலப் பதிகம்

---

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

தந்திரமும் பிரவிர்த்தி யர்த்தவாத
மோக்ஷ வின்பத் தடைக ணீந்தி
மந்திரமும் பகிர்முகமு மாபாசக்
கதையென்னு மடமை துக்கங்
கந்தர்ப்ப நகர்த்தோற்றம் நிட்டைவழி
சொப்பனத்தின் காட்சி யற்றுற்
சந்ததமும் நிர்வாணங் கேவலவா
னந்தசுக சாக்ஷி தானே. (க)

அங்கிங்கென் றேதலில்லை யதுவிதுவென்
றுவப்பதில்லை யாசை யில்லை
பங்கமில்லை விடயசுக முள்ளதில்லை
சொற்செயலிற் பகுப்ப தில்லை
திங்கள்ரவி சுழினையில்லை வருவதில்லை
போவதில்லை தியான மில்லை
சங்கையெலாங் கடந்தவெளி கேவலவா
னந்தசுக சாக்ஷி தானே. (உ)

கற்றதெலாங் கல்வியல்ல வறிவுமல்ல
துவிதமதக் காய வேடஞ்
சொற்றதெல்லா மார்க்கமல்ல தீர்க்கமல்ல
வேற்கையல்ல தொழுதே விம்மிப்
பெற்றதெல்லாம் பேறல்ல பிறந்தோரெலா
மனுவலர்பிரக் ஞானந் தானே
சற்றேனு மயக்கமுண்டோ கேவலவா
னந்தசுக சாக்ஷி தானே. (௩)

மந்தமில்லை பிரதிபலன் றேடவில்லை
யனிர்வாச்ய மாய மில்லை
யந்தமாதி நடுவில்லை யெட்டிரண்டு
மைந்தெழுத்தா தார மில்லை

புந்தியில்லை பேதமில்லை கனவில்லை
நினைவில்புக ழிகழு மில்லை
சந்தேக மென்பதில்லை கேவலவா
னந்தசுக சாக்ஷி தானே. (௪)

சிந்தையில்லை சம்மதிக்கச் சாஸ்திரத்திற்
சொன்னதொரு சித்தி யில்லை
கந்தரச ரூபசப்த பரிசமில்லை
யதீதநிலை கற்பி தஞ்சொல்
சொந்தமில்லை யிரவில்லை மயக்கத்திற்
காண்பதில்லை தோற்று தல்ல
தந்தமில்லை தருவதில்லை கேவலவா
னந்தசுக சாக்ஷி தானே. (௫)

காற்றைப்போற் சலியாமற் கடலைப்போ
லலையாமற் கருத்து வேறு
யாற்றைப்போ லொலிக்காமற் கறங்குபோற்
சுழலாம லகங்கா ரத்திற்
சேற்றைப்போல் மறையாமற் றெருக்கூத்திற்
றியங்காமற் செயல்க டந்தாற்
சாற்றவொண் ணா தகங்குளிருங் கேவலவா
னந்தசுக சாக்ஷி தானே. (௬)

விதிநிடே தந்துவித வாதனைகற்
பிதமயக்க விவர்த்த சோகங்
கதியில்லை நிரயமில்லை முக்கால
முப்பகையின் கமன மில்லை
துதியில்லை புகழ்வதில்லை திரிபுடிதற்
போதமில்லை துக்க மில்லை
சதுவிதமாம் பதவியில்லை கேவலவா
னந்தசுக சாக்ஷி தானே. (௭)

கோலமில்லை நாமரூபங் குறிப்பதில்லை
சொல்வதில்லை குற்றஞ் சுற்றந்
தூலமில்லை தத்துவத்தின் கூட்டமில்லை
யாட்டமில்லை தொடரொன் றில்லை

வேலையில்லை முத்தேகம் காலமில்லை
யோலமில்லை விவேகந் தன்னிற்
றூலமில்லை நிராசைதனிற் கேவலவா
னந்தசுக சாக்ஷி தானே. (அ)

வானில்லை வெளியில்லை காண்பதற்கோ
வந்யமில்லை வாஞ்சை யில்லை
நானில்லை நீயென்னும் பேரில்லை
சொற்பொருளும் காநா வில்லை
யூனில்லை யுபயமில்லை விடயமில்லை
தடையுமில்லை யுணர்வு தன்னிற்
றூனில்லை யுபாதியில்லை கேவலவா
னந்தசுக சாக்ஷி தானே. (கூ)

போதமில்லை யிந்திரியம் பொறிகாணந்
திருசியம்பேய் பூத மில்லை
யாதமில்லை யவ்வா வில்லை வுட்லுயிரல்
லாதில்லை யறிந்து ணர்ந்தாற்
பேதமில்லை புதுமதத்திற்கா தாரமில்லை
கற்பிதங்கள் பிழைக டந்தாற்
றூதமார்க்க முண்மையில்லை கேவலவா
னந்தசுக சாக்ஷி தானே. (ய)

எங்கள்மத முங்கள்மதம் வேறென்றுந்
தனதென்றங் கிருப்ப தில்லை
பிங்கலையும் வடகலையுஞ் சுழிலையென்ப
தொன்றுமில்லை பின்ன மில்லை
யங்கமில்லை யாதார மேறுவது
மிறங்குவது மநித்திய பேதம்
சங்கையெலாங் கடந்தசித்தன் கேவலவா
னந்தசுக சாக்ஷி தானே. (யக)

பத்தாவது கேவலப் பதிகம் முற்றிற்று.

ஐந்தாவது பூரண சதகம் முற்றிற்று

ஆகச் செய்யுள் கூ-ங்கு திருவிருத்தம். நூாகூரு

பிஸ்மில்லாஹ்

ஆறாவது

# பேரின்ப சதகம் 101

---

முதலாவது

## தேசோமயப் பதிகம்

---

தரவுக் கொச்சகக் கலிப்பா

பார்கொண்ட தோற்றமெலாம் பரமாஞ் சொரூபமதே
நேர்கொண் டறிவினுரு நேமந் திருவுளமே
பேர்கொண் டதிட்டானப் பேதந் தொலைந்திடவே
சீர்கொண் டகம்புறமுந் தேசோ மயவருளே. (க)

அருவுரு வகண்டவெளி யவகாசத் தின்சுவையிற்
கருவுரு நசித்தநிலை கருமோபா சனையிலையே
யுருவுரு வன்பினுரு வுபாதிக ளபேதத்தே
திருவுருவம் நிர்த்தமிடுந் தேசோ மயவருளே. (உ)

அறிவா யகமாகி யானந்த நித்யசுக
நெறியாய் நிராமயமாய் நேமாதி கள்கடந்தே
குறியாத் திருநடனங் குன்றா மனவெளியே
தெறியா துளங்குளிரத் தேசோ மயவருளே. (ந)

கத்திம னந்தியங்கிக் கருத்துவே றெண்ணாமல்
முத்திக்கே துவாகு முழுத்துறவு சாதனமே
சுத்தசித் தந்தெளிந்த சுகநிட்டை நிர்வாணஞ்
சித்தங்கு விந்திடவே தேசோ மயவருளே (ச)

பூதபௌ திகமயக்கப் போலிதி ருட்டியிலே
வேதபா கியருரைகள் வேடிக்கை நாடகமே
போதமெவை யும்மறந்து புண்ணியபா வம்மிழந்து
சேதனவி ளக்கமுறத் தேசோ மயவருளே. (ரு)

விருத்தமு றுப்போலி விடயஞா னப்புகழை
கருத்தின் னினையாமற் கருத்தைமி கத்திருத்த
பொருத்தமே சுயஞானம் பொய்யாத மெய்யகத்தே
திருத்தம றிவுதயந் தேசோ மயவருளே. (சா)

வாதனைம னவிழ்ந்து வாசனைக ளொழிந்து
சாதனையெ லாமறிந்து சாதனமெ லாமுணர்ந்தே
போதனையெ லாமிழந்து போதனையி லேதெளிந்து
சேதனவி ருத்தியிலே தேசோ மயவருளே (எ)

வாக்கொத் துளங்குவிந்து வஸ்துநிச் சயமாகி
நீக்கமற் றேகபர நிஜானந்தப் பேறகமே
மோக்கமும் நிராசையிலே மோனசொ ரூபநிலை
தேக்குந் தனிற்றனே தேசோ மயவருளே. (அ)

தீதுமத வாதனையாற் றிகைத்தேம னஞ்சலித்து
தோதுபல வெண்ணியே தொழுதும ழுவதுவோ
சாதுசங் கம்பழுகித் தடைமுன்றை யுங்கடக்க
சீதசந் திரவதனந் தேசோ மயவருளே. (கூ)

தித்திக்குந் தேனமுதே தெவிட்டாத வான்மழையே
சுத்தித்தெ ளியவொண்ணுக் காருண்யப் பேரின்பே
புத்திவி கற்பமில்லாப் பூரணத் தெளிவாலே
சித்தநி ரோதவழி தேசோ மயவருளே. (௰)

முதலாவது தேசோமயப் பதிகம் முற்றிற்று.

---

## இரண்டாவது

## சோதிப் பதிகம்

---

### கலி விருத்தம்

வேத மோதி விவேகம் விளங்காமற்
பூத வேடனை போகந்த னைநம்பிப்
பேத வாதனைப் பின்னம கன்றிட
நாத விற்பனம் நாதாந்தச் சோதியே. (க)

இந்திர ஜால மெண்ணப் பிரளய
மந்திர வாத மாயத் திரிசிய
மந்தி யும்பக லற்ற மனவெளி
நந்தி டாநிலை நாதாந்தச் சோதியே. (உ)

அஷமை யும்மத் தெனும்பாச மற்றிட
பிஷமை துன்ப வினைப்பவ மில்லையே
கொடுமை கற்பிதக் கோட்டிம றந்திடும்
நடுநி லைமையே நாதாந்தச் சோதியே. (ங)

தன்னி லைமை தனைத்தான் விளங்கிட
முன்னி லைமை முழுதுமொ ழிந்திடும்
புன்னி லைமை புகழிக ழற்றிட
நன்னி லைமையி னாதாந்தச் சோதியே. (ச)

சாஸ்தி ரமுறை சற்று முணராம
லாஸ்தி பூஸ்தி யனேகமுந் தேடியே
வாஸ்த வப்பொரு ளைமறந் தேங்கிடும்
நாஸ்திகர்க் கெட்டா நாதாந்தச் சோதியே. (ரு)

நீநா னென்று நினைந்து தவம்புரி
மானாபி மான வாசனை யற்றிடத்
தானா யாவுஞ் சமத்துவத் தற்சாக்ஷி
நானாவற் றேகம் நாதாந்தச் சோதியே. (சு)

தின்ற வன்கனி தித்திப் பறிதல்போ
லென்று மாறா தினிக்கும்பே ரின்பமே
நின்ற சையா நிஜானந்த நித்திரை
நன்ற தாகிட நாதாந்தச் சோதியே. (எ)

ஊன மற்ற வுணர்வின் றெளிவிலே
தான மற்ற சருவவி யாபகம்
வான முற்றும் வளரொளி தேறிட
நான தாய்நிறை நாதாந்தச் சோதியே. (அ)

ஏவ லோடும் விலக விருமையும்
பாவ புண்ணியம் பற்றற் றொழிந்திட
தேவா மிர்தந் தெவிட்டா தகம்புற
நாவ சைந்திடா நாதாந்தச் சோதியே. (கூ)

ஆண வமல மற்றகு ருமயந்
தோணு வதெது சொச்சொரூ பக்தனிற்
காணு வதது தன்னிற்க ரைந்திட
நாண மேதினி நாதாந்தச் சோதியே. (ய)

இரண்டாவது சோதிப் பதிகம் முற்றிற்று.

---

மூன்றாவது

## தேன் பதிகம்

---

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

தனக்கந்ய முன்னு வேக தத்துவ விளக்கந் தன்னில்
வினைக்களங் கற்ற நேம விருத்திமெய்ஞ் ஞானந் தானே
நினைக்கும்பல் லவஸ்தை யின்றி நினைப்பெலாம் நேதி செய்த
மனக்கவ லைக ளில்லை மவுனப்பே ரின்பத் தேனே. (க)

என்னைத்தா னறியா வேளை யெண்ணிய பதவி நாட்டம்
பின்னிய வர்த்த வாதம் பிணக்கது குணக்கங் கோடி
தன்னையே தான றியத் தத்துவத் தெரிச னத்தே
மன்னிய திரைக ளில்லை மவுனப்பே ரின்பத் தேனே. (உ)

காந்தம்போல் மனது லகக் கம்பனம் சுகதுக் கத்தே
பாந்தளாம் பெண்ம யக்கப் பாசநே சத்த மூந்தி
தாந்தனந் தாந்தா னென்ன சங்கீத ராகம் பாடு
மாந்தர்க ளுறவ கல மவுனப்பே ரின்பத் தேனே. (ங)

நிறைவுறு வமல போத நிராசையில் மனங்கு விந்து
கறையறு நிர்வா ணத்தே கற்பித ஜெகமு மில்லை
குறையறு சுயஞா னத்தே குருவுரு வறிவாய் நிற்க
மறைவிலை யுறவொன் றில்லை மவுனப்பே ரின்பத் தேனே. (ச)

அந்நிய மில்லாப் போத மநித்தியம் நசித்தல் நேமந்
தன்னிய லறிதல் நிட்டை தடையறத் தெளிதல் காட்சி
யுன்னுவ தொடுங்கல் முத்தி யுபயமற் றிருக்கை சாக்ஷி
மன்னுயி ரன்பாங் காட்சி மவுனப்பே ரின்பத் தேனே. (ரு)

சங்கோச விகாச மற்ற சருவசம் பூர ணத்தே
முங்கிய வறிவே சூட்ச முக்கியா னந்தக் காட்சி
பொங்கிய சுபாவ சித்தம் பூரண மயமாய் நிற்க
மங்கிலாச் சுகச்சொ ரூப மவுனப்பே ரின்பத் தேனே. (சு)

வேதத்தின் விளக்கத் தாலே விருத்திமெய்ஞ் ஞானப் பேறு
பேதமு மொழிந்த வாழ்வு போரு ளுளம்ப ழுத்தல்
சேதன சுயம்பிர காச சேமமே நியாயத் துண்மை
மாதவப் மனம்ந சித்தல் மவுனப்பே ரின்பத் தேனே. (எ)

தாதமார்க் கத்து மூன்று சங்கற்ப விகற்பத் தாலே
போதமுந் துவித முன்னிப் பொய்மல விடய நிட்டை
பூதபௌ திகதி ருட்டி புன்மனக் களங்க மற்றால்
மாதவம் நிர்வி டயம் மவுனப்பே ரின்பத் தேனே. (அ)

விதவித மூலக பேத விவர்த்தசாத் திரப்ப ழக்கம்
பதவியு முதவி யுன்னிப் பாடலு மாடல் கோடி
சதமென வீணாய் நம்பி சமுசாரத் துழலுங் கெட்ட
மதகதை மறந்த போது மவுனப்பே ரின்பத் தேனே. (கூ)

அந்தியும் பகலு மோயா தனந்தமாந் தவங்கி ரியைத்
தொந்தமென் றுன்னி யோகித் தொல்லையில் மனம விந்து
பந்தபா சத்து மூன்று பதவிக ளுவந்து செய்யு
மந்திர யோக மற்றால் மவுனப்பே ரின்பத் தேனே. (ய)

மூன்றாவது தேன்பதிக முற்றிற்று.

---

நான்காவது

## தூதுப் பதிகம்

---

இதுவுமது

தண்ணருள் மதியே நீவத் தட்டிடா வவகா சத்தே
நுண்ணறி வாலு ணர்ந்த நுட்பமே நுவல வொண்ணு
நிண்ணயந் தெளியு ளத்தே நிர்மல வாழ்வே நீங்கா
விண்ணரு ளறிவே தூது வியாபக விளக்கந் தானே. (க)

தேசத்தில் வழங்கும் பேதத் திருசியத் துவித வின்ப
பாசத்தில் மருண்டு பேதப் பார்வையில் மதிம யங்கும்
நேசத்தின் விவர்த்த மெல்லா நேதிசெய் தகங்க ரிக்கும்
வேசத்தை மறத்துந் தூது வியாபக விளக்கந் தானே. (உ)

சிரத்தையே நிமித்த போதந் தீவிர தரப்பே ரின்ப
பரத்திலே சூநிய மாகிப் பற்றறும் நிர்வா ணத்தே
பிரத்திய காத்மா யூகம் பின்னமில் லாமற் சுத்த
விருத்தியி னறிவே தூது வியாபக விளக்கந் தானே. (௩)

போதமே பலவா யெண்ணி போக்குநீக் கேது மின்றி
பேதமே மனம விந்து பேய்மதத் தழுந்தி டாது
நீதமே நிறைந்த வுள்ளம் நிச்சயத் தச்ச மற்று
வேதமே முழக்குந் தூது வியாபக விளக்கந் தானே. (௪)

சித்தமே சலிக்க மாயச் சிந்தனை யனேக போத
நித்தமே சுவனங் கேட்டு நினைந்துபல் கிரியை செய்து
புத்திகள் சற்று மின்றிப் புலம்பிடு மதங்க ளெல்லா
மித்தையே யறிந்த தூது வியாபக விளக்கந் தானே. (௫)

ஆட்சியே லாயி லாஹ இல்லல்லா ஹூவென் றுனல்
சாட்சியே முஹம்ம துர்ர சூலுல்லாஹ் தானே தன்னில்
காட்சியே கலிமா வுண்மைக் காரணம் வேறில் லாத
மீட்சிமெய் யறிவே தூது வியாபக விளக்கந் தானே. (௬)

மாறிலா வறிவு ருவே மறைவிலாத் துரிய வாட்சி
கூறிடா தகம்பு றத்துங் குறைபடா தறிந்த நிர்த்தந்
தேறிடா ருலகை நம்பித் தேடுவ ரனித்தியம் நீங்கி
வேறிடா தறிந்த தூது வியாபக விளக்கந் தானே. (௭)

மனைமண்டு மக்கள் சுற்றம் வாழ்வொடு தாழ்வு மின்றித்
தினையள வெனினும் பந்தத் திரிசியப் பிணக்கில் லாது
நினைவதை நினைவுள் ளாக்கி நிலைப்பட லெதார்த்த மாகி
வினைமல மறுத்த தூது வியாபக விளக்கந் தானே. (அ)

பத்தியந் தனைத்தான் காணல் பக்திசை தந்ய முத்தி
சத்தியம் சாக்ஷியாட்சி சமத்துவ விமுக்த மோனம்
நித்திய க்ஷேம நிட்டை நினைப்பொடு மறப்பற் றுய்ய
வித்தியா னந்தத் தூது வியாபக விளக்கந் தானே. (௯)

வழக்கமோ முன்னே செய்த மயக்கமுந் தியக்க மின்றி
முழுக்கஞ்செய் மந்திரங்கள் முணுமுணுப் பெல்லா மற்று
பழக்கமுன் னிலைம றந்து பரவெளி போல்ம னதாய்
விளக்கமே யறிவு தூது வியாபக விளக்கந் தானே. (௰)

எண்ணிய மனோ ரதிய மிருதயத் தில்லா தோட்டி
புண்ணிய பாவ மென்னும் புதுமத வாத மற்று
நிண்ணயத் தகந்தெ ளிந்து நிர்வாண நிட்டை கொண்டு
விண்ணருட் பழுத்த தூது வியாபக விளக்கந் தானே. (௰க)

நான்காவது தூதுப் பதிக முற்றிற்று.

---

ஐந்தாவது

## திருவுளப் பதிகம்

---

இதுவுமது

எழுத்தொடு மந்தி ரங்க ளெண்ணியே நாளும் வாயால்
வழுத்தியே மணியு ருட்டி வணங்குவர் சுவர்க்கங் கேட்டு
பழுத்தபே ரின்ப மூரும் பக்குவந் தேறார் தன்னிற்
றெளித்தகண் காட்சி ஞானந் திருவுளந் தெளிந்த சித்தே. (க)

ஒருபொரு ளிருவ கையென் றோதிய துவிதம் நீங்கிக்
குருபர வறிவிற் சொக்கிக் குறையறு மவுனந் தேக்கி
மருவறல் கறைதி ரய மனதுறு திணைக டந்து
தெருளுரு காட்சி ஞானந் திருவுளந் தெளிந்த சித்தே. (உ)

பரிபவத் துலக விச்சை பற்றொழிந் தகத்து றவால்
விரிபவத் தொடர்கன் மங்கள் விடயதற் போத மற்றுத்
துரிசற வாட்சி சாந்தந் துரியவாழ் வதீத முத்தித்
திரிசியம் நசித்தல் காட்சி திருவுளந் தெளிந்த சித்தே. (௩)

பாதகம் பகைக ளெல்லாம் பற்றிலா மனவெ ளியிற்
சாதக சுபாவ தீட்சை சைதன்னிய மவுனத் துண்மை
பேதக மிலாத சாக்ஷிப் பேரின்பத் தொருமை தன்னிற்
றீதகல் மவுனா னந்தந் திருவுளந் தெளிந்த சித்தே. (௪)

விருத்தமா மூலக மாய விவர்த்தத்தே மயங்கி நொந்து
பொருத்தமில் லாத்த வங்கள் போற்றியே புகழ்ந்தி டாது
சிரத்தைவை ராக்ய சாந்த சிவோகபே ரின்ப முற்று
திருத்தசு பாவ ஞானந் திருவுளந் தெளிந்த சித்தே. (ரு)

விடப்படு புவன போக விடயதுன் மார்க்க செத்தை
நடப்புகண் ணும ரூப நாட்டதேட் டந்து விதம்
படைப்புக ளைத்தி யானம் பண்ணும்பொய்க் கதைக ளைந்து
திடப்படத் தனையே காட்டுந் திருவுளந் தெளிந்த சித்தே. (சு)

பருவமே சிரவ ணமும் பக்குவ் மனனந் தேறிக்
கெருவமே நசித்து சுத்தக் கேவலா னந்த மாகித்
துருவமே நிலைத்து மோனந் துரியாதி தம்ப மூகித்
திருவருள் மேவும் நிட்டைத் திருவுளந் தெளிந்த சித்தே. (எ)

வந்தன மெவைக்கு மெட்டா வழிமுறை தெளியு ளத்தே
தந்திர முபாயந் தேறித் தத்துவ விளக்கத் தப்பால்
சந்தத மாரு வின்பம் சாதன மனநா சத்தே
சிந்தனை யொழிந்த முத்தித் திருவுளந் தெளிந்த சித்தே. (அ)

நாவுரைக் கெட்டா வின்ப நடுமதி விளக்க போதந்
தாவிய துருவ சித்தந் தடையற வுணர்ந்த புத்திக்
கூவிய நாம ரூபக் குறிப்பினுக் கெட்டாச் சாக்ஷி
தீவிர தாத்தி லுண்மைத் திருவுளந் தெளிந்த சித்தே. (கூ)

மனத்தகத் தழுக்க றுது மந்திரங் கிரியை செய்து
தனித்திருந் துல்கை நம்பித் தற்போதத் தியானம் நாடி
கனத்திரை மனஞ்ச லிக்கக் கத்தியே துதிப்ப தேனோ
சினத்திரை கடக்க முத்தித் திருவுளந் தெளிந்த சித்தே. (ய)

ஐந்தாவது திருவுளப் பதிகம் முற்றிற்று.

## ஆறுவது

## கருணைப் பதிகம்

---

### இதுவுமது

பூரண வருளே நீங்காப் பூர்த்திசை தன்ய முள்ளத்
தாரணைத் தெளிவே மாறா தறிந்திடு மகந்தெ ளிந்த
வோரணைத் துண்மை தானா யுட்புறந் துறந்த சித்தாய்க்
காரண விவேக முத்திக் காட்சியே கருணைப் பேறே. (௧)

இரவொடு பகலு மற்ற விருதயத் தெளிவி னுட்பம்
வரவொடு செலவு மில்லா வான்விபு மயமு ணர்ச்சி
யரவமொன் றில்லாச் சாந்த வைக்யமே யமல வாழ்வு
கரவொடு திரைய றுத்த காட்சியே கருணைப் பேறே. (௨)

விண்மணி விளக்கே மூவா வியாபக விளக்கத் துண்மைத்
தொண்மணி யறிவே மாறா வொருமையி னன்பு ருவே
தண்மணிக் குணமே போதந் தடையறு மானந் தத்தே
கண்மணித் தெளிவே ஞானக் காட்சியே கருணைப் பேறே. (௩)

வாமனா தீதச் சோதி வானமு தேக வின்பம்
நாமனா தீத போதம் நானான தொழிந்த தூய
வேமனா தீதா னந்த மேகதத் துவசொ ரூபங்
காமனா தீதந் தானே காட்சியே கருணைப் பேறே. (௪)

பொருத்தமே தனக்கெ னக்கும் பூரண மணவ றைக்குட்
டிருத்தமே போரா னந்தந் திரையறுந் தேகந் தேகி
நிருத்தமே யிரண்டற் றொன்றும் நிட்கள மனமுல் லாசங்
கருத்துமே யமைந்த சுத்தக் காட்சியே கருணைப் பேறே. (௫)

துலங்குமோ பாவ புண்யந் தொடருமோ கார ணாந்தா
விலங்குமோ யில்ல றந்தா னிருதயந் தெளிவு ளார்க்கு
விலங்குமே யறுந்து ஞான விருத்திய பேத வுள்ளங்
கலங்கிலா தமைந்த போது காட்சியே கருணைப் பேறே. (௬)

தலங்களை நம்பி யோடித் தன்னையே விளங்கி டாது
மலங்களைச் சுமந்து வாடு மானிடர்க் குண்டோ மார்க்கம்
விலங்கினத் தடிப்பு மற்று விவேகபூ ரணந்தெ ளிவாய்க்
கலங்கிலா துளம்நி றைந்தால் காட்சியே கருணைப் பேறே. (எ)

அந்நிய வநித்ய துக்க மகங்காரத் துடுக்கர் செய்கை
உன்னியே யுறவு கொண்டு உபாதியே தத்த ழுந்தி
பின்னிய துர்க்கி ரியை பிணங்களைப் போற்றி வாழ்த்துங்
கன்னியர் மயக்கம் நீக்கக் காட்சியே கருணைப் பேறே (அ)

வானமேற் சுவர்க்கங் கேட்டு வருந்திமன் றுடிப் பாடி
யீனமே தடிப்பு ருவா யிணைகொளு மதங்க டந்து
ஞானமே விளக்கம் பெற்று ஞாயமே துலங்கித் தன்னிற்
கானமே களங்க மற்றுற் காட்சியே கருணைப் பேறே. (கூ)

ஒலிமார்வி லாயத் தென்று மோதிய வர்த்த வாதம்
பலியாது ஞானத் திற்குப் பகையது ஜால வித்தை
மலியாது மனம்நி சித்து மகாகாயம் போல்ம னதாய்
கலியாது நிரங்கு சத்திற் காட்சியே கருணைப் பேறே. (ய)

ஆறுவது கருணைப் பதிகம் முற்றிற்று.

---

ஏழாவது

தற்பரப் பதிகம்

---

இதுவுமது

சம்மத மார்க்க தீர்க்கம் சமயங்கள் கடந்தி டத்தே
நிம்மதி மவுன தீர்த்தம் நிரங்குச திருப்தி காட்சி
தும்மதி பந்த பாசத் தொடர்வினை கழிந்து மேலாந்
தம்மதி யறிவின் சுத்தந் தற்பரங் குருவ றிவே. (க)

இனியசன் மார்க்க மின்றி யிணைதுணை துவித கன்ம
மனியாயங் குடும்பா வஸ்தை யக்கினி நிரயஞ் சிக்கிச்
சனியனும் பேய்பி டித்துச் சஞ்சலத் துழலா தேகத்
தனியதற் சாக்ஷி தானுந் தற்பரங் குருவ றிவே, (உ)

குடும்பசஞ் சிதப்பாழ் மேருக் கோணமுங் திடனுங் தாண்டி
யிடும்புசம் சார மாய வெல்லையுங் கடந்தப் பாலே
தொடும்பிர பஞ்சத் தொல்லைச் சோடனை யகன்று செல்ல
தடம்பிர காச முத்தி தற்பரங் குருவ றிவே. (ரு)

ஞானத்தின் றடைகள் மூன்றஞ் ஞானமே குடும்ப பாசம்
வானத்தின் விபும யம்போல் மனந்தனில் நசித்து நீக்கி
மோனத்தின் சொரூப நீதி மொழிவழி நிராசை யாலே
தானத்தின் றிரைக ளில்லை தற்பரங் குருவ றிவே. (சு)

விற்பன விவேகந் தேறி விரியருள் வியாப கத்தே
யற்புத முணரு முத்தி யறிவன்றிப் பிறிதொன் றில்லை
பற்பல விபரீ தங்கள் பழையபொய் வழக்க நீங்க
தற்பிர காச தீட்சை தற்பரங் குருவ றிவே. (ரு)

கற்பிதக் கதைசிற் றின்பக் காமநோய் கருத்து றைந்து
வற்பதற் புகழ்ச்சி கொண்டே யவலம தாய்க்கு வித்து
சிற்பரத் தெளிவ ழியைச் சிந்தனை யற்று மனந்
தற்போதத் திரைய றுக்கத் தற்பரங் குருவ றிவே. (கூ)

சிதானந்த சிற்சு கத்தை சிற்பர வெளிம னதிற்
சதானந்தந் தெளிதல் மோக்ஷம் சமுசயப் பிரமை யில்லை
நிதானந்த வருள்ம யத்தே நினைவொடு மறப்பு மற்றுற்
றதாகார மவுன வின்பந் தற்பரங் குருவ றிவே. (எ)

மங்கிடா திலங்குஞ் சோதி மந்திரங் கிரியை யோக
மிங்கித கிதத் தெட்டா விருதயச் சுத்தந் தன்னிற்
பொங்கிய வறிவா னந்தம் பூரண மயமே சாக்ஷி
தங்கிய சுபாவ முத்தி தற்பரங் குருவ றிவே. (அ)

கன்மனத் திரயத் தெட்டாக் ககனொளி யழகே யினப்
புன்மனப் புல்ல றிவிற் புறம்பதா யிருண்ட குன்று
நன்மனத் தவற்கே யேற்கை நாதாந்த விளக்கே மோனந்
தன்மய சுபாவ முத்தி தற்பரங் குருவ றிவே. (கூ)

கற்பூரத் தீபம் போலக் காரிய மெலாம்ந சித்து
சொற்பனம் போல்ம றித்துத் தொல்லையல் லல்ம றந்து
பற்பல விதமெண் ணுது படிகம்போல் மனந்தெ ளிந்து
தற்பரந் தானுய்க் காணத் தற்பரங் குருவ றிவே. (ய)

ஏழாவது தற்பரப் பதிக முற்றிற்று.

---

## எட்டாவது
## நிராசைப் பதிகம்

---

### தரவுக் கோச்சகக் கலிப்பா

சிவன்முத்தி யென்பதுவோ சித்தநி ரோதசுகம்
பாவபுண்ணி யமறக்கப் பாவாபா வமிலேயே
யேவல்வி லகலெனு மிருமையெ ணம்பற்றற்று
சாவதும் பிறப்புமறச் சம்பூ ரணந்தானே. (க)

கல்லார்கற் ருேரென்றுங் கதையாக மங்களென்றுஞ்
சொல்லுஞ்செ யல்களென்றுஞ் சுகதுக்கம் பாராரே
யெல்லாந்து றந்துதனை யில்லாம லேநசித்து
சல்லாபத் தொல்லையறச் சம்பூ ரணந்தானே. (உ)

செத்தபி ணங்களெலாஞ் சீவித்தெ ழுந்துவந்து
பத்தியாய் வாழ்ந்தாலும் பார்த்து மகிழாரே
யெத்தும னமயக்கத் திச்சையச் சமறவே
தத்துவவ தீதவித்தை சம்பூ ரணந்தானே. (ங)

பெத்தர்கு ழாங்களெலாம் பித்தன்பே யாண்டியெனக்
கத்துமி ருவகையுங் கருத்திற் பொருந்தாரே
சுத்தம சுத்தமொன்றுந் தொடாரா தறிவுருவாய்
சற்றுமசை யாதநிலே சம்பூ ரணந்தானே. (ச)

இரவிம திதெற்கே வடக்கே யிருந்தாலுந்
துறவிசி வன்முத்தன் றுயரமொன்று மெண்ணுரே
யரவமொன்று மேயறியா தகத்துறவி யாருடன்
சருவம யவமைதி சம்பூ ரணந்தானே. (ரு)

எத்தொழி லெக்கரும மெத்தனையோ சித்துவித்தை
யித்தனையும் பொய்மயக்க மத்தநிலை மாறுரே
புத்திசித் தமனதும் புவனபோ கமறந்தால்
சத்துவ நிரந்தரமே சம்பூ ரணந்தனே. (௬)

நன்மைதீ மைவேறு நாட்டதேட் டம்பேறு
யன்மையின் மைக்கூறு மாசைநே சம்பாசம்
பன்மையொ ருமையெனும் பாகுபா டற்றவருள்
தன்மைநி ராசைமுத்தி சம்பூ ரணந்தானே. (௭)

விண்ணிற் பறந்தேகி வெட்டவெளி சித்தாடி
மண்ணோ ரதிசயிக்க மையத் தெழுப்பினுமே
பண்ணுஞ் ஜெகஜாலப் பாகியங்க ளெண்ணுது
தண்ணருள் பரமுத்தி சம்பூ ரணந்தானே. (௮)

ஆசிக்கா மாபிதா மாரிபாங் காமிலா
நேசிக்கும் பிரவிர்த்தி நேதிசெய்ய வன்புருவே
பூசிக்கு மெத்தவமும் புறம்பெனக் கண்டுமாப்பி
சாசிக்க ளங்கமிலே சம்பூ ரணந்தானே. (௯)

சித்துவி லாயத்துச் செய்வதுவோ ஞானமன்று
யெத்தும னமயக்க மீனர்க்க திசயமே
புத்தகக் கதைகளிவை புன்னெறி கடந்தறிவாம்
சத்தியந் தான்சாக்ஷி சம்பூ ரணந்தானே. (௰)

எட்டாவது நிராசைப் பதிக முற்றிற்று.

---

ஒன்பதாவது

## ஆருயிர்ப் பதிகம்

---

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

தேகமே யால யந்தான் றெய்வமு மஹமாத் மாவே
யூகமே ஞானந் தீப முதிப்பொடுங் கலேசத் பூசை
வேகமே விசா ரணையில் விளங்கிடத் தானே சாக்ஷி
யாகமே தீர்த்த சுத்த மாருயிர்க் குயிரெ னன்பே (௧)

தூக்கமும் விழிப்பு மில்லைத் துக்கசுக மகிழ்ச்சி யில்லை
நீக்கமு மசைவு மில்லை நிராசையிற் பூசை யில்லை
மோக்கமே விசாரஞ் செய்தல் முத்தியே சித்த சுத்த
வாக்கமே யருளே மோன மாருயிர்க் குயிரெ னன்பே. (௨)

ஜெகமயக் கொழிந்த புத்தி ஞெப்திசா பல்யத் தாலே
முகமனும் பகையு மின்றி முன்னடு பின்னு மின்றி
யுகமைக ளர்த்த வாத முபாசனையெ லாம்வெ றுக்க
வகமிகக் குளிர்ந்த முத்தி யாருயிர்க் குயிரெ னன்பே. (௩)

ஒருமைதன் னறிவின் றிட்சை யுயர்சாக்ஷி தானே தானு
மிருமைவே றென்ப தற்ற விருதய சுபாவீ கத்தே
தருமத யாள நித்ய தற்பரா னந்தக் காட்சி
யருமைதா னற்ற போத மாருயிர்க் குயிரெ னன்பே. (௪)

கல்பெனு நாயு ளத்தே கலக்கமுங் காத லற்றுச்
சொல்பல விகற்ப நிட்டை தோற்றுபல் நாட்ட மித்தை
யில்லெனு மறிவாத் மாவே யிரண்டறக் கலந்த முத்தி
அல்இல் மல்ல துன்னி யாருயிர்க் குயிரெ னன்பே. (௫)

தடைமிடை விடய ஞானந் தற்போதந் துர்க்கி ரியை
நடைகடை மனோ ராச்சியம் நாளுவாந் துவித மார்க்கம்
மடைமையே யுலக போக மறந்திடத் திடந்தற் சாக்ஷி
யடைபவப் பிணிக ளில்லை யாருயிர்க் குயிரெ னன்பே. (௬)

பிறந்தது மிறப்ப தில்லை பிரிந்தது மிருந்த தில்லை
துறந்ததுந் திறந்த தில்லை தூலமுஞ் சூக்ம மில்லை
மறந்ததும் நினைப்பு மில்லை மந்திர தந்திர மில்லை
யறிந்தது மறிவா னந்த மாருயிர்க் குயிரெ னன்பே. (௭)

காரணத் திரைக ளைந்து காரிய மெலாந் தொலையத்
தாமணை யெதார்த்தந் தானுய் தானென்றும் நீயென் றில்லாப்
பூரணம் பரமா னந்தம் பூர்த்தியாம் நிர்வா ணத்தே
யாரண மகம்பி ரம மாருயிர்க் குயிரெ னன்பே. (௮)

கலித்திடும் நினைவின் மாயங் கதிதீது வென்ப தெல்லாம்
சலித்திடும் பேத நோக்கஞ் சதியாக மத்தி ரயம்
பலித்திடா தகம்பு றத்தும் பற்றற நிஜானந் தத்தே
யலுத்திடா வைக்ய முத்தி யாருயிர்க் குயிரெ னன்பே. (௯)

தன்னிலே வேறென் றன்னுந் தடைபோத விடயம் நீத்து
வின்னவர் வாணுஞ் ஞான விட்சேப பரோட்ச வூனம்
பின்னிடா தறிவ றிந்து பேரின்பந் தானே தானு
யன்னிய மிலாத்தற் சாட்சி யாருயிர்க் குயிரெ னன்பே. (௰)

ஒன்பதாவது ஆருயிர்ப் பதிகம் முற்றிற்று.

---

பத்தாவது

## வெளிப் பதிகம்

---

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கன்ன லமுதாய் சுயஞானங்
கனிந்தா னந்தம் பேரின்பம்
இன்ன லகன்ற வேகரசத்
தேகா னந்தப் பூரணத்தே
யுன்னுஞ் சிவ ஜலந்தெளிவா
யுபாதி களைந்த வறிவதனுற்
றன்னைத் தானே தானுணர
சதா னந்த வருள்வெளியே. (க)

வின்னப் படும்பொய் மதமேதம்
விட்டாற் சுத்த சன்மார்க்கம்
பின்னல் சிவத் தன்மையிலே
பேத சகித நினைப்புமில்லை
யுன்னும் பலதீத் தொழிலிழந்தே
யுபய மின்றி நிராசையிலே
தன்னைத் தானே தானுணர
சதா னந்த வருள்வெளியே. (உ)

நானு விதந்தா னுலகாசை
நழுவிப் புகழு மிகழுமின்றி
மானுர் மயக்கஞ் சுகதுக்கம்
மாயை மலினத் திரைகரைந்து

தேனு ரொழுகுந் திருக்கருணை
　　தெவிட்டா வமிர்தத் திருவருளாந்
தானுந் தன்னைத் தானுணர
　　சதா னந்த வருள்வெளியே. (௩)

முன்னாட் செய்த துர்க்கிரியை
　　மூட மறந்து முழுத்துறவாய்
நன்றாய் மவுனத் திருநடனம்
　　நனவின் றுரியசு கானந்த
மென்னா ளுய்வோங் கைதாங்க
　　வெனக்கா ருதவி யென்பதிலை
தன்னாற் றன்னைத் தானுணர
　　சதா னந்த வருள்வெளியே. (௪)

வானோ ரென்னு மெய்ஞ்ஞான
　　வாழ்வோ ராகு நிராதார
ஞானோ தயம நேலயமே
　　ஞாதா ஞான ஞேயமற்ற
தீனோ ரிசுலா மார்க்கநெறி
　　சிவ பேத மொழிந்தகுணந்
தானே தானுய்த் தனையுணர
　　சதா னந்த வருள்வெளியே. (௫)

மடத்தி லிருந்து தவஞ்செய்து
　　மனோ நியந்தி ரிசியமாய்
விடத்தின் காமப் பேராவல்
　　விடய நிட்டை யநித்தியமே
திடத்தின் சித்த நிரோதமொடு
　　திருவு ளம்பே ரின்பநிலை
தடத்திற் றன்னைத் தானுணர
　　சதா னந்த வருள்வெளியே. (௬)

பெத்தர் வழங்கும் மார்க்கம்விட்டுப்
　　போதா னந்த வறிவறிந்து
சுத்த முத்தி மனோநாசஞ்
　　சொல்மாத் திரந்தான் மற்றதெலா

மத்த நிலைசம் பூரணமே
யதீத பரமா னந்தசுகந்
தத்தந் தன்னைத் தானுணர
சதா னந்த வருள்வெளியே. (எ)

உருவ மருவ முன்னாது
வுயருஞ் சாக்ஷி தானாகிப்
பெருவாழ் வாகு மனவெளியிற்
பேரின் பத்தாண் டவம்புரியும்
பருவ மறிந்த நினைவொழிந்து
பற்றற் றேக சொரூபமதாஞ்
சருவ மயந்தான் றனையுணர
சதா னந்த வருள்வெளியே. (அ)

தித்தித் தோயா தகம்புறமுந்
தின்று னியாசு யவாட்சி
பத்தத் திருந்த மனந்தனிலே
பந்த பாச மென்பதில்லை
சுத்த மசுத்தங் கடந்தநிலை
சும்மா யிருக்கும் நிர்வாணஞ்
சத்தாய்ச் சித்தாந் தனையுணர
சதா னந்த வருள்வெளியே. (கூ)

பின்னுந் தத்து வங்களெலாம்
பிணங்கா தொழித்துப் பேதமற
மன்னு மறிவா லறிந்துபய
மறந்து துவிதமெ லாங்கடந்து
வன்னு வயமெதி ரேகமெனு
மாசை நேசமெ லாமறந்து
தன்னைத் தானே தானுணர
சதா னந்த வருள்வெளியே. (ய)

அச்சஞ் சலிப்பு சுகதுக்க
மாசா பாச மதவாத
மிச்சை பேத திருஷ்டிகளு
மிழந்தால் நிர்வி காரநிலை

மச்ச ரேகை சித்தன்புகழ்
மகாகா யம்போ லவகாசம்
சச்சம் சித்த சுத்தமதில்
சதா னந்த வருள்வெளியே. (௰க)

பத்தாவது வெளிப்பதிக முற்றிற்று.

பேரின்ப சதகம் 101 முற்றிற்று.

ஆ செய்யுள் ௰-க்கு திருவிருத்தம் ௬௱௬௬

பிஸ்மில்லாஹி

ஏழாவது

## வேதாந்த சதகம் 100

முதலாவது

### ஏகப் பதிகம்

தரவுக் கோச்சகக் கலிப்பா

எல்லாஞ் சுயஞ்சோதி யெங்குஞ் சிவசொரூப
மல்லாது வேறில்லையே யனைத்துந் திருமயமே
கல்லாத பேதகத்தின் கற்பனை கடந்திடவே
யில்லல்லா ஹு தானே யேகபர மானந்தம். (க)

பேதியா தகந்தெளிந்து பேதாபே தந்தொலைந்து
சாதிம தங்களற்று சதோதய நிம்மதியே
யாதியந் தங்கடந்த வகண்டவா காரவிர்த்தி
யேதுமிலா தற்றநிலை யேகபர மானந்தம். (உ)

பிறவா திறவாத பிரக்ஞான முத்திநிலை
யுறவாமெ தார்த்தநிதி யுண்மை யறிவொன்றே
திறமான சாதனந்தான் சித்திக்கு முயர்சாக்ஷி
யிறவாத வைக்யபத மேகபர மானந்தம். (௩)

விசுவாசந் தானுனுய் விளங்கிவி ராகமொடு
பிசகாச்சு வானுபூதி பிரிவறுதற் சாக்ஷியதே
நிசமாகும் சாந்தமது நிரங்குச திருப்திதனி
விசுமசு மாவில்லை யேகபர மானந்தம். (௪)

கருவிகா ரணாதியெலாங் களங்கமறத் தான்வயங்கி
திருவருள்வி லாசமதிற் றிரைமறைவி லாதஹமே
தருவது பெறுவதற்ற தனதான தற்பரத்தே
யிருதய விளக்கமொன்றே யேகபர மானந்தம். (௫)

கரும மலவிகற்பக் கற்பனை துவிதமற்று
மருமந் தனிலறிந்து மயக்கதி யக்கமற்று
தருமமே கந்தனிலே தத்துவங் கடந்தப்பா
விருதயம் சுபாவமுற வேகபர மானந்தம். (௬)

அச்சஞ் சலிப்பற்ற வவகாச வீதியருள்
உச்ச முயர்சாட்சி யுபாசனைக ளற்றதிலே
நிச்சயமாத் துமஞான நித்தில விமுக்தமன
மெச்சமய வாதமிலை யேகபர மானந்தம். (௭)

திக்குத்தி சைகளிலா திருவிக்கா போதமதி
முக்கியத் தொழுகையு முத்திவி சாரணையே
துக்கசு கமறந்த துரியாதீ தத்தன்மை
யெக்கரு மமுமில்லை யேகபர மானந்தம். (௮)

உல்லாச மாக வுலகில் மயங்காமற்
பொல்லாம தங்களெலாம் போக்கி யறிவாலே
அல்லாஹு சமதென்ற வறிவதுவுந் தானாகி
யெல்லாம றந்திடவே யேகபர மானந்தம் (௯)

வத்துவைத் தெரியாமல் மறைக்குந் துவிதகதி
தத்துவக் குப்பையொடு சாஸ்திரங்க ளைமறந்தே
புத்தியுத்தி யாலுணர்ந்து பூரணவி ளக்கமொடே
யெத்தொழிலு மற்றிடவே யேகபர மானந்தம். (௰)

முதலாவது ஏகப்பதிக முற்றிற்று.

இரண்டாவது

## மித்தைப் பதிகம்

---

### இதுவுமது

ஆலயத்திற் றுன்வணங்கா ராலயத்தை யேவணங்கி
பாலைவைத்துத் தீபதூபம் பண்ணுங்கி ரியையென்னே
நூலைவைத்துப் படித்து நுட்பம்விளங் காத்துவிதம்
வேலையற்ற பொய்க்கதைகள் வெட்டவெறும் பொய்தானே. (௧)

தலையிடு குடும்பமதிற் றத்தளித்துத் தான்மருண்டு
பிழைபவத் தொழிலாலே பிணங்கிந டப்பதென்னே
முளைவிகற்ப வஞ்ஞான மூடமதி பேதகத்தால்
விளையுமத பேதமதி வெட்டவெறும் பொய்தானே. (௨)

கருத்தைத் திருத்தாமற் கற்பிதக் கதையைநம்பி
யருத்தம் பலவோதி யாடிப் படிப்பதென்னே
பெருத்தகா மத்திரயம் பேய்மதக் கொண்டாட்டம்
விருத்தம் பதவியெலாம் வெட்டவெறும் பொய்தானே. (௩)

களங்க மனத்தாலே காசினி வாழ்வைநம்பிப்
பழங்கதைக ளைப்பாடிப் பலன்கேட் டழுவதென்னே
யுளங்குவியா தோதியே யுபாதிசகி தபேதம்
விளங்கா றுறவெல்லாம் வெட்டவெறும் பொய்தானே. (௪)

கர்த்தாபோக் தாபோகங் கருமபோக் யங்கிரியை
யுருத்தாகத் தானம்பி யுடைநடைவொய் யாரமென்னே
சருத்தாங் திரிபுடியிற் சாய்ந்து மயங்குமதம்
விருத்தமஞ் ஞானநிலை வெட்டவெறும் பொய்தானே. (௫)

கண்ணிற்கண் டுகருதிக் கனவினிற் காட்சியென
மண்ணிற்பு கழ்வதெலா மருமங் தெரியாதே
நுண்ணறிவு பேரின்ப நுட்பங் தெரியாமல்
விண்ணருள் விளங்காது வெட்டவெறும் பொய்தானே. (௬)

வாடிக்கை யென்றே மார்க்கங் தனக்கிழிவாய்
பாடிக்கை கோத்துப் பசப்பிக் குதிப்பதென்னே
யோடிக்கா ணிக்கைசெய்தே யூனப்பிணத் தைப்போற்றும்
வேடிக்கை தற்போதம் வெட்டவெறும் பொய்தானே. (௭)

சாதகமாந் தன்னைத் தானறிவ தல்லாமற்
பாதகயோ கங்கிரியை பழக்கம் வழக்கமென்னே
தோதகமுந் தீதகமுந் தொல்லுலக வல்லலிது
வேதகம்வி ளக்கமில்லை வெட்டவெறும் பொய்தானே. (அ)

கத்திக் கதறியே கரைந்து பலபுகழும்
பித்தனைப் போலுளறிப் பிணத்தைத் துதிப்பதென்னே
யத்தியெ றும்பிரு மாருயிர்வி யாபகமும்
வெற்றிவி ளங்காமல் வெட்டவெறும் பொய்தானே. (கூ)

போதனையே மெய்ஞ்ஞானம் பூரணமே தற்சாக்ஷி
சோதனையே சாக்ஷிமயஞ் சொந்தமி ரவலில்லை
யேதும யக்கமெலா மிருவினைத் தொடர்பவனேய்
வேதனைய நித்யபுகழ் வெட்டவெறும் பொய்தானே. (ய)

இரண்டாவது மித்தைப்பதிக முற்றிற்று.

---

## மூன்றாவது
## நமக்குப் பதிகம்

---

### இதுவுமது

வேற்றுமைக ளுன்னிபிர விர்த்திம யக்கத்தாற்
றோற்றும்பே தநிருட்டி துக்கம யந்தானே
ஆற்றுத லமைதியொடு மவகாச சிந்தையற்ற
நாற்றப்பி ணத்தைநம்பில் நமக்குச் சுகமாமோ. (க)

நீசச்ச கச்சொரூப நிலையில்லா வாழ்வைநம்பி
பாசச்ச னியன்மனப் பத்திகள்வி ருத்தமதே
மோசச்ச முசார மூழ்கித்தி யங்குமல
நாசச்ச ரீரத்தால் நமக்குச் சுகமாமோ. (உ)

தானீவே றென்றெண்ணித் தவங்கள் மிகச்செய்து
மேனிதனை மினுக்கி வேடமி டுதலேனோ
கானற்ஜலம் போலுலக காரியம் பெரிதென்று
நானிலந் தனைநம்பில் நமக்குச் சுகமாமோ. (ங)

ஈனம லத்துவித மிருவினை பற்றறுத்து
மோனச்சொ ரூபமதாய் முழுத்துறவு தான்கொண்டே
போனதுவ ருவதென்ற பொய்மதங்க ளைமறந்து
ஞானம்வி ளங்காட்டால் நமக்குச் சுகமாமோ. (௪)

நினைவுக ளவாகி நீர்க்குமிழி போல்மாறும்
மனவிகா ரத்தோற்ற மலினவா சனைதானே
யினமாம் பொறிகரண மியக்கமற்ற நிர்வாணம்
நனவில்வி ளங்காமல் நமக்குச் சுகமாமோ. (௫)

இன்பவாழ் வென்றே பிறந்தோர் தமைத்தேடி
யன்புடனே மன்றாடி யநித்யம் புகழ்வதுவோ
தன்பந்த ணையிணைபொய்த் தடைவிடய போதமன
நம்பியி ருப்பதனுல் நமக்குச் சுகமாமோ. (௬)

முன்னோர் வழக்கமென் று மோகதா பத்திரயம்
பின்னிந டப்பதனுற் பிரதிபந் தம்போமோ
தன்னிற்ற னையறிந்து தத்துவவி ளக்கமொடு
நன்னிலைமை மேவாமல் நமக்குச் சுகமாமோ. (௭)

அற்புத வதிசயங்க ளவுலியா செய்ததென்ற
கற்பிதக் கதையைநம்பிக் காலம்வீண் போக்குவதோ
விற்பனவி வேகபுத்தி விருத்திமெய்ஞ் ஞானநிலை
நற்புகழை மேவாமல் நமக்குச் சுகமாமோ. (௮)

வேதமிகப் படித்தும் விளங்கா தகம்வேருய்
பூதபௌ திகமயக்கம் புந்தித னில்வளர்ந்தே
தாதமார்க் கத்திரயந் தன்னில் மனமலிந்து
நாதபூ தமென்றுல் நமக்குச் சுகமாமோ. (௯)

தேட்டநாட் டமறந்து தேசவ ழக்கமற்று
கூட்டம்ச வைகளொடு குலமும்ந லமுமற்றே
கோட்டம்ப லவாட்டம் நூதனம தங்கடந்து
நாட்டம்ந சிக்காமல் நமக்குச் சுகமாமோ. (௰)

மூன்றுவது நமக்குப் பதிகம் முற்றிற்று.

நான்காவது

## திருவருள் பதிகம்

இதுவுமது

மார்க்க மொருபக்கம் மாக்கள் பலவிகற்பஞ்
சேர்க்கை துவிதகதை செய்தொழிலு மெல்லையில்லை
யார்க்கும் பொதுவாத்மா வறிவின் றெளிவாலே
யேர்க்கை தனிலுணர வெல்லாந் திருவருளே. (க)

செய்யும் பலகிரியை சிந்தித்தெ லாம்நினைந்தே
யையம னந்தனிலே யர்ச்சனை விடயபூசை
வையகம யல்கள்மெத்த வாசனைகள் பூர்வபட்சம்
எய்யுந் திரைய றுக்க வெல்லாந் திருவருளே. (உ)

பல்லாயி ரம்பேதப் பாடல்க ளையைநம்பி
சொல்லாயி ரநாமஞ் சொல்லித்து திப்பதெல்லாம்
வெல்லாவ நித்யமதம் விடுத்தேவி வேகமொடு
எல்லாம றந்தொழிய வெல்லாந் திருவருளே. (ங)

மோகவி ராகமற்ற மோனநி லைதனிலே
யூகம னவெளியி லுபாதிபே தந்தொலைந்தே
யாகமக லைமறந்தே யத்தநி லையுறைய
யேகமாம் ஸ்வரூப மெல்லாந் திருவருளே. (ச)

செம்பொன் னுலகைநிதந் தேடித்த வஞ்செய்து
வம்புவ ழக்குரைக்கும் வாசஞா னப்பெருக்கே
பம்பரம்போற் சுற்றுமனம் பற்றற் றகங்குவிந்து
யின்பதுன் பமறுக்க வெல்லாந் திருவருளே. (ரு)

மங்கைம ணேன்மணியை வாழ்த்துந் துவிதகவி
சங்கைஞா னமென்று சாற்றிப் புகழ்வதுவோ
பங்கம நித்யதுதி பாசங்க டந்திடவு
மெங்குமாத் மதிருட்டி யெல்லாந் திருவருளே. (சு)

அல்லும் பகலு மனேகமந் திரமோதி
சொல்லும் பலன்கருதி தொல்லையி லுழைப்பதுவோ
துல்லிபம் விளங்காமற் றுக்கசுக மென்றபல
வெல்லாம றந்திருக்க வெல்லாந் திருவருளே. (எ)

காடனைத்து மோடிக் கனதவயோ கஞ்செய்து
தூடணைதி ரிசியத்திற் றாங்கிக் குழைவதென்னே
நாடனைத்துங் கீர்த்திபெற நடக்குந் துவிதவினை
யேடணைமி டிமையற வெல்லாந் திருவருளே. (அ)

அகம்புறமும் பற்றற் றற்றநி லைதன்னிற்
செகம்பிர ளயந்தாண்டி சித்தஞ்ச லனமற்றே
வெகுபுகழ் சோகம்விட்டு வெட்டவெளி போலாகி
யிகபாம றந்திடவே யெல்லாந் திருவருளே. (கூ)

எத்தும னுர்தகதை யென்னுளுந் தான்பாடிக்
கத்தும்நா மரூபக் காரியவி காரமற்றே
யத்துவா பத்திசுக மாருயி ரைக்யமொடு
யெத்தவமு மற்றிடவே யெல்லாந் திருவருளே. (ய)

நான்காவது திருவருள் பதிகம் முற்றிற்று.

---

ஐந்தாவது

## நிவர்த்திப் பதிகம்

---

இதுவுமது

நீங்கா வனுபூதி நித்தியா னந்தசுகம்
பாங்கா முணர்வுதனிற் பாவனையே துமிலையே
தீங்காம் புவிபோகத் திருசிய மறந்திடவே
தூங்காத் துரியசுகந் துக்கநி வர்த்தியதே. (க)

படரும் பவமலினப் பாசவஞ் ஞானமற
விடயபோ தம்மின்றி விவேகவு ணர்ச்சியிலே
திடமுறநி ராசைவழி திருட்டாந்தம் விட்டகலத்
தொடருமஞ் ஞானமிலை துக்கநி வர்த்தியதே. (உ)

பரிபக்கு வந்தேறிப் பலதொழிவி னைகளற்றுத்
திரிசியதி ருட்டியின்றித் திரவியந் தனையறிந்தே
யரியபெ ரும்பதவி யாத்தும ஞானநிலை
துரிசறத் தானுணரத் துக்கநி வர்த்தியதே. (ஙு)

சருவபரி பூரணமாந் தானுந் தனிமயமே
யருவுருவ மென்பதிலா வானந்த நித்திரையே
பரமசுக நிட்டை பழகு மறிவுருவே
துருவநி லைதெளியத் துக்கநி வர்த்தியதே. (ச)

பரிசமுட னையறிவிற் பகுத்துணரு மனுவாகி
வரிசைத மைத்தோங்கும் வாசனு க்ஷயந்தானே
பிரியமொன் றுமெண்ணுது பிரவிர்த்தி தானசித்துத்
துரியநி லைதனிலே துக்கநி வர்த்தியதே. (ரு)

மாண்டார்ச மாதிகளில் மன்றுடித் தெண்டனிட்டு
வாண்டாண் டழுதாலு மத்தனையு மித்தையன்றோ
வேண்டாத துர்க்கிரியை வேடிக்கை பொய்வாதத்
தூண்டில் தனையறுக்கத் துக்கநி வர்த்தியதே. (சு)

பிணங்களை நம்பிமலப் பிணியேம னம்வளர்ந்து
வணங்கிப் பலவோதி வந்தனைகள் செய்வதென்னே
யிணங்காத் துவிதமதத் திடரைத் தவிர்ந்தேகித்
துணங்குந் திரையறுக்கத் துக்கநி வர்த்தியதே. (எ)

எட்டுநான் கென்றே யிடைபின் கலைசுழினை
கட்டும்வா சிப்பழக்கங் கற்பனையில் ஞானமுண்டோ
செட்டுசெய் வியாபாரஞ் செருக்குமனோ தியந்
துட்டக்கி ரியையறத் துக்கநி வர்த்தியதே. (அ)

காலங் கணக்கெண்ணிக் கனமந் திரமோதி
வேலைத வங்கள்செய்து விடயத் தழுந்தாமல்
கோலம வஸ்தையெலாங் குறியாமல் முத்தேகத்
தூலத்தி ரையறுக்கத் துக்கநி வர்த்தியதே. (கூ)

கொடியகா மப்பழக்கங் குடிகொள்ளுந் துர்க்கிரியை
வடிவுரு பம்மெண்ணி மாதவஞ் செய்வதெங்கே
தடியைமி னுக்குமிந்தத் தாரணியை விட்டுமனந்
துடியா தடங்கிடவே துக்கநி வர்த்தியதே. (ய)

ஐந்தாவது நிவர்த்திப்பதிக முற்றிற்று.

---

## ஆறுவது

## சுகப் பதிகம்

### இதுவுமது

நிம்மதி யகம்புறமும் நீங்கா வனுபூதி
நம்மதி சுபாவநிலை நாட்டதேட் டம்லயித்தே
சம்மதியே சாந்தபதந் தற்சாக்ஷி நிச்சயத்தே
சும்மாயி ருக்கமனச் சுத்தசு கந்தானே. (௧)

எம்மாத் திரம்நூற்க ளெண்ணிக்கு வித்துவைத்து
மம்மாத்தி ரம்பார்த்து மாவரணந் தீராதே
பொம்மலாட் டக்கூத்து பொய்மத வாதமற்றுச்
சும்மாயி ருக்கமனச் சுத்தசு கந்தானே. (௨)

எம்மதமு மாராய்ந்தே யேட்டைப் பிரட்டிலென
யிம்மைமம ருமையெனு மிருவினை துவிதமன்றோ
செம்மைக ருமைவெள்ளை செப்புங்க தைமறந்து
சும்மாயி ருக்கமனச் சுத்தசு கந்தானே. (௩)

கும்மாளம் போட்டே கூடிரா கம்பாடி
யெம்மாத்தி ரமோதி யிறைஞ்சித் துதித்தாலுந்
தும்மார்க்கந் துர்க்கிரியைத் துக்கத்தி னைமறந்து
சும்மாயி ருக்கமனச் சுத்தசு கந்தானே. (௪)

மும்மல முட்பகையு முத்தடைமூவ் வேடணையு
மெம்மாத்தி ரமுமின்றி யெல்லாம றந்திழந்தே
தும்மதிவி காரமின்றி துக்கநி வர்த்தியொடு
சும்மாயி ருக்கமனச் சுத்தசு கந்தானே. (௫)

தும்மதிது ராசாரத் துச்சச்ச குணமற்று
நம்மதியின் மெய்ஞ்ஞான நட்பாட்சி சாக்ஷியெனச்
செம்மிவி ளையாடுஞ் சேதனம யந்தானாய்ச்
சும்மாயி யிருக்கமனச் சுத்தசு கந்தானே. (௬)

பம்மிப் பதுங்கியே பரதேசி பக்கிரென
விம்மி யலைவதனால் விவேகத் தெளிவிலையே
கம்மிய நிரையறுத்துக் காலமுத் தேகமற்றுச்
சும்மாயி ருக்கமனச் சுத்தசு கந்தானே. (௭)

வம்மிசகு லமதமும் வாசனையெ லாங்கெட்டுச்
சும்மதமே காந்தமுத்தி சாதம்நி ராசையதே
மும்மலத்தி ரையறுத்து முழுத்துறவு தானாகி
சும்மாயி ருக்கமனச் சுத்தசு கந்தானே. (அ)

சிம்மாச னாதிபருஞ் சேமச்செ ருக்கினரும்
நன்மைதீ மையென்பர் நாதாந்தந் தேறுவதோ
நும்மதி கொண்டாய்ந்து நூதனமெ லாங்கடந்து
சும்மாயி ருக்கமனச் சுத்தசு கந்தானே. (கூ)

உம்மத்த டிமையென்ற வுபாதிபே தம்நீக்கி
யெம்மதமும் சம்மதத்தே யெல்லாம றந்தேகி
தம்மதி தெளிவாலே சமுசயத்தி ரையொழித்துச்
சும்மாயி ருக்கமனச் சுத்தசு கந்தானே. (ய)

ஆறுவது சுகப்பதிகம் முற்றிற்று.

---

ஏழாவது

## நித்திரைப் பதிகம்

---

இதுவுமது

தன்னைய றிவதற்குத் தனக்கன்ய மெண்ணாது
யென்னைத்தா னேயிழந்து யென்னைத்தா னையறிந்தே
பின்னிப்பின் னிப்பாயும் பேய்நினைவு தானொடுங்க
வன்னிய மென்பதில்லை யானந்த நித்திரையே. (க)

கற்பனைது விதமதக் கைகால்வி லங்கறுத்து
விற்பனவி வேகமொடு வெட்டவெ ளிதாண்டி
தர்ப்பணசொ ரூபமனந் தண்ணருள்வி லாசமுத்தி
யர்ப்பணந்தா னாகும்நில்லை யானந்த நித்திரையே. (உ)

யாதுப லநினைவும் யாவும்ந சித்தொழித்துத்
தீதுபு கழிகழுந் தினைப்போதி லாதொழிந்தே
நீதியாத் துமபோத நிரங்குசநி ருப்தியிலே
யாதியந் தம்மில்லை யானந்த நித்திரையே. (ங)

சனித்துழ லுஞ்சேட்டை சனியன் மனநினைவு
வினைத்துயர் தடிப்பின்றி வித்தைசு கந்தேறி
தனித்தப ரமமுத்தி தடைவிடய மியாவுமற்றே
யனைத்தும றந்துய்ய வானந்த நித்திரையே. (ச)

பூசைகள் செய்வதென்றும் புண்ணிய பாவமென்றும்
பாஷைமி கப்பிதற்றிப் பசப்புதலெ லாம்நசித்தே
வீசையுள்ள வாண்பிள்ளை விமுக்தனே தானாகு
மாசைநே சங்களில்லை யானந்த நித்திரையே. (ரு)

பொருளறிந்து பொருளாகிப் பொய்யுல கநித்யமென்று
தெருளுறுஞ் சித்தியிலே தெவிட்டா வமுதுண்டே
மருளுமஞ் ஞானமற்று மவுனவன் புருவாகி
யருளுருவந் தானாக வானந்த நித்திரையே. (சு)

பச்சமி ருமாபும் பந்தத்தி ரயம்விட்டு
நச்சரவு பெண்ணாசை நசித்தந மணிவென்றே
நிச்சயமெ தார்த்தநிலை நிர்வாண நிட்டையிலே
யச்சஞ்ச விப்பொழிய வானந்த நித்திரையே. (எ)

தொல்லைம யக்குலகத் தொந்தநி ரயமெனும்
வொல்லையி னில்லாம லுட்புறமுந் தான்றுறந்தே
சொல்லுஞ்செ யலும்விட்டு சுலட்சணமா மின்புருவா
யல்லல்க டந்துய்ய வானந்த நித்திரையே. (அ)

மமதைய கங்கார மனோராச்சி யமவித்தை
தமசைரா சோகுணங்கள் தன்னைந சித்தொதுக்கி
விமலவ றிவுருவாய் வியாபக மனவெளியா
மமைதிசாந் தமுறவே யானந்த நித்திரையே. (கூ)

தல்சிமத் திசுமசுமா தானேதி ஜாலவித்தை
பல்விதப் பொய்மயக்கப் பாவனைக ளைவிடுத்தே
வெல்மவுனப் பேரின்ப விளக்கந் தனிலுய்த்தால்
அல்ஹம்ந்து வில்லாகி யானந்த நித்திரையே. (ய)

ஏழாவது நித்திரைப் பதிகம் முற்றிற்று.

## எட்டாவது

## பாரேன் பதிகம்

### இதுவுமது

கணங்கட்பூ தப்பேய்வாழ் கன்மவ நித்யஜடங்
குணங்குமாண் டானடிமை கொளுகும் மதவாதம்
பிணங்குமஞ் ஞோதியம் பின்னத்து விதமற்று
வணங்கும்நி வர்த்தியிலே மற்றொன்றும் பாரேனே. (க)

இணங்குமாத் துமஞான மிரண்டற்ற வைக்யநிலை
யணங்குசு வர்க்கபதி யறிவானந் தமனமே
வணங்கும் விசாரணையே வாசனை க்ஷயமாகி
மணங்கமழு மற்றநிலை மற்றொன்றும் பாரேனே. (உ)

கனவா முலகமிது காமியநி னைப்பினுரு
நினைவே பலதோற்றம் நிச்சயப் புத்திதனிற்
றனையறிவ தல்லாது தனக்கந் நியமறந்தே
மனநாசந் தானகில் மற்றொன்றும் பாரேனே. (ங)

கவனமுடன் றத்துவத்தின் கட்டுகளெ லாமறுத்து
அவனிவ னென்பதற்ற வறிவா லறிவறிந்தே
யுவமையெ துவுமின்றி யுவமேயத் தீட்சையிலே
மவுனவுரு தானக மற்றொன்றும் பாரேனே. (ச)

கருமமு பாசனைகள் கனவின் பலதோற்றங்
குருவைத்தி யானஞ்செய் குடிகெட்ட நிட்டையெலா
மொருமையில் லாத்துவித மூனத்தி ரைகடந்து
மருமந்த னைவிளங்க மற்றொன்றும் பாரேனே. (ரு)

குருவா யலைந்தோடிக் குடும்பந் தனைக்காக்க
தெருவாய்ப் பணந்தேடிச் சேர்த்துப்பூ சனைசெய்து
பெருமையு டைநடைகொள் பேய்மதஞ் சிக்காமல்
மருமந் தனைத்தெரிய மற்றொன்றும் பாரேனே. (சு)

விதிமதி யென்றேங்கி விழலுக் குழையாமல்
கதிதீது மற்றகன்றே கருத்தில்வே றெண்ணமற்
றுதியொன்று மற்றநிலை துரியாதீ தந்தனிலே
மதிசுய ஞானமுற மற்றொன்றும் பாரேனே. (எ)

அறிந்தாற்கோ வன்பமில்லை யஞ்ஞானிக் குண்மையில்லை
துறந்தாற்குத் தோடமில்லை துறவாற்கு ஞானமில்லை
நிறைந்தாற்குத் துக்கமில்லை நிராசையிற் பூசையில்லை
மறந்தேயெ தார்த்தமுற மற்றொன்றும் பாரேனே. (அ)

கஸ்திபல தொழிலுங் காரியத்த வஞ்செய்து
அஸ்தர்பி ருல்லாவென் றுயிரந்தான் சொன்னாலு
மஸ்தும ருட்போமோ மறந்தேயெ தார்த்தசுக
வஸ்துத் தனைவிளங்க மற்றொன்றும் பாரேனே. (கூ)

கருவிகா ணதியெலாங் கலங்கா தியக்கமற்று
பருவந்தி ருவருளைப் பற்றற்ற றிந்துணர்ந்தே
நிருவாண நிட்டையிலே நித்திரைவி ழிப்புமற்று
மருவித்து றந்துவிட மற்றொன்றும் பாரேனே. (ய)

எட்டாவது பாரேன்பதிக முற்றிற்று.

---

ஒன்பதாவது

## பொதுப் பதிகம்

---

இதுவுமது

மல்லாடும் பொய்மயக்க மந்திரங்கி ரியையெலாம்
பொல்லாத்து விதகன்மம் போக்கியொ ருமைகொண்டே
கல்லார்கற் றோர்களென்ற கற்பனைந சித்தின்ப
மெல்லார்க்குஞ் சொந்தமென் றெவரிடத்திற் சொல்வேனே. (க)

மேகம் மழைபொழிய மேதினியெ லாந்தழைக்கத்
தாகம்வி டாய்தணியத் தன்னைய றிவதுவே
சோகம்நி வர்த்திசுயஞ் சோதிதி ருவருடா
னேகம்பொ துவென்றே யெவரிடத்திற் சொல்வேனே. (உ)

கல்லாற்குங் கற்றோற்குங் காரியமுங் காரணமாய்
நல்லாய றிந்தாற்கு நாதாந்த நித்திலமே
துல்லிபத் தறிவினரு துக்கசுக மற்றநிலை
யெல்லார்க்குஞ் சொந்தமென் றெவரிடத்திற் சொல்வேனே. (ஙு)

அல்லும் பகலற்ற வகண்டவா காரவிர்த்தி
சொல்லியலெ லாமொழிந்த சொச்சொரூ பந்தெளிவே
புல்லியோ ரறியவொண்ணுப் பூரணந் தற்சாக்ஷி
யெல்லார்க்குஞ் சொந்தமென் றெவரிடத்திற் சொல்வேனே. (௪)

பூவிற்கா பிசென்று புகலுவது மேனென்றுற்
கூவியி ணைவைத்துக் குறிக்குந்த வங்குபிரே
பாவனையெ லாமறந்த பரிபக்கு வமில்லாம்
யாவருக்குஞ் சொந்தமென் றெவரிடத்திற் சொல்வேனே. (௫)

தீவிரவ னுபவமே தீனில்லாந் தெளிமுத்தி
தேவகு ணம்நிறைந்த சித்தநி ரோதமன்றே
சேவித்த லர்வதன்று சேதனசு யஞானம்
யாவருக்குஞ் சொந்தமென் றெவரிடத்திற் சொல்வேனே. (௬)

கத்தித் துதியாமற் காலம்வீண் போக்காமற்
புத்திவி சாரணையிற் புறமகம் பற்றறுத்தே
சுத்தசொ ரூபநிலை சுலட்சணத் தன்பினுரு
வெத்தவமு மற்றதென் றெவரிடத்திற் சொல்வேனே. (௭)

இல்லையுண் டாமென்றே யெல்லைவைத் துத்தொழுது
சொல்லுஞ்செ யலெல்லாஞ் சொல்மாத்தி ரந்தானே
தொல்லைய நித்யம்விட்டுத் துரியாதீ தவுச்ச
மெல்லார்க்குஞ் சொந்தமென் றெவரிடத்திற் சொல்வேனே. (௮)

மல்லாடும் வாய்ஞான மந்திரங்கி ரியையெலாஞ்
செல்லாத்த னக்கந்நியந் தேடும்நாஸ் திகநிலையே
கல்லாரு றவகன்று காட்சிவியா பகவிளக்க
மெல்லார்க்குஞ் சொந்தமென் றெவரிடத்திற் சொல்வேனே. (௯)

பல்லாயி ரந்துதிகள் பாடிப்ப ணிவதெலாம்
பொல்லாத துர்க்கிரியை புத்தகக் கதைகளன்றோ
வல்லதெ லாமறந்த வாத்தும ஞானசித்தி
யெல்லார்க்குஞ் சொந்தமென் றெவரிடத்திற் சொல்வேனே. (௰)

ஒன்பதாவது பொதுப்பதிக முற்றிற்று.

---

## பத்தாவது
## நிரங்குசப் பதிகம்

---

### இதுவுமது

பூங்காவ னந்தானே புந்திசு வர்க்கபதி
தீங்கான தொன் றுமில்லை தெளிந்தோர்க் கிருளிலையே
தூங்காத திவுருவாய்த் தூக்கும்வி சாரணையில்
நீங்கா வனுபூதி நிரங்குசநி ருப்தியதே. (க)

வினையாகு மந்நியமாய் விளங்குந்து விதம்விட்டுக்
கனவுஞ்சு ழுத்தியற் றுக் காண்பானுங் காண்பதற்றே
நனவிலா னந்தசுகம் நாதாந்த வெட்டவெளி
நினைவும னமுமில்லை நிரங்குசநி ருப்தியதே. (உ)

மனப்பேய் குதித்தாட மந்திரப்பேய் தாளமிட
வினப்பேய் புகழ்பாட யிந்திரஜா லங்களென்னே
தினப்பேயெ லாமொழிந்து சித்தநி ரோதமொடு
நினைப்புமறப் புமற நிரங்குசநி ருப்தியதே (ரு)

திருவின்வி யாபகமே தெளிந்தாற் றெளிந்ததுவே
யருவுருவ மொன் றுமில்லை யறிவானந் தச்சுகமே
மருவியி ரண்டறவே மாசற்ற வன்பினுரு
நிருவிகற் பத்திட்டை நிரங்குசநி ருப்தியதே (ச)

தித்திக்கும் பேரறிவு தியானம்வி சாரமதி
யத்தியா ரோபமில்லை யத்தநி லைநிறைவே
சத்திய மார்க்கநெறி தன்னைத்தா னேயறிதல்
நித்தியா னந்தசுகம் நிரங்குசநி ருப்தியதே. (டு)

குறையாத பேரின்பங் குன்றுத்தெ ளிவுதனிற்
றுறையோக மென்பதில்லை துறந்தாற்சி வோகமதே
முறைதிரை யேதுமற்ற முழுத்துறவி லேதெளிந்த
நிறைபூ ரணக்காட்சி நிரங்குசநி ருப்தியதே. (சு)

அஜபா வகம்பிரம மட்சரமந் திரங்களில்லை
யெஜமான டிமையற்ற விருதயவி ளக்கமொன்றே
சுஜாதிவி ஜாதியுடன் சுவகதபே தம்மொழிந்த
நிஜானந்தப் பூரணமே நிரங்குசநி ருப்தியதே. (எ)

துராசை மலிந்திடவே துச்சம யக்கமெத்த
தாதலப் போவல் தத்துவம்வி ளங்கிடவே
சராசரமெ லாம்நிறைந்த சமத்துவமுந் தானாகும்
நிராசைத னிற்றானே நிரங்குசதி ருப்தியதே. (௮)

எச்சமய வாதமற்றே யின்பதுன் பமொழிந்து
சொச்சொரூப தீட்சண்யஞ் சொல்லா வனுபூதி
முச்சகம றந்தநிலை முக்கியா னந்தபத
நிச்சயசு யஞானம் நிரங்குசதி ருப்தியதே. (௯)

அச்சஞ் சலிப்பற்ற வகத்துறவு சாந்தநிலை
பச்சம் பகிரற்ற பரமானந் தக்காட்சி
மச்சரே கைசித்தன் வாழ்த்தல் தனைக்காண
நிச்சயசு பாவநெறி நிரங்குசதி ருப்தியதே. (௰)

பத்தாவது நிரங்குசப்பதிக முற்றிற்று.

வேதாந்த சதகம் 100 முற்றிற்று.

ஆக செய்யுள் ௰௧-க்கு திருப்பாடல் எர்களை.

---

பிஸ்மில்லாஹி

எட்டாவது

## நாதாந்த சதகம் 100

---

முதலாவது

### சுபாவப் பதிகம்

---

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

வேதமு திக்கும் சுபாவமதி
  வேதாந் தந்தேர்ந் துணர்வினிலே
பூதம திக்கும் பொறிமலங்கள்
  பொதிந்த கோசத் திரைகரைந்து
போதம்ல யிக்க வகம்புறம்பும்
  பொய்யா துய்யும் பூரணமே
யேதுவி திக்கு மறிவுருவா
  யிருந்தான் றானு யிருந்தானே. (௧)

பின்னந் துக்க மசுத்தமலம்
பேத மநித்யந் துவைதங்க
ளுன்னும் நாம ரூபங்க
ளுயக்க மயக்கந் தியக்கமெலாம்
வின்னம் பிரபா காஞானம்
விருத்தித் தெளிவா லகங்குளிர்ந்து
இன்ன லற்ற வறிவுருவா
யிருந்தான் றானா யிருந்தானே. (௨)

கல்லா ருறவுங் கற்பனைவிண்
கன்மோ பாசனைத் திரிபுடியுஞ்
செல்லாத் துறவு மாபாசச்
செருக்கும் பெருக்குந் திரிசியமும்
பொல்லாத் துதிமுன் வழக்கமெலாம்
பொருந்தாத் தவங்கள் கடந்தினிதா
யெல்லா மறியு மறிவாகி
யிருந்தான் றானா யிருந்தானே. (௩)

துணையற் றொழிந்த மனநேர்மைத்
துவித களங்கத் தொடர்பவநோய்ப்
பிணையற் றொழிந்த சன்மார்க்கம்
பிரிதொன் றில்லா தொருமையிலே
யணைவிட் டமைந்த வேதனத்தே
யனைத்து மறந்தே யன்புருவா
யிணையற் றகண்ட வியாபகத்தே
யிருந்தான் றானா யிருந்தானே. (௪)

கங்குல் பகலற் றேகபாங்
கருத்தங் கமைந்து தெளிந்தநிலை
தங்கும் பரமா னந்தசுகந்
தனிலே வேறொன் றற்றநிலை
மூங்கும் பேத விளக்கமதில்
மூவா தேவா மிர்தவின்ப
மெங்குந் தானே யறிவாகி
யிருந்தான் றானா யிருந்தானே. (௫)

தன்னைத் தெரியாத் தத்துவங்கள்
தானே விளங்கு மறிவதனு
லுன்னை வயக்கி மலினமின்றி
யுபாச னைபன் னினைவின்றி
யின்னங் கடந்து சதானந்த
விளக்க மவுனத் தெளிவதனு
லென்னை யறியு மறிவாகி
யிருந்தான் ருனு யிருந்தானே. (சு)

துறந்தங் குயிர்த்த வறிவாலே
சுபாவ சித்தங் கல்யாணஞ்
சிறந்த வழகு திருக்காட்சி
சித்திற் கரைந்தாற் பேதமில்லை
மறந்தாற் பிறந்த வுலகமிலை
மாய விருத்திப் பொறிகாண
மிறந்தாற் சுத்த வறிவாகி
யிருந்தான் ருனு யிருந்தானே. (எ)

கண்ணுக் கடங்கா தேகவெளி
கருத்திற் கினிய வன்பினுரு
விண்ணுக் ககண்ட வெட்டவெளி
விவேகத் தெளிவாய் நிறைந்தநிலை
பண்ணுந் தொழில்கற் பனைதவத்திற்
பண்ப டாக்கல் யாணகுண
மெண்ணுக் கடங்கா தறிவாகி
யிருந்தான் ருனு யிருந்தானே. (அ)

தூக்கம் விழிப்பும் பிரபஞ்சத்
தொல்லை யல்லற் கிரியைமல
மோக்க விருப்பும் வெறுப்புமிலா
மோன நிலையே தியானவுரு
வாக்கு மனங்கா யம்சுசித்து
வந்த திருந்த தில்லாம
லேக்க மகற்று மறிவாகி
யிருந்தான் ருனு யிருந்தானே. (கூ)

விடமே மறதி மாலிமனே
　　மின்னார் பகைதற் போதமது
கொடிய பாவ மக்கியபுகழ்
　　குருவைப் பழித்தல் தற்கொலையே
படிய மனத்தார் புகழிகழும்
　　பற்றற் றொழிந்த சுலட்சணமா
யிடமற் றெங்கு மறிவாகி
　　யிருந்தான் றானு யிருந்தானே. (ய)

முதலாவது சுபாவப்பதிக முற்றிற்று.

---

## இரண்டாவது

## ஐக்யப் பதிகம்

---

### எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

சொல்லாத வனுபூதித் தெளிவின் காட்சி
　　சோதிமய மனவெளியே சுத்த மாகும்
பல்லாயி ரங்கோடி யண்ட பிண்டம்
　　பரசொரூபந் திருக்கருளே பரமா னந்த
முல்லாசம் சம்சயசந் தேக மற்ற
　　வுண்மையது வுண்மைதனி லுலக மித்தை
யெல்லாமா யறியுஞ்சுத்த வறிவாய் நீங்கா
　　தேகபர சுகவருளை யிணங்கு நெஞ்சே. (க)

செல்லாத துவிதமத வாத னையால்
　　செய்வதறி யாதலம்புஞ் செருக்கஞ் ஞானம்
நில்லாத வுலகபராக் கவலந் துக்கம்
　　நித்திரையுங் கனவதுவாம் நினைவின் பேதம்
பொல்லாத வாவரண மவித்தை துச்சப்
　　பொய்மயக்கத் திருட்டிவிட்டுப் போதந் தானு
யெல்லாமா யறியுஞ்சுத்த வறிவாய் நீங்கா
　　தேகபர சுகவருளை யிணங்கு நெஞ்சே. (உ)

கல்லாத மனப்பேய்போய் மதத்தி லாழ்ந்து
கானல்ஜலந் தனைநம்பிக் கண்டங் கோடி
தொல்லை முன்போற் பின்பந்த்த் தோற்றங் கண்டு
தொடர்ந்தோடித் தாகவிடாய் தொலைந்தி டாம
வில்லாத கந்தர்ப்ப வுலகைத் தேடி
இச்சை மெத்த தவம்பலவா மவித்தை தாண்டி
யெல்லாமா யறியுஞ்சுத்த வறிவாய் நீங்கா
தேகபர சுகவருளை யிணங்கு நெஞ்சே. (௩)

வெல்லாத மந்திரங்கள் தவங்கள் மெத்த
வெறும்பிலுக்கா மாபாசக் கோட்டி யாலே
யில்லாத மலடிமகன் றன்னைத் தேடி
யின்புற்றே யல்பகலு மேத்திப் போற்றி
மல்லாடிப் பேய்மதத்தில் வாழ்ந்தி டாது
வழக்கமுழு துந்துறந்து மனங்கு விந்து
யெல்லாமா யறியுஞ்சுத்த வறிவாய் நீங்கா
தேகபர சுகவருளை யிணங்கு நெஞ்சே. (௪)

தொல்லையுறும் சமுசார பந்த மொன்பான்
றோடவினை தந்திரைதுக் கத்த வக்கம்
நில்லாமற் புளியம்பழந் தோடு போன்று
நிர்விஷயத் தந்தர்பகிர் நிர்வா ணத்தே
வல்லாமை தர்ப்பணமுக் கரண மற்று
மாயையுடன் ஸ்மரணையற்று மவுன முற்று
யெல்லாமா யறியுஞ்சுத்த வறிவாய் நீங்கா
தேகபர சுகவருளை யிணங்கு நெஞ்சே. (௫)

துல்லியமே தாட்டாந்த வியாபக விளக்கந்
துக்கசுக மற்றமனஞ் சுவனந் தானே
யல்லவில்லா தேகரச விவேக தீட்சை
யாத்மானு சந்தானத் தன்பா யின்பாய்ச்
செல்லுலகப் பற்றகன்றால் நிர்வி காரஞ்
சிதாபாசத் தடிப்பில்லை சேத னந்தா
னெல்லாமா யறியுஞ்சுத்த வறிவாய் நீங்கா
தேகபர சுகவருளை யிணங்கு நெஞ்சே. (௬)

நல்லார்போல் லார்விப்ர லம்பம் வாசா
ஞானமொடு லோக்கூன நாட்டந் தேட்டங்
கல்லார்கற் றோருலகத் தாசை நேசக்
காதலொடு பிரதிபலன் கருதல் செய்தல்
செல்லாத வர்த்தவாத வழக்க மெல்லாஞ்
சேதித்துச் சிக்கொழிந்து சிந்தை யற்று
யெல்லாமா யறியுஞ்சுத்த வறிவாய் நீங்கா
தேகபர சுகவருளை யிணங்கு நெஞ்சே. (எ)

எல்லைவைத்திங் காதரவு தஞ்சந் தேடி
யிருவினையின் மந்திரதவ மியற்றிப் பாடி
அல்லாகு அல்லாவென் றலறிக் கூவி
யந்நியமாய் நாடியுளம் கறங்காய்ச் சுற்றி
சொல்லொன்று பொருள்வேறாய்த் தவ்வித் தவ்வித்
தொடுப்பதுவும் விடுப்பதென்ற தோடம் விட்டு
யெல்லாமா யறியுஞ்சுத்த வறிவாய் நீங்கா
தேகபர சுகவருளை யிணங்கு நெஞ்சே. (அ)

கொல்லாமை யுண்ணாமை யென்ப துநிர்க்
குணமாகப் பற்றொழிந்து கோல மற்றுச்
சொல்லாமை செய்யாமை யென்ப துதற்
சொரூபமெதார்த் தமறிந்து துக்கம் நீத்தல்
இல்லாமை யிருப்பதென்ற சொல்மாத் திரந்தா
னின்புருவா யன்புருவா யியக்க மற்று
யெல்லாமா யறியுஞ்சுத்த வறிவாய் நீங்கா
தேகபர சுகவருளை யிணங்கு நெஞ்சே. (௬)

சொல்லுமித மாகார விர்த்தி தாண்டி
தொடுத்திடு மகமான விர்த்தி சோதி
வெல்லுகின்ற வகண்டவா கார விர்த்தி
வேதனவி ளக்கமன்றோ விமுக்த னதல்
வில்லுநாண் வேறும்போ லுலகம் நீங்கி
விளங்கியுயர் சாக்ஷிதானும் விதேக முத்தி
யெல்லாமா யறியுஞ்சுத்த வறிவாய் நீங்கா
தேகபர சுகவருளை யிணங்கு நெஞ்சே. (௰)

இரண்டாவது ஐக்கியப் பதிகம் முற்றிற்று.

மூன்றாவது

## மனோ நாசப் பதிகம்

இதுவுமது

நிருவிகற்ப சமாதிமனங் குவிந்த றிந்த
நிச்சயத்தே முச்சகத்தி னிச்சை யற்றுக்
கருமோபா சனைகள்விதி நிடேதங் கிருத்யங்
கலக்கமொடு வழக்கம்பல் குணக்கம் நீக்கி
மருமமொடு கிருதகிருத் தியமு ணர்ந்து
மலவிட்சே பமவினக் கிரந்தி நீத்து
சருவசத மானநிஜா னந்த முத்தி
சதானந்த நிட்டைமனோ நாசந் தானே. (க)

எங்களுங்கள் தெய்வமெனு மமதை நீத்தே
யில்லையுண் டதுவிதுமெய் பொய்க டந்து
கங்குல்பகல் திதிமாசம் வருட மின்றிக்
கற்பனைசொற் புகழிகழுந் தவங்க ளற்று
மங்கிலதா மேகரசத் தகங்கு ளிர்ந்து
மவுனசுக வானந்த மாறு முத்தி
சங்கோச விகாசமில்லா வியாப கத்தே
சதானந்த நிட்டைமனோ நாசந் தானே. (உ)

அந்நியதாக் யாதியில்லா வனுபூதி சுத்த
வாத்மவுண்மை நிலையினிரு பாதி கத்தே
முன்னடுபின் னுவமையுடன் வியய மற்ற
முதிதமன வெளிதனிலே யறிவா னந்த
நன்னிலைமை நிசபரிக் கிரகந் தன்னால்
நானுபே தங்கடந்து தெளிந்த முத்தி
தன்னிலைமை தனையன்றி யற்ற மோக்ஷம்
சதானந்த நிட்டைமனோ நாசந் தானே. (ந)

அந்தத்துவ மத்தியாச மாரோப மின்றி
யகம்பிரத்தி யயத்தாலே யறிவுந் தானுய்ச்
சொந்தமங்ய மிரவலஞ் ஞான பேதச்
சோரமின்றி விசாரமிட்டுத் துவித மற்றுப்

பந்தபாசம் பிரமாதஞ் ஜீவத் தன்மை
பாவனைக ளங்யமுபா சனைகள் கெட்டே
சந்ததமு மாறாது தெளிந்த மோக்ஷம்
சதானந்த நிட்டைமனோ நாசந் தானே. (௪)

காந்தமயந் தனைப்பற்றுந் தன்மை போலக்
கருவிகர ணாதியெலா மறிவிற் சொக்கி
மாந்தர்பழக் கந்துறந்தே தற்போத மற்று
மனம்நினைவு முயிரொன்றிங் கிருப்ப தற்று
தாந்தானே தானேதா னானா னென்னுந்
தடிப்பான மடிப்பற்றுச் சமயம் விட்டு
சாந்தமோ டமைதிபர முத்தி மோக்ஷம்
சதானந்த நிட்டைமனோ நாசந் தானே. (௫)

இதரேதரந் துருவநிலை துரியா தீத
மிதாவியா வர்த்தகஞ்செய் யிதயா காசம்
பதமாகப் பாஹியார்த்தப் பிரமை யற்று
பாசநாசத் தெளிவிலனு பூதி தன்னால்
மதவிதமொன் றில்லாத சுயஞா னத்தால்
வாசனா க்ஷயமாகி மனோபந் தம்போய்ச்
சதநிதானஞ் சீவன்முத்திப் பேறு நித்யம்
சதானந்த நிட்டைமனோ நாசந் தானே. (௬)

அலட்சியமே காண்பானுங் காட்சி ஞேய
மாஸ்திநாஸ்தி முப்பாழ்முத் துரியம் நீங்கி
யிலட்சியமாம் பொருள்விளங்கிப் பொருள்தா னாகி
யிதயாகா சந்தெளிந்தெல் லாமி ழந்தே
சுலட்சணந்தன் மயமாய்விலட் சணந்தா னான
சுத்தபர முத்திநிரா சைத்தி றத்தே
சலட்சணமே யறிந்தகண்டா கார விர்த்தி
சதானந்த நிட்டைமனோ நாசந் தானே. (௭)

பூதபௌ திகபேத வாஞ்சி தப்பேய்ப்
புன்னோக்கத் திரிசியசங் கற்பங் கெட்டு
பாதகந்தோ தகந்தீமை மாக்கள் கற்ற
பாகியந்தீ தகத்திரய நிலைகள் விட்டு

மாதவமுங் கிரியையா சாரஞ் செய்யும்
மனோதியம் பொய்த்தோற்ற மயக்கம் நீங்கி
சாதகமாய் விசாரணையிற் றெழிலற் றுய்ய
சதானந்த நிட்டைமனோ நாசந் தானே. (அ)

சிற்றின்பம் பேரின்பம் இன்ப துன்பம்
சிவன்சீவ னெனுந்துவிதக் கதையின் றெல்லைப்
பற்றின்றி பரோக்ஷமொடு விடய ஞானப்
பாமுகப்பே யாட்டமெலாம் பறக்க விட்டு
முற்றுமெலாந் துறந்துதுறந் ததுவு மற்று
மோக்ஷமென்ற நினைப்பற்றந் நினைவு மற்று
சற்றுமில்லா தகம்புறத்து மகண்ட மாகில்
சதானந்த நிட்டைமனோ நாசந் தானே. (கூ)

மந்தாக மிகழ்சகுணப் போராட்ட மோட்டம்
மனமுறுமப் பியாசமனு பவமா ரூடந்
தந்திரம்வாச் சியங்கடந்த யில்லல் லாஹ-
தடையற்ற நிரதிசயா னந்தக் காட்சி
யந்தமாதி யனுதியில்லா தறிவாய்க் கற்ற
வத்தநிலை யெத்தொழிலு மற்ற முத்தி
சந்ததமா ருதைக்யம் வேறொன் றில்லாச்
சதானந்த நிட்டைமனோ நாசந் தானே. (ய)

மூன்றாவது மனோநாசப்பதிக முற்றிற்று.

---

நான்காவது

## ஏகாந்தப் பதிகம்

---

### தரவுக் கோச்சகக் கலிப்பா

புத்திவி சாரணையிற் புன்னெறிக ளங்கம்விட்டே
யத்துருவ பேதகம்விட் டவகாச மாயிருந்தே
பத்தியத்தி யாசமற்றுப் பலன்கருது மிச்சைகெட்டே
யெத்தொழிலு மற்றிடவே யேகாந்த நித்தியமே. (க)

மதவாத மியாவுமற்று மனோவிகா ரந்தொலைத்து
விதவிதம் நடப்பெல்லாம் விட்டுஜடத் தோற்றமற்றே
பதமுடன நித்யமின்றிப் பருவம றிந்துணர்ந்து
யிதமகித மற்றிடவே யேகாந்த நித்தியமே. (௨)

றுக்கத்து வலிபென்றும் றூனேசுக் குன்னென்றும்
வகுத்துக் கணக்கெண்ணி வணங்குமந் திரமேனோ
தொகுத்தசாஸ் திரமெல்லாந் துக்கத்தி ரயம்விட்டு
யிகத்துத்தொ ழில்மறக்க வேகாந்த நித்தியமே. (௩)

அல்லாஹூ அக்பரென்றே யறைந்துமே பின்வேறெண்ணி
நில்லாவ நித்தியத்தை நிறுத்திப்பு கழ்வதென்னோ
கல்லாத வஞ்ஞானக் காமத்த டிப்பகன்று
யெல்லாம றந்திருக்க வேகாந்த நித்தியமே. (௪)

அல்லாவை யன்றி யனைத்தும நித்யமென்று
சொல்லிப் படைப்புகளைத் துணைதேடித் தோத்திரமேன்
பல்லாயி ரங்கல்வி படித்ததெல் லாமறந்து
யெல்லாந் துறந்திருக்க வேகாந்த நித்தியமே. (௫)

இல்லறந் துறவறமு மிரண்டிலு மாசைவைத்து
நல்லற மெனச்சொல்லி நாடகக்கூத் தாடலுமேன்
புல்லறிவு தொல்லையற்றுப் பூரணவ றிவறிந்து
யெல்லாங் கடந்திருக்க வேகாந்த நித்தியமே. (௬)

நல்லகவி மாவுரைத்து நாயனொ ருவனென்று
சொல்லிவி சுவசித்துத் துணையிணை பின்னமுமே
னல்லலு லகவிச்சை யநித்தியப் புகழ்விட்டு
யெல்லாம றந்திருக்க வேகாந்த நித்தியமே. (௭)

வண்ணங் குறிப்புருவம் வழங்கா திஸ்லாத்தின்
றிண்ணங் கொண்டீமான் றிடனாகப் பூண்டிருக்கப்
பண்ணுந் தொழிலிற்பல படைப்பைத் துதிப்பதென்னே
யெண்ணுந் துவிதமற வேகாந்த நித்தியமே (௮)

மனங்கொள் ளசுஹது மாற்றமறச் சொல்லிருக்க
பிணங்கள் தனைத்தேடிப் பிரதிபல னாடலென்னே
குணங்கும் மதபேதக் கோட்டிவி காரமற்று
யிணங்கும னங்குவிய வேகாந்த நித்தியமே. (௯)

தனைத்தா னறியாமற் றத்துவம் விளங்காமற்
சனத்தைப் பணத்தைநம்பித் தடைபட் டிருப்பதுமேன்
நினைத்தா லுலகமுள நினைவைத் தடத்தொடுக்கி
யினத்தி வினஞ்சேர வேகாந்த நித்தியமே. (ய)

நான்காவது ஏகாந்தப் பதிகம் முற்றிற்று.

---

ஐந்தாவது

## அன்புருப் பதிகம்

---

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

ஞானம் பதிந்த வுளந்தனிலெஞ்
ஞான்று மாறா தனுபூதி
மோனம் பதிந்த மவுனவுரு
முற்றுந் துறந்த சாந்தநிலை
வானம் பதியெ லாங்கடந்து
வரையற் றுயர்ந்த சாக்ஷிநிலை
ஈனம் புதிய தொன்றுமிலை
யிரண்டற் றைக்ய மன்புருவே. (க)

துன்பத் திரயத் தலங்காரந்
துக்க மயந்தார்க் கத்துவிதஞ்
செம்பொன் னுலகத் தாசைமனச்
செருக்கு நபுஞ்ச கந்தேட்டந்
தன்பற் றொழிய வங்யபுகழ்த்
தடம்விட் டுனந் தடிப்பில்லை
யின்பத் தகத்தும் புறத்துறவா
விரண்டற் றைக்ய மன்புருவே. (உ)

தடுக்கும் ஞானப் பகைமூன்று
தன்னைக் கெடுக்கும் பெண்ணாசைத்
துடுக்கர் வழிவிட் டகல்வதுவே
துக்க நிவர்த்தி சுகநிட்டை

திடுக்க மற்ற மனங்குளிர்தல்
 திதொன் றில்லா வவகாச
மிடுக்கண் ணீத்த வேகசுகத்
 திரண்டற் றைக்ய மன்புருவே. (௩)

தன்னை யறியப் பிறிதில்லைத்
 தானு யிருக்க நானில்லை
யுன்னை யொடுக்க வுலகமிலை
 யுலகை மறக்கத் திரையில்லை
பின்னும் நினைப்பு மறப்புமிலை
 பிரதி பலன்றே டிச்சையிலை
யின்ன லற்ற பாமார்த்த
 மிரண்டற் றைக்ய மன்புருவே. (௪)

தூதியோ டிகமொன் றில்லாத
 துரியா தீத மனோநாசங்
கதிதி தற்ற வனுபூதி
 காட்சி சுயஞா னத்தெளிவு
விதிநி டேதங் கடந்த வெளி
 வியாப கப்பே ரின்பநிலை
யெதுவந் தாலும் நேதிசெய்ய
 விரண்டற் றைக்ய மன்புருவே. (௫)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

மதவாதி நிந்தை செய்யும் மெய்ஞ்ஞான
 வாளாற் றுவிதம் வெட்டிப்
பதமாக வன்னி பாலங்க டந்து
 பதவி யுதவி நீக்கிப்
புதுமை விலாயத் தாகும்பொய்ப் பேத
 புன்னெறி யற்ற வறிவா
லிதயந் துறந்த தெவையும் மறந்தி
 ரண்டற்ற வன்பி னுருவே. (௬)

அவதி யநித்ய நாமரூ பப்பே
 யர்த்த வாதப்பி ணக்கின்
றுவிதம தத்தர் தூஷிக்கும் ஞான
 சுகசொ ரூபத் தெளிவா

லுவமைசொற் பூத பிரளய மற்று
மூன நினைப்பொ ழிந்து
யிவனவ னென்ற கற்பனை யற்று
லிரண்டற்ற வன்பி னுருவே. (எ)

நில்லாத மாய விடய தற்போத
நினைவுக ணிட்டை யாவு
மல்லாத வாத்ம ஞானத் தெளிவா
லந்நிய போத மற்றே
தொல்லைத் துவித ரறியாத ஞான
சோதிப் பிரகாச நிலையி
லெல்லா மறந்து தானற் றறிந்த
திரண்டற்ற வன்பி னுருவே. (அ)

உச்ச மகண்ட நிச்சய சொர்க்க
முள்ளங் குளிர்ந்த நிலையே
மெச்சு முமுட்ச றிந்து தெரிந்து
மெய்பொய் யெலாந்தொ லைத்துத்
துச்ச மயக்க துவிதிகட் கெட்டா
துய்ய மெய்ஞ்ஞான நெறியி
லிச்சை யொழிந்த மனமே துரிய
மிரண்டற்ற வன்பி னுருவே. (கூ)

ஒருமை யறியு முயிர்ஞான பாகு
வுள்ளங்கு ளிர்ந்த பானம்
அருமை விளங்காப் பேதக மாய
வடிமைகட் கெட்டாப் போதம்
சிறுமை பெருமை யொன்று மிலாது
சித்தநி ரோத முத்தி
யிருமை கடந்த பரமுத்தி தானு
மிரண்டற்ற வன்பி னுருவே. (ய)

ஐந்தாவது அன்புருப்பதிக முற்றிற்று.

ஆறுவது

## நிதார்த்தப் பதிகம்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

இதையா காச மவகாசத்
தெல்லா மறிந்தெ லாந்தானும்
பதையா விளக்கம் பூர்த்திதனிற்
பற்றற் றேக விமலசுக
முதைய மொடுக்க மற்றநிலை
யூனதி ருட்டி யொழிந்தகதி
யெதையு மறியும் சுயஞான
மெதார்த்த சொரூப நிதார்த்தமதே. (க)

உருவ மருவம் நினைப்பாலே
யுண்டா மனதின் பான்மையது
சருவ சாக்ஷி நிலைவிளங்காச்
சமயப் போக்குச் சழக்கிதுவே
மரும மறிந்து மறையுணர்ந்து
மனப்பே யாட்டத் திரைநசிக்க
யிரவும் பகலு மேகநிஷ்டை
யெதார்த்த சொரூப நிதார்த்தமதே. (உ)

மருண்ட மனத்தர் காவியமு
மந்திரக் கிரியை நினைப்பின்மலந்
திரண்ட விடயத் துபாசனைகள்
திரிசி யம்பொய்க் கற்பிதமே
வெருண்டு நரக சுவர்க்கமென
விரும்பு மந்ய நாட்டம்விட்டே
யிரண்டற் றேக வறிவுருவா
மெதார்த்த சொரூப நிதார்த்தமதே. (ங)

குணமே நாய்தான் மனங்குரங்கு
குறித்த தெல்லா மாசித்து
பணமே தேடித் தனைமினுக்கிப்
பருவ மிழந்து திரைநரையிற்

பிணமாய் விழுமுன் நிராசையிலே
பிரம கர்ப்ப ஞானமுண்டு
பிணையற் றுய்யத் தனிற்றுனே
யெதார்த்த சொரூப நிதார்த்தமதே. (௪)

வரங்கள் கிடைக்கு மென்றோடி
வந்தியா மைந்தன் றனைப்புகழ்ந்து
சரங்கள் மாற்றி மூச்சேற்றி
சடசம் பந்தத் துதிநாடி
கரங்கு போல மனஞ்சுழலக்
கவிகுக் கல்போற் றவ்வியிடா
திறங்க லேற லற்றசுகத்
தெதார்த்த சொரூப நிதார்த்தமதே. (௫)

நாய்க்கு முள்ள தொழிலில்லை
நடவா தொழிந்த நேரமில்லை
பாக்யம் நிராசை யலாதில்லை
பண்ப டாதார்க் கோய்வில்லை
காய்க்கு முன்னங் கனியில்லை
களங்க மற்றூற் றுவிதமில்லை
யேய்க்கு மதவா தந்தொலைக்க
வெதார்த்த சொரூப நிதார்த்தமதே. (௬)

குலங்கள் கோத்திர மெனப்பேசிக்
குருவென் றலைந்து சுவார்த்தமொடு
மலங்கொண் டுடைகண் ணடைபேத
மாய சகித குறைவகற்றிக்
கலங்கா தகத்தும் புறந்துறந்து
கரும மொழிந்த குருமொழிகொண்
டிலங்கும் பாமா னந்தமூற
வெதார்த்த சொரூப நிதார்த்தமதே. (௭)

குணங்கு மனது பலவெண்ணிக்
குறித்துப் பதைத்த போவற்
பிணங்கு மமகா ரச்செருக்காற்
பிணங்கள் பிணங்க ளைப்புகழ்ந்து

வணங்கும் புவனத் திச்சைகொடு
வாழ்வை மதித்து மயங்காம
லிணங்கு மறிவே குருவாகி
லெதார்த்த சொரூப நிதார்த்தமதே. (அ)

கலங்கு முயிரற் றிணையுற்ற
கதைசாஸ் திரகா வியம்பார்த்துக்
குலங்கண் ணலங்கள் தான்சொல்லிக்
குருவென் றலேவோ ருறவற்று
பலங்கள் கருதா தகந்தெளிந்து
படைப்பை நம்பு மடிப்பறவே
யிலங்கு மவுனஞ் சுயஞ்சோதி
யெதார்த்த சொரூப நிதார்த்தமதே. (கூ)

அஞ்சு பூதந் தத்துவங்க
ளனைத்து மறிந்து கழன்றேகி
பஞ்ச கோச மவஸ்தையின்றிப்
பார வாரத் திரைகடந்து
துஞ்ச லுய்த லற்றமனந்
துரிய வருளா மவுனமுற
யெஞ்சு மறிவே சுபாவசுக
மெதார்த்த சொரூப நிதார்த்தமதே. (ய)

ஆறுவது நிதார்த்தப்பதிக முற்றிற்று.

---

ஏழாவது

## நிச்சயப் பதிகம்.

---

இதுவுமது

சுத்த சொரூப நிச்சயத்தே
சுபாவ ஞான விளக்கிலே
சித்த மசையாத் திட்சண்யந்
சிவ பேத திருஷ்டியின்றி

நித்தந் தெளிந்த வனுபூதி
நீங்கா வேக ரசந்தனிலே
யத்த நிலைசம் பூரணந்தா
னச்ச மொழிந்த நிச்சயமே. (க)

வெட்ட வெளியை நம்பாமல்
விட்ட விதியென் றேங்காமற்
பட்டப் பகலை யிரவென்று
பாழுக் குழைத்துப் பலன்றேடி
நிட்டை விடயத் தியானமெத்த
நினைவு தரங்கம் போலாகு
மட்டாங்க யோகம் நசித்தகுணத்
தச்ச மொழிந்த நிச்சயமே. (உ)

துஞ்சா நனவிற் சுழுத்திசுகந்
துரியா தீத மனங்குவிந்த
நெஞ்ச மசையாச் சாந்தபதம்
நிருபா திகத்தே சுபாவநிலை
நஞ்சா முதிப்புங் கதிப்பின்றி
நாட்ட தேட்ட மமைந்திடவே
யஞ்சா றறிந்தா லறிவினுரு
வச்ச மொழிந்த நிச்சயமே. (ங)

மிடிமைத் துன்பத் தடிப்பதுவு
மீளா நரக மங்கியமாய்க்
கடுமைத் தாத மார்க்கநிலை
கட்டுப் பட்ட மதத்துவிதங்
தடமி வைவே லங்காடு
தணலா யெரித்துத் தனைத்தெரிந்தே
யடிமை யாண்டா னற்றிடந்தா
னச்ச மொழிந்த நிச்சயமே. (ச)

பூசை பலவும் பூர்வபட்சம்
பொய்த்த வம்விட் டகந்தெளிந்து
பாஷை பலவும் பொதுவென்ற
பரமா னந்தத் திருவருளை

வீசை முளைத்த வாண்பிளைகள்
விளங்குந் துக்க நிவர்த்திதனி
லாசை நேசத் திரைய றுக்க
வச்ச மொழிந்த நிச்சயமே. (ரு)

தனத்தை ஜனத்தை யினத்தையெலாந்
தடுத்தே சாரா தகந்துறந்து
மனத்தை வயக்கி மனங்குவிந்து
மாசற் றேக விதேகசுகம்
நினைத்தல் தேட லொன்றுமிலா
நிஜானந் தப்பே ரின்பமுத்தி
யனைத்துந் தெளிந்த வாருயிரே
யச்ச மொழிந்த நிச்சயமே. (சு)

வட்டி லெழுதுங் கதைபடித்து
யெல்லா நாந்தா னென்றெண்ணிப்
பாட்டை யுளறி வாய்ஞானம்
பகருந் துவித சாஸ்திரங்கள்
மேட்டில் விதைத்த பயிர்போலா
மெல்லா நழுவித் தனையறிந்து
வாட்டஞ் சலிப்பு மமைந்துவிட
வச்ச மொழிந்த நிச்சயமே. (எ)

துறந்தோர்க் கின்ப துன்பமில்லை
துவித தவத்தி லுறுதியில்லை
மறந்தா லுலகந் தெரிவதில்லை
மவுனிக் குளந்தா னியக்கமில்லை
பிறந்தால் மனுவாய்ப் பிறக்கவேண்டும்
பிரிதற் றுணர்ந்தா லுயிரறிவே
அறந்தான் றன்னைத் தானறித
லச்ச மொழிந்த நிச்சயமே. (அ)

எந்தக் கல்வி கற்றென்ன
யெங்கும் புகழ்பேர் பெற்றென்ன
தொந்த வுலகைத் துறந்தென்ன
துஞ்சும் பிணத்தை யெழுப்பிலென்ன

சிந்தை வயங்கும் ஞானமில்லை
சித்தி ஜாலத் தொல்லையிது
அந்த காரத் தடிப்பொழிந்தா
லச்ச மொழிந்த நிச்சயமே. (௬)

முரீது பெற்றே மென்றிருந்து
முணுங்கி மணிகள் தானெண்ணிப்
பெரிது சிறிது முண்டென்று
பேரா வல்லிக் கிர்கள்செய்து
கர்ம மனதுக் கடிமையதாய்க்
கட்டுப் பட்ட கயிறறுத்தே
யருமை யாத்ம ஞானமுற
வச்சங் கடந்த நிச்சயமே. (௭)

ஏழாவது நிச்சயப்பதிக முற்றிற்று.

---

## எட்டாவது
## அகங்குளிர் பதிகம்

---

### தரவுக் கோச்சகக் கலிப்பா

கல்லைக் கபுறுகளைக் கட்டிடங் கொடிமரத்தை
யெல்லைவைத் துப்போற்றி யிணைவைத்த முவதென்னே
தொல்லை யநித்யமலச் சொல்லை மதிக்காம
லல்லல் கடந்தேகத் தகங்குளிர்ந் திருப்போமே. (௧)

பாசத் திரிசியங்கள் பலதொழி லாபாச
நேசத் துவிதமெலா நேதித் தகந்துறந்தே
வேசதா ரிகள்சொல்லை வெறுத்துத் திருத்தமொடே
யாசைமுழு தும்நசித்தா லகங்குளிர்ந் திருப்போமே. (௨)

ஊனந்த காரதிரை யுபாதிசகி தப்பிணக்கு
யீனந்த விர்த்துபய விச்சையச் சம்நசித்தே
மோனந்த வத்துரிய மோக்கம் நிராசைதனி
லானந்த நித்திரையி லகங்குளிர்ந் திருப்போமே. (௩)

தோன்று வியாபகத்தைத் துலங்கித் திரைநீங்கித்
தேன்றதும் பும்மவுனந் தெளிந்த வறிவாலே
* தீன்றுனியாப் பற்றின்றிச் சித்தநி ரோதமதி
லான்றுசாந் தம்முதிர வகங்குளிர்ந் திருப்போமே. (௪)

மந்திர யோகமுறும் வாசனை யொன்றின்றித்
தந்திர மாகழுவித் தத்துவந் தானறிந்தே
யிந்திர ஜாலசித்துக் கிணங்காமெய்ஞ் ஞானவழி
யந்தர் பகிரேக மகங்குளிர்ந் திருப்போமே (௫)

தூபதீ பங்காட்டித் துதித்துப் புகழ்வதெலாம்
சாபமீ றுங்கொடிய தடத்தின் நடத்தைகளே
சோபதா பத்திரயச் சோடிப்பெ லாங்கடந்து
*ஆபிதா யென்றுமே யகங்குளிர்ந் திருப்போமே. (௬)

எத்திவ யிறடைக்க வெத்தனையோ சாத்திரங்கள்
புத்திமயக் குந்தொல்லை போக்கித்தெ ளிவுணர்ந்தே
சுத்தவறி வின்றன்மை சுகதுக்கப் பற்றொழிந்து
அத்தநிலை தனிலே யகங்குளிர்ந் திருப்போமே (௭)

வசனந் தனக்கெட்டா வாழ்வாம் சுவர்க்கபதி
விசனம கிழ்ச்சியில்லா விவேகத் தெளியுளமே
நிசனம தெதார்த்தநிலை நிச்சயம னிச்சையது
அசலம னவெளியி லகங்குளிர்ந் திருப்போமே (௮)

தருவான் பெறுவதென்ற தாதமார்க் கத்துழன்று
குருவுஞ் சிஷியரென்ற கோட்டிபல சேட்டைவிட்டே
மருவுஞ் சுயஞ்சோதி மாருத்தி யானநிட்டை
யருவுரு வகண்டவுள மகங்குளிர்ந் திருப்போமே (௯)

மனநினை வுடன்மறதி மானதபூ சைநிட்டை
கனவுசு ழுத்தியிலாக் காட்சிந னவதிலே
தினமுமா ருதன்பு திருட்டிய பேதமதி
†அன அந்த வற்றசுக மகங்குளிர்ந் திருப்போமே. (௰)

எட்டாவது அகங்குளிர்பதிக முற்றிற்று.

---

* தீன்-வைதீகம். துன்யா-லௌகிகம்.

* ஆபிது-பக்குவி. † அன-நான். அந்த-நீ.

ஒன்பதாவது

## நிர்த்தப் பதிகம்

---

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கானல்நீ ரிப்பி ரசிதமே தறியிற்
கள்வனே பணிசெய்த யானை
வானமா மலரே கயிற்றரா பேய்த்தேர்
வந்தியா மகன்களுப் பொருளே
யீனமாங் கந்தர்ப்ப நக ரிவைக
ளிருப்பினு மில்லையென் றறிந்தே
நீணில வாசை பற்றறுத் தெதார்த்த
நிர்த்தஞ்செய் யாநந்த மதியே (க)

பருதியு மதியு மெவர்க்குமே பொதுவாய்ப்
பலன்றரும் வாறுபோன் றிருளைப்
பொருதுட னகற்ற வாத்தும ஞானப்
பூரண மியாவர்க்கும் பொதுவே
சுருதியு முக்தி யனுபவந் தெளிய
சுத்தசை தன்யநித் திலமே
நிருவிஷ யத்தண் ணருள்மய தீர்த்தம்
நிர்த்தஞ்செய் யாநந்த மதியே (உ)

கருவிகள் கரணங் கலக்கமற் றமைந்து
கருமோபா சனைவினை யிழந்து
மருவறு சுபாவத் திருவருள் விலாச
மாதவத் தன்னிய மறந்து
உருவுட னருவென் றுரைக்கொணுக் காட்சி
யுயர்சாட்சி தானெனு மாட்சி
நிருமல போத நிச்சயந் தனிலே
நிர்த்தஞ்செய் யாநந்த மதியே (௩)

நற்குணம் படைத்தோ ரென்னுள முகந்தோர்
நபிபிரான் சொற்செய லுள்ளோர்
பொற்குணம் படைத்தோர்க் கமைதியும் சாந்தம்
பூணுமெய்ஞ் ஞானந்தண் ணருளே

சற்குணம் படைத்தோர் தாங்களே வானோர்
சான்றவர் மக்களி லுயர்ந்தோர்
நிற்குணம் படைத்த நிருவிகா ரத்தே
நிர்த்தஞ்செய் யாநந்த மதியே. (ச)

தனதெந தென்ற பொய்மன வழக்கந்
தத்துவத் தெரிசனத் தொழித்து
கனவெது மனதின் கற்பனை தொலைத்து
காரியக் குருமா பிழந்து
தினமனு பவிக்கும் சுகதுக்க மறந்து
தீனிஸ்லா மன்றிமற் றுள்ள
நினைவதை மறந்து செய்யலுரை லயித்து
நிர்த்தஞ்செய் யாநந்த மதியே. (ரு)

விக்கிர கத்தைக் கடவுளாய்த் தொழுவர்
விடக்குறு கபுர்களைப் புகழ்வர்
பக்கிரு மஸ்தான் பீர்குரு வென்போர்
படைப்பு களைத்தொழுந் தொழும்பர்
இக்கிரி யைகள் யாவர்க்குந் தீதே
யிழந்துசன் மார்க்கமெய்ஞ் ஞான
நிக்கிர கத்தே மனந்துளும் பாது
நிர்த்தஞ்செய் யாநந்த மதியே. (சு)

அர்த்தவாழ் வதனி லாசைவைத் தியற்றும்
அர்ச்சனைக் குருபூசை மலினங்
கர்த்தாவும் போக்தாக் கிரியை யாசாரங்
காமவி டாய்தடித் துருவாய்
மர்த்தியந் தன்னில் மயங்கியே கவிழ்ந்து
மாரடித் திடும்பல செயல்கள்
நிர்த்துளி செய்து நிருபாதி கத்தே
நிர்த்தஞ்செய் யாநந்த மதியே. (எ)

கதித்திடும் நினைப்பா லாகாயக் கோட்டை
காரிய மதானுஞ்ஞை யகந்தை
மதித்திடுந் தொழில்கள் யாவரும் புகழ
மனோரதம் வாகனப் பவனி

விதித்திடும் சுகூதுமு சாஹதா நிட்டை
விளங்கிடார் கனவதைப் புகழ்வர்
நிதித்தியா சனமே நிச்சய திட்சை
நிர்த்தஞ்செய் யாநந்த மதியே. (அ)

காங்குபோற் சுழலு மனக்குரங் கதனைக்
கட்டினும் நெட்டென நடக்கும்
வரங்குரு மொழியால் நாய்க்குரங் கதனை
வயக்கியே யர்ப்பணஞ் செய்து
அரங்குல விடும்நல் லனுபவந் தன்னி
லர்ச்சனை கற்பனை மறந்து
நிரங்குச திருப்தி நிராசையின் முத்தி
நிர்த்தஞ்செய் யாநந்த மதியே (கூ)

புத்திவி சார மெத்தவத் திற்கும்
பூரணந் தெளிவருள் சமாதி
யத்தியா ரோபங் கயிற்றரா மயக்க
மற்றிடத் தெளிதலே நிட்டை
முத்தியுஞ் சித்தி சுத்தசற் குணத்தை
முழுமதிப் பொருள் தியானம்
நித்தியகல் யாணந் திருவிக்கா காட்சி
நிர்த்தஞ்செய் யாநந்த மதியே. (ய)

ஒன்பதாவது நிர்த்தப்பதிக முற்றிற்று.

---

பத்தாவது

## அற்றநிலைப் பதிகம்

---

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பூர ணந்தண் ணருணிறைவே
பொறிக ரணம்பு லன்லயித்த
கார ணந்தற் சாட்சிதனிற்
கரும விகாரத் தொல்லைபல

தார ணிப்பற் றென்றுமிலாத்
தன்ம யத்தன் புருவறிவா
யார ணங்கண் டகந்தெளிந்த
வற்ற நிலையு முத்தியதே (க)

மருளா மனத்திற் பொருள்விளங்கி
மவுன நந்தச் சொருபநெறி
தெருளா முளத்தே யேகாசந்
தெளிந்த புத்தி யுணர்ந்தநிலை
யிருளா மனித்ய நாட்டமறுத்
தின்பா நந்த மகம்புறமும்
அருளாய் நிறைந்த சுத்தசுக
மற்ற நிலையு முத்தியதே. (உ)

பெத்தர் தேடும் சுவர்க்கபதி
பேணு மீனத் திரையறுத்து
முத்தர் வாழும் வியாபகத்தே
மூவா விளக்கம் பெரும்பேறே
சித்தஞ் சலிக்கா தன்புருவாம்
சித்திற் கரைந்தா லேகமயம்
அத்தி யந்த மறிவுகுரு
வற்ற நிலையு முத்தியதே (௩)

மனித்தர் குழாங்கண் ணீங்கிதனி
மயமா யிருந்து மனங்குவிந்து
தனித்த மாவுல் ஹயாத்தறிவு
தானே சீவன் முத்திநிலை
யினித்த ஞான வமிர்துண்டோ
ரின்பா நந்த மாறுதோ
ரனித்திய மெண்ணு தருள்சுகத்தே
யற்ற நிலையு முத்தியதே. (ச)

மனித லட்சத் தொருவனன்றோ
மதிகொண் டுணரும் பகுத்தறிவோன்
புனித மதகற் பனைவிவர்த்த
புன்மை பேதத் துவிதமற்று

கனியு மறிவா நந்தமொடு
காட்சி தானே தானறிந்து
அனிச மின்ப சுகமோயா
தற்ற நிலையு முத்தியதே. (ரு)

சாதி மதங்கள் சமயங்கள்
சமாதி யோகம் பெரியோர்போல்
மோதி லெப்பை ஷெய்காகி
முரீது விற்றுப் பணஞ்சேர்த்து
ஓதி மந்திர முச்சரித்திங்
குலகை மருட்டும் பொய்மறக்க
ஆதி யந்தங் கடந்தசுக
மற்ற நிலையு முத்தியதே (சு)

இறந்தால் முத்திப் பேறென்னல்
எல்லா மிழந்து தானொழிதல்
சிறந்த பதவி இஃதன்றி
செத்தால் முத்தி யெதற்கோதான்
துறந்த மனமே யகங்குளிர்ந்து
துரியா தீத வருள்மயமா
யறிந்த வறிவு தற்சாட்சி
யற்ற நிலையு முத்தியதே (எ)

காரி ருளஞ் ஞானவழி
கமனஞ் செயல்கற் பிதபேதம்
பாரி ருள்பந் தபாசம்
பார வாரத் தற்புகழ்ச்சி
பேரி ருளற் றொருமைமதி
பேரின் பத்தே னமுதறிவு
*ஆரி பறிந்த சுகநிட்டை
யற்ற நிலையு முத்தியதே (அ)

குவல யம்பொய் மதந்தரீக்குக்
கோடா கோடி பலவிதங்கள்
கவலை யன்ய நாமரூபக்
காரி யந்தற் போதவழி

* ஆரிப்-அனுபவி.

புவன மிச்சை யாவையுமே
புந்தி மறந்த கங்குளிர்ந்து
அவல மற்றுத் தான்தாஞ
யற்ற நிலையு முத்தியதே. (கூ)

புத்த கங்கள் மிகப்பார்த்துப்
புரோகி தர்போ லலையாமல்
யெத்தொ ழிலு மெத்தவமு
மெல்லா மிழந்து தனைத்துறந்து
சித்தஞ் சலியா மச்சரேகை
சித்தன் காலங் குடியானும்
அத்தம் பாமா நந்தசுக
மற்ற நிலையு முத்தியதே. (ய)

பத்தாவது அற்றநிலைப்பதிக முற்றிற்று.

நாதாந்த சதகம் முற்றிற்று.

ஆ செய்யுள் ௰௨-க்கு திருவிருத்தம் அாகஎ.

---

பிஸ்மில்லாஹி

ஒன்பதாவது

## சிதானந்த சதகம் 101

---

முதலாவது

### * மதிவிதிப் பதிகம்

---

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

அருண னம்புலி விதிமதியா
மாத்மானு சந்தா னந்தீட்சை
மாண விகாரத் திரைகடந்த
மவுன விளக்கத் துவமேயந்

---

* மதி-புத்தி. விதி-பிரஹ்மம்.

தருண மெவர்க்கும் பொதுஞானந்
தானே சந்தேக மற்றநிலை
கருணை வியாப கத்தெளிவே
கதியே ஞான மதிவிதியே. (௧)

மனந்தா னுலகை வேறென்ன
மதித்துப் பேததி ருட்டியொடு
தினந்தான் றேகத் திச்சைகொடு
தீதாய் மயங்கித் தியங்காமல்
நினைந்த வந்யத் திரையொழிந்து
நீங்கா தேக பூரணத்தே
கனிந்த ஞானத் தன்புருவாங்
கதியே ஞான மதிவிதியே. (௨)

தூல விகாரத் தோற்றமறுந்
துவைத சாந்த மன்பகத்தே
மூல சகுண விர்த்தியிலை
முத்தி நிரயத் தெண்ணமிலை
சீல வமலத் தொருமைதனிற்
சிவன் முத்தி நிர்விஷயங்
கால நேர மறுந்தெளிவாங்
கதியே ஞான மதிவிதியே. (௩)

விண்ணே காற்றுத் தீநீர்மண்
விளங்கிடு முலகப் பிரளயமே
யெண்ண மிவையிற் செல்லாம
விதமாம் ஸ்மரணை விஸ்மரணை
பண்ணும் பூதச் சேட்டையின்றி
பக்கு வறுண் ணறிவாலே
கண்ணுங் கருத்தும் லயித்தசுகங்
கதியே ஞான மதிவிதியே. (௪)

இலங்கும் வியாப கந்தெளிய
வெல்லாங் கல்யா ணசொருபந்
தலங்கள் குலங்க ளென்பதிலை
தாதாத் மியத்தொந் தமில்லை

பலன்கள் தேடு முபாதியிலே
பார்க்குந் தூல விடயமிலே
கலங்கா தகத்தும் புறத்தொன்றே
கதியே ஞான மதிவிதியே. (ரு)

இதமா கார விர்த்தியிலே
யெல்லாங் கண்டு கழன்றேகி
மதமாந் துவித கற்பனைகள்
மறந்தே யகமா காரவிர்த்தி
பதமா யுணர்ந்து விதேகமுத்தி
பாக்ய மகண்டா காரவிர்த்தி
கதிமாத் திரைகள் கடந்திடவே
கதியே ஞான மதிவிதியே. (சு)

சாந்த மமைதி நிர்விஷயம்
சதாச விகற்ப சமாதிநிலை
தாந்தா னென்ற பிரமையிலே
தவமும் நித்ய மபேதநெறி
நீந்தத் தொழில்க ளர்ப்பணத்தே
நிருபா திகத்த சலவெளி
காந்த மனது லயிக்கமுத்தி
கதியே ஞான மதிவிதியே. (எ)

துலிபத் தன்மை நிராசையது
தூண்டா விளக்கு விசாரணையே
மலினத் தின்ப துன்பமொடு
மயக்குந் தேசா சாரமிலே
பலித மென்ப தொன்றுமிலே
பரமா னந்த சுபாவிகம்
கலிமாப் பொருளு மிரண்டிலையே
கதியே ஞான மதிவிதியே. (அ)

அநபி வியத்தி யாவரண
மபினி வேசத் திரைமயக்கு
மினைய மசத்து சத்தென்ற
விகாரத் தோற்றம் வெறுத்திதயச்

சினமுங் குணமுப் பற்றொழிந்தாற்
சிவசொ ரூபங் திருக்காட்சி
கனவு நினைவும் நசித்தசுகங்
கதியே ஞான மதிவிதியே. (௬)

அங்ய மநித்ய முபமான
மனுமா னஞ்சொல் லர்த்தவாதம்
பின்னித் தியக்கும் மதவாதப்
பிணக்குங் குணக்குங் தீதற்ற
மன்னுந் தினிஸ் லாமார்க்கம்
மகாகா யம்பொற் சுகஞானங்
கன்ன லமுதே புறுக்கானே
கதியே ஞான மதிவிதியே. (௭)

முதலாவது மதிவிதிப்பதிக முற்றிற்று.

---

இரண்டாவது

## அலிபுப் பதிகம்

---

இதுவுமது

வானந் தாமுஞ் சாசாங்கள் வழங்கு மேக மயவதித
மோனந் தாங்கத் தகங்குளிர்ந்த மோட்ச சித்த நிரோதநிலை
ஞானந் தவத்திற் காருயிரே ஞாயம் புகட்டும் புறுக்கானி
லானந்த சூட்ச ஞாபனந்தான் அலிபு லாமீ மஹந்தானே. (௧)

கூறு மலிபு சுத்தந்தான் குறித்த லாமு விலட்சணமே
தேறு மீமும் வியாபகமே கிரியற் றுணர்ந்த வறிவாலே
வேறு மிரண்டற் றைக்யநிலை மேவு முப்பா ழர்ப்பணத்தே
யாறு மமைதி சாந்தசுகம் அலிபு லாமீ மஹந்தானே. (௨)

தன்னு மலிபு லாம்வெளியே ததாகா ரந்தான் மீமெருது
உன்னும் பாச மதிவிதியு முதிப்பு நினைப்புந் துதிப்பறவே
மின்னும் நாட்ட தேட்டமன விலாச மவகா சத்தொடுங்கி
யங்நிய மற்ற ஞாபனந்தான் அலிபு லாமீ மஹந்தானே. (௩)

சொல்லும் சத்து மசத்துடனே சொகுசாம் சதசத் தென்பதுவும்
வெல்லும் விசாரஞ் செய்தறிந்து வெட்ட வெளிபோற் றாய்தாக்கித்
தொல்லை யுலகைப் பேதமெனத் தோணு நோக்கத் தெளிவாலே
யல்ல லில்லதா னுரைநீரே அலிபு லாமீ மஹந்தானே. (ச)

புகன்ற வலிபு தற்சாக்ஷி புகழும் லாமு வெளியாச்சு
சுகண்டி மீமுஞ் சுத்தநிலை சூட்ச காரணந் தூலமற
நகன்றி டாத விபுமயம்போல் ஞான னந்தச் சுகந்தனிலே
அகண்டா கார விர்த்தியது அலிபு லாமீ மஹந்தானே. (ரு)

பொறிபு லனுங் காணமெலாம் பொருந்தி யவகா சத்தொழிந்து
நெறிமுத் துரியத் தெல்லையற நேய ஞான ஞாதுருவாந்
திரிபு டிகட் டவிழ்ந்தேகத் தினில் லாமு மிலிசானே
யறிவுக் கந்ய மற்றறிந்த அலிபு லாமீ மஹந்தானே. (சு)

நேம நிஷ்டை யென்பதுவும் நேதி நேதி நிச்சயமே
நாம ரூபத் தவங்களெலாம் நாணு பேதத் துவிதவழி
சாம விகாரத் திரையறவே சத்து சித்தா னந்தநிலை
ஆமா மதிதன் னறிவுணர்ந்த அலிபு லாமீ மஹந்தானே. (எ)

தத்துவக் கூட்டத் திரைகடந்து தனக்கந் யந்தே டுவமையற்ற
நித்யகல் யாணக் காட்சியெனும் நிஜவா னந்தஞ் சீவன்முத்தி
வித்யா னந்தவி ளக்கமொடு விதேக முத்திப் பரமுத்தி
அத்வா பத்தி ஞாபனமே அலிபு லாமீ மஹந்தானே. (அ)

மனமும் புத்தி சித்தமொடு மருமந் தெளியு மகங்கார
நினைவும் வயங்கிச் சாந்தமொடு நீநான் வேறென் றெண்ணுமல
வனமுட் காட்டைச் சுட்டேக வழக்க மொன்றுந் தரிப்பதிலை
அனலா அந்த வென்பதிலை அலிபு லாமீ மஹந்தானே. (கூ)

மெலியா தாத்ம ஞானநிலை மேவும் சமசத் தின்பாசந்
துலிப விருத்தி மூன்றப்பாற் றுய்ய சுகந்தா னனுபூதி
கலிமா சொருப லட்சணமே கலந்தா லைக்ய லட்சணந்தான்
அலிபு லாமீ மறுவாத்மா அலிபு லாமீ மஹந்தானே. (ய)

இரண்டாவது அலிபுப்பதிக முற்றிற்று.

## மூன்ருவது

## நிதித்தியாசனப் பதிகம்.

---

### இதுவுமது

என்னை நானென் றறிந்தப்பா
விரண்டற் றறிந்த வைக்யசுகந்
தன்னைத் தானென் ருய்ந்தநிலை
தானென் றிருந்த நினைவொழிந்தே
யுன்னு முபாதி விடயபோத
முபய மற்ற விசாரணையிற்
பின்ன மங்யம் நசித்தவருள்
பிரம தியானத் துவாமதியே (க)

நனவிற் புவன வியாபாரம்
நாட்ட மனதின் விசாலமது
வினையி னவஸ்தை மாயமல
விகார ரூபந் தியானநிட்டை
தனது வடிவங் குருதோற்றந்
தன்னைத் தேடித் தனைக்கெடுக்கும்
பினம்வே றெண்ணும் விடக்கறுக்கப்
பிரம தியானத் துவாமதியே. (உ)

உழவோ ரூரோர் வழக்கமென்று
முதவாத் தெருக்கூத் ததைநம்பிக்
குரவர் ஷெய்குத் தங்களென்றுங்
குடும்பம் பிழைக்க முரீதுவிற்று
வரமே தருவோம் நாளைசொர்க்க
வாழ்வா மென்ற கதைமறந்து
பிறவா திறவா துளம்லயிக்கப்
பிரம தியானத் துவாமதியே. (ங)

அரிய பதவி முத்தியென
வாசித் தடையத் தவஞ்செய்து
தெரியுங் கனவின் ரேற்றமதைத்
தெளிவாங் காட்சி நிசமென்று

புரியும் நிட்டை யோகங்கள்
புந்தி மலினத் தாபாசப்
பிரிய மங்யத் தோற்றம்விடப்
பிரம தியானத் துவாமதியே. (௪)

விளையும் பேத மனோதிய
விடக்கா மங்ய முபாசனையாற்
களையுற் றிருந்த மனத்தடைகள்
கட்ட விழ்ந்து விசாரணையிற்
றளையற் றிச்சை நிவர்த்திதனிற்
றத்வ முணர்ந்து சித்துருவாய்ப்
பிழையற் றுய்யு மகங்குளிர்ச்சி
பிரம தியானத் துவாமதியே. (௫)

ஞானி தனையே பழிப்பவரெஞ்
ஞான்று மோயா நரகமெனு
மீனத் தழுந்தித் துக்கவினைக்
கிடும்பைக் காளா மியாதனையர்
மோன வறிவின் றிருவுளத்தார்
முற்றுந் துறந்தோர் பேதமிலார்
பீனந் துவித மற்றநிலை
பிரம தியானத் துவாமதியே. (௬)

சலித்த மனதிற் றிரிசியமே
சமுசய ரூப திருஷ்டியது
கலித்த வாசனை மூன்றாலே
கலங்கித் தடைகள் மூன்றாலே
பலித்த பூதப் பிரளயத்தாற்
பகுத்து ணரார் மித்தைதனைப்
பெலத்த வேடணை மூன்றறவே
பிரம தியானத் துவாமதியே. (௭)

பசியா திருக்கு முணர்வமுதம்
பருகிப் பிரதி பலன்வெறுத்து
நிசியா மந்த காரம்விட்டு
நீங்கித் தீவிர தாந்தன்னில்

விசய மனது தான்படிந்து
விடய முபாசனை தாளொழிந்து
பிசகா விளக்கந் தெளிந்திடவே
பிரம தியானத் துவாமதியே. (அ)

குணக்க மற்ற வணக்கமது
குடிகொண் டிருப்ப தெலாம்வெறுப்பு
கணக்கு வழக்கு மொன் றுமில்லை
காலம் நேரம் நேமநில்லை
யிணக்க மிளமை மூப்பில்லை
யிருத யத்தின் சுத்தநில்லை
பிணக்க மற்றிங் கறிவதுவே
பிரம தியானத் துவாமதியே. (கூ)

சுருதி யுக்தி யனுபவத்தே
சுயஞா னந்தான் றிருக்காட்சி
நிரதி சயானந் தந்தானே
நீங்காச் சதாச விகற்பநில்லை
கருதி யிருந்த தத்தனையுங்
கமலத் தெண் ணு தகற்றிடவே
பிரதி பந்த பாசமில்லை
பிரம தியானத் துவாமதியே. (ய)

மூன்றாவது நிதித்தியாசனப்பதிக முற்றிற்று.

---

நான்காவது

## அற்புதப் பதிகம்.

---

இதுவுமது

நினைவே திரிசியத் தோற்ற நிறபேத மன்றேசு பாவந்
தனையே யறிந்தது ஞானந் தன்னை மறந்தது மோனம்
வினையை யழித்தது புத்தி விளங்கிய சுத்தநி தார்த்தம்
புனையும் ஞேகாசந் தானே பரிபூரண வற்புத சித்தே. (க)

சந்தேக விபரீத மில்லை தடைபடு மஞ்ஞான மில்லை
வந்தனை பூசனை தொல்லை வாழ்வொடு தாழ்வதுந் தொல்லை
சிந்தனை தொந்தமும் விட்டுச் சீவத் தடிப்பினைச் சுட்டுப்
புந்தில யத்தருள் பூணப் பரிபூரண வற்புத சித்தே. (௨)

ஒத்து வருமுதிப் பாலே யுற்பன மாய்ந்துதெ ளிந்து
பத்தியா மெத்தொழி லுந்தான் பாவனை கற்பனை யற்று
நித்திரை சொப்பன மின்றி நிருபாதி கத்தில்ல யித்த
புத்திம யக்கமில் லாத பரிபூரண வற்புத சித்தே. (௩)

நேசம னுமான நிட்டை நேமநா மரூப நாட்டந்
தேச வழக்கங்க ளென்று செய்யும்ப லவகைப் பொய்யே
பாச மனத்திர யங்கள் பற்றறச் சித்தநி ரோதம்
பூசனை யாவுந்த டுக்கப் பரிபூரண வற்புத சித்தே. (௪)

வேதம் பிழைப்பினுக் கோதி வேடிக்கை ராகமும் பாடி
மாதவர் போலெங்கு மோடி மந்திர மோதகு ருமார்
பேதம தத்திலு முன்று பேசுங் கதைபல கற்றும்
போதமெ ரிசன மில்லை பரிபூரண வற்புத சித்தே. (௫)

சித்து விலாயத் தென்பர் சிவோகம் அனல்ஹக் கென்பர்
மெத்தப் பிதற்றுவ தாலே மெய்ஞ்ஞான நிண்ணய மில்லை
நித்திரை யின்கன வாமே நீங்கிசு பாவிக மோங்கி
புத்தி தியங்கா துணர பரிபூரண வற்புத சித்தே. (௬)

செத்த பிணத்தை யெழுப்பித் தெருவெலாம் வாழவும் வைத்து
யெத்திசை போற்றவும் வாழ்ந்து யிருப்ப தவித்தையின் ஜாலம்
பத்தி மனோமயக் கந்தான் பஞ்சமர் சொப்பனம் விட்டே
புத்தி விசாரித் துணர பரிபூரண வற்புத சித்தே. (௭)

நித்திய கல்யாண சொரூப நிர்மலக் காட்சி விவேகம்
கத்திப் புகழ்ந்து துதிக்குங் காரியம் விற்பன மன்று
சித்திசெய் மந்திரத் தொல்லை சீர்கே டறுத்துத் தெளிந்து
புத்தி விசாரணை செய்ய பரிபூரண வற்புத சித்தே. (௮)

எத்தனை கால மிருந்து மெத்தனை கல்விகள் கற்றுங்
கத்தனை நூலக்கண் ணாலே கண்டு கதைப்பது ஜால
வித்தை விலாயத்து மாய விடக்காந் திரிசியஞ் சொல்லும்
புத்தகக் கல்விம றக்கப் பரிபூரண வற்புத சித்தே. (௯)

சொல்லிலுஞ் சொல்லா தகத்திற் சொச்ச மறிந்தது நிட்டை
யல்லும் பகலுமி னைந்தே யனுசந்தா னஞ்செய்வ தென்று
மெல்லை விடயதற் போத மெல்லா மறத்தல்ச மாதி
புல்லறிவிற் கெட்டா ஞானம் பரிபூரண வற்புத சித்தே. (ய)

நான்காவது அற்புதப்பதிக முற்றிற்று.

---

ஐந்தாவது

## அர்ப்பணப் பதிகம்.

---

### தரவுக் கொச்சகக் கலிப்பா.

ஏவல்வி லகல்பல வெண்ணஞ் சயந்தனிலே
சிவன்முத்தி தானகும் சிவபேதந் தானமோ
தேவவ முதறிவு தெவிட்டா தருந்திபல
வாவலெ லாம்நசிக்க வர்ப்பண மகத்துறவே. (க)

வான்பிரம மென்றே வழுத்துந் துவிதம்விட்டு
நான்பிரம மென்பதுபொய் நான்பிரமந் தானமோ
தான்பிரமை யற்றதுவுந் தத்துவங் கடந்தநிலை
யான்மசிவோ கந்தெளிய வர்ப்பண மகத்துறவே (உ)

நேர்த்திரோக் காத்துமா நிர்மலா நந்தநிட்டை
பூர்த்தியரு ளென்பதன்றி புன்னேக் கருளாமோ
தீர்த்தம் பவக்கடலைத் திடமாகத் தாண்டிடவே
யார்த்தசி வசொரூப மர்ப்பண மகத்துறவே (௩)

மன்னுயிர்க் காருயிரா மறைபடாத் தண்ணிறைவை
தன்னறிவு சாக்ஷியலாற் றன்னுருவுங் காட்சியதோ
பின்னமறத் தெளிந்த பிரமேயப் பூரணத்தே
யந்நிய திரையறுக்க வர்ப்பண மகத்துறவே. (௪)

மெச்சுமா நந்தநிலை மெய்ஞ்ஞானந் தற்சாட்சி
உச்சிதமெய் யல்லாது உபாசனைமெய் யென்பாமோ
பட்சமுள வத்தனையும் பாழாக்கித் தேவையற்றே
யச்சஞ்ச லிப்பறவே யர்ப்பண மகத்துறவே (௫)

இன்பந் தனிற்றுனு மிணையற்றெ லாமறந்தாற்
றன்பந் தவமுளதோ தன்பத்தென் பதிலேயே
துன்ப சுகமொழிந்த துக்கநி வர்த்தியிலே
யன்புரு சுகச்சொரூப மர்ப்பண மகத்துறவே. (சு)

பெருமைக்கு மாரடிக்கும் பேத தவமெல்லாங்
கருமத் திரயமல்லாற் காரியம்நி வர்த்தியதோ
மருமம றிந்துணர மயக்கந்தி யக்கமில்லை
யருமை யகங்குளிர வர்ப்பண மகத்துறவே (எ)

சந்திர சூரியகலை தடைபடச் சுழிமுனையின்
வந்தனைபொய் யல்லாது வந்தனமும் பொய்யாமோ
மந்திர முபதேச வாசனைச் செறுக்கறவே
யந்தரங்க வெட்டவெளி யர்ப்பண மகத்துறவே. (அ)

காண்ப தெலாங்காட்சி கண்குளிரப் பாராத
வீண்பார்வை பொய்யன்றி விவேகமும் பொய்யாமோ
பூண்பதெலாம் பற்றொழிந்து பூரண விளக்கஞ்செய்
யாண்பிள்ளைச் சிங்கங்க ளர்ப்பண மகத்துறவே (கூ)

தாசனுண் டானென்னுந் தவறற்ற நீட்சண்யன்
வீசையுள்ள வாண்பிள்ளை வீசையுள்ளா ராண்பிள்ளையோ
பாசநா சந்தன்னிற் பரமானந் தக்காட்சி
யாசைநே சங்களில்லை யர்ப்பண மகத்துறவே. (ய)

ஐந்தாவது அர்ப்பணப்பதிக முற்றிற்று.

---

ஆறுவது

தத்துவப் பதிகம்.

---

இதுவுமது

வேசதா ரிகள்செய்த வேடிக்கை சொற்பழக்கம்
தேசவ ழக்கமென்பர் தேசாசா ரங்கள்பொய்யே
வாசனு க்ஷயமாகி மனோநாச மாகிடவே
தாசனு சானுமில்லை தத்துவஞா னந்தானே. (க)

கோசபீ சாக்ஷரங்கள் குருவுப தேசமென்று
பூசைகள் செய்வர்பல பூசைகளு மெய்யாமோ
நீசதுர்ப் பக்தியெலாம் நீக்கிநி னைவொழிக்கத்
தாசனு னென்பதில்லை தத்துவஞா னந்தானே. (௨)

வேதபா கியர்சொன்ன வெறும்பிலிக் கர்த்தவாதம்
போதப்பி ரளயமே பூதப்பி ரளயமே
சாதனமு மொன்றுமில்லை சடமவ்வா வாதமுயிர்
தாதமார்க் கங்களில்லை தத்துவஞா னந்தானே. (௩)

சத்திசி'வனென்பார் சார்ந்தபுத் தியறிவே
யத்தியா சங்களுண்டோ வத்தியா ரோபமில்லை
சுத்திம னங்குளிர்ந்து சுலட்சணத் தன்புருவாந்
தத்துவத் தெரிசனத்தே தத்துவஞா னந்தானே (௪)

வேதவே தாந்தமது விவேக மவிவேகம்
சாதகம் புத்திநுட்பம் சாதனைகள் வேறிலையே
பேதவா திகள்சொன்ன பேய்மதத் தொல்லைகெடத்
தாதனுண் டானில்லை தத்துவஞா னந்தானே (௫)

மூச்சைப் பிடித்தடக்கி முக்கியே கண்பொத்திக்
காட்சிகண் டேனென்பர் காட்சியென் றொன்றிலையே
சூக்ஷகா ரணநனவுந் துரியத்தொ டுங்கிடவே
சாக்ஷிமாத் திரமன்றோ தத்துவஞா னந்தானே. (௬)

மனமலி னத்தாலே மற்றெல்லாந் தோற்றுவதா
மனுசந்தா னமாத்மா வனுசந்தா னம்பொதுவே
கனவுநி னைவுமில்லை காட்சியறி வின்சொரூபந்
தனுகரண போகமறத் தத்துவஞா னந்தானே. (௭)

கதைகாவி யநினைப்பின் கற்பனைகள் சொப்பனந்தான்
விதவிதந் தோற்றுமந்த விதவிவிதம் பொய்யன்றோ
யிதமகித விச்சையது மில்லாத கங்குவிய
சததூய நிட்களமே தத்துவஞா னந்தானே. (௮)

இரவுப கற்றோன்ற விதமாகா ரவிர்த்தி
யரவம்நி னைப்பதுவே யரவங்கு றிப்பிலையே
நிருவிகா ரத்தன்மை நிர்வாண நிஷ்டையது
சருவசம் பூரணமே தத்துவஞா னந்தானே. (௯)

அந்தக் காணம்பொறி யமைந்தே யகந்தெளிய
பந்தபா சமெமனே பந்தநா சந்திருவே
சிந்தை யடங்கிசுக சித்திற் கரைந்தொழிய
சந்ததமு மானந்தந் தத்துவஞா னந்தானே. (ய)

ஆறுவது தத்துவப் பதிகம் முற்றிற்று.

---

ஏழாவது

## முத்திரைப் பதிகம்.

---

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

ஏழென் றிருந்த வுபாதிகடந்
திதயா காசத் தெளிவழிநேர்
நாளென் றிருந்த முக்காலம்
நழுவி நாட்டந் தேட்டமற்று
வாழென் றுரைத்த வேதமுறை
மகாவாக் கியத்தி னின்றதனிற்
பாழென் றறிந்த வெலாந்துறந்து
பற்றற் றதுசின் முத்திரையே. (க)

சதமே சுவாச மேற்றிறக்கி
சமாதி யோக நிட்டைபல
விதமே செய்து தூங்கியபின்
விழித்துக் கனவைத் தான்புகழ்ந்து
புதுமை காட்சி யென்றுசொலும்
புராணங் கட்டுக் கதைமறந்து
பதமாங் காண சுத்தியொடு
பற்றற் றதுசின் முத்திரையே. (உ)

குருவுஞ் சீட ரென்றிருந்து
குறித்த பலமந் திரஞ்சொல்லி
விரலும் விரலுங் கூட்டிமன
விடய யோக தவஞ்செய்வர்

கெருவ மாக நாமடித்துக்
கேசரி முத்தி ரையென்பர்
பருவம் பக்குவ தவமன்று
பற்றற் றதுசின் முத்திரையே. (௩)

சகத்தை மருட்ட மனோதத்வ
சால வித்தை களைப்பழகி
சுகத்தைத் துக்க மயமாக்கித்
துக்கந் தனக்கே தொழும்பாகி
யீகத்தைப் புரட்டும் யோகவித்தை
யிந்திர ஜால மந்திரமே
பகுத்தங் குணர்ந்தெ லாமறந்து
பற்றற் றதுசின் முத்திரையே. (௪)

எழுத்துந் தொனிகள் மந்திரங்க
ளிலட்சி யார்த்த மறிந்துணர்ந்து
வழுத்துந் திக்கிழ ஞாபகந்தான்
வரைய றுத்தல் பிக்ருலே
விழித்தே யெதார்த்த சொரூபமில்லை
வெறும்பா ழாகு மனவெளியே
பழுத்த மவுன மறிந்துணரப்
பற்றற் றதுசின் முத்திரையே. (௫)

விசுவா சத்தி லனுமான
விருத்த மனந்தான் பேதலித்து
வொசுவா சாகும் பேய்பிடித்தே
யுதவா திதயஞ் சலித்துழன்றே
யிசுமு லகுல மகாவாக்யத்
திணக்கம் விளங்கா தநித்தியமாம்
பசுபா சத்தில் மயக்கமறப்
பற்றற் றதுசின் முத்திரையே. (௬)

தொகுத்த பலதுர்ப் போதனைகள்
துவித மனமா யைத்தொடராம்
வகுத்த மயக்கத் தகமலின
வாஞ்சை யபிமா னம்போக்கி

யகத்தும் புறத்து மொருமைநிலை
யைக்யம் பிரிவற் றகங்குளிர்ந்து
பகுத்தங் குணர்ந்து வேறற்றுப்
பற்றற் றதுசின் முத்திரையே. (எ)

அழுது மிரந்து நூறுண்டா
யனேக தவங்கள் செய்தாலுஞ்
தொழுது முலகைத் துறந்தாலுஞ்
சொச்சொ ரூபம் விளங்காதே
யெழுதும் பலகை சித்தமதே
யெழுது கோலும் நினைப்பன்றோ
பழுது றும லக்யமுறப்
பற்றற் றதுசின் முத்திரையே. (அ)

வழுவா தேக ரசந்திவிய
வணக்க மெல்லாம் லயித்துசுத்தத்
தெளிவா யிரண்டற் றைக்யநிலை
தெவிட்டா மவுனந் துக்கப்விட
லழியா வரம்பெற் றோர்களிலை
யனைத்து மறந்தம் மறப்புமின்றி
பழியா ஞான சூரியனாற்
பற்றற் றதுசின் முத்திரையே. (கூ)

புதிய மதவா திகள்சொல்லை
பொருட்டா யெண்ணு துட்புறமும்
மதியாய் விளக்கும் நம்மிறசூல்
மார்க்கந் தீனுல் இஸ்லாத்தின்
விதிநி டேதந் தெளிந்துணர்ந்து
விடய நிட்டைத் தவமறந்து
பதியு மவுனத் தேனுண்டு
பற்றற் றதுசின் முத்திரையே. (ய)

ஏழாவது முத்திரைப் பதிகம் முற்றிற்று.

எட்டாவது

## அதீதப் பதிகம்

---

### தரவுக் கோச்சகக் கலிப்பா

இறந்த மனமுயிர்பெற் றெழுந்து விளங்கிடவே
சிறந்தவாத் துமஞானஞ் சீவபே தம்மறுமே
பிறந்திங் கிறந்தோர்கள் பிழைப்பதே துயிர்நில்லதா
னறிந்தா ருயிருள்ளா ரானந்தா தீதமதே. (க)

துஞ்சுமு யிர்களைத்தான் றுய்தாயெ ழுப்பீந்தோ
ரெஞ்சியி ருந்ததுண்டோ வெல்லாம்பொய்க் கற்பிதமே
நஞ்சின்ம னம்பிணமே ஞானமறிந் தாலுயிரே
அஞ்சாநிர் வாணநிட்டை யானந்தா தீதமதே. (உ)

வேற்றுமைம னம்பிணமே விவேகம னமுயிராந்
தோற்றுவதுங் காண்பதில்லை சொல்மாத்தி ரந்தானே
மாத்திரைக டந்தேக வாழ்வாம றிவநிலே
யாத்தும ஞானமுயி ரானந்தா தீதமதே. (ங)

கறந்தபால் முலைபுகுமோ காணம்பொ றிமயங்கி
யிறந்தவர் பிழைப்பாரோ யிருதயமி ருந்ததுண்டோ
சிறந்தஞா னமுயிரே சிக்கஞ்ஞா னம்பிணமே
அறிந்தாவி ரண்டுமில்லை யானந்தா தீதமதே. (ச)

கற்பனை யலங்காரக் கதைபேத கங்கொண்டு
விற்பனம் விளங்காமல் வீண்பிணமெ ழுந்ததென்பார்
பற்பல விதம்ஞானப் பகைமூன்றை யுங்கடந்தே
யற்புத மறிவுயிரே யானந்தா தீதமதே (ரு)

செத்தபி ணங்களைத்தான் செகத்திலெ ழுப்பினதாய்
மெத்தவ தைநம்பினோர் மெய்யாகச் செத்தபிணம்
புத்திவி ளக்கமுள்ளார் புத்துயிர்பெற் றாகமொடு
மத்தநி லைகடந்தோ ரானந்தா தீதமதே. (சு)

உடலிலு யிர்நசித்த வூனப்பி ணங்கள்தம்
கடமதி லுயிர்கொடுத்த காரணமெ னச்சொல்வர்
திடமுட னுயிர்கொடுத்தல் செத்தம னம்பிழைக்க
வடவுடன் மெய்ஞ்ஞான மானந்தா தீதமதே. (எ)

உயிரற் றேமரித்தா லுயிர்கொடுத் துய்ப்பதுவோ
துயரற்ற கந்தெளியத் துய்யவறி வூட்டுதலே
சுயமுற்ற வாராய்ச்சி சுலட்சண சுத்தநிலை
யயர்வற் றறியுயிரே யாநந்தா தீதமதே. (அ)

புத்திவி ருத்தியிலார் புன்மதி யவிவேகஞ்
செத்தபி ணமாகும் சேதனம றிவுயிரே
பெத்தர்ம யக்கமற்றுப் போறிவு யிர்பெறவே
யத்தியந்த மெய்ஞ்ஞான மாநந்தா தீதமதே. (கூ)

தனைத்தான் றெரிவதுயிர் தன்னையறி யார்கள்பிணம்
நினைத்தால் பரந்தானே நினைப்பும றப்பொழிந்தே
வினைத்துயர் போராசை விட்டதனைத் தன்னையறிந்
தனைத்து மறந்திடவே யாநந்தா தீதமதே. (ம)

எட்டாவது அதீதப் பதிகம் முற்றிற்று.

---

ஒன்பதாவது

## சோதிப் பதிகம்

---

கலி விருத்தம்.

சொல்லும் வேதச் சுளுவதை விளங்கிடார்
பல்லைக் காட்டிப் படிப்பாஞ் ஞானமே
யெல்லை வைத்தே யிறைஞ்சுவர் பொய்த்தவம்
தொல்லை யற்ற தேசயஞ் சோதியே. (க)

மெத்தக் கல்வியுங் கற்று வெளிவேஷம்
செத்த மையத்தைச் சேவிக்கும் வேலையோ
புத்த கக்கதை புன்னெறி யற்றிட
சுத்த நித்தில மேசயஞ் சோதியே. (உ)

மருபூ மிதனில் மலர்மண மோகல்லாக்
குருமொ ழிதனுற் குருவைத் தெரிவதோ
பருவ மாய்ந்து பலவு மொழிந்திடத்
துருவ நிம்மதி யேசயஞ் சோதியே. (ங)

கத்த னைத்தொழக் கற்பனை யேனரோ
யெத்த னைவித மெண்ணி யழுகிறீ
ரத்த னையும்விட் டாசை யொழித்திட
சுத்த நித்திய மேசுயஞ் சோதியே. (௪)

இல்ல றம்நமக் கெவ்வித மும்பகை
நல்ல றப்புவி யோர்க்குயர் நாடகம்
கல்ல றைமட்டுங் கைகால் விலங்கது
தொல்லை யற்றிட வேசுயஞ் சோதியே. (௫)

எக்க லைகளெம் மத வாதமுஞ்
சிக்கு மஞ்ஞானச் சிந்தனை வாசனை
முக்கி யமலம் மூடத்து வமின்றி
துக்க மற்றது வேசுயஞ் சோதியே. (௬)

வேத நான்கும் விரிவினை தாச்சொலி
பாத நான்கும் பலதொழிற் கற்றென்ன
தாத மார்க்கத் தடிப்பைத் துடைப்பரோ
தோத கம்விட வேசுயஞ் சோதியே. (௭)

சாத்தி ரமெலாந் தானே தெரிந்தென
மாத்தி ரைதேறி மருமந் தெரிந்ததோ
ஆத்தி ரத்தோ டறிவை யுணர்ந்திடத்
தோத்தி ரந்தனி லேசுயஞ் சோதியே. (௮)

யோச னைமனு வோர்குழா மர்ப்பணம்
பூச னைதுவி தவழி போதனை
வாச னைபல வாதனை யற்றிடத்
தூச னையிலை யேசுயஞ் சோதியே. (௯)

கால நேரமுங் கற்பனை யற்றது
பால நேர்வழி பாவனை தீர்ந்தது
சீல காலங் குடியான் சிறந்தது
தூல மாறிட வேசுயஞ் சோதியே. (௰)

ஒன்பதாவது சோதிப் பதிகம் முற்றிற்று.

பத்தாவது

## சமப் பதிகம்

வெண்பா

தோற்றுஞ் சொரூபமெலாஞ் சோதியருட் சாட்சிமயம்
வேற்றுமை யொன்றில்லா வேதனமே—யாற்றலொடுங்
கல்லாமை யன்றேதான் கண்டபொருள் வேறில்லை
யெல்லாமாய்ச் சும்மா விரு. (க)

கதையா கமங்கோடி கற்றென்ன கேட்டென்
னிதயஞ் சலிக்கா திலைநீ—யதுவேது
சொல்லாம லாநந்தஞ் சுத்தபே ரின்பநிலை
யெல்லாமாய்ச் சும்மா விரு. (உ)

சுகதுக்க மற்றொழிந்து தூயநிலை மாறு
திகபர மென்றுள்ளத் தெண்ணு—தகமுகமாய்க்
கற்றதெலாந் தான்மறந்தே கற்பனைசொற் பேதமின்றி
யெத்தலமு மற்றிங் கிரு. (ங)

கற்பூரத் தீபம்போற் கன்மங் கரைந்திற்றே
யற்பமும்வே றில்லா ததுதானும்—விற்பனத்தே
பற்றற்ற நித்யம் பரிபூர ணந்தனிலே
யெத்தலமு மற்றிங் கிரு. (ச)

பண்டை வழக்கமாப் பன்னுவ தேன்கலிமா
விண்டும் பொருளேன் விளங்கவில்லை—தொண்டோ
திரைமறைவொன் றில்லாமற் றிக்கெங்குந் தோன்று
மிறையறிந்து சும்மா விரு. (ரு)

எத்தனைதான் கற்றாலு மெத்தொழிலைச் செய்தாலும்
புத்தி விகற்பமற்றுப் போகுதில்லை—சித்தநிலைத்
திண்ணமே தற்சாட்சி சீருளமே தற்சொரூப
மெண்ணமற்றுச் சும்மா விரு. (சு)

மனத்தின் நினைப்பற்று மந்திரச்சொல் லற்றே
யனித்திய நாட்டங்க ளற்று—தனித்தான
வெல்லா மறிவறிவா லேகாந்தந் தன்னில்வே
றில்லாமற் சும்மா விரு. (எ)

நானென்ற தும்பொய்யே நானுபே தம்மொழிந்து
தானென்ற தும்பொய்யே தானவனுய்ப்—போனதனுற்
சொல்லுஞ் சுகாசுகங்கள் தொல்லேபல பேதங்க
ளில்லாமற் சும்மா விரு. (அ)

கண்டதுங் காண்பதென்ற கற்பனைதற் போதமின்றி
யண்டபிண்டந் தானு யருளுருவைக்—கொண்டபடி
யல்லுபக லற்றவெளி யாநந்தச் சாதனம்வே
றில்லாமற் சும்மா விரு. (கூ)

பந்தபா சங்களெங்கே பற்றிநின்ற மூவாசை
தொந்தவஞ் ஞானமனத் தோடமெங்கே—யந்திபக
லற்றிடத்தே யன்பி னகத்தா லறிந்துதனை
யெத்தொழிலு மற்றங் கிரு. (ய)

ஆநந்த மாஞ்சி ரறிந்ததுவுந் தன்னறிவே
தானந்த மானசுகந் தானுற்றே—மோனந்தந்
தன்னுணை தானே தான் ருனை வாத்மாதா
னென்னுணைச் சும்மா விரு. (யக)

பத்தாவது சமப்பதிக முற்றிற்று.

சிதாநந்த சதக முற்றிற்று.

ஆ செய்யுள் யரு க்குத் திருவிருத்தம் கூாசுஅ

---

பிஸ்மில்லாஹி

பத்தாவது

# எதார்த்த சதகம் 102

---

## முதலாவது

## மக்கட் பதிகம்

---

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

ஏகபூ ரணமே நித்தியா நந்த
 மின்புரு வன்புரு சாட்சி
சோகமா ரணத்தே சதோதயத் தெளிவு
 சோதிமெய்ஞ் ஞானத்தின் விருத்தி
மோகசா கரத்தைக் கடந்திட முத்தி
 மொழியொணா தகம்புறங் காட்சி
தேகசீ ரணத்தே வேறில்லா மீட்சித்
 தெளிவுறு மக்களே மக்கள். (க)

ஓரறி வாதியா மையறி வாகு
 முயிர்க்கெலா மெய்விளங் காது
பேரறி வமுத வியாபக விளக்கம்
 பேரின்பம் பகுத்தறி வோர்கள்
ஆறறி வுயிரே மதபேத மற்றே
 ரனைத்துயிர் தானெனக் கண்டோர்
சீரறி வள்ளல் தங்களைக் கண்டு
 தெளிவுறு மக்களே மக்கள். (உ)

தனித்தபே ரின்பந் தெவிட்டிடா வமுதைத்
 தத்துவத் தெரிசனத் தப்பால்
நினைத்தலு மறந்த திருந்தது மிறப்பு
 நிசிபகல் நசித்தமெய் யுளத்தே
வினைத்துயர் பதவி யுதவியொன் றில்லா
 விவேகபூ ரணமதி யறிவே
யனைத்தையுங் கடந்த சயந்திரு வருளை
 யறிந்திடு மக்களே மக்கள். (௩)

இச்சையற் றொழிந்த மனவெளி தனிலே
யிருமைவி ராகநற் றெளிவா
மெச்சம யத்து மிணையிலாப் பூர்த்தி
யேகதத் துவசுக வருளை
நிச்சய சொரூப நிருவிகா ரத்தை
நிருபாதி கந்தனி மயத்தை
யச்சமுஞ் சலிப்பு மற்றவன் புருவை
யறிந்திடு மக்களே மக்கள் (௪)

தத்துவச் சுமைகள் சமயமாம் பேயின்
றுண்டவ மனோரதச் சங்கை
நத்துவ தனந்தம் விகாரரூ பங்கள்
நாடிடல் பிரவிர்த்தி நிட்டை
சித்துவி லாயத் தாபாசக் கோட்டி
சிந்தனை கடந்திடத் தமைதி
யத்துவ விமல சித்துரு சாந்த
மறிந்திடு மக்களே மக்கள். (௫)

நண்டது கர்ப்ப முதிர்ந்ததன் னுலே
நாசமாய் நசித்தொழி வதுபோற்
றுண்டனுண் டானென் றைதிகக் கோட்டித்
தொல்லையா மல்லலி லழுந்திப்
பண்டைநாள் வழக்கம் பழக்கமென் றொப்பிப்
பகுத்தறி விலாருற வற்றே
யண்டமும் பிண்ட வியாபக விளக்க
மறிந்திடு மக்களே மக்கள். (௬)

இப்பியில் ரசிதங் கண்டுள மகிழ்ந்தே
யெடுத்துநற் காலவாழ் வென்றங்
கொப்பிய வாறே யுலகதை மதித்திங்
குபாசனை செய்திடும் பிராந்தி
செப்பிடு மாயா காரிய மிவைகள்
செருக்கற விசாரணை செய்தே
யப்புறங் கடந்து சதோதயத் தெளிவை
யறிந்திடு மக்களே மக்கள். (௭)

கானலி னீரை ஜலமென மதித்துக்
கருதியே விடாய்கெட வடுத்திங்
கூனமா முடலம் பதறியே திரும்பிநி
யூனமாம் பேததி ருட்டி
ஈனமா மந்த காரத்தே மயங்கி
யிருவினைக் குட்படா தேக
மானசு பாவ மாத்தும திருட்டி
யறிந்திடு மக்களே மக்கள். (அ)

மருபுவி தனிலே வந்தியா மைந்தன்
வான்மலர் விதைவிதைத் தென்றும்
பிரபல மாகக் கானல்நீர் பாச்சிப்
பேய்களைக் கொடுபயி ரிட்டு
பருவமி ரண்டும் விளைத்துநெற் குவித்த
பான்மையே மனோதக் கிரியை
யருவருப் பன்றோ தொல்லைவிட் டகமா
யறிந்திடு மக்களே மக்கள். (கூ)

தறியினைக் கண்டு பேயெனப் பதறித்
தத்தளித் திறந்தவர் தம்மைப்
பொறிபுலன் கலங்க மந்திர மோதிப்
போற்றியே யடைக்கலந் தேடும்
நெறியிலா மாந்தர் குழாங்களைக் கடந்து
நேதிசெய் தகம்புறம் விழித்து
அறிபொரு ளறிந்தே யகங்குளிர்ந் தேக
மறிந்திடு மக்களே மக்கள். (ய)

புந்திவி கார பேதமஞ் ஞானம்
புன்மதி சங்கையின் றொல்லை
வந்தனை புரிதல் நினைப்பதின் றடிப்பு
வாசனை செயற்கையின் மடிப்பா
மந்தர நகாரந் தனிலுறு மாதர்க்
காவலோ வநித்திய பக்தி
பந்தபா சத்தின் படலமே போக்கிப்
பகுத்துணர் மக்களே மக்கள். (யக)

முதலாவது மக்கட்பதிக முற்றிற்று.

## இரண்டாவது

## வாலிபப் பதிகம்

---

### இதுவுமது

தன்னையே யறிதல் விதியெனச் சொல்லித்
    தனக்கேனிங் கன்னிய பூசை
யுன்னிய புவன தேட்டசங் கற்ப
    முற்பவப் பதவிகற் பனைகள்
மன்னிய வவல பௌதிகத் திச்சை
    மாசறத் திருசிய மறந்து
வின்னமற் றுள்ளம் வயங்கிடத் தெளிந்து
    விளங்கிடு மிளைஞரே யிளைஞர். (௧)

சித்தமே சலிக்க ஜெகத்தைச்சிந் தித்து
    சிவபே தத்திரை வளர்த்து
கத்துத லோத லுபாசனை யுபயக்
    கற்பனை பாவனைத் துவித
மத்தியா ரோப மிருளிலேப் பழுதை
    யரவென மயங்கிடுந் தோற்ற
மித்தைக ளென்றே விசாரித்திங் கறிவாய்
    விளங்கிடு மிளைஞரே யிளைஞர். (௨)

நரகினுக் கச்சம் சுவனமீ திச்சை
    நலம்பெறு மாசையில் வணங்கும்
பிரவிருத் தியக்கம் பாவனைத் திரயம்
    பிர்குரு வயிற்றுப் பிழைப்பு
சரசசிற் றின்பம் யமன்வதை யல்லல்
    சாத்திரம் புவிமலத் தொல்லை
விரகதுன் மார்க்கப் பழக்கமற் றேகம்
    விளங்கிடு மிளைஞரே யிளைஞர். (௩)

அஞ்ஞான சந்தேக விபரீத மூன்று
    மகற்றிடக் கேட்டல்சிந் தித்தல்
மெஞ்ஞானந் தெளிதல் வித்தையா நந்த
    மேவிடப் பற்றெலாம் நசிக்கு

மெஞ்ஞான்று மாறு சதாநந்தக் காட்சி
யேகசு பாவந்தற் சாட்சி
விஞ்ஞானத் தீப மறிவுரு வன்பாய்
விளங்கிடு மிளைஞரே யிளைஞர். (௪)

கருத்துண ராம லொருதலத் திருந்து
கலந்துழ லாடுமண் டுகம்
வருத்திடக் காது கத்துவ தல்லால்
வளர்மரை மலரமு துணுமோ
திருத்தமாங் கானல் வண்டுவந் துண்டு
திகைப்பறும் வாறுபோற் றெளிந்தோர்
விருத்திமெய்ஞ் ஞான விசாரணை தனிலே
விளங்கிடு மிளைஞரே யிளைஞர். (௫)

தன்னுடல் தனிலே ஜனித்திடும் வியாதி
தனைக்கெடுத் தலைக்கழித் திடும்போற்
பின்னிய குடும்ப மினஞ்சனம் பிறவி
பிடிமலத் திரைதுவி தத்தின்
வன்னியில் மடியா தகம்புறந் துறந்து
மவுட்டிய மமதைக ளொழிந்து
வின்னமற் றேக தத்துவ விளக்கம்
விளங்கிடு மிளைஞரே யிளைஞர். (௬)

பழத்தினின் மதுரம் பாலதிற் சுவையும்
படிகத்திற் றெளிவரு ளொளியு
முளத்தினி லறிவுங் காற்றதின் சலிப்பு
முப்பதின் கைப்புமார் கொடுத்தார்
அழுத்தவி சார சுத்தசித் தத்தே
யகம்புற மாய்ந்தெலா மறந்தே
விழித்தநன் னனவி லாநந்தா தீதம்
விளங்கிடு மிளைஞரே யிளைஞர். (௭)

தத்துவம் விளங்கி விசாரித்த தறிந்து
தற்பர நிர்விகா ரத்தே
நித்திய முணர நிச்சய சாந்தம்
நிர்மல நிராசையே நிட்சை

வத்துநிச் சயத்தே யெத்தொழி லின்றி
வரைப்றும் பூரணத் தன்மை
வித்தியா நந்த சுயஞானஞ் சித்தி
விளங்கிடு மிளைஞரே யிளைஞர். (அ)

மிடிமைகள் வருத்துங் கொடும்பகை யந்ய
மித்தையு பாசனை முயற்சி
யடிமையாண் டானென் றிருப்பதே கலக்க
மசுத்தமே திருசியக் கோட்டி
மடமைதற் போதப் புன்மதி விடய
வரைதிரை துவிதகற் பனைகள்
விடுபட வாத்ம ஞானசு பாவம்
விளங்கிடு மிளைஞரே யிளைஞர். (கூ)

தயாநிதி யொருமை சுயம்பிர காசந்
தர்ப்பண விற்பன விசார
மியாவுமர்ப் பணத்தே யெஞ்சிய தில்லை
யாவையு மறிந்தமெய் யறிவு
நியாயபே ரின்ப மமைதியுஞ் சாந்தம்
நிராசையே கல்யாண சொரூப
வியாபக விளக்க மனவெளித் தெளிவை
விளங்குவா ரிவர்கள்வா லிபரே. (ω)

இரண்டாவது வாலிபப்பதிக முற்றிற்று.

---

மூன்றுவது

## ஞானப் பதிகம்

---

இதுவுமது

ஆகம கலைக ளெத்தனை கோடி
யத்தனைக் கத்தனைத் துவிதங்
காகமாய்க் கரைந்து கடுந்தவ முபாசித்
தாற்றுதல் விவர்த்தமே காம

மோகசங் கற்பத் திருசியத் தென்ண
முமுட்சுத்து வத்திலே யிவைக
ளேகசு பாவ ஞானசு யத்தி
விணங்குமெய்ஞ் ஞானமே ஞானம். (க)

வீடென மக்கள் மனைவிசெல் வத்தை
விடேனெனக் கால்காஞ் சிக்கித்
தேடின கருமத் திரவியந் துறவு
செகத்திரை யழுகிய மயக்கம்
பாடென மதித்துச் சேகரித் துள்ள
பலவுமே செத்தபி னுளவோ
வீடணுத் திரய மறந்துதான் றன்னி
விணங்குமெய்ஞ் ஞானமே ஞானம். (உ)

அன்புரு வமல மாருயிர் விதேக
மதிட்டான மேகவி லாசம்
துன்புறு மனர்த்த காரிய விவர்த்தத்
துரோபவ மனப்பிணி யொழித்து
உம்பருங் காண தத்துவா தியெலா
முள்ளமீ தலம்புத லொழித்து
யின்புறு சித்தநி ரோதமே பழகி
யிணங்குமெய்ஞ் ஞானமே ஞானம். (ங)

மந்திரஞ் சொல்வர் வாசியைத் தடுப்பர்
வணக்கமென் றன்னிய முணர்வ
ரந்தியுஞ் சந்தி பந்தபா சத்தே
யாசைகொண் டகம்புறந் துவிதம்
பெந்தரின் மார்க்க மனித்திய துக்கம்
பேய்பிடித் தாடிடா தழித்து
இந்திர ஜால மதவித மற்றிங்
கிணங்குமெய்ஞ் ஞானமே ஞானம். (ச)

குந்தியே யிருக்க நேரமற் றலையுங்
குக்கலொத் தெங்குமே தேடிப்
பந்திகள் கூடி யெத்தனை விதமோ
பலதவந் திக்கிர்கள் பாடி

புந்திகற் பனையாற் கனவதைக் கண்டு
புகழ்வது பேதகத் திருட்டி
யிந்திர ஜால மவித்தைகள் கடந்திங்
கிணங்குமெய்ஞ் ஞானமே ஞானம். (நு)

வழமைகள் விவர்த்த பழக்கங்க ளெல்லாம்
வாசனை விடயபா வனைகள்
தழுமையி னடிமைத் தொழில்மனத் திச்சை
தடிப்புறும் பொய்மதக் கிரியை
யுள்மதி மூட வுடைநடைக் கேற்ற
வுபாசனை கெடமனத் துணர்ந்து
யிளமையிற் றுறந்து வியாபக விளக்கத்
திணங்குமெய்ஞ் ஞானமே ஞானம். (சு)

செல்லுத விலாத மதகதை கற்றுச்
செருக்குறு மவித்தையில் மயங்கித்
தொல்லுல காசை யகம்புறந் தடித்துத்
தொண்டுகள் புரிவது தொல்லை
துல்லிப மிலாத மதவாதந் தன்னிற்
சுழலபி மானங்க ளற்றே
யெல்லையி லாத நித்திய மறிந்திங்
கிணங்குமெய்ஞ் ஞானமே ஞானம். (எ)

தாட்டிக மில்லாப் பலவிதத் துவித
சாத்திர மகந்தமே கற்று
நோட்டக மலின மன்னியம் நினைந்து
நொய்புவர் பிரவிருத் தியினில்
பூட்டகம் விளங்கா ருரைத்தபல் புகழாம்
புன்னெறி மறந்துதன் னருனே
ரேட்டினிற் கண்ட தனித்தியம் பொய்யென்
றிணங்குமெய்ஞ் ஞானமே ஞானம். (அ)

நஞ்சிலுங் கொடிய மதவபி மானம்
நாடக மனக்குரங் காட்டம்
வஞ்சக மடமை மானத பூசை
வாசனை சேர்க்கையின் வழக்கஞ்

சஞ்சல வளியை யேற்றுத லிறக்கல்
சாதனை பொய்யிவை நசிக்க
யெஞ்சிய வறிவா லெலாமறந் தகமா
யிணங்குமெய்ஞ் ஞானமே ஞானம். (கூ)

கற்றிடும் பேர்கட் கெட்டிடா வறிவு
சற்பிதங் கயிற்றராத் தோற்றம்
பற்றிடும் நிட்டை பூசனை பலவும்
பகர்கக னத்துறும் நகராம்
சொற்றிடு மசுமா அவுருது விருது
தொல்லைக ளிவையெலா மித்தை
யிற்றெலா மறந்து விருத்திமெய் யறிவை
யிணங்குமெய்ஞ் ஞானமே ஞானம். (ய)

மூன்றுவது ஞானப்பதிக முற்றிற்று.

---

நான்காவது

## சற்குருப் பதிகம்

---

இதுவுமது

மறுக்காம லுலக மதிக்குமெய்ஞ் ஞான
வழிமுறை தினிஸ் லாமே
புறுக்கா னும் ஹதீதுமி யாவர்க்கும் பொதுவே
புத்துயிர் பெற்றுய்யு மார்க்கம்
வெறுக்காத புத்திக்கி ணங்கவே விளைத்தோர்
மெய்யிற சூல்செயல் சொல்லும்
அறுக்கா னிஸ்லாமீ மானின் படியே
யமைந்திடுங் குருக்களே குருக்கள். (க)

எங்களுக் கேதான் சுவர்க்கமற் றவர்களுக்
கென்றுமே நரகமென் றுரைத்து
மங்கிய சமாதிக் கட்டிடம் பிணத்தை
மதித்துமன் றுடிடும் பேய்கள்

முங்கிய மமதை யலங்காரக் கோட்டி
முழுமூட பத்திவி ஞைசை
சங்கடத் தொல்லை விட்டகங் குவிந்து
தனித்திடுங் குருக்களே குருக்கள். (உ)

துவிதகற் பனையே விப்ரலம் பம்பொய்
தூடணை யனுசித வியர்த்த
மவநிதா பஞ்சேர் சகத்தொழிற் பகட
மாபாச முபாதிக ளியக்கம்
புவிவள மலிந்த பகிர்முகத் தடிப்பு
புகன்றிடுங் காவிய புராணங்
தவமது பலவாய்ச் செயச்சொலுங் கதைகள்
தடையறு குருக்களே குருக்கள். (௩)

நடைபல விதங்கள் மிடைபவம் வருத்தும்
நரர்துதி குருபூசை நேசம்
விடயதற் போத முபாசனை நினைப்பு
வீணப வாதசொப் பனமே
யுடைதலைப் பாகை யங்கியை நம்பி
யுள்ளதை யிழந்திடா துய்யத்
தடமெலாங் கடந்த நிர்மலா நந்த
சத்தியக் குருக்களே குருக்கள். (௪)

பூதியம் பிரளயத் தொடுபுகல் கோசம்
பொறிகா ணம்மியக் கத்தா
லோதுவ தெவையுஞ் செய்பல தவமு
முவமையின் பக்தியின் றடிப்பு
வேதியர் பிழைக்க வேடமிட் டலையும்
வெறும்பிலுக் ககந்தைவிட் டகன்று
சாதிகற் பிதங்க ளியாவையு மிழந்த
சத்தியக் குருக்களே குருக்கள். (௫)

பன்னிய கிரியை பலவித மயக்கப்
பாவனை பேரிருட் பொலிவு
மின்னமே சுவார்த்தத் துன்மனத் தடிப்பு
வினையமாங் கனுமனத் தோற்றம்

பின்னிய துவைத முதாரணக் கதைகள்
பீர்குரு வயிற்றுப் பிழைப்பு
தன்னிச சொரூப மறிந்தெலாம் விளங்கும்
சத்தியக் குருக்களே குருக்கள். (சு)

பாவபுண் ணியமென் றுரைப்பதே யல்லால்
பகுத்துணர்ந் தன்னியம் நசியா
ரேவலும் விலக வின்னதென் றறியா
ரேடணைத் திரயத்தில் மயங்கி
யாவலு மற்பப் பழக்கமே மிகவு
மற்பமாந் திருசியத் தொழில்கள்
தாவிய மனதைத் தடுத்துவே றற்ற
சத்துவக் குருக்களே குருக்கள். (எ)

புருவமை யத்தை நோக்கியே வாசி
பூட்டிடும் பாசியன் பாசி
கெருவமு முசுவா சங்கிசு வாசங்
கிருத்திய யோகசா தனைகள்
மருமமுந் தெரியார் கற்பித்த கதையே
மந்திரம் போந்த காரம்
சருவமு மறந்து நிரந்தரம் விளங்கும்
சத்துவக் குருக்களே குருக்கள். (அ)

போற்றுதல் துதித்த லந்நியந் தேடல்
புலன்பொறி வயங்கிடா வாட்டந்
தோற்றுதல் மனதி னினைப்பதின் கோட்டி
தொல்லுல காசையோ ரெடுப்பு
வேற்றுமை யுள்ள மதவாதி நடப்பு
வெறுத்திட வியாபக விளக்கம்
சாற்றிடு மெதார்த்த நித்திய மதனைச்
சாற்றிடுங் குருக்களே குருக்கள். (கூ)

கையிலே மாலை கக்கமே புத்தகம்
கருத்திலே மோகவி காரம்
மெய்யிலே யாடை யுலகதைச் சுற்றல்
மேதினி பிரவிர்த்தி குருமார்

பொய்யிலே மயங்கிப் புன்னெறிக் காளாய்ப்
போகாம லேகமே விளங்கி
சையோகம் வெறுத்துச் சமத்துவ முணருஞ்
சத்தியக் குருக்களே குருக்கள். (௰)

ஆரண முதிக்கு முளங்தெளி வதிலே
யறிவுரு திருவரு ணிறைவே
காரணம் விளங்கிக் கற்பித மறந்து
கருத்தமைந் தர்ப்பண மாகிப்
பூரண முழங்கு மனோலய முத்தி
புவனபோ கங்களைத் துறந்து
தாரணை விமல மனவெளி யொருமை
சத்தியக் குரவரே குரவர். (௰க)

நான்காவது சற்குருப்பதிக முற்றிற்று.

---

ஐந்தாவது

## பக்திப் பதிகம்

---

இதுவுமது.

செகத்திரை மலின வாசனைப் பழக்கஞ்
சேதன விவேகமே யின்றி
மிகுத்த கற்பனைக ணம்பிய மயக்க
மிருத்துவுக் குபயகொண் டாட்டம்
பகுத்துணர் வின்றிப் பலதலஞ் சுற்றிப்
பாகியத் துழன்றிடா துறுதி
யகத்துற வமைதி சாந்தமே முத்தி
யன்புறு சிரத்தையே சிரத்தை. (க)

புத்திகொண் டுபய செருக்குக ளறவே
பூரண வியாபகம் விளங்கித்
தத்துவக் குப்பைச் சருகெலாம் பொசுக்கித்
தற்பரா னந்தநிச் சயத்தே

சித்திலே லயித்து நிருபாதி கத்தே
சிந்தனை வந்தனை யிழந்து
அத்தியா ரோபத் திரைவரம் பறவே
யன்புறு சிரத்தையே சிரத்தை. (உ)

திரவிய முணர்ந்து முணர்ந்ததை விளங்கித்
தீவிர தாவனு பவத்தாற்
பரவிய சுபாவ பரிபக்கு வத்தே
பற்றிலா தனைத்தையு மறந்து
விரவிய துவித மதவித மிழந்து
விசாரணை வியாபக மறிந்தே
அறநெறி வழுவா தாத்தும ஞான
மன்புறு சிரத்தையே சிரத்தை. (௩)

வனத்தினி லிருப்பர் கல்வத்து ஜில்லா
வந்தியா மைந்தனைத் தேடி
கனத்திரு மாந்து புறத்துற வாலே
காரிய முபாசனை பேதந்
தனித்தமெய் யமைதி தண்ணரு ளறியார்
தற்போத விகாரமே வழக்க
மனித்திய நினைவு தொல்லைக ணசித்திங்
கன்புறு சிரத்தையே சிரத்தை. (௪)

இடைகலை சுழினை பின்கலை யென்று
மிரேசகபூ ரகக்கும் பகந்
தடைபடு மியோக மாபாசச் சழக்குத்
தாதமார்க் கத்துள வழக்கு
விடயதற் போதங் கொடியசங் கற்பம்
விட்டருட் பழுத்தநிம் மதியே
யடிமுடி நடுவொன் றற்றமெய்ஞ் ஞான
மன்புறு சிரத்தையே சிரத்தை. (௫)

நிட்டை சமாதி சுகூதினிற் குருவை
நினைப்பது நபியைக்காண் பதுவுந்
திட்டமா யிறையைக் காண்பதென் பதுவுந்
திருசிய பேதகற் பனையே

மட்டறு ஞான விளக்கமில் லாதார்
மந்திர வாதிகள் மயக்க
மட்டமா சித்தி யோகங்க ளின்றி
யன்புறு சிரத்தையே சிரத்தை. (சு)

உவாமதி யுள்ள மறிவுரு மனன
வுபாதியற் றகண்டசன் மார்க்கம்
சுவாசினி மனதே சுவனவாழ் வின்பஞ்
சுகாசுகங் கடந்தமெய்ப் பேறு
த்வாபென நம்பிச் செய்தொழி லனைத்துந்
தற்போத விகாரரூ பங்கள்
அவாவறுத் தின்ப நிர்மல மனதா
யன்புறு சிரத்தையே சிரத்தை. (எ)

உடைகளைக் கண்டு சலாங்கொடு போற்றி
யுவமைசொற் கதைகளைக் கேட்டு
நடைபல விதங்கள் மந்திர மனேகம்
நாட்டமோ கணக்கதி லெட்டா
கடைவியா பாரங் குருவுப தேசங்
கற்றிடும் நரிமறை தொலைத்து
அடைவுட னுத்ம ஞானமே விளங்கி
யன்புறு சிரத்தையே சிரத்தை. (அ)

இல்லறந் தொல்லை நரகயா தனையே
யிழக்கினு மனஞ்சமு சாரம்
பல்லதை யிளிக்குங் குரங்கதின் சேட்டை
பழகினுங் காற்றது சலிப்பு
யெல்லையி லடங்கா வாசியோ கங்கள்
ளென்பது நிழலினைப் புதைத்தல்
அல்லல்விட் டெல்லா மறந்துதா னற்றே
யன்புறு சிரத்தையே சிரத்தை. (கூ)

பூசனை பலவும் சமுசார பந்தம்
புத்திரர்ப் பணமிலார்க் கிச்சை
வாசனை சேர்க்கை புதியகற் பனைகள்
மார்க்கத்தி லில்லாப் பொய்வாதை

தூசனை மிகுத்த வன்னிய வணக்கந்
துர்ப்போத கர்க்குள வழக்கம்
ஆசன மிலாத நிர்வாண சுகத்தி
லன்புறு சிரத்தையே சிரத்தை. (ய)

ஐந்தாவது பக்திப் பதிக முற்றிற்று.

---

## ஆறுவது
## சமாதிப் பதிகம்

---

இதுவுமது

திருட்டிபே தங்கள் மனமரு ளவித்தை
திருசிய வாசனை மனப்பேய்
சிருட்டிபே தங்க ளில்லவே யில்லை
சிவசொரூ பமெலாங் காட்சி
மருட்டும்பேய் மதத்தின் கற்பனை யாலே
மதானுஞ்ஞை மமதைதற் போதம்
வெருட்டியே வழக்கம் பழக்கங்க ளெல்லாம்
விட்டதாம் சமாதியே சமாதி. (க)

மனமது ககனக் கோட்டைகள் கட்டி
மந்திரங் கிரியையு மியோகம்
நனிதறி புருடன் மலடிசேய் வான
நகர்பதி கதிகளை வேண்டி
நினைவுசங் கற்பப் பிரார்த்தனை யனந்தம்
நிச்சய முணர்ந்திடார் மார்க்கம்
வினைமலத் துக்கம் நசித்தெலா மிழந்து
விட்டதாம் சமாதியே சமாதி. (உ)

நீரினில் வாழு மச்சங்கள் தடாக
நின்றிட வுணர்ந்திடா ததுபோல்
நாரிய ராசை மிஞ்சியே புவியை
நத்தியே வியாபகத் தெளிவைக்

காரிய மறந்தே யதிட்டானந் தன்னைக்
கருத்துண ரார்மலப் புழுக்கள்
வீரிய முணர்ந்தே யன்னிய திருட்டி
விட்டதாம் சமாதியே சமாதி. (௩)

தோணிதா னீரில் யாவையுங் கடத்துந்
தோணிதன் னுபத்தைக் குறித்துப்
பேணுமோ துவிதப் பெத்தருந் தாங்கள்
பேதக மறுத்திடத் தெளியார்
காணியு முதலும் பெருத்தபொய் யதிலே
கட்டுணு மயக்கமே மீளார்
வீணிலே மலின வாசனைப் பழக்கம்
விட்டதாம் சமாதியே சமாதி. (௪)

அவதிக ளெல்லை கணக்கொடு மந்திர
மனேகந்தா னேதியே குவித்துத்
தவசிக ளென்று காவியும் புனைந்து
தங்கையில் மணிகொடுங் கருத்து
புவிவள போகத் திச்சைகள் வைத்துப்
புண்ணிய பாவமென் றுரைக்கும்
விவிதகற் பனைகள் துவிதம்பொய் யென்றே
விட்டதாம் சமாதியே சமாதி. (௫)

கற்றதுங் கேட்ட தடங்கலும் விடய
காரிய மோகவி கார
மெத்தனை விதங்கள் செய்பினு மவித்தை
யேடணைத் திரயங்கள் பிணக்கு
பெத்தருக் கேற்ற வன்னிய வாட்டம்
பின்னிய பேய்மதக் குணக்கு
வித்தைமெய் யறிவா லிவையெலா முணர்ந்து
விட்டதாம் சமாதியே சமாதி. (௬)

துறக்கமே நமக்குச் சொந்தமென் றெண்ணித்
தூயநல் லறிஞரைப் பழிப்பர்
திறக்கியா தியினு லெவர்களும் புகழத்
திருசிய நாட்டமே தவங்க

ளுறக்கமாங் கனவிற் கண்டகாட் சியதே
யுண்மைகள் விளங்கிடார் மலினத்
திறப்பவர் வித்தைக் காளாகா தகன்றிங்
கின்புறு சமாதியே சமாதி. (எ)

நிருமல நிட்டை நிரங்குச திருப்தி
நிராசையே நிரந்தரத் தெளிவு
திருவருள் விலாசந் திருக்கனு பவத்தே
திருக்கலி யாணமே காட்சி
குருவறி வதனு லறிந்ததே போதங்
குறையறு மவுனப்பே ரின்ப
விரிவரு ளமல தீட்சையி லெல்லாம்
விட்டதாம் சமாதியே சமாதி. (அ)

பிரவிருத்தி யில்லா விசாரணை தனிலே
பின்னவஞ் ஞானங்க ளில்லை
நிருபாதி கத்தே மனேலயந் தானே
நினைப்பொடு மறப்பது மில்லை
அறநெறி வழுவா திகம்பர மறந்தே
யகம்புறந் துறந்தவர்ப் பணத்தே
விரிவருள் ஞான விவேகசா தனத்தால்
விட்டதாம் சமாதியே சமாதி. (கூ)

பலகலை யென்ற திருசிய மறந்து
பாருல கவையெலா மிழந்து
நிலவொளிர் மவுன மனங்குளிர்ந் ததிலே
நிச்சய புத்திநுட் பத்தால்
மலமறுத் துபய மதகதை யெவையு
மனதினி லுதித்திடா தொழித்து
விலைமதிக் கொண்ணு வறிவுரு தனிலே
விட்டதாம் சமாதியே சமாதி. (௰)

ஆறுவது சமாதிப் பதிக முற்றிற்று.

---

ஏழாவது

## ஆநந்தப் பதிகம்

---

இதுவுமது

ஆரண முதிக்கு முதிப்பதை வயக்க
வன்னியத் திருட்டிக ளில்லை
காரண மதிக்குங் காரிய நசிக்கும்
கற்பனை யற்பமு மில்லை
பூரண விதிக்கும் புவனங்கள் மறக்கும்
புகழிக ழற்றவர்ப் பணத்தே
தாரணை விளக்கம் சுத்தசித் தத்தே
தற்பரா நந்தமா நந்தம். (க)

போதமே யாத்ம ஞானமே தீட்சை
போதனை விசாரணை பூர்த்தி
பூதமே பாவ விநாசமே யமைந்து
போலியஞ் ஞானமே தொலைத்து
நீதமே ஞான சுபாவமே மோன
நிச்சய முணர்ந்திடுஞ் சாட்சித்
தாதமார்க் கத்தின் றொழிலெலா மறக்கத்
தற்பரா நந்தமா நந்தம். (உ)

மக்காம்அ ஞஅந்த மறுத்தபா சுகூது
மதங்கள் தரீக்குக ளென்றும்
பக்காப ஞவென்பர் பொருளறி யாமலே
பழங்கதை விளங்கிய பேதம்
லிக்காக ஞவென்று பேதகத் தோற்றம்
* லிபிகன மந்திர வழக்கஞ்
சக்காமி வையெலாஞ் சிக்கறத் தொலைத்த
தற்பரா நந்தமா நந்தம். (ங)

எழுமை யவித்தை மதங்களை நம்பி
யெத்தனைத் தவங்கள்செய் தாலும்
வழமைத் துவைதம் பாசபந் தங்கள்
வாசனை முத்தடைக் களங்க

---

* லிபி—எழுத்து.

முளமும் வயங்கார் பாரவா ரத்தே
யுள்ளதை விளங்காத மடமைத்
தமுமைகொண் டாட்டப் புகழிகழ் வெறுக்கத்
தற்பரா நந்தமா நந்தம் (ச)

வீசைக ளுள்ள மக்களா குவதோ
விருத்திமெய்ஞ் ஞானமே விளங்கல்
பாசைகள் பிதற்றிப் பூசைக ளனந்தம்
பகிர்முகத் தெரிசனை நிட்டை
நீசர்க ளுள்ளம் பிராந்தியின் மயக்கம்
நீக்கிட வாண்பிளைச் சிங்கம்
தாசனுண் டானற் றகம்புறந் துறந்த
தற்பரா நந்தமா நந்தம் (ரு)

மந்திரம் வேண்டா மயக்கமும் வேண்டா
மானத பூசைகள் வேண்டாம்
பந்தியும் வேண்டாம் பழங்கதை வேண்டாம்
பலபுகழ் துதிகளும் வேண்டாம்
கந்திரி வேண்டாங் குருபூசைக் கபுறு
கட்டிடந் தெரிசனம் வேண்டாந்
தந்திரம் வேண்டாந் தன்னைத்தா னறியத்
தற்பரா நந்தமா நந்தம். (சா)

மன்னுயிர்க் குயிரே யாருயி ரறிவே
மகத்துட னனுமுத லறிந்தே
யன்னிய மில்லா தகம்புறந் தெளிந்தே
யாஸ்திக நாஸ்திக மிழந்திங்
குன்னிய நாட்டந் தேட்டங்க ளின்றி
யுள்ளதை யுள்ளதாய் விளங்கித்
தன்னிச சொரூபந் தண்ணருட் டானே
தற்பரா நந்தமா நந்தம் (எ)

இகபர விராகம் சுகாசுக மற்றே
யில்லறந் துறவற மறந்தே
யகம்புற மேக வியாபக வாட்சி
யன்புரு நின்மல சொரூபஞ்

சுகம்பிரக் ஞானந் திருசியம் நசித்த
சுலட்சண மன்னிய மற்று
சகம்பிர விருத்தி யற்றவர்ப் பணத்தே
தற்பரா நந்தமா நந்தம் (அ)

அமைதியும் சாந்த முண்மைக்கு முயிரோ
யறிவுரு திருவருட் காட்சி
நமதிது வதுவென் றுன்னுத லோதல்
நஞ்சினுங் கொடியமந் திரங்கள்
சம்திருட் டியில்வழக் கம்மெலா நசித்துச்
சருவசம் பூரண மறியத்
தமசிலாச் சுத்த மனந்தெளி வதிலே
தற்பரா நந்தமா நந்தம். (கூ)

கருவ மதங்கள் மிஞ்சிய தாலே
களேபரத் தேட்டமே தியானம்
பருவ விதங்க ளறிந்திடார் செய்த
பாவனை யநித்திய வணக்கம்
மருமம் விளங்கிச் சாட்சிமாத் திரமாய்
மனோலயந் திருவிக்காக் காட்சி
சருவ தயாள சுகநிட்டை தன்னில்
தற்பரா நந்தமா நந்தம். (ய)

ஏழாவது ஆநந்தப் பதிகம் முற்றிற்று.

---

## எட்டாவது

## தியானப் பதிகம்

---

இதுவுமது

அலிபுலா மீம்ரு வியாபக விளக்க
மறிபடு பொருளறிந் தப்பால்
மெலிவிலா வாட்சி நிச்சயக் காட்சி
மெய்யறி வுருவே சமாதி

நிலையிலா வுலகம் நினைப்பிலா திருக்க
நிச்சயம் சித்தநிரோதம்
நலிவிலா மனதின் வியாபார மனைத்தும்
நசித்த தியானமே தியானம் (க)

செய்குதங்க ளென்றெங் கெங்குமே யலைந்து
செய்யுபதேசமந் திரத்தாற்
பொய்குவி யல்கள் தலைச்சுமை முதுகு
பொதிகளே பேய்மத வாட்ட
மெய்குவ தல்லால் விமோசன முளதோ
விலையில தனைத்தனி லறிய
நைகுவ திலையே மனமது குவிந்து
நசித்த தியானமே தியானம் (உ)

சருவ சமயத் துவேஷம தற்று
சமுசய விபரீத மின்றி
யுருவுட னருவென் றுரைப்பது மறந்தே
யுபாசனை பூசனை யிழந்து
திருவருள் மவுன மனதினல் லமைதி
தீதிலா நிம்மதி சமாதி
நிருமல நிட்டை யகம்புறந் துறந்த
நிச்சய தியானமே தியானம். (ங)

நேம சமாதி நிட்டையோ கங்கள்
நேதிசெய் திடமனங் குளிர்ச்சி
சேம சுபாவ வாத்தும ஞான
தெரிசனைக் கன்னிய மில்லை
காம விகார தற்போத மில்லை
கனவுடன் நினைவு களில்லை
நாம முபாதி நாட்டங்க ளில்லை
நசித்த தியானமே தியானம். (ச)

வானவர் தெளிந்த நிருவிகா ரிகளே
வழக்கமும் பழக்கமு மற்றோர்
மோனவ ரதிக்க விருத்தியும் லயித்து
முழுத்துற வாதலே சமாதி

ஈனவ ருலக வலங்கார வழக்கத்
திடைந்துகற் பனையினில் மாய்வர்
ஞானவர் களங்க மற்றவ ருளமெஞ்
ஞான்றுமார் தியானமே தியானம். (ரு)

பண்டுள வழக்கம் பெரியவர் முறையாம்
பழகிய குருபூசை யென்று
மண்டுக வணக்கந் திக்கிரை யலறி
மயக்கினைத் தஜல்வியு மென்பர்
வண்டுகள் கரைந்து தீபத்தில் விழுந்து
மரிப்பது போன்றுழல் மாக்கள்
நண்டென வெடிக்குந் தாதமார்க் கங்கள்
நசித்த தியானமே தியானம். (சு)

ஆதர வனேகம் பெரியாரை நம்பி
யல்லாவைக் கூட்டுற வாக்கி
மாதவ யோக மஞ்ஞானப் பத்தி
மறையிலில் லாதகை மாற்று
மோதுவ தனேகம் பாடலு மாட
லுபாசிக்குந் தெய்வமு மனந்தம்
ஞாதுரு ஞான ஞேயம தொழிந்த
ஞாய தியானமே தியானம். (எ)

சான்றவர்க் கின்ப மவிகார மவுன
சத்துரு சித்துரு வேகந்
தான்றனை விளங்கப் புவனபோ கங்கள்
தடையறத் தன்னிய மற்று
தீன்றுனி யாவென் றிருவினை கடந்த
தீனிசு லாத்தவர் கட்கெஞ்
ஞான்றுமா ரூத திருவிக்கா காட்சி
ஞான தியானமே தியானம். (அ)

ஜென்மமு மெதுவோ புநர்ஜன னம்மெதோ
ஜெனித்ததார் கர்மத்தால் வந்து
கன்மமு மெதுவோ பிறப்பிறப் பென்ன
காட்டிலோ நாட்டிலோ சொல்லு

மன்வய மெதிரே கம்மெனுந் துவித
வர்த்தவா தங்களை மறந்து
நன்மனங் குளிர்ந்து சுகதுக்க மற்று
நசித்த தியானமே தியானம். (௬)

நினைவதின் மலின மவித்தைகற் பனைகள்
நீயுனபே தகமனத் திருட்டி
கனவதின் பொலிவு நடைப்பிணங் களுக்குக்
காரிய மலங்கார மிச்சை
தினமதின் சலிப்பு காற்றதின் கூறு
திரையறத் திருவுளம் வயங்கி
நனவதி னின்ப மாறிடா தெல்லாம்
நசிந்த தியானமே தியானம். (௭)

எட்டாவது தியானப் பதிக முற்றிற்று

---

## ஒன்பதாவது
## துறவறப் பதிகம்

---

இதுவுமது

பச்சமோ டிச்சைப் பகிர்முக நாட்டம்
பலதொழி லர்ப்பண நனவிற்
சொச்சமோ டுச்ச மாத்தும ஞானம்
சுபாவமே விசாரணை தன்னிற்
றுச்சமோ டச்ச விகாரமொன் றில்லைத்
தூக்கமும் விழிப்பிலா நிட்டை
யச்சமொன் றின்றிப் பொறிகா ணங்கள்
அடங்கிய துறவியே துறவி. (௧)

மரித்தவர் சமாதிக் கட்டிடங் களையே
மதித்துமன் றுடியே புகழ்ந்து
கருத்தது மண்ணுங் காரியத் தவங்கள்
கருதிய நினைவது தோற்றம்

விருத்தமாந் துவித வாசனை யனைத்து
மித்தியா ரூபங்கள் மனதி
னிருத்தனங் கொடிய கற்பித மனைத்தும்
நேதிசெய் துறவியே துறவி. (உ)

மருமமு மறிந்து மாத்திரை கடந்து
மனோலயத் திருவருட் காட்சி
தருமமு முணர்ந்து தானென்ப தற்று
தத்துவத் திருசிய மறந்து
க்ருமமா மென்று சொல்லு மாபாசக்
கதைகளு மறந்துவே றற்றே
நிருமல சுத்த சித்தமும் வயங்கி
நேதிசெய் துறவியே துறவி. (௩)

சுத்த சொரூப மறிவதே யியற்கை
சூதறிந் தன்னிய மறந்து
புத்தி விகார மற்றதே போதம்
புத்துயிர் வியாபக விளக்கஞ்
சித்த நிரோதந் தவமெலா நசித்து
சிவபே தம்மிலாத் தீட்சை
முத்தி நிர்ரூப நிர்வாண மின்ப
மோனநற் றுறவியே துறவி. (௪)

பிரதிப லன்கேட் டோதிமன் றுடிப்
பின்னிய மனஞ்சலித் துன்னி
கருதிய சுவர்க்கம் பதவியு முதவி
காதலே கந்தர்வ நகரம்
விருதுட னசுமா மந்திர மனந்தம்
விடயசம் பந்தநற் போதஞ்
சிறிதுமில் லாம லேகநிச் சயத்திற்
றிருந்திய துறவியே துறவி. (௫)

பதவியின் முத்திக் கேதுவாந் தொழிலைப்
பண்ணுத லுலகத்தின் பழக்கம்
மதவிதத் தொல்லை புவிபோகத் திச்சை
மன்னுயிர் வேறென்ற தடிப்பு

யிதமகி தம்மென் றெண்ணமுங் கோடி
யிந்திர ஜாலஞ்செய் மனது
கதியென நம்பும் பேதம தொழிந்து
கட்டறுங் துறவியே துறவி (௬)

கற்பகா லத்தோ வற்பநே ரத்தோ
காளித மொழிந்தகல் லுளத்தே
விற்பன விவேக மாத்தும ஞானம்
விசாரிக்கத் திரைமறை வில்லை
அற்பருக் கெட்டா நித்திய விளக்க
மருள்மயக் காட்சிசு பாவம்
நிற்பிர பஞ்ச மனதிலெண் ணாது
நேதிசெய் துறவியே துறவி. (எ)

காம விகார மனோபந்தங் கொடிது
காரிய மவித்தையின் மலினம்
நாம தூராசை மந்திர ரூபம்
நாட்டமே கனவுதற் போதம்
பாமரர்க் கெட்டா நுண்ணறி வாகும்
பரிபூர ணாநந்தக் காட்சி
நேம விசார மனமது குவிந்து
நேதிசெய் துறவியே துறவி. (அ)

கஷ்பு கருமாத் ததுமனத் தத்வ
கற்பனை மருள்மனத் தோற்றம்
யிசுமவு ருது சித்திசெய் மனத்தி
னிந்திர ஜாலமே மயக்கம்
விசுவசித் ததுவாய் மனந்தடித் துருவாய்
விடயபொய்த் தோற்றத்தை மறந்து
நிஷ்பிர விருத்தி தன்னிலே தானாய்
நிலைத்திடுங் துறவியே துறவி. (௯)

சத்துவா பத்தி சமத்துவ திருட்டி
சன்மார்க்கந் தன்மய வமைதி
நித்தியகல் யாண குணந்தெளி வதிலே
நீங்கிடா வாநந்த சொரூபம்

வத்துநிச் சயமே நிரந்தர விளக்கம்
வான்வளர் திருவருட் காட்சி
முத்தியே சுத்த சுயஞான விருத்தி
முதிர்ந்திடுந் துறவியே துறவி. (ய)

ஒன்பதாவது துறவறப்பதிக முற்றிற்று.

---

பத்தாவது

## முத்திப் பதிகம்

---

இதுவுமது

சொப்பனத் தோற்றம் நினைப்பின் விலாசம்
சுழுத்தியி னசிப்பது போலே
இப்பிர பஞ்சம் நினைப்பிலே நசித்து
யின்புரு வன்புரு தனிலே
தப்பித மில்லா தற்சாட்சி சுத்தத்
ததாகாரந் தெளிவதி லயித்து
செப்புவ தற்ற நித்தியா நந்தந்
திருவருள் முத்தியே முத்தி. (க)

சாவுத லிருத்தல் வருகுதல் போதல்
சகளபௌ திகபூத மாகுங்
கூவுத லிரத்தல் கேட்குதல் தருதல்
கூலிக்கு மாரடித் தழுதல்
சேவக மிவைகள் மதவாதத் தொல்லை
சேதன மறியாதார் வாக்கு
யாவுமே பொய்யென் றறிந்தகங் குளிர்ந்த
வேகாந்த முத்தியே முத்தி. (உ)

தொண்டுகள் புரிந்து மந்திர மோதி
சொப்பனந் தோற்றிய பொருளைக்
கண்டது மெய்யென் றனேகபுத் தகமே
கற்பித்த தாகாயக் கோட்டை

விண்டது புறுக்கா னறியாத பேதம்
வீடருள் பெறுவழி யில்லை
பண்டுள வழக்க மியாவுமே மறந்து
பற்றறு முத்தியே முத்தி. (௩)

நிதிவரி லென்ன நீணிலத் தரசாய்
நீடூழி வாழ்ந்தென்ன பதவி
கதிவரி லென்ன மதிரவி யழைத்துக்
காரணங் காட்டியு மென்ன
விதிவரி லென்ன வவிவேகி செத்த
விடக்கினுங் கேடவ லப்பேய்
யெதுவரி னும்பொய் மனதிலெண் ணாத
வேகாந்த முத்தியே முத்தி. (௪)

மரித்தவர் வந்து வரங்கொடுத் துதவி
மன்றூட்டம் புரிவது மதமோ
திருத்துவர் வந்து சொல்வதும் நம்பார்
தினிசு லாத்தை விளங்கார்
பெருத்தவர் தரிக்கு குழப்பமே பேதம்
பேதமை குபிரிரு ளெல்லாம்
எரித்தவர் மக்கள் நாயக மாகு
மேகாந்த முத்தியே முத்தி. (௫)

சமயவா தங்க ளனந்தமே பேதம்
சாதனைத் தொழில்கணக் கில்லை
கமலமீ துன்று தனைத்தையு மறந்து
கதிவினை நினைப்பிலா துளத்தே
விமலசா பல்ய மனமதே குளிர்ச்சி
வித்தியா நந்தமே சுத்தம்
யெமன்வதை யற்ற விசாரணை தனிலே
யேகாந்த முத்தியே முத்தி. (௬)

மன்பதை யெல்லா முயிர்பெறு மழையே
மாசிலா ஞானவா ரிதியே
அன்புரு தனிலே யாநந்த நிதியே
அறுசுல்லா மனவெளி மதியே

கன்மன முருகும் வியாபகத் தெளிவே
கற்பனை கடந்தசித் தத்தே
யின்புரு தனிலே தண்ணருட் டானே
யேகாந்த முத்தியே முத்தி. (எ)

அத்துவா பத்தி யன்னிய மிழந்த
வபரோட்ச நிரங்குச திருப்தி
தத்துவா திகளை யறிந்தகற் போதந்
தன்மயந் தண்ணருள் விளக்கம்
நத்துவா ருள்ள வழக்கங்க ளெல்லாம்
நசித்திடும் பிரவிருத்தி யில்லை
யெத்துமா நந்த சொரூபமே காட்சி
யேகாந்த முத்தியே முத்தி. (அ)

சாதனம் ஈமா னறிந்திடா தனேக
சாத்திரக் கதைகளைக் கற்று
வேதன பேதா பேதமே தடித்து
வெளிமினுக் காய்நடப் பேனோ
மாதவந் தோதா மனமது லயித்தல்
மந்திர மெழுத்திலா மவுன
மேதென நேரே யறிந்தகங் குளிர்ந்த
வேகாந்த முத்தியே முத்தி. (கூ)

பலதெய்வக் கொள்கை யற்பமு மில்லா
பாக்கியந் தினிசு லாமே
நிலைதெய்வ மொன்றே நிலையிலாப் படைப்பை
நினைப்பவர் புதைகுழிப் பிணமே
கலைதெய்வ மென்று யோகசா தனையிற்
கண்சுழி முனையினை நம்ப
விலைபொய் வழக்க மியாவும்விட் டின்ப
வேகாந்த முத்தியே முத்தி. (ம)

எல்லாமெய்ப் பொருளே யாத்தும திருட்டி
என்றுமே மங்கள சொரூபம்
நில்லாப்பொய் மறந்தே யகம்புறந் துறந்து
நிச்சய புத்திநட் பத்தால்

கல்லாதார்க் கெட்டா மச்சரே கைசித்தன்
காலங்குடி அப்துல்வா ரிதுசொல்
அல்லாகுஸ் ஸமது அல்ஹம்ந்து லில்லா ஹி
அர்ரகு மானிர்ர ஹீமே. (௰க)

பத்தாவது முத்திப் பதிக முற்றிற்று.

எதார்த்த சதகம் முற்றிற்று.

ஆ செய்யுள் ௰௪-க்கு திருப்பாடல் கூ௱.

பிஸ்மில்லாஹி

# திருவருட் கண்ணிகள்

## வாரீர் கண்ணி 102

---

பூரண வருளறிவே புத்திமதித் தேகாந்தங்
காரண விரிவருளைக் கலந்திருக்க வாரீரே. (௧)

ஆரணமும் வேதாந்த மாத்தும ஞானநெறி
தாரணை விவேகமதி தடையறுக்க வாரீரே. (௨)

நீவுதற்கு மெட்டாத நிறைந்தபரி பூரணத்தை
மேவுதற்குச் சுத்தமுறு மெய்ஞ்ஞானம் வாரீரே. (௩)

நாவு தனிற்சொல்லும் நாமரூ பம்பழகி
கூவும் மனச்சேட்டை குடிகெடுக்க வாரீரே. (௪)

தேவா மிருதமெனுஞ் சேதன வமுதுண்ண
மூவா சையுமறந்து முதித்திருக்க வாரீரே. (௫)

தேவாதி தேவர்தொழுஞ் சிந்தை குளிர்ந்திடவே
பூவாசை யேதுமில்லை புத்திமதி வாரீரே. (௬)

எக்கரும வாதனையு மில்லாதெ லாமறந்து
சக்கறும் போதநிலை தனையறிய வாரீரே. (௭)

மக்கநபி யுரைத்த மார்க்கம் பிசகாமற்
றுக்க நிவர்த்தியிலே சுகச்சொரூபம் வாரீரே. (௮)

ஈன மனமலினத் தெண்ணம் பலவொழிந்து
வான வெளிமவுனம் வாழ்ந்திருக்க வாரீரே. (௯)

கானற் ஜலம்போலக் கைக்கெட்டாப் பேராவ
லூன நினைப்பறுத்திங் குண்மைபெற வாரீரே. (௰)

சுருதிக் கிணக்கமிலாச் சொற்செய லைநம்பி
கருதிப் பிணங்காமற் கருத்துணர வாரீரே. (௧௧)

முரீதுகள் பெற்று முணுமுணுத்து மந்திரஞ்சொல்
விருதுஅவு ரூதின்றி விவேகமுற வாரீரே. (௧௨)

மந்திரங்க ளோதி மனமருள் கொள்ளாமல்
தந்திர யுத்திகொடு தனையிழக்க வாரீரே. (கஙு)

அந்தக் கரண மடங்கி யகங்குளிர்ந்து
பந்தத் திரணமற்றுப் பகையறுக்க வாரீரே. (கச)

சிக்குசந் தேகமிலாச் சித்துரு விசாரணையி
லெக்கரும துச்சமிலா தேகமுற வாரீரே. (கரு)

திக்கிறென் றலறியே திகைத்துள மயங்காமல்
நிக்கிரக வர்ப்பணத்தே நேமசுகம் வாரீரே. (கசு)

தாதமார்க் கத்துற்றுத் தடியை மினுக்காமற்
போதமார்க் கம்மறிந்து பொய்யறுக்க வாரீரே. (கஎ)

வேதபா கியர்சொன்ன வெறும்பிலுக் கெண்ணுமற்
பேதவா தங்கடந்து பிழைதீர வாரீரே. (கஅ)

பொறிகர ணம்வயங்கிப் பூதபே தம்மறந்து
திரிகரண சுத்தியிலே தியானமுற வாரீரே. (ககூ)

அறிபடு பொருளெல்லா மறிவதற் கன்னியமே
நெறிபடு சுத்தமனம் நிலைநிற்க வாரீரே. (உய)

அல்லற் படுமுலக வாசைபூ சைகளொடு
கல்லு கபுர்வணக்கங் கட்டறுக்க வாரீரே. (உக)

எல்லைவைத் துப்புகழு மிணையா மதமிழந்து
தொல்லைத் துவிதமற்றுத் தொழுதுணர வாரீரே. (உஉ)

கண்டதெ லாங்கனவு காமத் தழும்புள்ளம்
விண்டதெ லாமித்தை விடக்கறுக்க வாரீரே. (உஙு)

வண்டுபோ லிரையாமல் மந்திர நாமரூபத்
தொண்டு புரியும்பல தொல்லையற வாரீரே. (உச)

தடியதைத் தான்றுதிக்கும் தாதமார்க் கத்திச்சை
யடியொடு பற்றறவே யகந்தெளிய வாரீரே. (உரு)

படியமன ந்தனிலே பற்றற்றெ லாமறந்து
கொடியநி னைப்பின்றிக் குணந்தெளிய வாரீரே. (உசு)

தேசாசா ரங்களெனச் செப்புந் தொழிலெல்லாம்
வேஷாசா ரிக்கென்றே வெறுத்தேக வாரீரே. (உஎ)

காஷாயம் பூண்டே கதைகாவி யம்படிக்கும்
வாசாஞா நிகள்சொல்லே மறந்திருக்க வாரீரே. (உஅ)

துக்கசு கம்படைத்துத் துடிக்கும னக்குரங்கை
சிக்கறத் தான்றூத்கிச் சித்திபெற வாரீரே. (உகூ)

தெற்கத்தி மார்க்கத் தெருக்கூத்தி லேமயங்கி
தர்க்கித் துழலாமற் றள்ளிவெளி வாரீரே. (௩௰)

வந்தனங்க ளென்று வணங்கும்பே யாட்டமெலாஞ்
சிந்தனையி லில்லாமற் சிரறிய வாரீரே. (௩க)

சொந்தமி ரவலென்று சொல்லு மதபேதம்
புந்தியி லெண்ணுமற் புகழறிய வாரீரே. (௩௨)

செய்யிது ஷெய்கென்று தேசத் தலேவோரின்
பொய்யில் மயங்காமற் போதமுற வாரீரே. (௩௩)

ஐய முறுமுலகத் தாசை பலவொழித்து
பொய்யுடல் நம்பாமற் பொதுவறிய வாரீரே. (௩௪)

பக்கீர்மஸ் தானென்று பாரவா ரத்திரையிற்
சிக்கித் தியங்காமற் றிகைப்பறவே வாரீரே. (௩௫)

திக்கீ ரதுமனனந் திருந்துவி சாரமதில்
அக்கரை கடந்தேகி யன்புபெற வாரீரே. (௩௬)

நீத விளக்கமொடு நிம்மதி சம்மதமே
வேத புறக்காளே விசாரிக்க வாரீரே. (௩௭)

பேத ரகிதத்தே பிளவு படாசுத்தப்
போத மதிதனிலே பொய்யறுக்க வாரீரே. (௩அ)

பேசாத மோனநெறி பேரின்ப சித்தசுகம்
ஆசார மற்றநிலே யகந்தெளிய வாரீரே. (௩கூ)

வாசாஞா னங்களிலா மனேலயத் தண்ணநுளே
நேசானு பூதிபெற நிச்சயமும் வாரீரே. (௪௰)

கல்லேக் கபுறைக் கட்டிடங் களைநம்பி
யெல்லேவைத் துநாடு மிணேய றுக்க வாரீரே. (௪க)

பொல்லா ஜடபோதப் புகழாம் பிரவிருத்தி
மல்லாம் புவிபோகம் மறந்தேக வாரீரே. (௪௨)

தவறிடு மஞ்ஞான சந்தேக விபரீத
வவலத் திரைகடந்தே யருள்பெறவே வாரீரே. (சங)

உவமை மிகவைத்தே யுள்ளதை யிழக்காமல்
அவதியெ லாம்விட்டே யகந்தெளிய வாரீரே. (சச)

பாட்டு பையித்துகள் பாடிப் பலன்தேடி
மேட்டுக் கிரையாமல் மெய்யுணர வாரீரே. (சரு)

நாட்டு வழக்கங்கள் நானு விதபேதங்
காட்டுக் கிரைத்தநிலா கடந்தேக வாரீரே. (சசு)

காவல் துணைநாடிக் களேபரங் களைத்தேடுங்
கேவல மூடமதி கெட்டொழிய வாரீரே. (சஎ)

கேவலா நந்தசுகங் கேவலவ தீதநெறி
பூவுல காசையிலே பூரணமும் வாரீரே. (சஅ)

கத்திக் குதித்துக் கலிமாதிக் கிறேதும்
பெத்தர் குழாம்நீங்கிப் பிழையறுக்க வாரீரே. (சகூ)

புத்தி தனைமருட்டும் புகழிக ழில்லாம
லத்தியா சங்கடந்தே யறிவறிய வாரீரே. (ரு௦)

சுவர்க்க முடன்நரகம் சொல்மாத் திரமென்றே
யெவர்க்கும் பொதுவறிய வின்பமொடு வாரீரே. (ருக)

துவக்க முடிவில்லாத் துய்ய விறையருளை
யெவர்க்கும் பொதுவென்றே யிணக்கமொடு வாரீரே. (ருஉ)

மல்லாடும் பொய்வாத மதவாதத் தொல்லையின்றி
யெல்லாரும் போற்று மேகமுற வாரீரே. (ருங)

கல்லாருங் கற்றோருங் கருது மனவாதை
பொல்லாப் பிணியறுத்துப் புனிதமுற வாரீரே. (ருச)

செல்லாத வாய்ஞானஞ் செப்பி யலையாமல்
எல்லார்க்கும் பொதுவா மிதமறிய வாரீரே. (ருரு)

பொல்லாப் புவிவழக்கம் புன்னெறி மறந்திடவே
யெல்லாந் தனிமயமே யிணையறுக்க வாரீரே. (ருசு)

அல்லாஹு தன்னை யறிந்த வறிவாலே
யெல்லாந் திருமயமா யிச்சையற வாரீரே. (ருஎ)

வல்லான் றனைமறந்து மரித்தோர் களைநம்புங்
கல்லார் குழுவைவிட்டுக் கதியறிய வாரீரே. (௫அ)

விதிநிடே தம்மறியும் விசாரணை விளக்கமதிற்
கதியுந்தி தில்லாத காட்சிபெற வாரீரே. (௫௯)

மதவாத மத்தனையும் வரையறுத் தேகரசம்
பதமாக வேவிளங்கிப் பற்றறுக்க வாரீரே. (௬0)

பருவப்பெண் வாலையெனப் பாட்டுப் பழங்கதைகள்
கருவை துவிதம்வெட்டிக் களைதிர வாரீரே. (௬௧)

குருவுருவை நாடிக் குறிக்குந் தியானமதின்
வெறும்பிலுக்கு மாயை விட்டேக வாரீரே. (௬௨)

புவனப் பிரவிருத்தி புந்தி வினைமலினந்
தவனத் திரைகடந்து தனித்திருக்க வாரீரே. (௬௩)

கவலை பலகோடிக் கட்டுக் கதைமார்க்கம்
அவலத் திரைகடந்தே யகங்குளிர வாரீரே. (௬௪)

துக்க நிவர்த்தியே துய்ய சுவர்க்கபதி
முக்கியப் பேரின்ப முத்திவழி வாரீரே. (௬௫)

திக்குத் திகந்தமெலாந் திருக்கல்யா ணக்காட்சி
முக்குண வதீதநெறி முழித்திருக்க வாரீரே. (௬௬)

சடவாச னைகொடிய சமுசார பந்தமற்று
திடவாச னைமதியிற் றிரையறுக்க வாரீரே. (௬௭)

விடய தியானமெலாம் விட்டே யுபாதியற்று
படிய மனந்தெளிந்து பகைமையற வாரீரே. (௬அ)

எத்தனைபே ரெத்தனைதா னெவ்விதஞ் சொன்னாலு
மத்தனையு மித்தையென வறிவறிய வாரீரே. (௬௯)

புத்தி மயங்காமற் புலன்பொறி யியங்காமல்
அத்தியா சங்கடந்தே யருள்பெற வாரீரே. (௭0)

சாதி சமயச் சழக்கு வழக்குகளை
யோதி மயங்குமொரு வூழலற வாரீரே. (௭௧)

நீதி தவறாத நித்தியப் பொருள்விளங்கி
போத விகாரமறப் பொருளறிய வாரீரே. (௭௨)

நினைவு பிறப்பிறப்பு நினைவு கனுத்தோற்றம்
வினையின் பலதொழிலை விட்டுவெளி வாரீரே. (எங)

நனவிலா நந்தசுகம் நழுவா விசாரணையின்
மனநாசந் தான்மோட்சம் மகிழ்ந்திருக்க வாரீரே. (எச)

நோய்வருத் துங்காம நுகர்ச்சி யெமன்வாதை
செய்மனை விலங்கறுத்துத் தெளிவுபெற வாரீரே. (எரு)

பேய்பூதச் சேட்டைமனப் போராசை யும்நினைப்பு
நாய்வான ரத்துக்கம் நசித்திடவும் வாரீரே. (எசு)

தனக்கன்னி யந்தேடி தவயோக மேசெய்யு
மனக்குரங் கைவயக்கி மகிழ்ந்திருக்க வாரீரே. (எஎ)

நினைக்க சகத்தோற்றம் நேதித்தெ லாமறந்து
வினைக்கரு மமிழ்ந்து வித்தைபெற வாரீரே. (எஅ)

விதவித பூர்வபட்சம் விழலுக் குழையாமல்
விதமகி தம்விளங்கி யிச்சையற வாரீரே. (எகூ)

மதப்பேய்தா ளம்போட மனப்பேய் நடனமிட
இதப்பே யிராகம்பாட லில்லாமல் வாரீரே. (அ0)

ஞான விளக்கமது ஞாய விவேகபுத்தி
யான தெளிவுவழி யன்புபெற வாரீரே. (அக)

தானங் குறிப்புன்னித் தவங்கள் மிகச்செய்யு
மீனங் குறையறவே யெல்லாரும் வாரீரே. (அஉ)

செத்த பிணங்களையே சேவிக்கும் பேதமதம்
மித்தை யெனமறுத்து விரைந்தேக வாரீரே. (அங)

தத்துவஞா னம்மறியார் தனக்கன்னி யந்தேடி
மெத்தப் புகழவித்தை விட்டிங்கே வாரீரே. (அச)

நல்லோர் தனைப்பகைத்து நாளு விதம்பழிக்கும்
புல்லோர் களைமறந்து புனிதமுற வாரீரே. (அரு)

செல்லாத மந்திரங்கள் செப்பியுரு வாக்காமல்
கல்லாரு ரையிழந்து கருத்துணர வாரீரே. (அசு)

எங்களுக்கே சொர்க்கமற் றெல்லார்க்கு மில்லையெனுஞ்
சங்கை தடைகடந்து தனித்திருக்க வாரீரே. (அஎ)

அங்க மறியா ரமைதியுஞ் சாந்தமிலார்
தங்கும் சவைகடந்து தடைகடக்க வாரீரே. (அஅ)

மரித்த மனம்பிழைக்க வந்த புறக்காணேத்
திருத்த முடனறிந்து தீதறுக்க வாரீரே.

விருத்தி மெய்ஞ்ஞான விளக்கத் தெளிவாலே
மரித்தா ருயிர்பிழைக்க மகிழ்ச்சியுடன் வாரீரே.

சித்துவி லாயத்துஞ் ஜெகஜால வித்தையென்று
புத்தி தெளிந்தகற்றிப் புனிதமுற வாரீரே. (சுக)

அத்தியா ரோபதிரை யந்தத்து வந்தன்னிற்
செத்தாரைப் போற்றுஞ் சிறுக்கறுக்க வாரீரே. (சுஉ)

பல்லாயி ரங்கோடி பகுப்பான மந்திரங்கள்
கல்லார் மதவாதக் கட்டறுக்க வாரீரே. (சுங)

எல்லாருஞ் செய்வதென் றெண்ணி மனமலிந்து
வெல்லாக் கிரியைகளை விட்டுவிட வாரீரே. (சுச)

அறிவு மறிவு மறிவிக்கு மவ்வறிவும்
பொறிபுல னும்வயங்கி புத்திபெற வாரீரே. (சுரு)

குறிசாத் திரம்பார்த்துக் குப்பையில் மயங்காமல்
நெறிஞான பூரணத்தே நீதிபெற வாரீரே. (சுசு)

வித்தை யவித்தை விளங்கார் பிணமென்று
பெத்தர் குழாம்விட்டுப் பேதமற வாரீரே. (சுஎ)

நித்திய வியாபகமே நிசாநந்தப் பேரின்பம்
சத்திய விசாரணையிற் றுணைக வாரீரே. (சுஅ)

பாமநி வர்த்திதனிற் பாவசந் தீட்சண்ய
நிரதிச யாநந்தம் நிறைவறிய வாரீரே. (சுசு)

பிரதி பலன்றேடாப் பேரின்பத் தேனுண்ணத்
தருமமே கந்தன்னிற் சாந்தசுகம் வாரீரே. (எ)

தாலங் குடிமறந்து சமுசார மொன்பானும்
பாலங் களைத்தாண்டிப் பகுத்துணர வாரீரே. (எக)

தூலங் குடிதுறந்து துக்கநி வர்த்தியிலே
காலங் குடியறிந்து கலந்திருக்க வாரீரே. (எஉ)

வாரீர்கண்ணி முற்றிற்று.

ஆ. செய்யுள் கரு-க்கு திருப்பாடல் கூஉஎசு.

பிஸ்மில்லாஹி

# புல்லறிவுக் கண்ணி 70

---

..ரன்னுலகு விண்ணுலகு பூவுலகென் றெண்ணந்
தன்னுலகைப் பாராத சங்கற்பம் புல்லறிவே. (க)

தன்னிச சொரூபத்தைத் தானறிய மாட்டாதா
ரன்னிய முபாசிப்ப ராபாசம் புல்லறிவே. (உ)

உலகப்பே ராவலில் லோதியோ திக்கற்றுங்
கலகப் பிராந்திமதக் கற்பனைகள் புல்லறிவே. (ங)

கலையாக மங்கற்றுக் காஷாய வேஷமிட்டே
யலையு மனக்குரங்கி னஞ்ஞானம் புல்லறிவே. (ச)

மார்க்கந் தெரியாத மதபேத வாசனைகள்
தீர்க்கச் சுகமில்லை திருசியமும் புல்லறிவே. (ரு)

ஆர்க்கும் பொதுவாகு மாத்தும ஞானமின்றி
சேர்க்கையி லழுந்துவது செருக்காகும் புல்லறிவே. (சு)

சொர்க்கந் தனைநம்பித் தொழுதழுது போற்றுதற்குக்
கற்குங் கதையெல்லாங் காமவிடம் புல்லறிவே. (எ)

தர்க்கவா தம்பேசி தத்துவஞா னம்மின்றி
மர்க்கடம் போற்றுள்ளு மனமயக்குப் புல்லறிவே. (அ)

தாபந் தனக்கஞ்சித் தவம்புரியு மஞ்ஞானம்
பாபத் திரைமயக்குப் பாராசை புல்லறிவே. (கூ)

தீபதூ பம்மிட்டுத் திருசியங்க ளைப்போற்றி
தாபசா பத்தமுந்தல் தற்போதம் புல்லறிவே. (ய)

இல்லாத மாயைதனக் கெத்தனையோ நாமரூபஞ்
சொல்லி யலங்கரித்தல் சோகமிது புல்லறிவே. (யக)

மல்லாடும் பொய்மயக்க மந்திர முபாசனைகள்
செல்லா துவமானஞ் செப்புவது புல்லறிவே. (யஉ)

தானங் குறிப்புருவந் தனக்கன் னியந்தேடிக்
கானங் கவிபாடிக் கத்துதல் புல்லறிவே. (யங)

ஞானப் பகையாலே ஞாயம் விளங்காமல்
ஈனப் பதவிகளை யெண்ணுவது புல்லறிவே. (௰௪)

சன்மார்க்க மின்றித் தாதமார்க் கத்தலம்பும்
துன்மார்க்கத் தொழில்கள் துக்கவினை புல்லறிவே. (௰௫)

இன்மையன்மை யென்ற விரண்டிலு மேகலந்து
பன்மை விகாரமுறல் பாசாங்கு புல்லறிவே. (௰௬)

தாந்தனத்திற் சுழலுஞ் சருகுபோ லேசுற்றும்
மாந்தர்களைச் சாரல் மதிமயக்கம் புல்லறிவே. (௰௭)

சாந்த மமைதியிலார் சாற்றுந் துவிதகதை
பாந்தள் வளர்க்குநிலை பந்தவினை புல்லறிவே. (௰௮)

அணங்கு சுவர்க்கங்கேட் டாசிப் பதுசெத்த
பிணங்களைக் கூடும் பேயாட்டம் புல்லறிவே. (௰௯)

கணங்கள்பூ தப்பேய்வாழ் கானக முடலைநம்பி
யிணங்குந் தியானம தெமவாதை புல்லறிவே. (௨௰)

மரித்தோர் களைப்புதைத்த மண்ணுக்கு மேலிருந்து
திருத்த முபதேசஞ் செப்புவது புல்லறிவே. (௨௧)

சிரத்தையு மமைதி சித்திபெற வேசாந்தம்
கருத்தை விளங்காதார் கமனங்கள் புல்லறிவே. (௨௨)

பாத்திஹா கத்தம் படைப்பினங்க ளுக்கோதி
தோத்திரஞ் செய்குவது தோடவினை புல்லறிவே. (௨௩)

சாத்திரங் களைப்படித்து சமுசார பந்தமலம்
கோத்திரக் குருமார்கள் கொண்டாட்டம் புல்லறிவே. (௨௪)

பருத்திப் பொதியாம் பழமலச் சுமைதாங்கி
துருத்தி வளியடைத்த தூலமிது புல்லறிவே. (௨௫)

பெருத்ததூ லம்படைத்தோர் பெரியவ ரென்றெண்ணி
கருத்திற் றுதிப்பதெலாங் காமவெறி புல்லறிவே. (௨௬)

கட்டிடங் களைப்போற்றிக் காணிக்கை நேருமந்த
துட்டர் குழாங்களுடன் தொடருதல் புல்லறிவே. (௨௭)

துட்டுக் குபதேசஞ் சொல்லுங் குருமார்கள்
கட்டுக் கதைமலினங் கருதுவது புல்லறிவே. (௨௮)

ஆடுமாடு கோழி யவுலியா தனக்கென்று
தேடி யறுத்துண்ணல் தீதுமலம் புல்லறிவே. (உகூ)

பாடுபட்டுத் தேடிப் பலதெய்வ நாமத்தா
லீடுபடத் தானளிக்கு மெண்ணங்கள் புல்லறிவே. (௩௰)

கடவு ளொருவனென்று கவிமா வுரைத்தவர்தா
மிடையிற் படைப்புகளை யெண்ணுவது புல்லறிவே. (௩க)

ஜடவா சனைமிகுத்துச் சகவா சனைபெருத்துத்
திடவா சனைமறந்த தீதன்றோ புல்லறிவே. (௩உ)

குபிராஞ் சிறுக்கின்றி குதாயைத் தொழுகாமற்
கபுறு வணக்கமென்ன கற்பிதம் புல்லறிவே. (௩௩)

உபமானஞ் சொல்லு முலகப் பிரசித்த
செபதவ மபவாதஞ் செப்புவது புல்லறிவே. (௩ச)

போற்றிய முன்னோர்கள் புகழாம் பலதுதிகள்
சோற்றுக்குச் சொன்னவையாந் துச்சங்கள் புல்லறிவே. (௩ரு)

ஏற்றலுந் தூற்றலு மெல்லாம் பணத்திச்சை
யாற்ற லமைதியிலா வாபாசம் புல்லறிவே. (௩சு)

எத்தனை விதமதங்க ளெத்தனை விதங்கிரியை
யத்தனையு மித்தைசெத்தை யனித்தியப் புல்லறிவே. (௩எ)

கத்தனுக் குமடிமை கபுறவுலி யாக்களுக்கு
மெத்தனை பேர்க்கடிமை யிணைவைத்த புல்லறிவே. (௩அ)

பீர்சாகிபு தின்றால் பீர்சாகிபை யுவந்த
கார்சா பசிதீரக் கண்டாயோ புல்லறிவே. (௩கூ)

தேர்சாமி கள்கோடித் தெய்வங் களைப்போற்றும்
பேர்களைப்போல் நாட்டம் பின்னங்கள் புல்லறிவே. (ச௰)

அவயவந் தான்மினுக்கி யாடை யலங்கரித்து
சுவய நலங்கருதும் சுவார்த்தமும் புல்லறிவே. (சக)

தவம்புரிவோ ரென்று சகலருங் கொண்டாட
சிவமாலை யெண்ணிநடை செய்வதும் புல்லறிவே. (சஉ)

மவுனமென்று சொல்லி வாய்பேசா மல்லிருந்து
புவனபோ கங்கருதும் புலன்பொறி புல்லறிவே. (ச௩)

அவரிவ ரென்றே யனேககுரு வைத்தேடித்
தவனம் பெருத்ததென்ன சமுசயம் புல்லறிவே. (சச)

அல்லாவுக் குமடிமை யனந்தமொலிக் குமடிமை
யில்லானுக் குமடிமை யிஃதென்ன புல்லறிவே. (சரு)

எல்லாம் படித்தென்ன வில்லந் துறந்தென்ன
மல்லாடும் பொய்மயக்க மந்திரம் புல்லறிவே. (சசு)

பிணத்தை மிகப்போற்றும் பீர்குரு மஸ்தான்கள்
பணத்திற் குபதேசம் பண்ணுவது புல்லறிவே. (சஎ)

குணத்தினை யைவளர்த்துக் குதிக்கு மனக்குரங்கு
பணத்திற் கடிமைத்தொழில் பண்ணுவது புல்லறிவே. (சஅ)

சாபத் திரைமலிந்த சாதி மதவாதக்
கோபத் தழுந்துமதக் கொடும்பகை புல்லறிவே. (சகூ)

ஆபத் துறும்பேத வர்ச்சனை மனதிச்சை
தாபத் திரைமயக்கந் தாதுநிலை புல்லறிவே. (ரு௰)

செத்த பிணத்தையுயிர் செய்த பெரியரென்று
கத்துங் கதைமுழுதுங் கற்பனை புல்லறிவே.

புத்தி விசாரித்துப் புத்துயிர் பெறுதவர்தாம்
செத்த பிணங்களன்றோ சேவிக்கும் புல்லறிவே.

கருத்தை மயக்கும்பொய்க் காரடி வித்தையரை
பெருத்த வொலிகளென்று பேணுதல் புல்லறிவே

விருத்த முறுஜால வித்தை ஜெகமயக்கைப்
பொருத்த மெனப்போற்றல் பொய்வினை புல்லறி

வத்துநிச் சயமில்லார் வாசியோ கஞ்செய்து
கத்தி மனக்குரங்கிற் கலங்குவது புல்லறிவே.

வித்தா ரமாகும் வியாபக விளக்கமிலார்
மத்துலா கிரியுண்டு மயங்குவது புல்லறிவே.

எட்டாத கொம்புத்தே னென்றும் முடவ
கிட்டாத தென்று கேட்கலையோ புல்லறி

அட்டாங்க யோக மனேகசித்தி களெல்
மெட்டாத வான்மலகிருக் கிச்சையாம்

தன்னை யறியாமை தற்கொலை தத்துவங்க
ளென்ன தெனல்களவா மெண்ணங்கள் புல்லறிவே. (ருக)

மன்னுங்கள் ளுண்ணல் மதிமயக் கந்துவிதம்
பின்னும்பொய் நானென்னல் பிழையாகும் புல்லறிவே. (சூ0)

உடல மதைப்பேணு முபாசனையெ லாங்காமஞ்
சடவா சனைநிட்டை சமுசாரம் புல்லறிவே. (சூக)

கடலலை வீசுமனங் கருதன் னினைப்பெல்லாம்
படலந் தனைமறைக்கும் பாசங்கள் புல்லறிவே. (சூஉ)

நஞ்சிலுங் கொடியவிட நங்கைமே லாசைத்தீ
மிஞ்சியது காமப்பேய் மிருகங்கள் புல்லறிவே. (சூங)

அஞ்செழுத்து மாறெழுத்து மனேகநா மஞ்சொல்லுஞ்
சஞ்சிதவி ருத்திமனஞ் சந்தேகம் புல்லறிவே. (சூச)

நேரம்நா ழிகைவைத்து நேமநி யானஞ்செய்
பாரவா ரத்திரையின் பத்திகள் புல்லறிவே. (சூரு)

வாரமா தம்வருடம் வரணிப்பெ லாங்கடந்த
ீரவை ராக்யமிலார் சிந்தைகள் புல்லறிவே. (சூசூ)

ரியமெ லாமறந்து காரணமுங் தானறிந்து
ரியலெ லாமிழந்து தன்னையறி புல்லறிவே. (சூஎ)

ய லாத்மஞான நிச்சய புத்தியிலே
ன்புருவாய்ச் சித்திபெறு புல்லறிவே. (சூஅ)

புத்திகொடு நேதித் தெலாமறந்து
சலிப்பகல வாநந்தம் புல்லறிவே. (சூகூ)

ழம்பொதுவா யின்புற் றகங்குளிர
 சித்தன் வாக்கதுவும் நல்லறிவே. (எ0)

புல்லறிவுக் கண்ணி முற்றிற்று.

ய்யுள் ஙகூ க்கு திருப்பாடல் தூஉளஎ

பிஸ்மில்லாஹி

# பூரணக் கண்ணி 52.

---

சித்தநி ரோதந்தான் சீவன்முத் தியென்ற
வித்தி யாநந்த விவேகசம் பூரணமே. (௧)
புத்தி விசாரிக்கப் புலன்பொறி தெறிப்பாலே
யத்தியுந் தசுத்த மாருயிர் பூரணமே. (௨)
எத்தவ மும்லயித்த யேகாந்த நிர்விஷய
மத்தநி லைதனிலே யவகாசம் பூரணமே. (௩)
வித்தையு திக்குமன விஸ்ராந்தி சுத்தமுத்தி
மித்தைந சித்தநிலை விதேகமுத்தி பூரணமே. (௪)
நித்தியத் திருக்காட்சி நிதித்தியா சனந்தன்னிற்
சித்துரு சதாநந்த சிவமயம் பூரணமே. (௫)
தத்துவ விசாரத்தாற் றனக்கந்நி யமறக்க
அத்துவித வேதனமு மன்புரு பூரணமே. (௬)
பிருதிவிநீர் தேய்காலின் பிரளயந் தாநீங்கி
வருவதும் போவதற வஸ்துவும் பூரணமே. (௭)
நிருபாதி கந்தானே நினைப்பும றப்புமில்லை
தருவான்பெ றுவதில்லை தற்சாக்ஷி பூரணமே. (௮)
எல்லாம றந்துதா னில்லாம லேயொழிந்து
சொல்லாமற் சுத்த சுகநிலை பூரணமே. (௯)
எல்லாம் விளங்கி யெல்லாம றந்திடவே
சொல்லாச்சு யஞ்சோதி சொச்சொரூப பூரணமே. (௰)
அனஅந்த வென்ற வஞ்ஞானம் வேரறுத்து
மனம்நினை வும்வயங்க மாசற்ற பூரணமே. (௧௧)
கனவுகண் டதுமனதின் கற்பித மென்றறிந்து
தனுகரண புவிபோகந் தாண்டிவிட்ட பூரணமே. (௧௨)
சோகநி வர்த்திதனிற் சோபான மொன்றுமில்லை
யேகசி வசொரூப மெங்குந்தான் பூரணமே. (௧௩)
தேகம யக்கொழிந்து திருசியத் தோற்றமின்றி
யூகம திதெளிந்த வுவமேயம் பூரணமே. (௧௪)

ஓதும் பலபேத முட்சேப ஞாதிகளு
வேதும் பலனுண்டோ விழுந்திடப் பூரணமே. (கரு)

வாதுப லநேம வாசனை பழக்கங்கள்
பூதம லத்திரயம் போக்கிடப் பூரணமே. (கசா)

கல்விய றிவுள்ளார் கற்பிதம் விட்டகன்று
தொல்புவி யாசையறத் தோடமறு பூரணமே. (கஎ)

நல்வினை தீவினையி னடுநிலைமை தானறிந்து
பல்வகைப் பேதமறப் பரமார்த்த பூரணமே. (கஅ)

அனல்ஹக் கென்றேதி யந்நிய முணராமல்
மனநசித் தேகமுற மவுனமும் பூரணமே. (ககூ)

நனவிற்சு ழுத்திசுகம் நானற்ற போதமொடு
நினைவும்ந சித்திடவே நிஜானந்தப் பூரணமே. (உ0)

தன்மாத்தி ரையறிந்து தத்துவ விசாரணையே
யின்சாரீ யத்தகண்ட வேகாந்தம் பூரணமே. (உக)

பன்மை விகாரப் பழக்கம்வ ழக்கமிலா
யின்சான்கா மிலன்றே வினையற்ற பூரணமே. (உஉ)

இகத்திச்சை களொழிந்த பின்சான்கா மிலாகும்
பகுத்துண ரும்போதம் பாசமிலாப் பூரணமே. (உங)

மகத்தான மெய்ஞ்ஞான வாழ்வன்றி மற்றவெலாம்
சுகதுக்க மென்றகல சுயஞானம் பூரணமே. (உச)

மலக்காரீ யத்தாகு மாசற்ற நிர்விஷயம்
பலிக்கும்நி ராசையிலே பத்திரசம் பூரணமே. (உரு)

நிலைக்கும் பொதுறகுமா நீயத்தா ருடனுங்
கலக்கமி லாவன்பின் காட்சிசம் பூரணமே. (உசா)

ஒருமைவஸ் தாநீயத் துண்மை குடிகொண்ட
வருமை யறிவுருவா மத்தநிலை பூரணமே. (உஎ)

நிருபாதி கம்ஹக்காம் நீயத்த நீதவெளி
மரும மஹம்பிரம மவுனமும் பூரணமே. (உஅ)

கோலங் குறிப்பைக் குருவுருதி யானிக்கும்
வேலை யொழிந்திடவே வெட்டவெளி பூரணமே. (உகூ)

காலங் கணக்குரைத்த காரியவி காரமறத்
தாலங் குறிப்பதிலை தன்மயம் பூரணமே. (ங0)

விருப்பும் வெறுப்பற்ற விவேகவு ணர்ச்சியிலே
திருப்புவ னமறந்த திருவருட் பூரணமே. (௩௧)

மறுப்படாப் புத்திதனில் மற்றொன்று மெண்ணாது
நிரப்பும்வி யாபகத்தே நிர்வாணம் பூரணமே. (௩௨)

வெட்ட வெளியென்று விளங்கி யறிந்ததொடு
கட்டுப் படுந்துவிதங் கடந்திடப் பூரணமே. (௩௩)

எட்டுநான் கென்று மிடைபின் சுழினையென்ற
கட்டுக் கதைகள்விடக் காரணம் பூரணமே. (௩௪)

மலியா மனோலயத்தே மார்க்கங்க ளேதுளது
சலியா தகங்குளிர்ந்த சாந்தமும் பூரணமே. (௩௫)

நலியும் புவிபோகம் நஞ்சென் றகந்துறந்து
மெலியா துளங்குவிய மெய்ஞானம் பூரணமே. (௩௬)

அட்டாங்க யோக மஜபாமா னதபூசை
விட்டதுவே நிட்டை விசாரிக்கப் பூரணமே. (௩௭)

நெட்டெழுத்து வட்டெழுத்து நேமபஞ் சாக்ஷரத்தின்
சட்டங் களைமறக்கத் தன்மயம் பூரணமே. (௩௮)

எம்மத வாதனையு மில்லா தகந்துறந்து
சும்மா விருக்கவருள் சுத்தசம் பூரணமே. (௩௯)

பொம்மலாட் டக்கூத்து போதனை வாதனைக
ளெம்மாத் திரமுமில்லா திருந்திடப் பூரணமே. (௪௰)

நித்திரை விழிப்பில்லா நிர்வாண நிட்டையிலே
சித்தநி ரோதசுகந் திருக்காட்சி பூரணமே. (௪௧)

அத்தியா ரோபமிலா தறிவா யறிந்தேக
நித்திய பரமார்த்த நிச்சயம் பூரணமே. (௪௨)

பலதலங் கள்சுற்றிப் பலன்றேடும் போரவல்
மலவிட்டே சபங்களற மனநாசம் பூரணமே. (௪௩)

சிலைமதக் கொள்கைபோற் சிக்குண்டு சேவிக்கு
மலைவிதப் பேயகல வைக்யமும் பூரணமே. (௪௪)

மானாபி மானமெனும் வாசனையெ லாமறக்க
நானவன்நீ யென்பதிலை நழுவிடப் பூரணமே. (௪௫)

தானாகுந் தத்துவங்கள் தடையற் றகந்தெளிய
மோனானந் தக்காட்சி முத்தியாம் பூரணமே. (௪௬)

எத்தொழிலு மற்றே யேகாந்த நித்திரையிற்
பற்றெழிந் தையமறப் பகலொளி பூரணமே. (சஎ)

கத்திப் புகழ்வதற்றுக் காரியவி காரமற்று
சித்தநி ரோதமுற சிவோகம்சம் பூரணமே. (சஅ)

வித்தியா நந்த விளக்கவி வேகமதில்
மித்தைய வித்தையிலே மீட்சிசம் பூரணமே. (சகூ)

முத்திநி ராசையே முழுத்துறவி யாநந்த
சித்திகா லங்குடிச் சித்தன்சம் பூரணமே (ருய)

அத்தியா சங்களிலே யச்சஞ்ச லிப்பில்லை
சுத்திம னதமைதி சுத்தசம் பூரணமே. (ருக)

சப்தாவத் தைதாண்டிச் சத்துரு வானதிலே
அப்துல்வா ரிதுசொன்ன தாருயிர்சம் பூரணமே. (ருஉ)

பூரணக் கண்ணி முற்றிற்று.

ஆ செய்யுள் களஉ-க்கு திருப்பாடல் தூகூஉஎ.

---

பிஸ்மில்லாஹி

## வியாபகக் கண்ணி 73.

---

சீர்கொண்ட மோன சித்தநி ரோதசுகம்
நேர்கொண்ட ஞான நிறைவே வியாபகமே. (க)

பார்கொண்ட தோற்றம் பரசொரூப மெய்யாகப்
பேர்கொண்ட சூக்குமப் பேறே வியாபகமே. (உ)

மண்ணீர்தே யூதை மருவுஞ் ஜடபோத
மெண்ணி யிருப்போருக் கெட்டா வியாபகமே. (ங)

கண்ணே மணியே கரும்பே கருத்துகந்த
பெண்ணேயென் றேதப் பிழையே வியாபகமே. (ச)

பொறிபுல னிந்திரியம் பூதகா ணங்களொன்று
மறியா தகண்டவெளி யன்பே வியாபகமே. (ரு)

அருஷதி லேகுருஷி அல்லாஹு இருப்பென்ற
திருசியத் தெட்டாத தெளிவே வியாபகமே. (சு)

கல்லா தவர்சொன்ன காரிய மதத்தாலே
செல்லாத மந்திரத்திற் றெரியா வியாபகமே. (எ)

பொல்லாப் புவிபோக புராணகா வியங்களிலே
யில்லாப் பெருவெளியே யிலங்கும் வியாபகமே (அ)

பழைய வழக்கமென்று பத்திவிசு வாசமொடு
யிழவுக்கு மாரடிக்க வெட்டா வியாபகமே. (கூ)

அழியாப் பெரியதொரு அல்லாஹூ வைநம்பி
வழியாய் நடப்போர்க்கு வாழ்வே வியாபகமே. (ய)

தன்னை யறியவிதி தலைவனைக் காணமதி
பின்னை யறிவதெலாம் பேதம் வியாபகமே. (கக)

தன்னுணை வேறில்லை தத்துவத்திற் கப்பாலே
என்னுணை தானுன ஏகம் வியாபகமே. (கஉ)

கட்டுக் கதைநம்பிக் கைவிரல் மணியெண்ணித்
துட்டுக் கலைவோர்கள் துலங்கா வியாபகமே. (கங)

பட்டப் பகலொளிக்குப் பதுங்குமாந் தைபோல
நிட்டைகல் வத்துள்ளோர் நினையா வியாபகமே. (கச)

காலிமி ருகமதைக் கட்டும் வழக்கம்போற்
ருலிக் கயிறுகட்டித் தவியேன் வியாபகமே. (கரு)

தாலிக்க யிறுகட்டுந் தடையற் றகம்புறமுஞ்
சோலி யொழிந்தமையச் சோதி வியாபகமே. (கசு)

பெண்டாட்டி பிள்ளையெனப் பேய்பிடித் தாடுமந்தக்
கொண்டாட்ட மற்றிடவே குலவும் வியாபகமே. (கஎ)

பண்டாட்ட மென்று பழங்கதை தானேதுந்
திண்டாட்ட மில்லார்க்குத் திருவே வியாபகமே. (கஅ)

பாராட்டுஞ் சீராட்டும் படைப்புகளைப் போற்றுகின்ற
மாராட்ட மற்றெழிய மகிழ்ச்சி வியாபகமே. (ககூ)

பீரோட்டம் பேயாட்டம் பிரசங்கி வாயாட்ட
மூரோட்ட மற்றிடவே யுண்மை வியாபகமே. (உய)

உலக மெனைவெறுத்தே யுதைத்திங் ககற்றிடவே
கலக மெதுவுமில்லை காட்சி வியாபகமே. (உக)

கலக மிகச்செய்யுங் கற்பித மதவாத
அலகை யெனைவெறுக்க அருளே வியாபகமே. (உஉ)

கற்பக தருவான்ம காரணப் பூரணத்தே
யுற்பப் பதவியில்லை யகண்ட வியாபகமே. (உங)

அற்ப சுவனைநம்பி யனேக தவஞ்செய்வோர்
விற்பன விவேகமிலார் விளங்கா வியாபகமே. (உச)

மத்தகத் தில்மதமா வாரியிடும் மண்போலப்
புத்தகங் களைவெறுக்கப் பூரண வியாபகமே. (உரு)

செத்தவர்கள் போற்றுஞ் செகத்தொழி லைநம்பி
கத்திதிக் குருதக் காணு வியாபகமே. (உசு)

கல்லார் மிகத்தேடுங் கனக பதியதனை
நல்லார் மதிப்பதில்லை நட்பே வியாபகமே. (உஎ)

சல்லி சலாத்தென்ற தணலதில் வெந்திடவே
அல்லும் பகலற்ற வறிவே வியாபகமே. (உஅ)

மூக்குநு னியேசுழி முனையென் றதைநோக்கி
நாக்கு நுனிமடிப்போர் நம்பா வியாபகமே. (உகூ)

வாக்கு மனதிலெட்டா வான்புவி யேகமயம்
போக்கு வரத்தில்லாப் போத வியாபகமே. (௩௰)

தூல வுடனனவிற் சூட்ச வுடற்கனவில்
மூல வுடல்சுழுத்தி மூவா வியாபகமே. (௩க)

மேலை வழியறிந்து மெய்ஞ்ஞானத் துண்மையிலே
பால வழியறிந்தோர் பதியே வியாபகமே. (௩உ)

வேடிக்கை யும்பகட்டு வேஷகுரு மார்சொன்ன
வாடிக்கை யற்றிடவே வாமே வியாபகமே. (௩௩)

பாடிக்கை கோத்துப் பலமந் திரந்திக்கிர்
கூடிக் கதறுவோர் கூடா வியாபகமே. (௩ச)

குருமார்களைப்போற்றிக் கொண்டாடு பூசையெல்லாம்
கருவ மதமென்று கண்டேன் வியாபகமே. (௩ரு)

புருவமை யம்நோக்கிப் பூட்டும்வா சியோக
மரும மறியாதோர் வழக்கம் வியாபகமே. (௩சு)

துறவறம் மேலான சுவர்க்க மளிக்குமென்ற
குரவர் மொழிவெறுக்கக் குன்று வியாபகமே. (௩எ)

புறத்துறவு கொண்டு புலன்பொறிக் காளாகி
சிரத்தை விளங்காதோர் தெளியா வியாபகமே. (௩அ)

வஸ்து விளங்காமல் மந்திர பிஸ்மோதிக்
கஸ்தி லகப்பட்டோர் காணு வியாபகமே. (௩கூ)

மஸ்துலா கிரியுண்டு மனமருள் கொண்டோரின்
சுஸ்திப் பிராந்தியிலே துலங்கா வியாபகமே. (சய)

எத்தனை யோமந்திர மிஸ்மசு மாவோதி
சித்திசெய் வோர்க்குண்மை சேரா வியாபகமே. (சக)

செத்தபின் ஞானி சேனுலகு கிட்டுமென்ற
புத்திவி காரம்விடப் பூணும் வியாபகமே. (சஉ)

கோசபீ சமென்று கொழுக்கட்டை பலகாரப்
பூசைகள் செய்வோர்க்குப் பொருந்தா வியாபகமே. (சங)

பாஷை மிகப்படித்துப் பழைய குருமாபு
காசைப் பறிப்போர்கள் கல்லா வியாபகமே. (சச)

தேச வழமையென்ற தெற்கத்தி மார்க்கத்தின்
வேஷ குருமார்க்கு மேவா வியாபகமே. (சரு)

பாசச் சமுசாரப் பந்தச் சுமைதாங்கும்
வேஷச் சமுசாரி வெறுக்கும் வியாபகமே. (சசு)

செத்த பிணத்திற்குச் சேர்ந்தே யழுவதுபோல்
மெத்தப் படிப்போர்க்கு மித்தை வியாபகமே. (சஎ)

புத்தி தனைமயக்கும் புகையபி னுண்போர்க்கு
பித்தப் பயித்தியமே பேதம் வியாபகமே. (சஅ)

பணங்கள் மிகச்சேர்த்து பலன்பெற வழியின்றி
பிணங்களுக் கேயுதவும் பேய்கள் வியாபகமே. (சகூ)

பிணங்கள் தனைப்புகழ்வோர் பிணக்குழி மண்ணாகும்
குணங்கள் விகாரமாய்க் கொண்டோர் வியாபகமே. (ருய)

மெய்ம்மா தவர்க்கெல்லா மெய்ஞ்ஞான சாதனமே
கைம்மாறு வேண்டாத கனியே வியாபகமே. (ருக)

ஐயின்கலிமாக் கண்ணொன்றும் அல்லா வதிலென்றும்
பொய்யில் மயங்காதார் போற்றும் வியாபகமே. (ருஉ)

ஔசுவாசி யுள்ளோ ருளத்தில் இப்லீசு
துசுமன் குடியிருக்கத் தோன்றா வியாபகமே. (ருங)

அசுமா அவுறூது அனந்தம் வாசிலாத்து
இசுமே மிகைத்தோருக் கெட்டா வியாபகமே. (ருச)

பேயாத் துடிப்போர் பெரியோர் களைப்பழிப்போர்
நாயா யலறுவோர் நம்பா வியாபகமே. (௫௫)

தாயே மனோன்மணியே தையலே யென்றுகவி
வாயா லுரைப்போர்கள் மதியா வியாபகமே. (௫௬)

அல்லாஹு தன்னை யறியா ரலறியே
சொல்லா யுரைப்பார்கள் தோடம் வியாபகமே. (௫௭)

எல்லாம் படித்தென்ன யாரும் புகழ்ந்தென்ன
அல்லாஹு வையறிய வமைதி வியாபகமே. (௫௮)

மரித்தோரைத் தேடி மன்றுடிக் கொண்டாட்டங்
கருத்தை மயக்குமருட் காமம் வியாபகமே. (௫௯)

பிரித்தறிவ தின்றிப் பேயாய் மனந்துடித்து
மரித்தோர் களைத்தேடல் மண்ணே வியாபகமே. (௬௰)

ஈமா னிஸ்லா மிஹ்சான் விளங்காமல்
சாமா னியம்பேசல் சழக்கே வியாபகமே. (௬௧)

நாமான தைவிளங்கி நாயனைத் தானறியச்
சீமான் நபிவழியே சேரும் வியாபகமே. (௬௨)

ஆதி யனாதியா மனைத்துங் கடந்தசுயஞ்
சோதி விளக்கமது சொச்ச வியாபகமே. (௬௩)

வேத முதிக்குமன வேதாந்த வீதியிலே
சாதி சமயமில்லை சாந்தம் வியாபகமே. (௬௪)

சித்தான தௌஹீது தெளிவாகு மெய்ஞ்ஞான
சத்தான வாநந்தம் சமத்துவ வியாபகமே. (௬௫)

நித்திய விளக்கமே நீங்கா வருளுருவே
புத்தி மனதமைதி பூணும் வியாபகமே. (௬௬)

மானசிக பூஜைகள் வாசியோ கம்நிட்டை
தானதி லடங்காத தத்துவ வியாபகமே. (௬௭)

தீனிஸ்லா முத்தித் திருந்து மதியோர்க்குத்
தேனே சுவரூபத் திருவே வியாபகமே. (௬௮)

நானென்ப தைமறந்து நாட்டுவழ மையுமற்று
தானென்ற மெய்ப்பொருள் தானும் வியாபகமே. (௬௯)

ஊனென்ற துவொழிந்தே யுபாதிரகி தந்தன்னில்
தீனென்ற மெய்யில்லாம் சித்தி வியாபகமே. (எ௰)

எத்தொழி லெப்பதவி யெவ்வித மிருந்தாலும்
பற்றொழி யமுத்திப் பதியே வியாபகமே. (எக)

காத்தமுல் லன்பியா காட்டும் பொதுநீதி
காத்தமுல் லசுபியா காட்சி வியாபகமே. (எஉ)

அத்த நிலைதானே யகண்டபரி பூரணமே
சித்தன்கா லங்குடியான் சித்தானன் வியாபகமே. (எங)

வியாபகக் கண்ணி முற்றிற்று.

ஆ செய்யுள் ௰அ-க்கு திருப்பாடல் ௲ஙசுஎ.

---

பிஸ்மில்லாஹி

## தண்ணருட் கண்ணி 66.

---

எங்கும் சுவரூப மெல்லாஞ் சுயஞ்சோதி
கங்குல் பகலற்ற காட்சியுந் தண்ணருளே. (க)

எங்கெங்குந் தானு மிரண்டறக் கலந்தசுக
மங்கா திலங்குமொளி மவுனமுந் தண்ணருளே. (உ)

மந்தமந் ததாமும் மாறித்தீ விரதாத்தே
புந்தி தெளிந்திடவே புலனுகுந் தண்ணருளே. (ங)

சந்தேக விபரீதச் சழக்காகு மஞ்ஞான
நிந்தை யொழிந்திடவே நிச்சயந் தண்ணருளே. (ச)

ஆர்க்கும் பொதுஞான வறிவை யுணர்ந்திடவே
தீர்க்கமே சாந்தமுத்தித் திருக்காகுந் தண்ணருளே. (ரு)

மார்க்கப்பேய் தொட்ட மதப்பேய் தனைவிரட்ட
சேர்க்கை யஞ்ஞானச் செருக்கறத் தண்ணருளே. (சு)

மூடத்து வம்நீங்கி முடிந்த வுணர்ச்சியிலே
கூடத்த னியமமுங் குறைவற்ற தண்ணருளே. (எ)

வேடத்தை விட்டு வெளிமினுக் கையும்விட்டு
பாடற் றகந்தெளிய பாயோகந் தண்ணருளே. (அ)

வெட்ட வெளிபார்த்து விடயபோ தங்கருதல்
விட்டதுவே நிட்டை விசாரணை தண்ணருளே. (௯)
விட்டுவிடா லட்சணையே விவேகச மாதிநிலை
கட்டுப்பா டற்றசுகங் கலப்பற்ற தண்ணருளே. (௰)
கட்டுப்பா டற்றுக் காரிய விகாரமற
நிட்டை மனநாச நிர்மலந் தண்ணருளே. (௧௧)
கட்டளைக ளென்ற கற்பிதத் தொல்லையெலாம்
விட்டிழந்த துமுத்தி விசாரணை தண்ணருளே. (௧௨)
சொல்லந்த காரச் சோபான வீதிபல
வெல்லாங் கடந்திடவே யேகாந்தந் தண்ணருளே. (௧௩)
சொல்லும் பொருளுந் தொடர்வினைத் தோடமற
வெல்லும் சுகவடிவம் வேதனந் தண்ணருளே. (௧௪)
பலநாம ரூபமெண்ணிப் பட்ட மணியுருட்டும்
மலமாதி கைநழுவ மாதவந் தண்ணருளே. (௧௫)
உலகப் பிரவிர்த்தி யுடைநடை பாவனைகள்
கலகப் பராக்கொழியக் கதிகாட்டுந் தண்ணருளே. (௧௬)
தித்திக்கும் பேரின்பந் திருக்குபமே யந்தனிலே
சித்திக்கும் ஞானத் திருவருள் தண்ணருளே. (௧௭)
சித்தஞ் சலிக்காமற் சிதாபாசத் தன்மைகெட
சுத்தனே யச்சொரூபச் சுவயமுந் தண்ணருளே. (௧௮)
தன்னைத்தா னேவிளங்கத் தலைவனுந் தானாகி
யன்னியமி லாதேகத் தருளாகுந் தண்ணருளே. (௧௯)
இன்ன லறுந்திருஷ்டி யின்பரூ பந்தீட்சை
வின்ன மறுங்காட்சி விளங்கிடுந் தண்ணருளே. (௨௰)
கல்விகற் றோர்க்கழகு கற்பிதமெ லாம்நசித்துத்
தொல்புவி யாசையறல் சொச்சொரூபந் தண்ணருளே. (௨௧)
அல்பகலுந் தேடி யலைந்து பாதவிக்கும்
பல்தொழி லுமறக்கப் பக்குவமுந் தண்ணருளே. (௨௨)
விருப்பு வெறுப்புமிலா விண்போற் றெளிந்தவுளம்
நிரப்பு மறிவினுரு நிக்கிரகந் தண்ணருளே. (௨௩)
குருசிஷ னென்பதிலாக் குணிஞான விர்த்தியிலே
திருவாச னைக்ஷயமே திரையற்ற தண்ணருளே. (௨௪)

முக்குண முத்தேக முக்காண முத்தடைக
ளெக்குண முமற்ற வேகாசந் தன்னருளே. (உரு)

நிக்கிரக நிர்விஷய நித்திய வனுபூதி
துக்கநி வர்த்தியிலே தொடாரற்ற தன்னருளே. (உசு)

நாளேபின் னின்றென்ற நாட்டதேட் டங்கடந்த
வேளைநா ளென்ற விகாரமறத் தன்னருளே. (உஎ)

எழுபா திகடந்து மேழவஸ்தை யுந்தாண்டிப்
பாழும்வா தனையொழிக்கப் பற்றற்ற தன்னருளே. (உஅ)

ஐயந் திரிமலத்தை யஞ்ஞானி கட்கீந்து
செய்யுந் தொழில்மறக்கச் சேதனந் தன்னருளே. (உகூ)

தையலா ராசையினைத் தாதமார்க் கர்க்கீந்து
வையக மறந்திடவே வஸ்துவுந் தன்னருளே. (௩௰)

பூசைநா மரூபப் புகழை யெலாந்திரட்டி
வேஷதா ரிக்கீந்து வெளிப்படத் தன்னருளே. (௩க)

ஆசைவார்த் தைசொன்ன வாசார மத்தனையும்
வாசாஞா னிக்கீந்து வரையறத் தன்னருளே. (௩உ)

குடும்ப சமுசாரக் குரங்காட்டம் பேய்க்குணத்தி
னிடும்பர் தமக்கீந்திங் கிணையறத் தன்னருளே. (௩௩)

கொடும்பகை காமங் குரோதாதி கோட்டிகளை
யுடம்பைக்காப் போர்க்கீந்தே யுபாதியறத் தன்னருளே. (௩ச)

சமுசார பந்தமதை சாதிகுரு மார்க்கீந்தே
யமுசலட் சணந்தேற வமைதியாந் தன்னருளே. (௩ரு)

திமிரத் திருஷ்டாந்தத் திருசிய மூட்டைகளைச்
சுமைதாங்கி கட்கீந்து சுத்தமுறத் தன்னருளே. (௩சு)

அலகை பரிதேவு அசுரசம் பத்தெவையு
மலினமனத் தர்க்கீந்து மாசகலத் தன்னருளே. (௩எ)

விலகலே வலென்ற விர்த்தாந்த மில்லார்க்குக்
கலகமெ லாங்கொடுத்துக் கலிதீரத் தன்னருளே. (௩அ)

உபயாஞ்ஞ பாசத் தூன நினைவுநிட்டை
யபவாதி கட்கீய வபவாதந் தன்னருளே. (௩கூ)

விபலமாம் ராத்திபும் விடயபோ தத்திக்கிறும்
குபலமதி யர்க்கீந்து குருவறியத் தன்னருளே. (ச௰)

சேதனத் தடைமூன்றுஞ் ஷெய்குகுரு மார்க்கீந்து
சாதனம் விளங்கிடவே தனதாகுந் தண்ணருளே. (சக)

பூதபௌ திகமாயப் பூலோக வாசையெலாம்
பேதவிகா ரிக்கீந்து பின்னமறத் தண்ணருளே. (சஉ)

நாமரூ பசகிதம் நானுப் புகழ்துதியைக்
காமவிச்சை யர்க்கீந்து களைதீரத் தண்ணருளே. (சஙு)

தாமத மதிமந்தந் தாதாத்மிய சோகமதை
நேமமுண ரார்க்கீந்து நேதிசெயத் தண்ணருளே. (சச)

நீச விசுவாச நியூன நினைப்பனைத்தும்
பாசமதி யர்க்கீந்து பந்தம்விடத் தண்ணருளே. (சரு)

நாசச் சரீரத்தை நானு னெனமதிக்கும்
வாசியோ கிக்கீந்து வழிதெளியத் தண்ணருளே. (சசு)

நரக சுவர்க்கமென்று நம்புவதை ஞானமிலாக்
குரவர் தமக்கீந்து குயுக்தியறத் தண்ணருளே. (சஎ)

பிரதி பலன்றேடப் பேசும்பல சாஸ்திரத்தை
துரியமறி யார்க்கீந்து துக்கம்விடத் தண்ணருளே. (சஅ)

தேவதரு வறிவைத் தெளியா வெளிவேடர்க்
காவல்முழு தும்மீந்தே யகந்தெளியத் தண்ணருளே. (சகூ)

பாவ புண்ணியத்தைப் பக்குவமி லார்க்கீந்து
தேவ வறிவுணரத் தேகமிலே தண்ணருளே. (ரும)

அன்பத்தோ ரட்சரத்தை யன்பற்றோர் கட்கீந்து
தன்பத் தொழிந்திடவே ததாகாரந் தண்ணருளே. (ருக)

துன்பத் திரைநாட்டந் துக்க சுகத்துலகை
யின்புற்ற வர்க்கீந்தே யிழந்துவிடத் தண்ணருளே. (ருஉ)

ஆணவங்கா மியமாயை யதனொடுதொண் ணூற்றாறும்
பேணும் மனத்திரயம் பேதமறத் தண்ணருளே. (ருஙு)

காணுங் கனுநினைவு கற்பித நாமமெண்ணம்
பூணும் நினைப்பொழியப் புந்திலயந் தண்ணருளே. (ருச)

தற்சொரு பந்தானே தகாரகா யந்தெளிந்த
சிற்சொரு பத்தன்மை சீவன்முத்தி தண்ணருளே. (ருரு)

தர்ப்பண மனவெளியே சற்குரு வறிவாகி
யர்ப்பணம் வியாபகத்தே யபரோட்சந் தண்ணருளே. (ருசு

செயித்தான் வடிவெடுத்து ஷெய்குமா ரென்றுவரும்
பயித்திய வேஷருடன் பாசமறத் தண்ணருளே. (ருஎ)

வயற்றுப் பிழைப்பினுக்கு வரும்படிக் குபதேச
மியற்றுங் குருமாரை யிழந்துவிடத் தண்ணருளே. (ருஅ)

சாதிமத பேதச் சழக்காம் வழக்குகளை
யோதிவிழிப் போர்க்கிங் கொருமையுறத் தண்ணருளே. (ருசு)

சாதனம் விளங்காமற் சாதனை யுரைப்போர்க்கு
வாதனை யெலாமீந்து வழக்கமறத் தண்ணருளே. (சூ0)

மூச்சைப் பிடித்தேற்ற மொழிந்த பலநூலின்
பேச்சைப் பிதற்றுவார்க்குப் பேரின்பந் தண்ணருளே. (சூக)

வாச்சியார்த் தங்கற்று மனம்போற் கருத்துரைபொய்
வீச்சிவா சாஞானம் விட்டுவிடத் தண்ணருளே. (சூஉ)

வான மலக்குகளாம் வரையற்ற ஞானிகளாம்
மோன வருளுருவா மூவாத தண்ணருளே. (சூரு)

போன தெலாம்போச்சு பொம்மலாட் டக்கூத்து
ஞானசூ ரியனுதிக்க ஞாயமுந் தண்ணருளே. (சூச)

தூலங் குடிமறந்து சூக்கும சுழுத்தியப்பால்
தாலங் குடிவெறுத்த தற்பரந் தண்ணருளே. (சூரு)

மூலங் குடியென்ற முக்காரண சுத்தியிலே
காலங் குடிகடந்த காட்சியுந் தண்ணருளே. (சூசூ)

தண்ணருட் கண்ணி முற்றிற்று.

ஆ. செய்யுள் ௰சூ-க்கு திருப்பாடல் ௲சசூரு.

---

பிஸ்மில்லாஹி

## வேண்டாக் கண்ணி 96.

---

அருளாம் வியாபக மாத்தும ஞானநெறி
தெருளாம் விளக்கமன்றித் தேட்டமொன்றும் வேண்டாமே()

பொருளாஞ் சுயஞானப் பூரணம் விளங்காமற்
பிரளுகிற பூதமயப் பேயாட்டம் வேண்டாமே. (உ)

திருமணக் காட்சியாம் சிவசொரூபங் காணாது
பிரமாதம் பேசும் பேயாட்டம் வேண்டாமே. (ரு)

ஒருமை யறிவுருவா முள்ளதை யுணராமற்
பெருமை மதவாதப் பேயாட்டம் வேண்டாமே. (௪)

கருதும் பலநினைவு காரிய வியாபாரம்
பிரதிபலன் றேடும் பேயாட்டம் வேண்டாமே. (௫)

நிரதிச யானந்த நிராசைவழி நில்லாது
பிரதிபந் தந்துவிதப் பேயாட்டம் வேண்டாமே. (௬)

காணுவான் காட்சி காணப் படும்பொருளாய்ப்
பேணுவான் றற்போதப் பேயாட்டம் வேண்டாமே. (௭)

தோணுவ தந்நியமாந் தொக்கேந் திரியஜடம்
பேணும னமலினப் பேயாட்டம் வேண்டாமே. (௮)

அந்நிய வுபாசனைக ளநித்திய நாமரூபம்
பின்னிய பலநினைவின் பேயாட்டம் வேண்டாமே. (௯)

தன்னது நிசசொரூபந் தன்னை யுணராமற்
பின்னிய புவிபோகப் பேயாட்டம் வேண்டாமே. (௰)

கணக்குகள் வைத்தே கனமந் திரமோதும்
பிணக்கா மவிவேகப் பேயாட்டம் வேண்டாமே. (௧௧)

குணக்கு மனக்குரங்கு குறிசாஸ் திரங்கேட்டு
பிணக்குவி யலைப்போற்றும் பேயாட்டம் வேண்டாமே. (௧௨)

கணங்கள்பூ தமாயைக் கட்டுண்ட பெத்தர்குழாம்
பிணங்காக்கும் நாய்நரிகள் பேயாட்டம் வேண்டாமே. (௧௩)

வணங்கிப் பதவியுன்னும் வாசனை வழக்கங்கள்
பிணங்களைப் போற்றுமதப் பேயாட்டம் வேண்டாமே. (௧௪)

திண்டாடுந் தேட்டந் திருசிய நாட்டமொடு
பெண்டாட்டி பிள்ளையென்ற பேயாட்டம் வேண்டாமே. (௧௫)

தொண்டு புரியும்பல தொல்லைக் கிரியாதி
பிண்டத் தெரிசனத்தின் பேயாட்டம் வேண்டாமே. (௧௬)

எத்திப் பணம்பறிக்கு மிந்திர ஜாலகுரு
பெத்தர் குழாஞ்செய்யும் பேயாட்டம் வேண்டாமே. (௧௭)

கத்தித் தலைசுழற்றிக் கலிமாதிக் கிரேறிப்
பித்தந் தலைக்கேறும் பேயாட்டம் வேண்டாமே. (௧௮)

மறப்பும் நினைப்பும் மனமலினத் தாலாட்டும்
பிறப்பு மிறப்பென்ற பேயாட்டம் வேண்டாமே. (௧௯)

சிறப்பு மலங்காரச் சிந்தனை வந்தனைகள்
பிறப்பு நினைப்புபயப் பேயாட்டம் வேண்டாமே. (உ௰)
சந்திர சூரியகலை தடுத்துழுச் சேத்திறக்கும்
பெந்தர்வா சியோகப் பேயாட்டம் வேண்டாமே. (உக)
கந்தூரி கள்செய்து கத்தம்பாத் திஹாவோதும்
பெந்தர் மதவாதப் பேயாட்டம் வேண்டாமே. (உஉ)
மார்க்கத்திற் கொவ்வாத மந்திரங் களையோதும்
பேர்க்குப் புகழிகழும் பேயாட்டம் வேண்டாமே. (உங)
ஆர்க்கும் பொதுவாகு மாத்தும ஞானமில்லாப்
பேர்க்கே யுரைத்தமதப் பேயாட்டம் வேண்டாமே. (உச)
பஞ்சகோ சத்திரையுள் பட்டே பலகரும
சஞ்சித வினைமயக்குஞ் சந்தேகம் வேண்டாமே. (உரு)
கொஞ்சிக்கூத் தாடுங் குருசீடர் சொற்செயல்கள்
மிஞ்சு முபதேச மித்தையொன்றும் வேண்டாமே. (உசு)
கத்த னொருவனென்று கலிமா வுரைத்தோர்க
ளெத்தனையாண் டவமாரை யெண்ணுவதும் வேண்டாமே. ()
அத்த நிலைநின்றே யனைத்தும் வெறுக்காமற்
புத்தகங் களைப்பார்க்கும் போராட்டம் வேண்டாமே. (உஅ)
தஞ்ச மடைக்கலமாய்த் தனைக்காக்க வந்தியரைக்
கெஞ்சு முபாசனையின் கேவலங்கள் வேண்டாமே. (உகூ)
சஞ்சல மனக்குரங்கு சமுசய ரூபமதா
யெஞ்சிசீ வபேதத் திணங்கிடவும் வேண்டாமே. (௩௰)
எனது வுனதென்றே யிகபாத் தாசைமிகுங்
கனவின் விலாசமனக் கற்பனைகள் வேண்டாமே. (௩க)
மனது நினைத்தபடி வழக்கம் பழக்கமெனத்
தனது விசாரமிலார் தடம்போக வேண்டாமே. (௩உ)
ஞானி பெரியனென்று ஞானங்கள் தான்பேசி
நான்நீ யெனச்சொல்லும் நாட்டுவளம் வேண்டாமே. (௩௩)
பானமுண்டா மென்று பகர்ந்தவா சியோக
வூனத் தடிப்பெண்ண முதித்திடவும் வேண்டாமே. (௩ச)
பாசியன் பாசி பழகிப் புருவமத்தி
நாசிநுனி நோக்கும் நாட்டங்கள் வேண்டாமே. (௩ரு)

வாசியோக மென்றால் மனதை வயக்குதலே
வேஷதா ரிகள்செய்யும் வெறும்பிலுக்கு வேண்டாமே. (௩௬)

வாயுவின் கூறும் மனதை யடக்காமற்
பாயுங்காற் றைப்பிடிக்கப் பதறிடவும் வேண்டாமே. (௩௭)

காய மழியாமற் காலாகா லமிருக்க
பாயும்வளி யைமறிக்கும் பாவனைகள் வேண்டாமே. (௩௮)

எத்தனையோ கஞ்செய்து மெத்தனை யுகமிருந்துஞ்
சித்தினை விளங்காத சிந்தனைகள் வேண்டாமே. (௩௯)

சித்தங் குவியாமற் சித்திற் கரையாமல்
நித்தம் புகழ்பாடும் நியூனமதி வேண்டாமே. (௪௰)

இரேசக பூரக மிணங்குகும் பகமென்ற
திரேகசம் பந்தமலத் தியானங்கள் வேண்டாமே. (௪௧)

நிராலம்ப நிட்களங்க நிராசை தெளியாமற்
பிராதிபா சிகந்தோணும் பேதபுத்தி வேண்டாமே. (௪௨)

தாடி மிகவளர்த்துச் சடைமுடி சந்யாச
மோடித் திரிந்தலையு மோட்டங்கள் வேண்டாமே. (௪௩)

பாடிப் பலவோதி பக்கிர்மஸ் தானென்ற
சோடிப் பவமானச் சோகங்கள் வேண்டாமே. (௪௪)

இளம்வாழை நாருரிக்க வெஞ்சுவதொன் றிலையென்று
உளவுதெளி யார்சொல்லு முபமானம் வேண்டாமே. (௪௫)

பழுதையைப்பாம் பென்று பகரும்வா சாஞானி
யெழுதும் பலநூலி னேடொன்றும் வேண்டாமே. (௪௬)

எட்டுரண்டும் பத்தா மெவர்க்குந் தெரியாதாம்
பொட்டணங் கட்டிவைத்தோர் போதனைகள் வேண்டாமே. ( )

துட்டுப் பறிக்கபல துதியோ திடுங்குருமார்
கட்டுப் படுத்துமதக் காரியங்கள் வேண்டாமே. (௪௮)

விட்டகுறை தொட்டகுறை விளங்காத மாந்தரென்று
சட்ட முரைக்குமலச் சந்தேகம் வேண்டாமே. (௪௯)

நிட்டைதனிற் குருவை நினைந்து தெரிசிக்க
கட்டளைக ளோதுங் கதையொன்றும் வேண்டாமே. (௫௰)

[illegible] கிணக்கமற்ற சாஸ்திரங் களைச்சொன்னோ
[illegible] னைப்போற்று மொய்யாரம் வேண்டாமே. (௫௧)